# நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

## 2025

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA





# நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்
# இலங்கை மத்திய வங்கி
# 2025

75 YEARS
STABILITY FOR PROSPERITY
1950-2025

## எமது தொலைநோக்கு

இலங்கை மக்களின் சுபீட்சத்துக்குப் பங்களிக்கின்ற நம்பகமானதும் இயக்கவாற்றல்மிக்கதுமான மத்திய வங்கி

## எமது பணி

அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு உள்நாட்டு விலை நிலையுறுதியினைப் பேணுதலும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை அடைதலும்

## எமது விழுமியங்கள்

**நேர்மை:**

ஒழுக்கநெறிசார்ந்த நடத்தை, நம்பகத்தன்மை, நிலையானதன்மை, தலைமைத்துவம், தொழில்சார் பண்பு, தொழில்நுட்ப ரீதியான உன்னதம், கருத்துச் சுயாதீனம்

**பொறுப்புக்கூறலும் வெளிப்படைத்தன்மையும்:**

பொறுப்புடைமை, உரிமைத்தன்மை, கடமைப்பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, ஆளுகை

**அனைவரையும் உள்ளடக்குதல்:**

முன்னேற்றம், ஒருங்கிணைத்தல், ஒன்றுபட்ட உழைப்பு



# வாசகர்களுக்கான குறிப்பு

இலங்கை மத்திய வங்கியின் "நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும் 2025" என்ற அறிக்கை 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் (மத்திய வங்கிச் சட்டம்) எடுத்துரைக்கப்பட்ட நியதிச்சட்டத் தேவைப்பாடுகளுக்கிணங்க இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கிச் சட்டத்தின் 99 (2) ஆம் பிரிவின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளவாறு இதில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் வங்கியின் ஆளும் சபையினால் அனுமதிக்கப்பட்டு, ஆளுநர் மற்றும் முதன்மைக் கணக்காளர் மூலம் கையொப்பமிடப்பட்டுள்ளதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்ததன் பின்னர் நான்கு மாதங்களுக்குள் இந்நிதியியல் அறிக்கைகள் நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென மத்திய வங்கிச் சட்டம் பொறுப்பாணையளிக்கின்றது.

மத்திய வங்கிச் சட்டத்தின் 7(1)(ஔ)ஆம் பிரிவிற்கு அமைவாக அனைத்தையுமுள்ளடக்கிய இவ்வறிக்கையின் ஊடாக வங்கியின் கொள்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் பற்றி பாராளுமன்றத்திற்கு, அரசாங்கத்திற்கு மற்றும் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதற்கான அதன் கடப்பாட்டை மத்திய வங்கி கடைப்பிடிக்கின்றது.

அதன் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் அனைத்து நோக்குகளிலும் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் சுயாதீனம் என்பவற்றைப் பேணுவதற்கு இலங்கை மத்திய வங்கி உறுதிபூண்டுள்ளது.

கொள்கை வகுப்பாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிதியியல் பகுப்பாய்வாளர்கள், பொதுமக்கள் உட்பட அனைத்துப் பங்குதாரர்களும் வங்கியின் செயலாற்றம், மற்றும் முன்முயற்சிகள் பற்றிய செம்மையான மற்றும் உரியகாலத் தகவல்களுக்கு பெறுவழியினைக் கொண்டுள்ளனர் என்பதனை இக்கடமைப்பொறுப்பு உறுதிசெய்கின்றது. இக்கோட்பாடுகளை நிலைநாட்டுவதன் மூலம் மத்திய வங்கியானது நாட்டின் மத்திய வங்கியாக அதன் வகிபாகத்தில் நம்பிக்கையையும் பேணிவளர்ப்பதை நோக்காகக் கொண்டு, அதன் நடவடிக்கைகள் நேர்மை மற்றும் குறிக்கோள் மூலம் வழிநடாத்தப்படுகின்றன என்பதை உறுதிசெய்கின்றது.




2025ஆம் ஆண்டிற்கான இந்நிதியியல் அறிக்கைகளினதும் தொழிற்பாடுகளினதும் பிடிஎப் பதிப்பு தொடக்கம் முதல் முடிவு வரையான ஊடாடு பிடிஎப் பதிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், ஈடுபாட்டு அனுபவத்திற்காக இப் பிடிஎப் பதிப்பினுள் ஊடாடு அம்சங்களைக் கண்டறிக.

*https://www.cbsl.gov.lk/en/publications/economic-and-financial-reports/financial-statements-operations*

# ஆளுநரின் செய்தி

**பொருளாதாரமானது நிலையுறுதியடைவதிலிருந்து தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் நிலைபேறான வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்ந்தமையினால் 2025ஆம் ஆண்டானது இலங்கைக்கு தீர்க்கமான மைற்கல்லொன்றாக திகழ்கின்றது.**



2025ஆம் ஆண்டானது மத்திய வங்கிக்கு தீர்க்கமான மைற்கல்லொன்றாக திகழ்கின்றது. தேசம் எதிர்கொண்ட மிகத் தீவிரமான பொருளாதார நெருக்கடிகளின் பின்னர், பாடுபட்டு ஈட்டிய பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தவும், கொள்கைசார்ந்த நம்பகத்தன்மையை மீளமைக்கவும், தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் நிலைபேறான வளர்ச்சியை நிலைநிறுத்துவதை நோக்கி பொருளாதாரத்தின் மாறுதலுக்கு ஆதரவளிப்பதற்குமே ஆண்டு முழுவதும் மத்திய வங்கி முதன்மையாக கவனம்செலுத்தியது. 2025 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும் கொள்கை ஒழுக்கம், நிறுவனசார் மறுசீரமைப்பு மற்றும் முன்மதிமிக்க நிதியியல் தலைமைத்துவம் என்பவற்றுக்கான தொடர்ச்சியான கடமைப்பொறுப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

2025 காலப்பகுதியில், தொழிற்பாட்டு ரீதியான சுயாதீனம் அத்துடன் பொறுப்புக்கூறல் மற்றும் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைகின்ற அதேவேளை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதன் மீதான தெளிவான கவனம் செலுத்தலுடன் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் அதன் பொறுப்பாணையினை மத்திய வங்கி தொடர்ந்தும் நிறைவேற்றியது. முன்நோக்கி நோக்குகின்ற அத்துடன் தரவுகளைச் சார்ந்திருக்கும் விதத்தில் நாணயக் கொள்கை நடாத்தப்பட்டு, பணவீக்க எதிர்பார்க்கைகள் நன்கு நிலைநிறுத்தப்பட்டிருப்பதை இயலச்செய்து, உலகளாவிய மற்றும் உள்நாட்டு நிச்சயமின்மைகளுக்கு மத்தியிலும் பொருளாதார நடவடிக்கையில் படிப்படியான மீட்சிக்கு ஆதரவளித்தது. இவ்வணுகுமுறை முதலீட்டாளர்கள் நம்பிக்கையினை தொடர்ந்தும் மேம்படுத்தி மிகவும் நிலையான நிதியியல் சந்தை நிலைமைகளுக்கு பங்களித்தது.

2025, இலங்கை மத்திய வங்கி, விலை உறுதிப்பாட்டைப் பேணுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைந்து, பணவீக்கத்தை குறுகிய காலப்பகுதிக்காக அவதானிக்கப்பட்ட எதிர்மறையான மட்டங்களிலிருந்து அதன் 5 சதவீத இலக்கை நோக்கி படிப்படியாக மீண்டும் கொண்டுவருவதற்கு வழிநடாத்தியது. தளர்வான நாணயக் கொள்கை நிலை, வலுவான தனியார் துறை கொடுகடன் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதை இயலச்செய்து இதன்மூலம் தாழ்வான வட்டி வீதச் சூழலில் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மேலும் ஊக்கமளித்தது.

வலிமையான ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் செயலூக்கமிக்க கண்காணிப்பு ஈடுபாட்டின் மூலம் துணையளிக்கப்பட்டு நிதியியல் முறைமை ஆண்டு முழுவதும் தாக்குப்பிடிக்கத்தக்கதாக விளங்கியது. ஐந்தொகைகளை வலுப்படுத்தல், ஆளுகையை மேம்படுத்தல், இடர்நேர்வு முகாமைத்துவ நடத்தைகளை அதிகரித்தல் என்பவற்றுக்காக மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கிகளுடனும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுடனும் நெருக்கமாகப் பணியாற்றியது. இலக்கிடப்பட்ட பேரண்ட முன்மதிசார்ந்த வழிமுறைகள், வலுவான தரவினால் இயக்கப்படும் கண்காணித்தல் மற்றும் நிதியியல் துறை ஒருங்கிணைத்தலில் முன்னேற்றம் என்பன இம்முயற்சிகளுக்கு நிறைவளித்து, இவை அனைத்தும் முறைமைசார்ந்த தாக்குப்பிடிக்கும் தன்மையை மீள வலுவூட்டுவதற்குப் பங்களித்தன.

**எதிர்காலத்தை நோக்கியதும், தரவுகளினால் உந்தப்பட்ட கொள்கைத் தீர்மானங்களின் வழிகாட்டுதலுடன், விலை உறுதிப்பாட்டிற்கும் நிதியியல் முறைமை தாக்குபிடிக்கும் தன்மைக்கும் மத்திய வங்கி அதன் உறுதியான அர்ப்பணிப்பைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.**

மேம்பட்ட ஏற்றுமதிச் செயலாற்றம், சுற்றுலாத் துறை உட்பாய்ச்சல்கள், நிலையான தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு வெளிநாட்டுத் துறை 2025இல் மேலும், உறுதிப்பாட்டுச் சமிக்ஞைகளைக் காண்பித்தது. ஒழுக்கமிக்க பேரண்டப் பொருளாதார முகாமைத்துவமானது சந்தை - நிர்ணயித்த செலாவணி வீதக் கட்டமைப்பினுள் வெளிநாட்டு தாங்கியிருப்புக்கள் வலுவடைவதற்கு இயலச்செய்தது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகள் ஒதுக்கினைத் திரட்டுகின்ற அதேவேளை செலாவணி வீத நெகிழ்வுத்தன்மையைப் பேணிக் காக்கும் குறிக்கோளுடன் வெளிப்படைத்தன்மை மிக்கதாகவும் ஒத்திசைவானதாகவும் காணப்பட்டது.

## தொடர்ச்சியான கொள்கை ஒழுங்குமுறை, வலுவான நிறுவனங்கள் மற்றும் தாக்குபிடிக்கும் அத்துடன் அனைவரையுமுள்ளடக்கிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான உறுதியான அர்ப்பணிப்பு போன்றன அண்மைய முன்னேற்றங்களைப் பாதுகாப்பதற்கு அவசியமாகும்.

சமாந்தரமாக மத்திய வங்கி, நிறுவனசார் வலுப்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறன் என்பன மீது வலுவான வலியுறுத்தலை இடம்பெறச்செய்தது. கொள்கை நம்பகத்தன்மையும் நிறுவனசார் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் நிலைநாட்டுவதற்கு எதிர்காலத்திற்குத் தயாரான மத்திய வங்கி அத்தியவசியமானது என்பதை அங்கீகரித்து உள்ளக ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்கள் மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பு என்பவற்றை வலுப்படுத்துவதற்கு முக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2025ஆம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வெளிப்படைத்தன்மைக்கும் மூலவளங்களின் முன்மதியான பயன்பாட்டிற்குமான மத்திய வங்கியின் தொடர்ச்சியான கடமைப்பொறுப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

நாட்டின் பரந்த மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலுக்கு ஆதரவளிப்பதிலும் மத்திய வங்கி முனைப்புடன் ஈடுபட்டது. பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் பற்றிய பல்வேறு நோக்கங்களில் அரசாங்கத்திற்கும் ஏனைய ஆர்வலர்களுக்கும் தொழில்நுட்ப நிபுணத்துவமும் கொள்கை ரீதியான ஆலோசனையும் வழங்கப்பட்டது. நீடித்துநிலைக்கின்ற பொருளாதார உறுதிப்பாடு, நாணய, நிதியியல் மற்றும் அரசிறைத் துறைக் கொள்கைகளுக்கிடையில் ஒத்திசைவான கொள்கைகள், வலுவான நிறுவனங்கள் அத்துடன் நிலையான ஒருங்கிணைப்பு என்பவற்றை வேண்டுகின்றது என்ற அங்கீகாரத்தினால் இம்முயற்சிகள் வழிநடாத்தப்பட்டன.

2025இல் மத்திய வங்கி அதன் நிறுவனசார் பயணத்தில் முக்கிய மைற்கல்லான 75ஆவது ஆண்டு நிறைவை பெருமையுடன் அடையாளப்படுத்தியது. 1950இல் அது தாபிக்கப்பட்டதிலிருந்து மத்திய வங்கி தேசத்துடன் ஒருங்கிணைந்து வளர்ச்சிக்காலப்பகுதிகளை திசைப்படுத்தி வளர்ச்சி, மாறுதல் மற்றும் இன்னல்கள் என்பவற்றைக் கொண்ட காலப்பகுதிகளை திசைப்படுத்தி பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது. இம்மைற்கல் வங்கியின் பாரம்பரியத்தை மாத்திரம் பிரதிபலிக்காது சுயாதீனம், தொழில்சார் பண்பு, நேர்மை என்பவற்றுக்கான அதன் கடமைப்பொறுப்பினை மீள உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, காலநிலை தொடர்புபட்ட இடர்நேர்வுகள், டிஜிட்டல் ரீதியான மாறுதல் மற்றும் அதிகரித்தளவில் சிக்கலாகின்ற உலகளாவிய சூழல் போன்ற தோற்றம்பெற்றுவரும் சவால்களுக்கும் தயாராகுவதற்கான வாய்ப்பினை வழங்கியது.

முன்நோக்கி நோக்குகையில் மத்திய வங்கியானது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்படுகின்ற வேளையில் இவ்வடைவுகள் தொடர்ச்சியான கொள்கை ஒழுக்கத்தையும் மறுசீரமைப்பு உத்வேகத்தையும் வேண்டிநிற்பதை பேணிக்காக்கின்றது என்ற அவதானத்துடன் விளங்குகின்றது. உலகளாவிய சூழல் நிச்சயமற்றதாக இருப்பதுடன் காலநிலை தொடர்புபட்ட அத்துடன் புவிசார் அரசியல் அதிர்வுகள், தாக்குப்பிடிக்கும் தன்மையினை கட்டியெழுப்புதல், தாங்கியிருப்புக்களை வலுப்படுத்தல் மற்றும் நம்பகத்தன்மையினைப் பேணுகின்ற அதேவேளை துரிதமாக பரிணாம வளர்ச்சியடைந்துவருகின்ற தொழில்நுட்பவியல் தோற்றவமைப்பிற்கு ஈடுகொடுப்பதன் முக்கியத்துவதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ஆகையினால், மத்திய வங்கியானது அதன் பொறுப்பாணையை நிறைவுசெய்வதில் உறுதியாகவிருக்கின்ற அதேவேளை மீட்சியிலிருந்து மிகவும் தாக்குப்பிடிக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்குகின்ற வளர்ச்சிப்பாதையொன்றுக்கு மாறுதலடைவதற்கு உறுதுணையளிக்கும்.

இக்காலப்பகுதியின் போது குறிப்பாக அசாதாரண சவால்கள் மிக்க காலப்பகுதியில் அவர்களின் தொழில்சார் பண்பு, நேர்மை, அர்ப்பணிப்பு என்பவற்றுக்காக இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களுக்கு எனது உண்மையான பாராட்டுக்களைப் பதிவுசெய்கின்றேன். அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு மற்றும் ஆதரவிற்கான அரசாங்கம், நிதியியல் நிறுவனங்கள், சந்தைப் பங்கேற்பாளர்கள் மற்றும் சர்வதேசப் பங்காளர்கள் ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும். ஒன்றாக இணைந்து நாம் இலங்கைக்கென உறுதியான தாக்குப்பிடிக்கத்தக்க சுபீட்சமிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உறுதிபூண்டுள்ளோம்.



**முனைவர். நந்தலால் வீரசிங்க**
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

# வங்கி பற்றி

## தாபனமும் சட்ட வடிவமும்

இலங்கை மத்திய வங்கி (மத்திய வங்கி) 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தை மாற்றீடுசெய்து 2023 செத்தெம்பர் 15 அன்று நடைமுறைக்குவந்த 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் இலங்கையின் நாணய, நிதியியல், கொடுப்பனவு முறைமைகளின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு பொறுப்புமிக்க அதிகாரியாகத் தொழிற்படுகின்ற நிலையான பதவியுரிமையுடன் கூடிய நியதிச்சட்ட ரீதியாக தாபிக்கப்பட்ட யாக்கமாகும். இச்சட்டம் மத்திய வங்கியின் சுயாதீனத்தை அதிகரிக்கின்ற அத்துடன் அதன் பொறுப்பாணை பற்றிய செயல்திறன்வாய்ந்த மற்றும் தன்னிச்சையாக நிறைவேற்றுவதற்கு ஆதரவளிக்கின்ற வலுவான சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்பினைத் தாபிக்கின்றது.

## குறிக்கோள்கள்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 6ஆம் பிரிவிற்கமைய மத்திய வங்கியின் முதன்மை குறிக்கோள் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைந்து பேணுகின்ற அதேவேளை அதன் உள்ளார்ந்த ஆற்றலைநோக்கிய வெளியீட்டை நிலைப்படுத்துவதை கவனத்தில் கொள்வதாகும்.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாக்கின்ற அதேவேளை நிதியியல் முறைமையின் அபிவிருத்தியையும் வினைத்திறனையும் உறுதிசெய்வதாகும்.

இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கி அரசாங்கத்தின் பொதுவான பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பிற்கு ஆதரவளிக்க வேண்டும்.

## பணிகள்

அதன் பொறுப்பாணையை நிறைவுசெய்வதில் மத்திய வங்கி நாணயக் கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்தி, நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைசெய்து மற்றும் கொடுப்பனவு முறைமைகளை மேற்பார்வை செய்கின்றது.

நிதியியல் நிறுவனங்களின் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் அத்துடன் நாட்டின் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் உறுதிசெய்வதற்கு வங்கி அவற்றை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்கின்றது.

மேலும், மத்திய வங்கி அதன் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் வருகின்ற நிதியியல் நிறுவனங்களை தீர்ப்பதுடன் பேரண்ட கொள்கை வழிமுறைகளை பின்பற்றி நடைமுறைப்படுத்துவதோடு இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிக்கின்றது அத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டங்களைப் பேணுகின்றது.

இலங்கை மத்திய வங்கி இலங்கையில் நாணயத்தை வெளியிடுவதற்கு ஏக அதிகாரத்தைக் கொண்டிருந்து, தேசிய நாணயத்தின் ஒருமைப்பாடு மற்றும் உறுதிப்பாடு என்பவற்றை உறுதிசெய்கின்றது.

மத்திய வங்கி அரசாங்கத்தின் நிதியியல் ஆலோசகராகவும் வங்கியாளராகவும் அரசிறை முகாமையாளராகவும் செயற்படுகின்றது.

## ஆளுகைக் கட்டமைப்பு

இலங்கை மத்திய வங்கியானது இரண்டு முக்கிய சபைகளினால் அதாவது, வங்கியின் ஒட்டுமொத்த நிருவாகத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் பொறுப்பாகவிருக்கின்ற ஆளும் சபை அத்துடன் நாணயக் கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருக்கின்ற நாணயக் கொள்கைச் சபை ஆகிய இரு முக்கிய தீர்மானம் மேற்கொள்ளும் சபைகளில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. சபை உறுப்பினர்கள் நிதி அமைச்சரின் பரிந்துரையின் பேரிலும் அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சபையின் அனுமதியுடனும் சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர்.

ஆளுநர் வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலரும், முதன்மைப் பிரதிநிதியுமாவார். இதற்கு மேலதிகமாக மூத்த முகாமைத்துவ அணி மூத்த துணை ஆளுநர், துணை ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள், திணைக்களங்களின் பிரதானிகளை உள்ளக்குகின்றது.

## பன்னாட்டு ஒத்துழைப்புகளும் ஈடுபாடுகளும்

இலங்கை மத்திய வங்கியானது இயலளவு விருத்தி, கொள்கை வகுத்தல் மற்றும் நிதியியல் துறை மறுசீரமைப்புக்கள் என்பவற்றுக்கு ஆதரவளிப்பதற்கு பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி போன்ற நிறுனங்கள் உள்ளடங்கலாக பன்னாட்டு நிதியியல் நிறுவனங்களுடனும் மத்திய வங்கி வலையமைப்புகளுடனும் முனைப்புடன் ஈடுபடுகின்றது. ஒத்துழைப்பைப் பேணிவளர்ப்பதற்கும் அறிவினைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒத்திசைவான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கும் வங்கி ஏனைய மத்திய வங்கிகள், பிராந்திய நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் என்பவற்றுடன் இருதரப்பு மற்றும் பல்தரப்பு ஏற்பாடுகளிலும் பங்கேற்கின்றது. உலகளாவிய மற்றும் பிராந்தியப் பொருளாதார மன்றங்களின் அதன் ஈடுபாட்டினூடாக மத்திய வங்கி பன்னாட்டு நிதியியல் முறைமையுடன் நெருங்கி இணைக்கப்பட்டுக் காணப்பட்டு தோற்றம்பெற்றுவருகின்ற உலகளாவிய பொருளாதாரம் மற்றும் நிதியியல் அபிவிருத்திகளுக்கு ஏற்புத்தன்மை மிக்கதாக விளங்குகின்றது.

## பொதுமக்கள் ஈடுபாடும் சேவைகளும்

மரபுசார் ஊடகங்கள், டிஜிட்டல் தளங்கள், அலுவல்சார் வெளியீடுகள் உள்ளடங்கலாக பல்வகைத் தொடர்பூட்டல் மார்க்கங்கள் வாயிலாக பொதுமக்களுடன் மத்திய வங்கி தொடர்ச்சியான ஈடுபாட்டினைப் பேணுகின்றது. பொருளாதார மற்றும் நிதியியல் பிரச்சனைகள் பற்றிய பொதுமக்கள் புரிந்துகொள்ளலை வலுப்படுத்துவதற்கு வங்கி நிதியியல் அறிவு மற்றும் சென்றடைவ நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், கல்விசார் முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துகின்றது. வங்கித்தொழில் ஒழுங்குவிதிகள், வாடிக்கையாளர் பாதுகாப்பு, நிதியியல் மோசடித்தடுப்பு, நாணயக் கொள்கை என்பன மீது பொதுமக்கள் வினவல்களுக்கும் பின்னூட்டல்களுக்கும் அணுகத்தக்க வழிகளையும் வங்கி வழங்குகின்றது. மத்திய வங்கியானது நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு ஆதரவளிக்கின்றது, வாடிக்கையாளர் நம்பிக்கையினைக் கட்டியெழுப்புகின்றது, நிதியியல் முறைமையில் தகவலறிந்த பங்கேற்பதை ஊக்குவிக்கின்றது.

## பிரதான அலுவலகம்

மத்திய வங்கியின் பிரதான தொழிலிடம் கொழும்பு 1 இல் அமையப்பெற்றுள்ளதுடன் அநுராதபுரம், மாத்தறை, மாத்தளை, நுவரெலியா, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய இடங்களில் 6 பிராந்திய அலுவலகங்கள் அதன் தேசியளவிலான பணிகள் மற்றும் சென்றடைவை நீடிப்பதற்கு வங்கியை இயலச்செய்கின்றன.

# உள்ளடக்கம்


வாசகர்களுக்கான குறிப்பு III

ஆளுநரின் செய்தி IV

வங்கி பற்றி VI

உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதுடன் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்தினை வடிவமைக்கின்ற 75 ஆண்டுகள் VIII

## தொழிற்பாட்டு நுண்ணோக்குகள் 01

**வங்கி ரீதியிலான உபாய முன்னுரிமைகள் 01**

**வங்கியின் வகிபாகம் 04**

- உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல் 04
- நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்தல் 14
- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் 34
- நாணயத் தொழிற்பாடுகள் 40
- பன்னாட்டு ஈடுபாடுகள் 45
- ஒப்படைக்கப்பட்ட ஏனைய பொறுப்புக்கள் 47

**வங்கியை முகாமைசெய்தல் 54**

- மனித மூலதன முகாமைத்துவம் 54
- தகவல் தொழில்நுட்பம் 56
- பொது நிருவாகம் 58

**ஆளுகை 60**

- சபை உறுப்பினர்கள் 66
- கூட்டாண்மை முகாமைத்துவம் 70
- முதன்மை அலுவலர்கள் 72
- கணக்காய்வு குழு அறிக்கை 76
- இடர்நேர்வு முகாமைத்துவமும் இணங்குவித்தலும் 78
- உள்ளகக் கணக்காய்வு 79

## நிதியியல் அறிக்கைகள் 02

- நிதியியல் மீளாய்வு 81
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 84
- நிதியியல் நிலைமைக் கூற்று 88
- வருமானக் கூற்று 90
- ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று 91
- உரிமை மூலதன மாற்றல் கூற்று 92
- காசுப்பாய்ச்சல் கூற்று 93
- நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும் 95

## மேலதிகத் தகவல்கள் 03

- வெளியீடுகளும் தரவு பரப்புதலும் - 2025 197
- இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவு 198
- பிரதேச அலுவலகங்கள் 200
- இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்கள் 201

# இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்தினை வடிவமைக்கின்ற 75 ஆண்டுகள்

## தேசிய ரீதியிலான அபிலாஷைகளில் வேரூன்றியதொரு பயணம்



இலங்கை மத்திய வங்கியின் வரலாறானது நாட்டின் சொந்தப் பொருளாதாரப் பரிணாம வளர்ச்சியினைப் பிரதிபலிக்கின்றது. சுதந்திரத்தின் ஆரம்ப ஆண்டுகளிலிருந்து சீர்திருத்தம், தாக்குப்பிடிக்-குந்தன்மை மற்றும் புதுப்பிக்கப்பட்ட உறுதிப்பாடு என்பவற்றினால் வரைவிலக்கணப்படுத்தப்-படுகின்ற நவீன யுகம் வரையான காலப்பகுதியில் வங்கியானது இலங்கையின் நிதியியல் முறைமையின் மையப் புள்ளியாகத் தொடர்ந்து திகழ்ந்து வருகின்றது.

2025இல் எமது 75ஆவது ஆண்டுநிறைவினைக் கொண்டாடுகின்ற வேளையில், இம்மைற்கல்லானது வெறும் நீண்டகால இருப்பினைக் கொண்டாடும் நிகழ்வொன்று மாத்திரமின்றி, பல்வேறு தலைமுறையினரிற்கிடையில் நாணய உறுதிப்பாட்டினைப் பாதுகாத்து, நிதியியல் தாக்குப்பிடிக்குந்தன்மையினை வலுப்படுத்தி, தேசிய ரீதியிலான அபிவிருத்திக்கு ஆதரவளித்துள்ள நிறுவனமொன்றிற்குச் செலுத்தப்படும் கௌரவமாகும்.




## நாணயச் சபையிலிருந்து மத்திய வங்கிக்கு

இலங்கையின் முறைசார்ந்த நாணய நிர்வாகமானது 1884ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க தாள் நாணயக் கட்டளைச்சட்டத்தினால் நிறுவப்பட்ட நாணயச் சபை முறைமையின் கீழ் தொடங்கியது. நாணயச் சபையானது உள்நாட்டு நாணயத்திற்கு நிகராக வெளிநாட்டு ஒதுக்கினைக் கொண்டிருப்பதனை நிச்சயப்படுத்துவதற்கு வலுவான ஆதரவினை வழங்கிய வேளையில், உள்நாட்டு நாணய முகாமைத்துவத்திற்கு அது மட்டுப்படுத்தப்பட்ட நெகிழ்ச்சித்தன்மையினையே வழங்கியது.

1948இல் சுதந்திரம் கிடைக்கப்பெற்றதனைத் தொடர்ந்து, அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் பொருளாதார அதிர்வுகளினை முகாமைசெய்வதற்குமான இயலளவுடன்கூடிய நவீன மத்திய வங்கித்தொழில் நிறுவனமொன்றிற்கான அவசியத்தினை தேசியத் தலைவர்கள் உணர்ந்தனர்.

1948 யூலை மாதத்தில் இலங்கையின் மத்திய வங்கிக்கான கட்டமைப்பினை வடிவமைப்பதற்காக அமெரிக்கப் பொருளாதார நிபுணர் ஜோன் எக்ஸ்ரர் நியமிக்கப்பட்டார். எக்ஸ்ரர் அறிக்கை என அழைக்கப்படுகின்ற அவரது பரிந்துரைகள் நாட்டில் மத்திய வங்கித்தொழிலிற்கான நிறுவனம் சார்ந்த மற்றும் சட்ட ரீதியான அடித்தளத்தினை அமைத்தன.

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் சட்டவாக்கமானது இலங்கை மத்திய வங்கியினை (Central Bank of Ceylon) உத்தியோகபூர்வமாக நிறுவியதுடன் இது 1950 ஓகத்து 28ஆம் திகதி தொழிற்பாடுகளை ஆரம்பித்தது.




## பொறுப்பாணையினை நிறுவுதல்

மூலக் குறிக்கோள்கள் பின்வருவற்றினை உள்ளடக்கியிருந்தன:

- உள்நாட்டு நாணயப் பெறுமதிகளினை உறுதிநிலைப்படுத்தல் (விலை உறுதிப்பாடு)
- ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினைப் பாதுகாத்தல்
- உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் உண்மை வருமானம் ஆகியவற்றின் உயர்ந்தளவிலான மட்டங்களினை ஊக்குவித்தல்.
- நாட்டின் உற்பத்திமிக்க மூலவளங்களின் முழுமையான அபிவிருத்தியினை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்

இக்குறிக்கோள்கள் வங்கியின் ஆரம்பகால நிறுவன ரீதியிலான அடையாளத்தினை வடிவமைத்தன.

ஆரம்பத்திலிருந்தே, வங்கிக்குப் பரந்தளவிலான பொறுப்புக்கள் வழங்கப்பட்டன:

- நாணயக் கொள்கையை நடாத்துதல்
- அனைத்து வங்கித்தொழில் நிறுவனங்களினது தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் காலமுறையான பரீட்சிப்புக்கள்
- நாணயத்தினை வெளியிடுவதற்கான ஏக அதிகாரம்
- பன்னாட்டு ஒதுக்குகளின் போதியளவிலான மட்டத்தைப் பேணுதல்
- வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தல்
- அரசாங்கத்திற்கான வங்கியாளர், இறை முகவர் மற்றும் நிதியியல் ஆலோசகராகத் தொழிற்படுதல்



1996



## நேரடிக் கட்டுப்பாடுகளிலிருந்து சந்தையின் அடிப்படையிலமைந்த கட்டமைப்புகளிற்கு

நாணயக் கொள்கையானது அதன் ஆரம்ப தசாப்தங்களில் கொடுகடன் உச்சவரம்புகள், நிர்வகிக்கப்பட்ட வட்டி வீதங்கள் மற்றும் நியதிச் சட்ட ஒதுக்கு விகிதச் செலாவணிக் கட்டுப்பாடுகள் போன்ற நேரடிச் சாதனங்களில் பெரிதளவில் தங்கியிருந்தது. மேலும், நிலையான செலாவணி வீதக் கட்டமைப்பில் மத்திய வங்கி தொழிற்பட்டது.

இலங்கைப் பொருளாதாரமானது 1977களிலிருந்து தாராளமயப்படுத்தப்பட்டமையினால், வங்கி அதன் கொள்கைக் கட்டமைப்பினைப் படிப்படியாக நவீனமயப்படுத்தியது:

## நாணய இலக்கிடல் யுகம்

ஒட்டுமொத்த நாணய வழங்கல் வளர்ச்சியை வழிநடாத்துவதற்கும் நிலையான பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கும் மத்திய வங்கி ஒதுக்குப் பணத்தை தொழிற்பாட்டு இலக்காகவும் விரிந்த பணத்தை இடைநிலை இலக்காகவும் ஏற்றுக்கொண்டது.

## சந்தை சார்ந்த நிதியியல் மாற்றம்

இலங்கை மத்திய வங்கியானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் அதன் வகிபாகத்தை படிப்படியாக வலுப்படுத்திய அதேவேளை ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையினை மேம்படுத்தியதோடு, இலத்திரனியல் நிதிய மாற்றல்களை இயலச்செய்வதற்கு 1992இல் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினை அறிமுகப்படுத்தியதுடன் 1995இல் சந்தைத் தீர்மான செலாவணி வீத முறைமையினை ஏற்றுக்கொண்டு, மிகவும் தாராளமயப்படுத்தப்பட்ட மற்றும் நவீன நிதியியல் கட்டமைப்புக்களை நோக்கிய மாற்றத்தைக் குறிக்கின்றது.

## 1996: நிறுவன ரீதியிலான தாக்கு-பிடிக்குந்தன்மையினை வரையறுக்கின்றதொரு பரீட்சிப்பு

1996 சனவரி 31 அன்று, வங்கியின் தலைமையகம் பயங்கரவாதத் தாக்குதலிற்கு உள்ளாகி சிதைக்கப்பட்டபோது அதன் வரலாற்றில் மிகவும் துயரமான நிகழ்வுகளில் ஒன்றை வங்கி எதிர்கொண்டதுடன் இந்தத் தாக்குதலில் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

உட்கட்டமைப்பிற்குக் கடுமையான சேதம் ஏற்பட்ட போதிலும், வங்கி சில நாட்களினுள்ளேயே முக்கியமான தொழிற்பாடுகளை மீட்டெடுத்தது. பதிவுகள், முறைமைகள் மற்றும் நிறுவன ரீதியிலான இயலளவு என்பன குறிப்பிடத்தக்களவு வேகத்துடனும் உறுதியுடனும் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டன.

இத்தருணமானது இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களின் தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றினை நிரூபிக்கின்ற முக்கிய சான்றொன்றாகத் தொடர்ந்தும் விளங்குகின்றது.

## புதிய தலைமையகம், புதிய யுகம்

2000ஆம் ஆண்டில், நாட்டின் பொருளாதாரத்திற்கு வழிகாட்டிய ஐந்து தசாப்தங்களைக் குறிக்கும் வகையில், இலங்கை மத்திய வங்கியானது அதன் 50ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியதுடன் இலங்கையின் நிதியியல் முறைமை நவீனமயமாக்குவதில் தனது விரிவடைந்து வரும் வகிபாகத்தையும் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கும் வகையில் புதியதொரு அதிநவீன தலைமை அலுவலகக் கட்டிடத்திற்கு இடமாறியது.

## இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாணையினைச் செம்மைப்படுத்துதல்

2002இல், நாணய விதிச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் வங்கியின் மையக் குறிக்கோள்களான,

- பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு
- நிதியியல் முறைமை உறுதிப்பாடு

இச்சீர்திருத்தமானது நிறுவன ரீதியிலான தெளிவாந்தன்மையினையும் பொறுப்புக்கூறலினையும் வலுப்படுத்தியது.

## உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதுடன் இலங்கைப் பொருளாதாரத்தின் எதிர்காலத்தினை வடிவமைக்கின்ற 75 ஆண்டுகள்



2025



### பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதற்கான பங்களிப்பு

2020-2022 காலகட்டத்தில் சுதந்திரத்திற்குப் பிந்திய மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு பதிலளிக்கும் விதமாக, மத்திய வங்கி பரந்த தேசிய சீர்திருத்தங்களின் பாகமாக, தீர்க்கமான நாணய இறுக்கமடைதல், வட்டி வீத சீராக்கங்கள் மற்றும் நிலைப்படுத்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

மிகைப் பணவீக்கத்தினைத் தவிர்ப்பதற்கும் வெளிநாட்டு ஒதுக்குகளை உருவாக்குவதற்கும், ஐந்தொகையுடன் தொடர்புடைய அழுத்தங்களைக் குறைத்தல், பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதற்கும் இந்நடவடிக்கைகள் இன்றியமையாதனவாகக் காணப்பட்டன.




### புதியதொரு சட்ட யுகம்: 2023இன் இலங்கை மத்திய வங்கிச் சட்டம்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் வரலாற்று ரீதியிலானதொரு மைற்கல் எட்டப்பட்டதுடன் இது நாணய விதிச் சட்டத்தினை நீக்கியது.

இச் சட்டமானது நெகிழ்ச்சிதன்மைவாய்ந்த இலக்கிடல் கட்டமைப்பொன்றை நெகிழ்ச்சிதன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்புடன் பின்பற்றுவதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரமளித்தது.

புதிய கட்டமைப்பானது நிறுவன ரீதியிலான சுயாதீனம், ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை வலுப்படுத்தியது.

இதற்கு மேலதிகமாக, பேரண்டமுன்மதியுடைய மற்றும் தீர்மான அதிகாரசபையாக மத்திய வங்கியின் நியமனம் பெற்றது.

### சுபீட்சத்திற்கான உறுதிப்பாடு: நம்பிக்கையின் பாரம்பரியம்

இறுக்கமானதொரு நாணயச் சபையிலிருந்து நவீன மற்றும் சுயாதீனமிக்க மத்திய வங்கி வரையிலான 75ஆண்டுகளுக்கு மேலான இலங்கை மத்திய வங்கியின் பரிணாமமானது உறுதிப்பாடு மற்றும் அபிவிருத்தி என்பவற்றினை நோக்கிய இலங்கையின் தொடர்ச்சியான முயற்சியினைப் பிரதிபலிக்கின்றது.

இன்று, நிறுவன ரீதியிலான கவனம் செலுத்துதலானது பின்வருவனவற்றில் தங்கியுள்ளது:

- பணவீக்கத்தினை நிலைநிறுத்துதல்
- நிதியியல் முறைமைத் தாக்குப்பிடிக்குந்தன்மையினை வலுப்படுத்தல்
- நெருக்கடி நிலைமைகளிற்கான தயார்படுத்தலினை மேம்படுத்தல்
- நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிக்கும் அதேவேளை வெளிப்படைத்தன்மையியும் பொறுப்புகூறும்தன்மையையும் நிலைநிறுத்தல்

நூற்றாண்டொன்றின் மூன்று காலாண்டு காலமாக, இலங்கை மத்திய வங்கி அதன் பணியில் உறுதியாகத் தொடர்ந்தும் காணப்பட்டுள்ளது.

அனுபவத்தினால் வழிநடத்தப்பட்டும், சீர்திருத்தங்களினால் வலுப்படுத்தப்பட்டும் அத்துடன் எதிர்கால சந்ததியினரிற்கான சுபீட்சத்தினை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டும் இப்பயணம் தொடர்கின்றது.


75
YEARS
STABILITY FOR PROSPERITY
1950-2025

# முன்னாள் ஆளுநர்கள்



**ஜோன் எக்ஸ்ரர்**
1950 - 1953



**என். யு. ஜயவர்த்தன**
1953 - 1954



**சேர் ஆதர் ரணசிங்க**
1954 - 1959






**எச். பீ. திசாநாயக**
1992 - 1995



**முனைவர்**
**எச். என். எஸ். கருணாதிலக**
1988 - 1992












**ஏ. எஸ். ஜயவர்த்தன**
1995 - 2004



**சுனில் மெண்டிஸ்**
2004 - 2006



**அஜித் நிவாட் கப்ரால்**
2006 - 2015



**டி. டபிள்யு. ராஜபத்திரன**
1959 - 1967



**டபிள்யு. தென்னக்கோன்**
1967 - 1971

1962 1963 1964 1965 1966 1967 1968 1969 1970 1971 1972 1973 1974 1975 1976 1977 1978



**எச். ஈ. தென்னக்கோன்**
1971 - 1979



**முனைவர் டபிள்யு. இராசபுத்ரம்**
1979 - 1988

1979 1980 1981 1982 1983 1984 1985 1986 1987



**முனைவர்**
**இந்திரஜித் குமாரசுவாமி**
2016 - 2019



**பேராசிரியர்**
**டபிள்யு. டி. லக்ஷ்மன்**
2019 - 2021

2014 2015 2016 2017 2018 2019 2020 2021 2022



**அர்ஜுன மகேந்திரன்**
2015 - 2016



**அஜித் நிவாட் கப்ரால்**
2021 - 2022

01

# தொழிற்பாட்டு நுண்ணோக்குகள்

**வங்கி ரீதியிலான உபாய முன்னுரிமைகள்**

**வங்கியின் வகிபாகம்**


04 உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

14 நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்தல்

34 கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்

40 நாணயத் தொழிற்பாடுகள்

45 பன்னாட்டு ஈடுபாடுகள்

47 ஒப்படைக்கப்பட்ட ஏனைய பொறுப்புக்கள்


**வங்கியை முகாமைசெய்தல்**


54 மனித மூலதன முகாமைத்துவம்

56 தகவல் தொழில்நுட்பம்

58 பொது நிருவாகம்


**ஆளுகை**


66 சபை உறுப்பினர்கள்

70 கூட்டாண்மை முகாமைத்துவம்

72 முதன்மை அலுவலர்கள்

76 கணக்காய்வுக் குழு அறிக்கை

78 இடர்நேர்வு முகாமைத்துவமும் இணங்குவித்தலும்

79 உள்ளகக் கணக்காய்வு

# வங்கி ரீதியிலான உபாய முன்னுரிமைகள்

இலங்கை மத்திய வங்கியின் உபாய ரீதியிலான திட்டமிடல் செயன்முறையானது 2006ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியான மேம்படுத்தல்களுடன் படிப்படியாக பரிணாமமடைந்துள்ளது. வங்கியின் உபாயத் திட்டமிடல் சுழற்சி மூன்று ஆண்டுகளைக் கொண்டதுடன் நீண்டகால நோக்கங்களுக்கும் அன்றாடச் தொழிற்பாடுகளுக்கும் இடையே தெளிவான தொடர்பை உறுதிசெய்யும் செயன்முறையைப் பின்பற்றுகிறது. இச்செயன்முறையானது நிறுவன இலக்குகளையும் திணைக்களம்சார் பொறுப்பாணைகளையும் இணைத்து, மேலிருந்து கீழ் மற்றும் கீழிருந்து மேல் ஆகிய இரு வழிகளிலும் தொழிற்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி அதன் வலுப்படுத்தப்பட்ட சட்ட ரீதியிலான பொறுப்பாணை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நிறுவனம் சார்ந்த நம்பகத்தன்மை ஆகியவற்றின் மீதான புதுப்பிக்கப்பட்ட முக்கியத்துவம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு 2024இல் அறிமுகப்படுத்தப்பட்ட 2024-2026 உபாயத் திட்டத்தினை தொடர்ந்து நடைமுறைப்படுத்தியது.

## உபாய ரீதியிலான பிரச்சனைகளை வரையறுத்தல்

உபாய ரீதியிலான திட்டமிடல் சுழற்சியானது சூழல்சார் ஆய்வொன்றின் மூலம் ஆதரவளிக்கப்பட்டுக் கண்டறியப்படும் முக்கிய உபாய ரீதியிலான பிரச்சனைகளுடன் தொடங்குகின்றது. விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாடு, இடர்நேர்வு முகாமைத்துவப் பரிசீலனைகள், வெளியக ஆர்வலர் எதிர்பார்க்கைகள் மற்றும் மனித வளம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பன உள்ளடங்கலாக உள்ளகக் காரணிகள் ஆகிய ஐந்து ஆழமான பகுப்பாய்வுகளின் அடிப்படையில் இவ்வாய்வு நடத்தப்படுகின்றது. இவ்வறிக்கைகள் உயர்ந்தளவிலான முன்னுரிமையினைத் தேவைப்படுத்துகின்ற பகுதிகளை எடுத்துக்காட்டுவதற்கு போக்குவரத்துச் சமிக்ஞை விளக்கு முறைமையினைப் பயன்படுத்தி அதன்மூலம், அதன் நடுத்தர கால உபாயப் பணிப்புரையில் செல்வாக்குச் செலுத்துகின்ற உள்ளக மற்றும் வெளியக ஆகிய இரு காரணிகளையும் வங்கி முறையாக மதிப்பிடுவதனை அனுமதிக்கின்றது.

2024-2026 திட்டமிடல் சுழற்சிக்கான தயாா்படுத்தலில், உபாய ரீதியிலான பிரச்சனைகள் 2023இன் பிற்பகுதியில் அடையாளம் காணப்பட்டன.

## உபாய ரீதியான முன்னுரிமைகளை அடையாளப்படுத்தல்

பகுப்பாய்வினைத் தொடர்ந்து, முகாமைத்துவ மட்டத்திலான பல சுற்றுக்களிலான கலந்துரையாடல்களின் ஊடாக உபாய ரீதியிலான முன்னுரிமைகள் தெரிவுசெய்யப்படுகின்றன. இருப்பினும், காலப்போக்கில் ஏற்படுகின்ற தேவைப்பாடுகள் மற்றும் சந்தை அபிவிருத்திகளின் அடிப்படையில், உபாய ரீதியிலான திட்டமிடல் சுழற்சியிலும்கூட புதிய முன்னுரிமைகள் அடையாளங்காணப்பட முடியும்.

**உபாய ரீதியான திட்டமிடல் செயன்முறை** வரைபடம் - 01




2024 - 2026 சுழற்சிக்கான ஐந்து உபாயரீதியிலான முன்னுரிமைகள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

உபாய ரீதியிலான முன்னுரிமைகள் மைய முன்னுரிமைகள் மற்றும் மேம்படுகின்ற முன்னுரிமைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மைய முன்னுரிமைகள் வங்கியின் மையக் குறிக்கோள்களுடன் நேரடியாகத் தொடர்புடையவையாகவும் அவற்றுடன் இணைக்கப்பட்டவையாகவும் காணப்படுகின்ற வேளையில், மேம்படுகின்ற முன்னுரிமைகள் ஆர்வலர்களின் ஈடுபாட்டினை ஊக்குவித்தல், உள்ளக செயன்முறைகளை மேம்படுத்தல், தொழில்நுட்பத்தினை முன்னேற்றுதல் மற்றும் வங்கியின் திறன்களை மேம்படுத்தல் போன்ற வங்கியின் இயலளவு, வினைத்திறன் மற்றும் தாக்குப்பிடிக்குந்தன்மை என்பவற்றினை வலுப்படுத்துவதனை வசதிப்படுத்துகின்றன.

**கீழிருந்து மேல்நோக்கிய உள்ளீடுகளுடன் மேலிருந்து கீழ்நோக்கிய உபாய ரீதியிலான பணிப்புரைகளினை ஒன்றிணைப்பதன் மூலம் மத்திய வங்கியானது அதன் பணி, தொலைநோக்கு மற்றும் உபாய ரீதியிலான குறிக்கோள்கள் என்பவற்றிற்கிடையிலான வலுவான ஒருங்கிசைவினை நிச்சயப்படுத்துகின்ற ஒருங்கிணைந்த திட்டமிடல் அணுகுமுறையொன்றினை வலுப்படுத்தி, உள்நாட்டு விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றிற்கு வழிவகுக்கின்றது**

## உபாய ரீதியிலான திட்டங்களினை வகுத்தல்

முன்னுரிமைகள் இறுதிப்படுத்தப்பட்டவுடன், வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள், காலவரையறை செய்யப்பட்ட நடவடிக்கைகள், அளவிடக்கூடிய பெறுபேறுகள் மற்றும் முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகள், ஒவ்வொரு செயற்பாட்டிற்குமான நிறைவேற்றங்கள், காலாண்டு ரீதியிலான பெறுபேற்று இலக்குகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமிக்க திணைக்களங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான முன்னுரிமை திட்டங்கள் மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு உருவாக்கப்படுகின்றன.

## உபாய ரீதியிலான திட்டங்களின் மதிப்பீடு

இத்திட்டங்களின் சாத்தியக்கூறுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளை மதிப்பிடும் பொருட்டு கட்டமைக்கப்பட்ட சமதகுதி மீளாய்வுச் செயன்முறையொன்றிற்கு உட்படுத்தப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக, ஒவ்வொன்றிலும் 10 தொடக்கம் 12 முதுநிலை முகாமைத்துவ உறுப்பினர்களைக் கொண்ட மீளாய்வுக் குழுக்கள் ஆண்டுதோறும் நியமிக்கப்படுகின்றன. பொதுவாக, ஐந்து தொடக்கம் ஆறு மீளாய்வுக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. குழு அமர்வுகளின் ஊடாக, சமதகுதி மீளாய்வுச் செயன்முறையானது கூட்டான நுண்ணோக்குகள், கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குகின்றது.

## முன்னுரிமைத் திட்டங்களைக் கலந்தாராய்தல் மற்றும் இறுதிப்படுத்தல்

முதுநிலை முகாமைத்துவமானது வங்கியின் நடுத்தர கால உபாயப் பணிப்புரையினை முகாமைத்துவம் மற்றும் சபை உறுப்பினர்களுடன் இணைந்து கலந்தாலோசித்து இறுதிப்படுத்துகின்ற முக்கிய தளமாக விளங்குகின்ற வருடாந்த உபாயத் திட்டமிடல் மீள்மதிப்பீட்டில் முன்னுரிமைத் திட்டங்கள் கலந்துரையாடப்படுகின்றன.

## நடைமுறைப்படுத்தல் செயன்முறை மீளாய்வும் அறிக்கையிடலும்

உபாய ரீதியிலான முன்னுரிமைகளின் முன்னேற்றமானது இலக்கிடப்பட்ட பெறுபேறுகளிற்கு எதிராக காலாண்டு அடிப்படையொன்றில் கண்காணிக்கப்படுவதுடன் அம்முன்னேற்றமானது முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்படுகின்றன.

## வங்கி ரீதியிலான உபாய முன்னுரிமைகள்

### மைய முன்னுரிமைகள் 2024-2026

#### பேரண்டப்பொருளாதார சீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக நீடித்துநிலைத்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியை வசதிப்படுத்தல்

**குறிக்கோள்**

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுதல்

**வெளிவரு விளைவு**

- மேம்பட்ட நாணயக் கொள்கைத் தீர்மானங்கள்
- அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் குறைவு
- நாணயக் கொள்கைக் கருவிகளின் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தல்
- இலங்கை மத்திய வங்கியின் சுயாதீனம், ஆர்வலர் நம்பிக்கையை மீளமைத்தல் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை நிச்சயப்படுத்துகின்ற வலுவான இலங்கை மத்திய வங்கி ஐந்தொகை

**பெறுபேறு**

- இலக்கிடப்பட்ட பணவீக்கத்தினை அடைதல்
- நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள்
- குறைவான தளம்பல்மிக்க செலாவணி வீதம்
- உயர்ந்தளவிலான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள்
- வங்கித்தொழில் முறைமையில் குறைந்தபட்ச திரவத்தன்மை அழுத்தம்

**எதிர்பார்க்கப்படும் தாக்கம்**

நீடித்துநிலைத்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியினை அடைதல்

#### முறைமை சார்ந்த இடர்நேர்வுகளை மட்டுப்படுத்தல் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை வலுப்படுத்தல் என்பன மூலம் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அடைதல்

**குறிக்கோள்**

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை அடைதல்

**வெளிவரு விளைவு**

- வினைத்திறன்மிக்க நிதியியல் இடையீட்டுக்குப் பங்களிக்கின்ற பொதுமக்கள் வைப்புக்களை ஏற்கும் நிறுவனங்களின் உறுதிப்பாடு
- ஆற்றல்வாய்ந்த பேரண்டமுன்மதியுடைய கட்டமைப்பையும் கொள்கையையும் தாபித்தல்
- சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் திருத்தங்கள்
- தீர்மான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல் அத்துடன் போதுமான பாதுகாப்பு வலையமைப்புப் பொறிமுறைகளைத் தாபித்தல்
- தொழில்நுட்ப ரீதியாக உந்தப்பட்ட மேற்பார்வைக் கருவிகளை நடைமுறைப்படுத்தல்

**பெறுபேறு**

- போதியளவிலான மூலதனமாக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள்
- தொழிற்படுத்தப்பட்ட பேரண்டமுன்மதியுடைய அதிகாரசபை
- மேம்பட்ட சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்கள்
- பாதுகாப்பான, செயற்றிறன்மிக்க மற்றும் வினைத்திறன் வாய்ந்த கொடுப்பனவு முறைமை

**எதிர்பார்க்கப்படும் தாக்கம்**

- வலிமையான, தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் சுறுசுறுப்பான நிதியியல் நிறுவனங்கள்
- நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிலும் நம்பகத்தன்மையிலும் பொதுமக்களின் நம்பிக்கை

வரைபடம் - 02

## மேம்படுகின்ற முன்னுரிமைகள் 2024-2026

### மேம்படுத்தப்பட்ட வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றிற்காக உள்ளக மற்றும் வெளியக தொடர்பூட்டலினை வலுப்படுத்தல்

**குறிக்கோள்**

சிறந்த புரிந்துகொள்ளல், அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் ஈடுபாடு என்பவற்றுக்காக இலங்கை மத்திய வங்கியின் கொள்கைகள் பற்றிய செயற்றிறன்வாய்ந்த தொடர்பூட்டல்

**வெளிவரு விளைவு**

- இலங்கை மத்திய வங்கிக்கான நெருக்கடித் தொடர்பூட்டலொன்றினைத் தாபித்தல்
- தொழில்நுட்பம் சாராத சுருக்கங்களையும் மாதத்திற்கு இருமுறை வரும் ஆசிரியர் தலையங்கத்தின் எதிர்ப்பக்கத்தில் வருகின்ற கண்ணோட்டங்களை வெளியிடுதல்
- நிதியியல் அறிவு பற்றிய ஊடகப் பிரச்சாரங்களையும் நிகழ்வுகளையும் நடாத்துதல்
- ஆர்வலர் மற்றும் அவையோர் பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்குதல்

**பெறுபேறு**

- இலங்கை மத்திய வங்கியின் வகிபாகம் மற்றும் அதன் கொள்கைகள் பற்றிய அதிகரித்தளவிலான பொதுமக்கள் புரிந்துகொள்ளல்
- மேம்பட்ட நிதியியல் அறிவு மற்றும் வசதிக்குட்படுத்தல்
- மேம்பட்ட உள்ளகத் தொடர்பூட்டலும் தயார்நிலையும்

**எதிர்பார்க்கப்படும் தாக்கம்**

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மை என்பன ஊடாக அதிகரித்தளவிலான நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை

### நவீன மத்திய வங்கியொன்றுக்கான நடைமுறை மற்றும் வளர்ச்சியடைந்துவருகின்ற ஆற்றல்மிக்க இயக்கவாற்றல்களை ஒன்றிணைத்தல்

**குறிக்கோள்**

ஏற்கனவே காணப்படுகின்ற மனிதவள உபாயத்தினை மறுசீரமைத்தல்

**வெளிவரு விளைவு**

- தொழில் கட்டமைப்புக்களையும் மனித மூலதனத் தொழிற்பாட்டு மாதிரிகளையும் மீளாய்வு செய்தல்
- தொழிற்பாட்டுக் கொத்தணிகளைத் தாபித்தல்
- மனித வலுத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்த ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல்
- செயலாற்ற மதிப்பீட்டுப் பொறிமுறையினைத் வலுப்படுத்தல்
- தொழில்நுட்ப மற்றும் தலைமைத்துவத் திறமை மாதிரியை தாபித்தல்

**பெறுபேறு**

- பணிக்கு இன்றியமையாத பதவிகளிற்கான ஆரோக்கியமிக்க தலைமைத்துவ செயன்முறை உருவாக்கம்
- சேவைகளைப் பெற்றுக்கொள்ளலினை துரிதப்படுத்தல் மற்றும் பல்வேறு மட்டங்களில் பணியாளர் குறைப்பினை மிதமடையச்செய்தல் மற்றும் சக்தியளிக்கும் சூழலொன்றினை உருவாக்கல்
- மிகுந்த ஊழியர் ஈடுபாடு

**எதிர்பார்க்கப்படும் தாக்கம்**

மனிதவள உபாயத்துடன் அணிசேர்ந்திருத்தல்

### இலங்கை மத்திய வங்கியின் தொழில்நுட்பவியல் இயலளவினை மேம்படுத்தல்

**குறிக்கோள்**

நவீன காலத் தொழிற்பாடுகள் மற்றும் தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றுக்காக மத்திய வங்கியின் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் இயலளவினை வலுப்படுத்தல்

**வெளிவரு விளைவு**

- நவீனமயமாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட வன்பொருள்/மென்பொருள்
- மேம்படுத்தப்பட்ட இணையப் பாதுகாப்புக் கட்டமைப்புக்கள் மற்றும் கருவிகள்
- டிஜிட்டல்மயமாக்கப்பட்ட தொடர்ச்சியான பணிப் போக்குகள் மற்றும் தன்னியக்கப்படுத்தப்பட்ட முக்கிய செயன்முறைகள்
- மேம்பட்ட தரவுப் பகுப்பாய்வுத் தளங்கள்

**பெறுபேறு**

- விரைவான மற்றும் அதிக நம்பகத்தன்மை கொண்ட தொழிற்பாடுகள்
- கொள்கை வகுப்பதற்கான மேம்பட்ட பகுப்பாய்வு சார்ந்த இயலளவு
- இணைய அச்சுறுத்தல்களுக்கு எதிரான உயர்ந்தளவிலான தாக்குப்பிடிக்குந்தன்மை
- ஆர்வலர்களிற்கான மேம்படுத்தப்பட்ட பணி வழங்கல்

**எதிர்பார்க்கப்படும் தாக்கம்**

நவீன மத்திய வங்கிக்கான தொழில்நுட்ப இயலாற்றலை மேம்படுத்தல்

**வங்கியின் வகிபாகம்**

# உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுவதே மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோளாகும். இது பொது விலை மட்டம் தேவையற்ற தளம்பலின்றி காணப்படுகின்றதை உறுதிசெய்கின்றது. மேலும், விலை உறுதிப்பாடானது முதலீட்டாளர் நம்பிக்கையை ஊக்குவிப்பதுடன், வினைத்திறன்மிக்க பொருளாதார தீர்மானமெடுத்தலை வசதிப்படுத்துகின்றதுடன் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கு பங்களித்து, அதன்மூலம் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது.

## நாணயக் கொள்கை உருவாக்கம்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, நாணயக் கொள்கையை உருவாக்குவதற்கும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடலும் ஒத்திசைவாகின்ற நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் வங்கியின் கொள்கைச் சபை பொறுப்புடையதாக விளங்குகின்றது. அரசாங்கத்தின் சார்பாக நிதி அமைச்சருக்கும் மத்திய வங்கிக்கும் இடையில் எட்டப்பட்ட நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையில்[1] நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கிற்கு ஏற்ப பணவீக்கம் அணிசேர்ந்திருப்பதை இக் கட்டமைப்பு இலக்காகக் கொண்டுள்ளது. காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை 5 சதவீதத்தில்[2] மத்திய வங்கிப் பேண வேண்டுமென தற்போதைய உடன்படிக்கை தேவைப்படுத்துகின்றது.

### நாணயக் கொள்கைத் தீர்மானத்தை மேற்கொள்ளும் செயன்முறை

நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் முன்னோக்கிய பார்வையிலமைந்ததாகவும் தரவுகளினால் உந்தப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார நிலைமைகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டின் அடிப்படையிலமைந்த பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தீர்மானிப்பதற்கு நாணயக் கொள்கைச் சபை ஆண்டொன்றில் ஆறு தடவைகள் கூடுகின்றது. பணவீக்க இயக்கவாற்றல்கள் மற்றும் அதன் தோற்றப்பாடு, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்கள் மற்றும் அதனுடன் இணைந்த இடர்நேர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் ஆகியவற்றினை நாணயக் கொள்கைச் சபை மதிப்பீடுசெய்கின்ற வேளையில் உலகளாவிய பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் போக்குகள் என்பவற்றினையும் கருத்திற்கொள்கின்றது.

கொள்கை உருவாக்கச் செயன்முறையானது அலுவலர் மட்டத்திலான கூட்டங்களுடன் ஆரம்பமாவதுடன், இதில் வட்டி வீதங்கள், நாணயக் கூட்டுக்கள், வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் மற்றும் ஏனைய முக்கிய பேரண்டப்பொருளாதாரக் குறிகாட்டிகள் என்பன உள்ளடங்கலாக விரிவான பொருளாதார மற்றும் நிதியியல் தரவுகளை துறைசார் நிபுணர்கள் பகுப்பாய்வு செய்கின்றனர். இச்செயன்முறையானது நிபுணத்துவமிக்க அலுவலர் தீர்மானங்களுடன் இணைந்து காலாண்டு எறிவு மாதிரியினால் உருவாக்கப்பட்ட எறிவுகளினையும் மதிப்பீடு செய்கின்றது. இம்மதிப்பீடுகள் தொழில்நுட்ப ரீதியிலான மதிப்பீடுகள், இடர்நேர்வுப் பகுப்பாய்வுகள் மற்றும் நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் என்பவற்றில் கவனம் செலுத்துகின்ற திறந்த (அடுக்கு 1) மற்றும் மூடிய (அடுக்கு 2) ஆகிய இரு அமர்வுகளையும் கொண்டுள்ள முன்கூட்டிய நாணயக் கொள்கைக் குழுக் கூட்டத்தில் அதனைத்தொடர்ந்து கலந்துரையாடப்படுகின்றன.

அதன்பின்னர், ஆளுநரின் தலைமையிலானதும் துணை ஆளுநர்கள், தொடர்புடைய உதவி ஆளுநர்கள் மற்றும் தொடர்புடைய திணைக்களத் தலைவர்கள் ஆகியோரினை உறுப்பினர்களாகவும் கொண்ட நாணயக் கொள்கைக் குழுவானது பேரண்டப்பொருளாதார நிலைமைகள் குறித்து ஆலோசித்துப் பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாடு குறித்து நாணயக் கொள்கைச் சபைக்குப் பரிந்துரைகளை வழங்குகின்றது. இறுதியாக, நாணயக் கொள்கைச் சபையானது நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்கு முன்னர் பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், எறிவுகள் மற்றும் இடர்நேர்வுகள் என்பன குறித்த அதன் சுய மதிப்பீட்டுடன் இணைந்து நாணயக் கொள்கைக் குழுவின் பரிந்துரைகளைக் கவனமாகப் பரிசீலனையிற்கொள்கின்றது.

நாணயக் கொள்கைச் சபையானது தீர்மானமொன்றினை எட்டியவுடன் கொள்கை அறிவிப்பானது நாணயக் கொள்கை மீளாய்வு குறித்த ஊடக வெளியீடொன்றினூடாகப் பகிரங்கமாக மறுநாள் காலை 7:30 மணிக்கு வழக்கமாக வெளியிடப்படுவதுடன், அதனைத்தொடர்ந்து ஊடகத்திற்கும் ஏனைய ஆர்வலர்களிற்கும் தீர்மானம் குறித்து மேலும் தெளிவுபடுத்துவதற்கு ஆளுநர் தலைமையிலான ஊடக மாநாடொன்று நடைபெறும்.

### 2025இற்கான முக்கிய பண்புகள்

- 2025ஆம் ஆண்டில், நாணயக் கொள்கைச் சபையானது நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தீர்மானிக்கும் பொருட்டு ஆறு கூட்டங்களை நடத்தி, அதனைத்தொடர்ந்து சனவரி 29, மாச்சு 26, மே 22, யூலை 23, செத்தெம்பர் 24 மற்றும் நவெம்பர் 26 ஆகிய திகதிகளில் அறிவிப்புகளை வெளியிட்டது.
- கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100 தள) காலாண்டுச் சராசரியின் அடிப்படையிலமைந்த ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது ஆண்டு முழுவதும் 5 சதவீத இலக்கிற்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டது.
- பணவீக்கமானது இலக்கிற்குக் கீழேயே தொடர்ந்து காணப்பட்டமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் முன்மொழியப்பட்ட பரிகார வழிமுறைகள் மற்றும் இலக்கினை அடைவதற்கான மதிப்பிடப்பட்ட காலக்கெடு ஆகியவற்றினை எடுத்துக்காட்டுகின்ற விரிவான அறிக்கைகள், நிதியமைச்சரின் ஊடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வறிக்கைகள் அரசாங்க நிதி பற்றிய குழுவினால் அதனைத்தொடர்ந்து மீளாய்வுசெய்யப்பட்டன[3].

[1] அமைச்சரும் மத்திய வங்கியும் பணவீக்க இலக்கு மற்றும் தொடர்புடைய பிரமாணங்களை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளில் அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகள் ஏற்பட்டால் ஏனைய இடைவெளிகளில் மீளாய்வு செய்யலாம். அத்தகைய மீளாய்வின் பின்னர், விதிவிலக்கான சூழ்நிலைகளுடன் இணைந்து இற்றைப்படுத்தப்பட்ட இலக்கு மற்றும் பிரமாணங்களை அமைச்சர் வர்த்தமானியில் வெளியிட வேண்டும்.

[2] காலாண்டு முதன்மைப் பணவீக்க வீதமானது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாதங்களிற்கான மாதாந்த முதன்மைக் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றங்களின் எளிய சராசரியினைக் குறிக்கின்றது.

[3] https://www.cbsl.gov.lk/en/monetary-policy/monetary-policy-communication/accountability-to-parliament

**இலங்கையின் நாணயக் கொள்கைத் தீர்மானத்தை மேற்கொள்ளும் செயன்முறை (ஆண்டிற்கு ஆறு தடவைகள்)** வரைபடம் - 03




*MPB – நாணயக் கொள்கைச் சபை*

*MPC – நாணயக் கொள்கை குழு*

## இறை, நாணயம் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கைகளின் ஒருங்கிணைப்பு

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 83இன் கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு, அரசாங்கத்தின் இறைக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் மத்திய வங்கியின் நாணயம் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டு கொள்கைகள் எவ்வாறு ஒன்றையொன்று பாதிக்கக்கூடுமென்பது தொடர்பில் விரிவாக ஆழ்ந்தாராய்வதனை வசதிப்படுத்துவதற்கு இறை, நாணயம் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு என்பவற்றின் ஒருங்கிணைப்பிற்கான பேரவை (ஒருங்கிணைப்புப் பேரவை) 2023இன் பிற்பகுதியில் தாபிக்கப்பட்டது. பணவீக்கம், நாணய நிலைமைகள் மற்றும் இறைத் தொழிற்பாடுகள் என்பன தொடர்பிலான அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் தாக்கம் மீதான மதிப்பீடொன்றுடன் அண்மைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடு மற்றும் இடர்நேர்வுகள் என்பன குறித்து மத்திய வங்கியும் நிதி அமைச்சும் தகவல்களைப் பகிர்ந்து கருத்துக்களைப் பரிமாற்றிக்கொள்கின்றது.

2025 காலப்பகுதியில், மத்திய வங்கியின் ஆளுநருக்கும் திறைசேரிச் செயலாளருக்கும் இடையேயான ஒருங்கிணைப்புப் பேரவைக் கூட்டங்கள் 2025 பெப்புருவரி 27, யூன் 26, செத்தெம்பர் 23 மற்றும் திசெம்பர் 16 ஆகிய திகதிகளில் நடைபெற்றன.

**வங்கியின் வகிபாகம் >** உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

## நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறை

வரைபடம் - 04

மத்திய வங்கியின் கொள்கைத் தீர்மானங்கள் பல்வேறு ஊடுகடத்தல் வழிகள் ஊடாகப் பரந்தளவிலான பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்படுகின்றன. ஓரிரவு கொள்கை வீதமானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைச் சமிக்ஞைசெய்கின்ற அதன் கொள்கை வீதமாகும். இது பணவீக்கத்தினை இலக்கினை நோக்கி வழிநடத்தும் பொருட்டு சீராக்கப்படுகின்றது. ஓரிரவு கொள்கை வீதமானது பொருளாதாரத்தில் குறுங்கால வட்டி வீதங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கான முதன்மை அளவுக்குறியீடொன்றாகச் தொழிற்படுகின்றது. ஓரிரவு கொள்கை வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள், **வட்டி வீதங்கள், கொடுகடன், செலாவணி வீதம், சொத்து விலைகள் மற்றும் எதிர்பார்க்கைகள்** போன்ற ஐந்து முக்கிய வழிகள் மூலம் பரந்தளவிலான பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்படுகின்றன. இவ்வழிகள் மூலம், சந்தை விலை வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள், நுகர்வு மற்றும் முதலீட்டு முறைகள், கடன்களின் கேள்வி மற்றும் நிரம்பல், இறக்குமதி விலைகள் மற்றும் ஒட்டுமொத்த விலை இயக்கவாற்றல் போன்றவற்றில் செல்வாக்கு செலுத்துகின்றதுடன் இதன்மூலம் இறுதியில் பொருளாதாரத்தின் பொதுவான விலை மட்டம் மற்றும் பணவீக்கத்தை மாற்றியமைக்கின்றன.



# நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல்

## நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் மத்திய வங்கியின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல்

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைவதற்காக, மத்திய வங்கியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்துவதுடன் நாணயக் கொள்கையின் தொழிற்பாட்டு இலக்கான சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தை ஓரிரவு கொள்கை வீதத்திற்கமைவாக வழிநடாத்துவதற்கு ஏனைய கொள்கைச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. இதற்கு இணையாக, மிகையானத் தளம்பலைத் தணித்து வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட தலையீடுகளுடன், வெளிநாட்டுச் செலாவணியைத் தீர்மானிப்பதற்கு சந்தை சக்திகளை அனுமதிக்கின்ற நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றை இது தொழிற்படுத்துகின்றது. இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளை பணம் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் ஒழுங்கானத் தொழிற்பாடு, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் சீரானத் தொழிற்பாடு, மற்றும் நிதியியல் முறைமையின் ஒட்டுமொத்த உறுதிப்பாடு போன்றவற்றை உறுதிசெய்கின்றன.

இலங்கையில் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் செயன்முறை

வரைபடம் - 05




## திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையை முகாமைசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் பயன்படுத்தப்பட்டு, குறுங்கால வட்டி வீதங்கள் ஓரிரவு கொள்கை வீதத்திற்கமைவாக வழிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துகின்றன.

- குறுங்கால மற்றும் நீண்டகால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள் (முறையே 1-7 நாட்கள் மற்றும் 8-90 நாட்கள்), உடனடிக் கொள்வனவு ஏலங்கள், தனியான முதனிலை வணிகர்களுக்கான திரவத்தன்மை ஆதரவு வசதி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள் (வாங்கல் - விற்றல்) போன்ற திரவத்தன்மை உட்செலுத்தல் தொழிற்பாடுகள் திரவத்தன்மை உட்செலுத்த வேண்டியிருக்கும் போது பயன்படுத்தப்பட்டுள்ளன. குறுங்கால மீள்கொள்வனவு ஏலங்கள் (1-7 நாட்கள்), நீண்ட கால மீள்கொள்வனவு ஏலங்கள் (8-90 நாட்கள்), உடனடி விற்பனை ஏலங்கள், மற்றும் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள் (விற்றல் - வாங்கல்) போன்ற திரவத்தன்மை உள்ளீர்ப்புத் தொழிற்பாடுகள் சந்தையிலிருந்து விஞ்சியளவிலான திரவத்தன்மையை உள்ளீர்ப்பதற்கு உதவுகின்றன.
- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தமது மொத்த ரூபாய் வைப்புப் பொறுப்புக்களின் விகிதத்தில், மத்திய வங்கியுடன் அவற்றின் ஒதுக்குக் கணக்குகளில் வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்ச ஒதுக்கு தொகையான நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை மத்திய வங்கி நிர்ணயிக்கின்றது

மேலும், மத்திய வங்கி பின்வருவனவற்றை வழங்குகின்றது:

- **துணைநில் வசதிகள்:** பணச் சந்தை மற்றும் நாளாந்த திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களினூடாகக் குறுங்காலத் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை நிறைவேற்ற இயலாத பங்கேற்கின்ற நிறுவனங்களுக்குத் துணைநில் வசதிகள் வழங்கப்படுகின்றன. இவ்வசதிகள் துணைநில் கடன்வழங்கல் வசதியையும் துணைநில் வைப்பு வசதியையும் முறையே துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்திலும் துணைநில் வைப்பு வசதி வீதத்திலும் உள்ளடக்கின்றன.
- **நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதி:** நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியானது அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சீரான மற்றும் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கு அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

## 2025இற்கான முக்கிய பண்புகள்

- 2025ஆம் ஆண்டு முழுவதும் உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை நிலைமைகள் தொடர்ச்சியாக மிகையொன்றினைக் கொண்டிருந்தன. திரவத்தன்மை மிகையானது 2024 இறுதியளவில் அறிக்கையிடப்பட்ட ரூ. 168.1 பில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் 2025 திசெம்பர் இறுதியில் ரூ. 175.2 பில்லியன் தொகையாக விளங்கியது. நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கு நிலைமையினை வலுப்படுத்துவதற்காக மத்திய வங்கி மேற்கொண்ட கணிசமானளவிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள் மிகைத் திரவத்தன்மைக்கு முக்கிய காரணமாயமைந்தது. இருப்பினும், மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் மீள்கொடுப்பனவுகள், மத்திய வங்கியின் வசமுள்ள திறைசேரிப் பிணையங்கள் மீதான நறுக்குக் கொடுப்பனவுகள் மற்றும் 2025 ஆண்டு முழுவதும் மத்திய வங்கியிடமிருந்தான வங்கிகளின் அதிகரித்தளவிலான நாணய மீளப்பெறுகைகள் ஆகியவற்றின் ஊடாக திரவத்தன்மை மிகையானது பகுதியளவில் உள்ளீர்க்கப்பட்டது.
- மத்திய வங்கியின் மூலமான அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான மற்றும் வினைத்திறனான தொழிற்பாட்டினை நிச்சயப்படுத்தும் பொருட்டு தகுதியுள்ள பங்கேற்பாளர்களுக்குக் கிடைப்பனவாகவுள்ள வட்டியற்ற நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியின் பயன்பாடானது 2025 காலப்பகுதியில் ரூ. 467.7 பில்லியன் தொகையிலான நாளாந்த சராசரியொன்றுடன் ரூ. 111,788.0 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது.
- சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது 2025இன் முதலாவது அரைப்பகுதியில் ஓரிரவு கொள்கை வீதத்தினை அண்மித்துப் பரந்தளவில் காணப்பட்ட போதிலும் இரண்டாம் அரைப்பகுதியில் திரவத்தன்மை நிலைமைகள் ஓரளவு இறுக்கமடைந்ததுடன் குறித்த சில வங்கிகளினுள் காணப்பட்ட திரவத்தன்மைத் திரட்சியானது 2025 யூலை நடுப்பகுதியிலிருந்து சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தில் அதிகரிப்புக்களினைத் தோற்றுவித்தது. இவ்விலகலானது சகித்துக்கொள்ளக்கூடியதொன்றாகக் கருத்திற்கொள்ளப்பட்டமையினால், குறுங்கால வீதங்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு மேலதிக திரவத்தன்மையினை வழங்குவதிலிருந்து மத்திய வங்கி தவிர்ந்திருந்தது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது 2026 சனவரி மாதமளவில் ஓரிரவு கொள்கை வீதத்துடன் மீளொருங்கிணைந்தது.
- மத்திய வங்கி 2025 சனவரி இறுதிக்குப் பின்னர் அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஊடாக உள்நாட்டுப் பணச் சந்தையில் தலையிடவில்லை. இருப்பினும், 2025 சனவரியில் தேவைக்கேற்ப மத்திய வங்கியானது வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான ஓரிரவு நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலத்தினையும் குறுங்கால நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களினையும் நடத்தியதுடன், இவை ரூ. 48.4 பில்லியன் தொகையாக விளங்கின.
- 2025 காலப்பகுதியில், துணைநில் வைப்பு வசதியின் கீழ் பங்கேற்கின்ற நிறுவனங்களிடமிருந்து ரூ. 33,686.7 பில்லியன் தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் துணைநில் கடன்வழங்கல் வசதியின் பயன்பாடானது ரூ. 1,082.3 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது.
- 2025 ஆண்டுமுழுவதும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடானது 2 சதவீதத்தில் மாற்றமின்றித் தொடர்ந்து காணப்பட்டதுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டு விகிதத்துடன் ஒத்திசைந்து செல்வதனை மத்திய வங்கி தொடர்ந்து கண்காணித்தது.

### குறுங்கால வட்டி வீதங்களின் நாணயத் தொழிற்பாடுகளும் நடத்தையும் - 2025

வரைபடம் - 01




## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தொழிற்பாடுகள்

அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்கள் அல்லது இலத்திரனியல் வர்த்தகத் தளங்கள் ஊடாக வங்கிகளிற்கிடையிலான சந்தையில் முன்னெடுக்கப்படுகின்ற உள்நாட்டுப் பணச் சந்தை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் ஆகிய இரண்டினையும் கண்காணிக்கின்ற மத்திய ஒருங்கிணைப்புச் சந்தைக் கண்காணிப்பு முறையொன்றின் ஊடாக மத்திய வங்கியானது வங்கிகளிற்கிடையிலான மற்றும் வாடிக்கையாளர் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களினைக் கண்காணிக்கின்றது. மத்திய வங்கியானது செலாவணி வீதத்தில் ஏற்படும் அசைவினை இனங்காண்பதனை இம்முறைமைகள் வசதிப்படுத்துகின்றன.

மேலும், மேம்படுத்தப்பட்ட விலைக் கண்டறிதலிற்கு ஆதரவளிப்பதற்கும், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பாரியளவிலான வெளிப்படைத்தன்மையினை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அதே நேர சந்தை நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும் பொருந்தச்செய்தல் தளமொன்றினை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது.

ஒட்டுமொத்த கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், செலாவணி வீதத்தில் ஏற்படும் விஞ்சியளவிலான தளம்பலினைக் கட்டுப்படுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டுச் செலாவணியினை உட்செலுத்துவதன் (விற்பனைகள்) மூலம் அல்லது உள்ளீர்ப்பதன் (கொள்வனவு) மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம் தலையிடுகின்றது. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளைத் தற்காலிகமாகத் திரட்டுமொரு முறையாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றுடன் இருபுடை கொள்வனவு விற்பனை பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம் மேற்கொள்கின்றது. மேலும், வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு நிலைமைகளினை நிரந்தரமாகக் குறைவடையச்செய்யாமல் வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையை உட்செலுத்தும் பொருட்டு உரிமம்பெற்ற வங்கிகளுடன் விற்பனைகொள்வனவு பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைகளினை சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம் முன்னெடுக்கின்றது. இப்பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் உள்நாட்டு பணச் சந்தை ஆகிய இரண்டிலும் வங்கிகள் அவற்றின் திரவத்தன்மை நிலைமைகளையும் காசுப் பாய்ச்சல்களையும் முகாமைசெய்வதற்கும் காப்புத் தேவைப்பாடுகளிற்குப் பயன்படுத்தப்படுவதற்கும் உதவுகின்றன.

### 2025இற்கான முக்கிய பண்புகள்

- இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 2024 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 292.58 தொகையிலிருந்து 2025 இறுதியில் ரூ. 309.99 தொகைக்கு நகர்ந்து, 5.6 சதவீத மிதமான பெறுமதித்தேய்மானமொன்றினைப் பதிவுசெய்தது. வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை, புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பரஸ்பர ரீதியிலான வரிகள் என்பன செலாவணி வீதத்தில் தளம்பல்களை உருவாக்கியதுடன் ஆண்டு காலப்பகுதியில் இப்பெறுமதித்தேய்மான அழுத்தத்திற்கு வழிவகுத்தன.
- மொத்தமாக ஐக்கிய அமெரிக்க டொலர் 2,045.0 மில்லியன் பெறுமதியான புதிய கொள்வனவு-விற்பனைப் பரஸ்பர பரிமாற்றல்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், ஐக்கிய அமெரிக்க டொலர் 1,442.0 மில்லியன் பெறுமதியான கொள்வனவு-விற்பனைப் பரஸ்பர பரிமாற்றல்கள் முதிர்ச்சியடைந்ததுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,320.0 மில்லியன் பெறுமதியான கொள்வனவுவிற்பனைப் பரஸ்பர பரிமாற்றல்கள் மத்திய வங்கியினால் நீடிக்கப்பட்டன. இதன் விளைவொன்றாக, கொள்வனவு-விற்பனைப் பரஸ்பர பரிமாற்றல்களின் வெளிநின்ற தொகையானது 2024 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 1,318.3 மில்லியன் தொகையிலிருந்து 2025 இறுதியளவில் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,921.3 மில்லியன் தொகைக்கு பெறுமதித் திகதியின் அடிப்படையில் அதிகரித்தன. இப்பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்கள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் உள்நாட்டு பணச் சந்தை ஆகிய இரண்டிலும் வங்கிகள் அவற்றின் திரவத்தன்மை நிலைமைகளையும் காசுப் பாய்ச்சல்களையும் முகாமைசெய்வதற்கும் காப்புத் தேவைப்பாடுகளிற்குப் பயன்படுத்தப்படுவதற்கும் துணைபுரிந்தன.
- மத்திய வங்கியானது பெறுமதித் திகதியின் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 2,100.4 மில்லியன் தொகைக்குக் கொள்வனவு செய்ததுடன் ஐக்கிய அமெரிக்க டொலர் 108.0 மில்லியன் தொகைக்கு விற்பனைசெய்து, பெறுமதித் திகதியின் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,992.4 மில்லியன் தொகையிலான தேறிய கொள்வனவொன்றினைப் பதிவுசெய்தது. இத்தேறிய கொள்வனவுகள் நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2025 இறுதியளவில் ஐக்கிய அமெரிக்க டொலர் 6,827.2 மில்லியன் தொகையினை எட்டுவதற்குத் துணைபுரிந்ததுடன், இது நெருக்கடிக்குப் பின்னரான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்தளவிலான ஒதுக்கு மட்டமாகக் காணப்படுகின்றது.
- 2025 ஆண்டில், ஆழமான மற்றும் மிகவும் வினைத்திறனான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை உருவாக்கும் நோக்கில், மத்திய வங்கியின் மூலமான முன்முயற்சிக்கமைய வெளிநாட்டுச் செலாவணி பொருந்தச்செய்தல் தளத்தினை இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியது. அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளும் மத்திய வங்கியும் அணுகக்கூடிய இத்தளமானது விலைக் கண்டறிதலினை மேம்படுத்தல், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் பாரியளவிலான வெளிப்படைத்தன்மை மற்றும் வினைத்திறனை ஊக்குவிக்கின்ற வேளையில், இலங்கையின் நிதியியல் உட்கட்டமைப்பினை நவீனமயமாக்குவதனை நோக்காகக் கொண்ட பொதுவான தளமொன்றில் பங்கேற்பாளர்கள் ஒருவருக்கொருவர் வர்த்தகத்தில் ஈடுபடுவதனை இயலச்செய்துள்ளது.
- வெளிநாட்டுச் செலாவணி தேறிய திறந்த நிலைமையின் கணக்கீட்டின் துல்லியத்தன்மையை மேம்படுத்தல், சந்தை நடவடிக்கைகளை மத்திய வங்கி உன்னிப்பாகக் கண்காணிப்பதனை இயலச்செய்கின்ற அறிக்கையிடலினை மேம்படுத்தல் மற்றும் பெருமளவிலான துல்லியத்தன்மையுடன் வெளிநாட்டுச் செலாவணி தேறிய திறந்த நிலைமையினை மதிப்பிடுதல் என்பவற்றினை மேற்கொள்ளும் பொருட்டு சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு மத்திய ஒருங்கிணைப்புச் சந்தைக் கண்காணிப்பு முறைமையின் ஊடாக உரிமம்பெற்ற வங்கிகளினால் அறிக்கையிடப்படும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான தரவுகளின் துல்லியத்தன்மை மற்றும் விரிவாந்தன்மையை மேம்படுத்துவதற்கு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஆளுநரின் 2026ஆம் ஆண்டுக்கான வருடாந்த கொள்கை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பின் வினைத்திறனினை மேம்படுத்துவதற்கும் பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலினை வலுப்படுத்துவதற்குமான பகுதிகளைக் கண்டறியும் நோக்கில் 2025இல் இலங்கையின் தற்போதுள்ள நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டுக் கட்டமைப்பினை மத்திய வங்கி விரிவாக மீளாய்வுசெய்தது.

### அரசாங்கத்திற்குத் தற்காலிக முற்பணங்களை வழங்குதல்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 127ஆவது பிரிவிற்கமைய, நிதியாண்டொன்றின் முதலாவது மாதத்தினுள் செலவினங்களிற்கு நிதியளிப்பதற்கு நிலவுகின்ற சந்தை வட்டி வீதத்தில் அரசாங்கத்திற்கு நேரடி தற்காலிக முற்பணங்களை மத்திய வங்கி வழங்கலாம். இருப்பினும், 2025 ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கத்திடமிருந்து அத்தகைய கோரிக்கை எதுவும் கிடைக்கப் பெறாமையினால், அரசாங்கத்திற்கு எந்தவொரு தற்காலிக முற்பணமும் வழங்கப்படவில்லை.

### அரசாங்கக் கணக்குகளினைப் பேணுதல்

அரசாங்கத்திற்கான வங்கியாளரென்ற ரீதியில் மத்திய வங்கியின் வகிபாகத்துடன் தொடர்புடைய பணிகளை ஆற்றுகையில், சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களமானது அரசாங்கத் திணைக்களங்கள், முகவராண்மைகள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் சார்பாக குறித்த சில வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் வங்கித்தொழில் வசதிகளைத் தொடர்ந்து வழங்கியது. இதற்கமைய, 2025 காலப்பகுதியில் சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களமானது 42 இத்தகைய கணக்குகளைப் பேணியது. இக்கணக்குகளின் கொடுக்கல்வாங்கல் அளவின் ஏறத்தாழ 90 சதவீதமானது திறைசேரி துணைச் செயலாளர் கணக்கு, பொதுப் படுகடன் நடைமுறைக் கணக்கு, உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் பெறுமதிசேர் வரி மீளளிப்புக் கணக்கு மற்றும் சனாதிபதி நிதியக் கணக்கு என்பவற்றுடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது.

### நிதியியல் நிறுவனங்களின் கணக்குகளைப் பேணுதல்

வங்கிகளிற்கான வங்கியாளரென்ற ரீதியில் மத்திய வங்கியின் வகிபாகமொன்றுடன் தொடர்புடைய பணிகளை ஆற்றுகையில், உரிமம்பெற்ற வங்கிகளிற்குக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிகளை வசதிப்படுத்துகின்ற நடைமுறைக் கணக்குகளை சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம் தொடர்ந்து பேணியது. இத்தகைய வங்கிகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பனவு வசதிகள் தொடர்பில், காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை போன்ற முக்கிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொடர்பான தீர்ப்பனவுகளை அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் ஊடாக சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களமானது மேற்கொண்டது. 2025 இறுதியிலுள்ளவாறு, அதே நேர மொத்தத் தீர்ப்பனவுப் பங்கேற்பாளர்களுக்கு இடையிலான கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளை வசதிப்படுத்தும் பொருட்டு 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் 7 தனியான முதனிலை வணிகர்களுக்கான பொதுப் பேரேட்டுக் கணக்குகளை சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களமானது பேணியது.

வங்கியின் வகிபாகம் > உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுதல்

## நாணயக் கொள்கைக்கான புள்ளிவிபரங்கள்

வரைபடம் - 06




| பெறுபேறு/குறிகாட்டி | கால இடைவெளி |
|---|---|
| பொருளாதாரக் குறிகாட்டிகள், விலை அறிக்கை | நாளாந்தம் |
| பொருளாதாரக் குறிகாட்டிகள் | வாராந்தம் |
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடுகள், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ஊடக அறிக்கை, கூலி வீதச் சுட்டெண்கள், பயன்படுத்திய வாகன விலைச் சுட்டெண், விலை கேட்டல் சுட்டெண்கள் | மாதாந்தம் |
| வியாபாரத் தோற்றபாட்டு அளவீடு, கொடுகடன் நிரம்பல் அளவீடு, கூட்டாதனச் சந்தை அளவீடு | காலாண்டு |
| பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள், மாகாண ரீதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி, சமூகப் பொருளாதாரத் தரவுகள் மற்றும் வருடாந்த பொருளாதார மீளாய்விற்கான பங்களிப்புக்கள் | வருடாந்தம் |

## நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல்

விலை உறுதிப்பாட்டிற்கு ஆதரவளிப்பதில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவதற்காக, 2025ஆம் ஆண்டில் மத்திய வங்கியானது அதன் நாணயக் கொள்கைத் தொடர்பூட்டல் கட்டமைப்பினை வலுப்படுத்தியது. நாணயக் கொள்கை பற்றிய விழிப்பூட்டல் பிரச்சாரங்கள், ஊடக தொழில் நிபுணர்களுடனான தொழில்நுட்ப ஈடுபாடுகள், மும்மொழி டிஜிட்டல் உள்ளடக்கத்தைப் பரப்புதல் மற்றும் பலதரப்பட்ட விழிப்புணர்வுத் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக இலக்கிடப்பட்ட முன்னெடுப்புக்களினூடாக இது அடையப்பட்டது. ஆண்டின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட முன்கூட்டிய நாட்காட்டி வெளியீட்டிற்கமைய நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டதுடன் ஆறு நாணயக் கொள்கைச் சபைக் கூட்டங்களில் ஒவ்வொன்றினையும் தொடர்ந்து தீர்மானத்திற்கான நியாயபூர்வதன்மை மற்றும் பொருளாதாரத்திற்கான தோற்றப்பாடு ஆகியவற்றினை விளக்குகின்ற நாணயக் கொள்கை மீளாய்வு ஊடக அறிக்கையொன்றும் ஊடக மாநாடொன்றும் இடம்பெற்றன.

அணுகலினையும் பொதுமக்களின் புரிதலினையும் மேம்படுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட தொடர்பூட்டல் முயற்சியொன்றின் மூலம் இவ்வறிவிப்புக்கள் முழுமையடைப்பெற்றன. மும்மொழி ஊடக அறிக்கைகள் மற்றும் ஊடக மாநாடுகள் என்பவற்றிற்கு மேலதிகமாக, நாணயக் கொள்கை மீளாய்வு ஒரே பார்வையில் எனும் தலைப்பிலான பிரசுரங்கள் மற்றும் ஊடக மாநாட்டிலிருந்து முக்கிய செய்திகளை எடுத்துக்காட்டுகின்ற குறுங்காணொளிகள் போன்ற அடுக்குத் தொடர்பூட்டல் தயாரிப்புக்களை டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் ஊடாக வங்கி பரவலடையச்செய்தது.

மிகையானத் தளம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட தலையீடுகளுடன், விலை உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த சந்தையால் தீர்மானிக்கப்படும் செலாவணி வீதத்தை ஆதரவளிப்பத்கு முக்கியத்துவம் கொடுத்து, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதுடன் இணைந்து, பெப்புருவரி மற்றும் ஓகத்து மாதங்களில் வெளியிடப்பட்ட நியதிச்சட்ட நாணயக் கொள்கை அறிக்கையானது நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் குறித்த பொதுநோக்கொன்றுடன் இணைந்து, முக்கிய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், அடிப்படை உந்துசக்திகள், நடுத்தர கால எறிவுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் ஆகியவற்றின் மதிப்பீடொன்றினை முன்வைத்தது.

சந்தை தொழிற்பாட்டு அறிக்கை என்பது, உள்நாட்டுப் பணச் சந்தையில் நடைபெறும் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள் மற்றும் அபிவிருத்திகள் குறித்த வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதோடு, ஆர்வலர்களின் புரிதலையும் வலுப்படுத்தும் ஆண்டுக்கு இருமுறை வெளியாகும் பிரசுரமாகும். நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினால் ஆதரவளிக்கப்பட்டு, நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நாணய மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் குறித்த அனைத்தையு-முள்ளடக்கிய நுண்ணோக்குகளினை இது வழங்குகின்றது. இத்தொழிற்பாடுகளைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதன் மூலம், சந்தை நடவடிக்கைகள் நிலவுகின்ற நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் எவ்வாறு ஒத்திசைந்து செல்கின்றன என்பது குறித்த பெருமளவிலான விழிப்புணர்வினைச் சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை ஊக்குவிக்கின்றது.

2025ஆம் ஆண்டில் பணவீக்கம் 5 சதவீத இலக்கிற்குக் கீழே நீடிக்கும் நிலையில், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளாக நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட பணவீக்க இலக்கு மீறப்பட்டது குறித்த அறிக்கைகளை மத்திய வங்கி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததோடு விலகலுக்கான காரணங்கள், இலக்கை மீண்டும் அடைவதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு மற்றும் விலை உறுதிப்பாட்டை மீளமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் ஆகியவை எடுத்துரைக்கப்பட்டன.






## பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் பன்னாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகள் மற்றும் ஆளும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் என்பவற்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளை முகாமைசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கி பொறுப்பாகக் காணப்படுகின்றது.

வெளிநாட்டு நிலையான வருமானப் பிணையங்கள், பணச் சந்தைச் சாதனங்கள், தங்க முதலீடுகள், பிணையக் கடன்வழங்கல் நடவடிக்கைகள் (மத்திய வங்கியின் சார்பில் கட்டுக்காவலர்களினால் முகாமைத்துவம் செய்யப்படுபவை), மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள், வெளிநாட்டுச் செலாவணிப் பரஸ்பர பரிமாற்றங்கள் மற்றும் முன்னோக்குகள், ஏனைய பெறுதிச் சாதனங்கள் போன்றவற்றை மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டுச் சொத்துப்பட்டியலானது உள்ளடக்குகின்றது.

அறிவியல் மாதிரியின் அடிப்படையிலான உபாய ரீதியிலான சொத்து ஒதுக்கீட்டுக் கட்டமைப்பிற்கு அமைய பன்னாட்டு ஒதுக்குகள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. உபாய ரீதியிலான சொத்து ஒதுக்கீட்டின் கீழ் வெளிநாட்டு ஒதுக்குகள் சிறந்த முகாமைத்துவ நோக்கங்களுக்காக மூன்று தொகுதிகளாகப் புறவய ரீதியில் முக்கியமாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு தொகுதியும் முதலீட்டுக் காலம், நாணயத்தின் உள்ளமைப்பு மற்றும் அடிப்படைகளுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. திரவத்தன்மைத் தேவைப்பாடுகள் மற்றும் சந்தை நிலைமைகள் குறித்த அனைத்தையுமுள்ளடக்கிய பகுப்பாய்வொன்றினைத் தொடர்ந்து வணிகர்களின் கூட்டத்தில் முதலீட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பன்னாட்டு ஒதுக்குகளின் செயலாற்றம் மற்றும் இடர்நேர்வு விடயங்கள் குறித்து, பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டு மேற்பார்வைக் குழுவிற்கு மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டு, நாளாந்தம்/வாராந்தம் அவசியமெனக் கருதப்படுகின்றவாறு கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டு மேற்பார்வைக் குழுவிற்கு மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் காலாண்டு சபைப் பத்திரங்கள் ஊடாக ஆளும் சபைக்கு அறிக்கையிடப்படுகின்றன. மேலும், வர்த்தகத்திற்காக ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகளை மீறுதல், இணைத்தரப்பினர் கொடுகடன் தரப்படுத்தல் குறைக்கப்படல், வைப்புக்களை முன்கூட்டியே மீள்பெறுதல் போன்ற சில தகவல்கள் ஏதேனுமிருப்பின் தேவைக்கேற்பவும் தேவையேற்படுகின்றபோதும் முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்படுகின்றன.

### தொழிற்பாட்டுக் கட்டமைப்பு

வரைபடம் - 07

**தீர்மானங்கள் ஆரம்பிக்கின்ற முன்னரங்க அலுவலகம்**

- சந்தை பகுப்பாய்வு (வெளிநாடு/உள்நாடு)
- சொத்துப்பட்டியல் உபாயம் மற்றும் நிறைவேற்றம்
- நிலையான வருமானம் மற்றும் பணச் சந்தை முதலீடுகள்
- வெளிநாட்டுச் செலாவணி மற்றும் தங்கக் கொடுக்கல்வாங்கல்கள்

**இடர்நேர்வுகள் முகாமை-செய்யப்படுகின்ற நடுவரங்க அலுவலகம்**

- முதற்கட்ட பாதுகாப்பு
- வருவாய் மதிப்பீடு
- முதலீட்டு கொள்கை கூற்று, உபாய சொத்து ஒதுக்கீடு மற்றும் வழிகாட்டல்களுடனான இணங்குவிப்பு
- ஒதுக்குகள் மற்றும் காசுப் பாய்ச்சல் அறிக்கையிடல்

**நடைவடிக்கைகள் நிறைவுசெய்யப்படுகின்ற பின்னரங்க அலுவலகம்**

- கொடுக்கல்வாங்கல் தீர்ப்பனவுகள்
- நொஸ்ரோ மற்றும் கட்டுக்காவலர் ஏற்பாடுகள்
- இணங்குவித்தல்
- ஆவணப்படுத்தல்

### இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வியாபாரத் தொடர்ச்சி

முதலீட்டு முகாமைத்துவக் குழுவானது நேர்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாசாரமொன்றினை வலுப்படுத்தும் வகையில் அனைத்துக் குழு உறுப்பினர்களும் ஆண்டுதோறும் நெறிமுறை மற்றும் தொழில்சார் தரநியமங்களினைக் கடைப்பிடிப்பதை முறையாக உறுதிப்படுத்த வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுவதுடன் கடுமையான நன்னடத்தைக் கோவையொன்றின் கீழ் தொழிற்படுகின்றது.

தடையற்ற தொழிற்பாடுகளை நிச்சயப்படுத்துவதற்காக, பிரத்தியேக அனர்த்த மீட்புத் தளமொன்றின் மூலம் வணிகத் தொடர்ச்சியானது பேணப்படுவதுடன் இது முறைமைச் செயலிழப்புக்கள், இயற்கை அனர்த்தங்கள், இணையத் தொழிற்பாட்டிற்கு இடையூறு விளைவிக்கின்ற சம்பவங்கள் அல்லது ஏனைய எதிர்பாராத தொழிற்பாட்டு அவசரநிலைகள் போன்ற ஏதேனும் எதிர்பார்க்கப்படாத இடையூறுகளிற்கான முக்கிய வர்த்தக முறைமைகளிற்கான தொடர்ச்சியான அணுகலை வழங்குகின்றது. இது பாதுகாப்பான தளத்திற்கு வெளியேயான வசதிகளால் மேலும் ஆதரவளிக்கப்பட்டு, பன்னாட்டு ரீதியிலான சிறந்த நடைமுறைகளுக்கு இணங்க விதிவிலக்கான அல்லது அவசரகால சூழ்நிலைகளிலும்கூட அத்தியாவசிய பணிகளைக் குழுவானது தடையின்றிச் செயற்படுத்துவதனை இயலச்செய்வதுடன் அதன்மூலம், தொழிற்பாடுகளின் தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றினைப் பாதுகாக்கின்றது.

## 2025இற்கான முக்கிய பண்புகள்

- பன்னாட்டு ஒதுக்குகள், உள்ளக முதலீட்டு நிதியங்கள் மற்றும் வைப்புக் காப்புறுதி நிதியங்கள் ஆகியவற்றின் முதலீட்டு நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கியினுள் ஒரே திணைக்களமாக ஒருங்கிணைப்பதன் மூலம் முதலீட்டு முகாமைத்துவத் திணைக்களம் நிறுவப்பட்டது.
- ஐ.அ.டொலர் 260 மில்லியனை வகைகூறுகின்ற 2025இல் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளை முதலீடுசெய்வதனூடாக 5.5 சதவீத மொத்த வருவாய் வீதமொன்று ஈட்டப்பட்டது.
- சொத்துப்பட்டியல் வருவாய்களை மேம்படுத்தும் நோக்குடன் நான்கு ஆண்டு கால இடைவெளியொன்றிற்குப் பின்னர் முதலீட்டுத் தொகுதியொன்று மீள்தாபிக்கப்பட்டது.
- 2021இல் விலகியதைத் தொடர்ந்து, உலக வங்கியினை வெளிவாரி முகாமையாளரொருவராக நியமித்ததன் மூலம் உலக வங்கியின் ஒதுக்கு மதியுரை மற்றும் முகாமைத்துவப் பங்குடைமையினை மீளிணைத்தது.
- பன்னாட்டு ஒதுக்குகளின் அசைவு-களினைக் கண்காணிப்பதற்காக முன்கூட்டிய எச்சரிக்கைக் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டது.
- சொத்துப்பட்டியல் பன்முகப்படுத்தல் உபாயத்திற்கிணங்க, மையத் தங்க ஒதுக்குகளினை மீள்கட்டியெழுப்புகின்ற நோக்குடன் பன்னாட்டுத் தங்கச் சந்தையில் மீண்டும் பிரவேசித்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியுடனான விசேட பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைக்கான இரண்டாவது பின்னிணைப்பில் கையெழுத்திட்டமையானது 50 அடிப்படைப் புள்ளிகளளவிலான வட்டிச் செலவுக் குறைவொன்றினைத் தோற்றுவித்தது.

# நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்தல்

## பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கத்துடன் இலங்கை மத்திய வங்கியானது நாட்டின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாகக் குறித்துரைக்கப்பட்டது. இதற்கமைய, நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதனை நோக்காகக் கொண்ட பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளை வகுப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் மத்திய வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

### முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் துறைப் பங்கேற்பாளர்கள் குறித்த மேம்பட்ட பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வை

பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை என்ற வகையில், முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் துறைப் பங்கேற்பாளர்கள் குறித்த மேம்பட்ட பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வையினை மேற்கொள்வதற்கும் பிரயோகிப்பதற்கும் மத்திய வங்கிக்கு ஆணையளிக்கப்பட்டுள்ளது. இச்சூழலில், 2025 காலப்பகுதியில், மத்திய வங்கி ஐந்து உரிமம்பெற்ற வங்கிகளினை உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாகக் குறித்துரைத்தது. இவ்வங்கிகள் பாதகமான அதிர்வுகளிற்கான அவற்றின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை மேம்படுத்துவதற்கு மேலதிக மூலதன மிகைக் கட்டணமொன்றினைப் பேணுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றன. மேலும், உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளிலிருந்து எழுகின்ற இடர்நேர்வுகள் மற்றும் பாதிப்படையக்கூடியதன்மைகளைக் கண்டறிவதற்கும் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதனை நோக்காகக் கொண்ட கொள்கைப் பரிந்துரைகளினை வகுப்பதற்கும் மத்திய வங்கி ஆண்டொன்றிற்கு இரு முறை இடர்நேர்வு மதிப்பீடுகளினை நடாத்துகின்றது. ஆண்டிற்கான முதலாவது அரையாண்டு இடர்நேர்வு மதிப்பீடானது 2025 செத்தெம்பரில் நடாத்தப்பட்டது.

### பெறுமதிக்கான கடன் விகித உச்ச எல்லைகள்

2025 யூலையில், மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்படுகின்ற கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகின்ற பெறுமதிக்கான கடன் விகித உச்ச எல்லைகளில் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்திருத்தமானது பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களுடன் மாத்திரம் அவற்றின் பிரயோகத்தினைச் சீரமைப்பதன் மூலம் பேரண்ட முன்மதியுடைய கொள்கைக் கருவியொன்றாக பெறுமதிக்கான கடன் விகித உச்ச எல்லைகளின் செயற்றிறனை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டுள்ளது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளினால் மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்படுகின்ற கொடுகடன் வசதிகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, பதிவுசெய்யப்படாத குறித்த சில வகையிலான வாகனங்கள் மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைவாக இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்குப் பொருந்தக்கூடிய பெறுமதிக்கான கடன் விகித உச்ச எல்லைகளினை இறுக்கமாக்குவதன் மூலம் 2025 நவெம்பரில் அதனை மத்திய வங்கி மேலும் திருத்தியது.

### முறைமை சார்ந்த இடர்நேர்வுகளின் கட்டியெழுப்பலினைக் கண்காணிப்பதற்கான பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

2025 காலப்பகுதியில், முறைமை சார்ந்த இடர்நேர்வுகளின் கட்டியெழுப்பலினைக் கண்காணிப்பதற்கான பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பினை மத்திய வங்கி தொடர்ந்து மேற்கொண்டது. இதற்கமைய, நிதியியல் முறைமையிலுள்ள சாத்தியமான பாதிப்படையக்கூடியதன்மைகளைக் கண்டறியும் நோக்குடன் பேரண்ட நிதியியல் நிலைமைகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சந்தைகள் போன்ற முக்கிய பகுதிகளை விரிவாக உள்ளடக்கிய காலாண்டு ரீதியிலான இடர்நேர்வு மதிப்பீட்டின் ஊடாக நிதியியல் துறையின் காலாண்டு இடர்நேர்வுப் பகுப்பாய்வுகளை மத்திய வங்கி நடாத்தியது. மேலும், பாதகமான அதிர்வுகளிற்கான வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை மதிப்பிடுவதற்கு அழுத்தப் பரீட்சிப்புக்களை மத்திய வங்கி தொடர்ந்து நடாத்தியது. நிதியியல் நிறுவனங்களுக்கிடையிலான இடைத்தொடர்புகளை மதிப்பீடு செய்வதற்கான பகுப்பாய்வானது வங்கித்தொழில் துறையுடனான நிதிக் கம்பனிகளின் இருபுடை மற்றும் இருவழி வெளிப்படுத்துகைகளை உள்ளடக்குவதன் மூலம் மேலும் மேம்படுத்தப்பட்டது. இச்செயற்பாடுகள் முறைமை சார்ந்த பாதிப்படையக்கூடியதன்மைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கும், கொள்கைத் தயார்நிலையினை வலுப்படுத்துவதற்கும் அத்துடன் ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கான காலந்தவறாத பேரண்ட முன்மதியுடைய தலையீடுகளை வசதிப்படுத்துவதற்கும் ஆதரவளிக்கின்றன.

### 2025இற்கான நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வு

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கமைய, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்ட சுருக்க அறிக்கைகளுடன் இணைந்து, ஒத்தோபரில் 2025இற்கான[1] நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வினை மத்திய வங்கி வெளியிட்டது. இவ்வெளியீடானது பேரண்ட நிதியியல் நிலைமைகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் நிதியியல் சந்தைகளைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இலங்கையின் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு மற்றும் தாக்குப்பிடிக்குந்தன்மை என்பன பற்றிய மதிப்பீடொன்றினை வழங்குகின்றது. இது முக்கிய இடர்நேர்வுகள் மற்றும் பாதிப்படையக்கூடியதன்மைகளைக் கண்டறிந்து, அதிர்வுகளை உள்ளீர்ப்பதற்கான முறைமையின் இயலளவினை மதிப்பீடு செய்து, ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கான கொள்கை வழிமுறைகளை எடுத்துக்காட்டுகின்றது.

### 2025 இற்கான முக்கிய பண்புகள்

- ஐந்து உரிமம்பெற்ற வங்கிகள் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக அடையாளம் காணப்பட்டு, மேலதிக மூலதன மிகைக் கட்டணத் தேவைப்பாடுகள் விதிக்கப்பட்டன.
- 2025இற்கான உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் முதலாவது அரையாண்டு இடர்நேர்வு மதிப்பீடு 2025 செத்தெம்பரில் பூர்த்தி செய்யப்பட்டது.
- மோட்டார் வாகன நிதியிடல் மீதான பெறுமதிக்கான கடன் விகிதங்கள் 2025 யூலையில் திருத்தப்பட்டு, அதிகரித்துச் செல்கின்ற கொடுகடன் வளர்ச்சிக்குப் பதிலிறுத்தும் வகையில் 2025 நவெம்பரில் மேலும் இறுக்கமடையச் செய்யப்பட்டன.
- முறைமை சார்ந்த இடர்நேர்வுகளைக் கண்காணிப்பதற்கும் நிதியியல் நிறுவனங்களின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை மதிப்பிடுவதற்கும் காலாண்டு இடர்நேர்வு மதிப்பீடுகள் மற்றும் அழுத்தப் பரீட்சிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- நிதிக் கம்பனிகளுக்கும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் இடையில் இருபுடை மற்றும் இருவழி வெளிப்படுத்துகைத் தரவுகளை உள்ளடக்குவதன் மூலம் நிதியியல் துறை இடைத்தொடர்புப் பகுப்பாய்வு வலுப்படுத்தப்பட்டது.
- 2025இற்கான நிதியியல் உறுதிப்பாட்டு மீளாய்வானது 2025 ஒத்தோபரில் வெளியிடப்பட்டது.

[1] https://www.cbsl.gov.lk/en/publications/economic-and-financial-reports/financial-system-stability-review

## நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணிக்காத்தல்

வரைபடம் - 08

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணிக்காத்தல்

### பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை

**பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்:**
நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்கின்ற உறுதிப்பாட்டினை வலுப்படுத்தல்

**முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் துறைப் பங்காளர்களைக் கண்காணித்தல்:**
இடர்நேர்வு மற்றும் பாதிப்படையக்கூடிய-தன்மைகளைக் கண்டறிவதற்கான அரையாண்டு ரீதியிலான இடர்நேர்வு மதிப்பீடுகள்

**முறைமை சார்ந்த இடர்நேர்வுகளின் கட்டியெழுப்பலினைக் கண்காணித்தல்:**
காலாண்டு ரீதியிலான இடர்நேர்வுப் பகுப்பாய்வு மற்றும் அழுத்தப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளுதல்

### ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை

**முன்மதியுடைய ஒழுங்குமுறைகளை வெளியிடுதல்:**
பணிப்புரைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்களை வெளியிடுதல்

**நியதிச்சட்டப் பரிசோதனைகள் மற்றும் தொடர்ச்சியான மேற்பார்வை:**
அடிப்படை இடர்நேர்வுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் உடனடிச் சீராக்க வழிமுறைகளை இயலச்செய்தல்

**கடுமையான ஆளுகை:**
ஆளுகைத் தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரின் தகுதி மற்றும் பொருத்தப்பாட்டை மதிப்பீடுசெய்தல்

### தேசிய கொடுப்பனவு முறைமைகள்

**அதே நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை:**
35 நிறுவனங்களுக்கிடையிலான பாரியளவிலான பெறுமதி கொண்ட கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு

**சில்லறை மற்றும் பிரதேச ரீதியிலான இணைப்பு:**
எல்லைகளிற்கிடையிலான இணைப்புகளுடன் கூடிய சில்லறைக் கொடுப்பனவுகளுக்கான லங்காபே

**SWIFTஇன் ஊடாக உலகளாவிய தரநியமங்கள்:**
பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கொடுக்கல்வாங்கல் தரவுப் பரிமாற்றத்தினைப் பாதுகாத்தல்

### நிதியியல் துறைப் பாதுகாப்பு வலையமைப்புகள்

**பிரத்தியேகமான தீர்மான அதிகாரசபை:**
ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் தீர்மானங்களை மத்திய வங்கி முகாமைசெய்கின்றது

**இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்:**
வைப்பாளர்களுக்கான பாதுகாப்பு வலையமைப்பினை வழங்குதல்

### நிதியியல் வசதிக்குட்படுத்தல், அறிவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

**தேசிய ரீதியிலான நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்:**
பிரசைகளை மேலும் வலுப்படுத்துவதற்காக தேசிய ரீதியிலான நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தினை நடைமுறைப்படுத்தல்

**நிதியியல் அறிவு:**
பன்முகச் சமூகப் பொருளாதாரப் பின்னணியினைக் கொண்ட தனிநபர்கள் நிதியியல் தீர்மானங்களைப் பொறுப்புடன் மேற்கொள்வதனை வலுப்படுத்தல்

**சந்தை நடத்தை மேற்பார்வை:**
தொழிற்பாட்டு ரீதியிலான இடைவெளிகள் மற்றும் வெளிப்படுத்துகைசார் நடைமுறைகளில் உள்ள பலவீனங்களைக் கண்டறிதல்

# வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வையும்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரகாரம், இலங்கையின் வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பு மற்றும் ஆற்றல்வாய்ந்ததன்மையை உறுதிசெய்வதற்கும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப்பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வைப்பாளர்களின் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் நலன்களை பாதுகாப்பதற்கு இலங்கை மத்திய வங்கியானது அதன் தொழிற்பாட்டை கொண்டு நடாத்துகின்றது. இதற்கமைய, மத்திய வங்கியானது பின்வரும் முக்கிய தொழிற்பாடுகளை கொண்டுநடாத்துகின்றது:

- **உரிமத்தை வழங்குதலும் ஒழுங்குமுறைப்படுத்தலும்:** மத்திய வங்கியானது வங்கித்தொழிலை நடாத்துவதற்கு உரிமங்களை வழங்குகின்றது, முன்மதிமிக்க ஒழுங்குவிதிகளை உருவாக்கி வழங்குகின்றது.
- **உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான மேற்பார்வையும் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களும்:** உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பையும் நியதிச்சட்ட பரீட்சிப்புக்களையும் நடாத்துகின்றது.
- **ஆளுகை மேற்பார்வை:** உரிமம்பெற்ற வங்கிகளில் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை செயற்படுத்துகின்ற அலுவலர்களின் தகுதி மற்றும் பொருத்தத்தை மதிப்பீடுசெய்து ஒப்புதலளிக்கின்றது.
- **ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள்:** தேவையானவிடத்து, ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில், வங்கித்தொழில் சட்டத்திற்கமைவாக ஒழுங்கு-முறைப்படுத்தல் அனுமதிகளை வழங்குகின்றது.
- **விழிப்பூட்டல் மற்றும் இயலாற்றல் விருத்தி:** தொடர்ச்சியான பயிற்சி மற்றும் வழிகாட்டலினூடாக வங்கித்தொழில் துறையில் விழிப்பூட்டலையும் இயலாற்றலையும் மத்திய வங்கி மேம்படுத்துகின்றது.

2025 இறுதியிலுள்ளவாறு, இலங்கை வங்கித்தொழில் துறை 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளையும், 6 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தது.

## முன்மதிமிக்க ஒழுங்கு முறைப்படுத்தலை வழங்குதல்

2025ஆம் ஆண்டில், மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளின் தாக்குப்பிடிக்கும்-தன்மையை மேம்படுத்துவதற்கான முன்மதிமிக்க மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் குறித்து பல்வேறு வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள், தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகளை வெளியிட்டது. உரிமம்பெற்ற வங்கிகளுக்கான மீட்புத் திட்டங்கள் மீதான வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டப் பணிப்புரைகள், உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு நிகழ்வுகளை அறிக்கையிடல் மீதான சுற்றறிக்கை, உரிமம்பெற்ற வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை மீதான வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளுக்கான பிற்சேர்க்கை, உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புடைய தரப்பினர்களுக்காக வழங்கப்பட்ட கடன்வசதிகளுக்கான ஒப்புதலளிக்-கப்பட்ட பிணைகள் மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானத்திற்கான திருத்தங்கள் மற்றும் நடமாடும் வங்கித்தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கான வழிகாட்டல்கள் மீதான சுற்றறிக்கை, உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வருடாந்த உரிமக் கட்டணம் மீதான வங்கித்தொழில் சட்டத் தீர்மானம், மற்றும் அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்கள் காரணமாக வருமானம் அல்லது வியாபாரங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ள தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான நிவாரண வழிமுறைகள் போன்றவற்றை இந்த முக்கிய ஒழுங்குவிதிகள் உள்ளடக்குகின்றன.

தகவல்களைப் பகிர்தல் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, ஒழுங்கு முறைப்படுத்தல், நெருக்கடி முகாமைத்துவம் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பாக தீர்மானமெடுத்தல் போன்ற பகுதிகளில் கூட்டிணைவை மேம்படுத்தல் மற்றும் இயலாற்றல் விருத்தி மற்றும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல் போன்ற நோக்கத்திற்காக மத்திய வங்கியானது 2025 பெப்புருவரி 20 அன்று நேபாள ராஷ்டிர வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. மேலும், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் ஏற்புடைய ஒழுங்குவிதிகள்/நியமங்கள் மற்றும் ஏனைய கரிசனைகளுடன் இணங்காமை தொடர்பில் இரு தரப்பினருக்கிடையிலான தொடர்புடைய தகவல்களைப் பகிரும் நோக்கத்துடன் 2025 திசெம்பர் 01 அன்று மத்திய வங்கி மற்றும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களை கண்காணிக்கும் சபை போன்றன புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டது.

மேலும், கொழும்பு துறைமுக நகரத்தில் கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகளை வசதிப்படுத்துகின்ற அதேவேளை அத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு, மத்திய வங்கியானது 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தைத் திருத்துவதற்கு வரைவு சட்டமூலத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருக்கு அவதானிப்புக்களையும் விதந்துரைப்புக்களையும் வழங்கியது.

மேலும், மத்திய வங்கியானது பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கேற்று தனது அவதானிப்புக்களை வழங்கியதன் மூலம் நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0இனை உருவாக்குவதற்குப் பங்களித்த அதேவேளை உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபெறத்தக்க நிதி நடவடிக்கைகள் குறித்த புதிய வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் தொடர்பான மேலதிக மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொண்டது.

## தொடர்ச்சியான மேற்பார்வை நடத்தை

2025 காலப்பகுதியில், வங்கித்தொழில் துறையின் உள்ளார்ந்த இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கும், வைப்பாளர்களின் நிதியங்களை பாதுகாப்பதற்கான உடனடித் திருத்த வழிமுறைகளை இயலச்செய்வதற்கும் தொடர்ச்சியான மேற்பார்வை மேலும் வலுப்படுத்தப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில், ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகளை வழங்கும் செயன்முறை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் பணி நடவடிக்கைகளின் தன்னியக்கச் செயன்முறை முன்னெடுக்கப்பட்டது.

### ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பாாவை கட்டமைப்பு

வரைபடம் - 09




உரிமம் வழங்குதல் என்பது ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது. உரிமம் வழங்குவதற்கான அளவுகோல்கள், ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஏற்பாடுகள் மூலம் நிறுவப்படுகின்றன.

## ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள்

2025 காலப்பகுதியில், 3,627 கிளைகள், வங்கி சேவை மையங்கள், மற்றும் முகவர்களுடன் தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, அதில் 3,555 அனுமதிகள் வழங்கப்பட்டன.

## கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் சேவை மையங்கள் தொடர்பான ஒப்புதல்கள்

அட்டவணை 01

| ஒப்புதல்களின் வகைகள் | கிளைகளின்/வங்கித்தொழில் மையங்களின்/முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | பரிசீலிக்கப்பட்டது | வழங்கப்பட்டவை |
| கிளைகள், சுய- சேவை இயந்திரங்கள், மாணவர் சேமிப்பு பிரிவுகள், ஏனைய வங்கித்தொழில் சேவை மையங்கள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் முகவராண்மைகள் போன்றவற்றை திறத்தல் மற்றும் நிறுவுதல் | 130 | 103 |
| கிளைகள், சுய- சேவை இயந்திரங்கள் மற்றும் ஏனையவற்றின் இடமாற்றம் | 83 | 64 |
| கிளைகள் மற்றும் ஏனைய சேவை மையங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல்களை முடிவுறுத்தல் மற்றும் இரத்துசெய்தல் | 37 | 28 |
| தன்னியக்க கூற்று பொறி மற்றும் பிற தானியங்கி இயந்திரங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல்களை நிறுத்துதல் மற்றும் இரத்துசெய்தல் | 62 | 45 |
| உரிமம்பெற்ற வங்கிகளின் முகவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல்களை நிறுத்துதல் மற்றும் இரத்துசெய்தல் | 3,315 | 3,315 |
| கிளைகள்/வங்கித்தொழில் சேவை மையங்கள்/முகவர்களின் மொத்த எண்ணிக்கை | 3,627 | 3,555 |

கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் சேவை மையங்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல்களுக்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது 2025ஆம் ஆண்டில் உரிமம்பெற்ற வங்கிகளின் பின்வரும் ஒழுங்குமுறை ஒப்புதல்களை வழங்கியது.

## வழங்கப்பட்ட ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்

அட்டவணை 02

| ஒப்புதல்களின் வகை | ஒப்புதல்களின் எண்ணிக்கை |
|---|---|
| முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் உள்ளடங்கலாக முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை நியமிப்பதற்கான தகுதியையும் பொருத்தத்தையும் மதிப்பீடுசெய்தல் | 130 |
| பணிப்பாளர்கள் நியமிப்பதற்கான தகுதியையும் பொருத்தத்தையும் மதிப்பீடுசெய்தல் | 47 |
| வெளியிலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்கேற்பாடு - ஒத்திசைவு | 12 |
| சந்தைப் பெறுமதியை விடக் குறைவான விலையில் ஆதனத்தை விற்பனை செய்தல் | 3 |
| அடுக்கு 2 மூலதனத்தில் தொகுதிக்கடன்களை சேர்த்தல் | 7 |
| கைவிடப்பட்ட ஆதன மீள்பகிர்ந்தளிப்புக்கள் | 1 |
| வெளிநாட்டு ஊழியர் விசாப் பரிந்துரைகள்/புதுப்பிப்புக்கள் | 13 |
| ஏனைய ஒப்புதல்கள்/மதிப்பீடுகள் | 86 |
| மொத்தம் | 299 |

உரிமம்பெற்ற வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டால், அத்தீர்மானம் அதற்கான நியாயப்படுத்தல்/காரணங்களுடன் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. 2025ஆம் ஆண்டில், அமைச்சரவையால் ஒப்புதலளிக்கப்பட்ட அத்தகைய வங்கிகளின் ஆளுகை இடர்நேர்வு முகாமைத்துவம், மற்றும் மேற்பார்வை போன்றவற்றுடன் தொடர்புடைய அரசுக்குச் சொந்தமான தொழிற்முயற்சி சீர்திருத்தங்களின் பாகமாக, அந்த வங்கிகளுக்குப் புதிய பணிப்பாளர்களை நியமிக்கும் செயன்முறையை மத்திய வங்கி வசதிப்படுத்தியது.

மேலும், தாக்குபிடிக்கும்தன்மையையும் நிதியியல் உறுதிப்பாட்டையும் மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் தற்போதைய பொருளாதார மீட்சிப் பாதையினை வசதிப்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது வங்கித்தொழில் துறையின் ஒருங்கிணைப்பு கட்டமைப்பினை அறிமுகப்படுத்தி, குறிப்பிட்ட புள்ளியிடல் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு ஆண்டிற்கு இருமுறை மதிப்பீடுசெய்யப்படும் சுய மதிப்பீடுகளை சமர்ப்பிப்பதற்கு, ரூ.400 பில்லியனை விடவும் குறைவான சொத்துக்களுடன் உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளை தேவைப்படுத்தியது. 2025 காலப்பகுதியில், கிளைகள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் மையங்கள் அட்டவணை: 1 மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கிகளுடன் தொடர்புடைய இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நடைபெற்றுவரும் மறுசீரமைப்புச் செயன்முறையை மத்திய வங்கி தொடர்ந்தும் வசதிப்படுத்தியது.

மேலும், இலங்கை சேமிப்பு வங்கியை தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைத்துக்கொள்வதையும், இரு வெளிநாட்டு வங்கிகள் தமது தனிநபர் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்களை விற்பனை செய்து அவற்றை இரு உரிமம்பெற்ற வங்கிகளினால் கொள்வனவு செய்வதையும் மேற்பார்வையிட்டதன் மூலம், உரிமம்பெற்ற வங்கிகளின் ஒருங்கிணைப்பிற்கு மத்திய வங்கி வசதிப்படுத்தியது.

## ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

2025 காலப்பகுதியில், வங்கித்தொழில் சட்டம் மற்றும் தொடர்புடைய பணிப்புரைகளுடன் இணங்காமை தொடர்பான 8 சந்தர்ப்பங்களில் திருத்த வழிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

### காலமுறையான பரிட்சீப்புக்களை நடாத்துதல்

2025ஆம் ஆண்டில், 5 உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம்வாய்ந்த வங்கிகள், 4 வெளிநாட்டு வங்கிகள், 1 பெரிய வங்கி மற்றும் 7 நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வங்கிகள் ஆகியவற்றின் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை உள்ளடக்கி, உரிமம்பெற்ற வங்கிகளின் 17 நியதிச்சட்டப் பரீட்சிப்புக்கள், 2 ஒருங்கிணைந்த மேற்பார்வை உட்பட முழு அளவிலான 6 பரீட்சிப்புக்கள், மட்டுப்படுத்தப்பட்ட நோக்கெல்லையிலான 6 பரிட்சீப்புக்கள், பின்தொடர் அடிப்படையிலான 5 பரீட்சிப்புக்கள் போன்றவற்றை மத்திய வங்கி நடாத்தியது.

மத்திய வங்கி, 5 வங்கிகளின் பிரதான வங்கித்தொழில் கணினி முறைமைகளின் முறிவடைதல்கள், தரவு மீறல்கள், கொடுகடன் ஆளுகை, சந்தை இடர்நேர்வு மற்றும் 5 வங்கிகளுக்கான கரைகடந்த கடன்வழங்கலுடன் தொடர்புடைய விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு உரிமம்பெற்ற வங்கிகளில் 6 உடனடிப் பரீட்சிப்புக்களை மத்திய வங்கி நடாத்தியது.

ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கியின் பணம் தூயதாக்கல், பயங்கரவாதிக்கு நிதியளித்தல், ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளின் இணங்குவிப்பை மதிப்பீடுசெய்வதற்கு தனியான அடிப்படையில் அதேபோன்று தளத்திற்கு வெளியிலான மேற்பார்வை தொடர்பில் நிதியியல் உளவறிதல் பிரிவுடன் இணைந்து மத்திய வங்கி தளத்திலான பரீட்சிப்புக்களை

**வங்கியின் வகிபாகம் >** நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்தல்

நடாத்துகின்றதுடன் ஏதேனுமிருப்பின், நிதிசார் கொடுக்கல்வாங்கல்கலை அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் பொருத்தமானதெனக் கருத்தப்படும் நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு கரிசனைகள் தொடர்பில் அறிவித்துள்ளது. 2025 காலப்பகுதியில், நிதியியல் உளவறித்தல் பிரிவுடன் 10 கூட்டு மேற்பார்வை பரீட்சிப்புக்கள் மற்றும் 5 தனியான பரீட்சிப்புக்கள் போன்றவற்றை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நடாத்தியது.

மேலும், 2025ஆம் ஆண்டில், மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் 5 முதனிலை வணிகர் பிரிவுகளின் முன்மதிமிக்க மேற்பார்வையினை முன்னெடுத்தது.

### ஆர்வலர்களுடனான தொடர்பாடலும் ஈடுபாடும்

ஆர்வலர்களுடனான செயற்றிறன்மிக்க தொடர்பாடலைக் கொண்டிருக்கும் நோக்கத்துடன் முதன்மை நிவைவேற்று அலுவலர்களுடன் ஆளுநரினால் தலைமை தாங்கப்பட்ட மாதாந்த கூட்டங்களை மத்திய வங்கி நடாத்தியது. இதற்கு மேலதிகமாக, வங்கித்தொழில் துறையின் செயலாற்றம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து வங்கித் தலைவர்களுக்குத் தெரிவிப்பதற்காக இரு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேற்பார்வை பொறிமுறையின் பாகமாக, முக்கிய மேற்பார்வை கரிசனைகள்/கண்டறிதல்கள் தொடர்பில் குறித்த வங்கிகளின் பணிப்பாளர் சபை மற்றும் மூத்த முகாமைத்துவத்துடன் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் நிதியியல் அறிக்கைகளின் கணக்காய்வுடன் தொடர்புடைய விடயங்களை கலந்துரையாடுவதற்கு வெளிவாரி கணக்காய்வாளர்களுடன் பல்வேறு கூட்டங்கள் இடம்பெற்றன. மேலும், நிதியியல் சூழல் முறைமையினை மேம்படுத்தும் நோக்குடன், தகவல் பாதுகாப்பு தோற்றப்பாட்டில் பிந்திய அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடுவதற்கும் சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் சவால்களை தணிப்பதற்கு வங்கித்தொழில் முறைமையின் தயார்நிலையை மதிப்பீடுசெய்வதற்கும் 2025இல் உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை தகவல் அலுவலர்களுடன் இரு கூட்டங்கள் இடம்பெற்றன. உரிமம்பெற்ற வங்கிகளின் முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்களும் அக்கூட்டங்களில் ஒன்றில் பங்கேற்றனர். இதற்கு மேலதிகமாக, உரிமம்பெற்ற வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிவாரண வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல் பற்றிய கலந்துரையாடல்கள் உள்ளடங்கலாக, வெளிவாரி தரப்பினர்களுடன் பல்வேறு கூட்டங்கள் இடம்பெற்றன.

2025 காலப்பகுதியில், மத்திய வங்கியானது வங்கித்தொழில் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் துறை உறுதிப்பாட்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புடைய பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றுடன் பல்வேறு பணி நடவடிக்கைகளில் மத்திய வங்கி ஒருங்கிணைந்து செயற்பட்டது. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது பயற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வளவாளர்களை வழங்குவதன் மூலம் வங்கித்தொழில் துறையில் இயலாற்றல் விருத்திக்கு தொடர்ந்தும் பங்களித்த அதேவேளை அதன் ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புக்களையும் வழங்கியது.

பொதுமக்கள் தொடர்பில் தகவலறிந்த தீர்மானத்தை மேற்கொள்வதை வசதிப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியின் இணையதளத்திற்கு வங்கித்தொழில் துறையுடன் தொடர்புடைய தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் தகவல்களையும் குறிகாட்டிகளையும் மத்திய வங்கி கிரமமாக இற்றைப்படுத்தியது. மேலும், தேவையான ஒப்புதல்களுடன் தேவைக்கேற்றவாறு மற்றும் தேவையான போது மத்திய வங்கி, வெளிவாரித் தரப்பினர்களுக்கு வங்கித்தொழில் துறையுடன் தொடர்புடைய தரவுத் தேவைப்பாடுகளை வழங்கியது.

### 2025இன் முக்கிய பண்புகள்

- கூட்டிணைவை, தகவல் பகிர்வதை மற்றும் மேற்பார்வை கூட்டிணைவை மேம்படுத்துவதற்கு நேபாள ராஷ்டிர வங்கியும் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களைக் கண்காணிக்கும் சபையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.
- ஒருமித்த ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள் மற்றும் பணி நடவடிக்கைகளின் தன்னியக்கச் செயன்முறையினை தொடங்குதல் உள்ளடங்கலாக தொடர்ச்சியான மேற்பார்வையை வலுப்படுத்தியமை.
- கிளைகள், விற்பனை நிலையங்கள் மற்றும் முகவர்களுக்கான 3,627 ஒழுங்குமுறைப்படுத்தல் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, 3,555 அனுமதிகள் வழங்கப்பட்டமை.
- பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் மதிப்பீடுகள், வெளியிலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் ஒப்புதல்கள், மூலதனச் சாதனங்கள், ஆதன விற்பனைகள், மற்றும் வெளிநாட்டு ஊழியர் விசாக்கள் போன்றன உள்ளடங்கலாக 299 மேலதிக ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள் வழங்கப்பட்டமை.
- பணிப்பாளர் நியமனங்கள் மற்றும் மேற்பார்வை முன்னேற்றங்கள் உள்ளடங்கலாக அரசுக்குச்சொந்தமான வங்கிகளின் ஆளுகையுடன் தொடர்புடைய சீர்திருத்தங்களை வசதிப்படுத்தியமை.
- உள்நாட்டில் கூட்டிணைக்கப்பட்ட சிறிய வங்கிகளை ஆண்டிற்கு இருமுறை சுயமதிப்பீடுகளை சமர்ப்பிக்குமாறு வேண்டிக் கொண்டதுடன் வங்கித்தொழில் நுறையின் ஒருங்கிணைப்புக் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்தியது.
- இலங்கையின் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கி மறுசீரமைப்பை மாற்றியமைத்து, இலங்கை சேமிப்பு வங்கியை தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைத்துக்கொள்வது மற்றும் இரு வெளிநாட்டு வங்கிகள் தனிநபர் வங்கித் தொழிற்பாடுகளிலிருந்து வெளியேறுவது உள்ளிட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை வசதிப்படுத்தியமை

# இலங்கையில் வங்கித்தொழில் துறையின் பரிணாம வளர்ச்சியும் ஒழுங்குமுறைப்படுத்தல் இயக்கவாற்றலும்



பல தசாப்தங்களாக, வங்கித்தொழில் துறையானது நிலையான விரிவாக்கம் மற்றும் உலகளாவிய நியமங்களுக்கான அர்ப்பணிப்பின் மூலம் நம்பகமான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதில் கவனம்செலுத்தி வருகிறது. குறிப்பிடத்தக்க பொருளாதாரத் தடைகளைக் கடந்து, இத்துறையானது தற்போது நிதியியல் உறுதிப்பாடு நன்கு நிறுவப்பட்ட அடிப்படையாக விளங்கும் முதிர்ச்சி நிலையை அடைந்துள்ளது. இன்று இந்நிறுவப்பட்ட அடித்தளமானது, முதன்மையான நிதி இடைநிலையாளர் என்ற ரீதியில், நிதியியலின் எதிர்காலத்தை தொடர்ந்தும் வழிநடத்திச் செல்கிறது.

### வங்கித்தொழில் துறையின் பரிணாம வளர்ச்சி

நிதியியல் இடையீட்டையும் முறைமை உறுதிப்பாட்டையும் வலுப்படுத்துகின்ற சட்ட, நிறுவனம்சார் மற்றும் கொள்கைக் கட்டமைப்புக்கள் போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, இலங்கையிலுள்ள வங்கித்தொழில் துறையானது பல தசாப்த காலங்களாகப் பரிணமித்து வந்துள்ளது. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் 1950இல் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி, வங்கிகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வைசெய்வதற்கான சட்டரீதியிலான அடித்தளத்தை வழங்கிய அதேவேளை வங்கி மேற்பார்வைத் திணைக்களம் நாணய விதிச் சட்டத்தின் கீழ் அதன் இரு நியதிச் சட்ட திணைக்களங்களில் ஒன்றாகத் தாபிக்கப்பட்டது.

1950 - 1976 ஆம் காலப்பகுதிகளில், அரசின் தொலைநோக்குப் பார்வைக்கிணங்க, இரு அரசுக்குச் சொந்தமான வங்கிகளின் கிளை வலையமைப்புகள் கிராமப்புறங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டதன் மூலம் வங்கித்தொழில் துறை கணிசமாக விரிவடைந்து, முதன்மையாக வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பெருந்தோட்டத் துறையின் மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்றி வந்த வெளிநாட்டு வங்கிகளின் மீது வங்கித்தொழில் துறையில் அவை படிப்படியாகத் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டின. இத்துறையில் தனியார் வங்கிகளின் குறைந்த இருப்பு மற்றும் நலிவடைந்த போட்டிச் சூழல் ஆகியவை நிதியியல் முறைமையின் வினைத்திறன் மற்றும் உயர்நிலைத்திறன் மேம்படுத்தல்களை கட்டுப்படுத்தின.

1977ஆம் ஆண்டு தாராளமயமாக்கல் வழிமுறைகளைத் தொடர்ந்து, புதிய நிதியியல் சாதனங்களின் அறிமுகம், தோற்றம்பெற்றுவரும் நிதியியல் தேவைப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திகள் போன்றவற்றுடன் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளைத் தாபித்தல் மற்றும் புதிய உள்நாட்டு தனியார் வங்கிகளைத்தாபித்தல் போன்ற நடவடிக்கைகளுடன் வங்கித்தொழில் துறையானது அளவு, சிக்கலான தன்மை மற்றும் உயர்நிலைத்திறன் ஆகியவற்றில் மேலும் விரிவடைந்தது. மேலும், முதலீட்டுச் சபையின் கீழ், வதிவற்ற மற்றும் வதிவோர் நிறுவனங்களுக்கு குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் கடன் வழங்குவதை வசதிப்படுத்தும் வகையில், வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகள் தாபிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக முயற்சியாண்மையாளர்கள் மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியளிப்பதன் மூலம் கிராமிய அபிவிருத்தியை வசதிப்படுத்தும் நோக்கில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் தாபிக்கப்பட்டன.

வங்கித்தொழில் துறையின் பரிணாம வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மைற்கல்லைக் குறிக்கும் வகையில், நிதியியல் முறைமையின் அதிகரித்துவரும் சிக்கலான தன்மை மற்றும் மிகவும் வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் தேவை ஆகியவற்றிற்கு பதிலளிக்கும் விதமாக 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் இயற்றப்பட்டது.

வங்கித்தொழில் வியாபாரத்தை கொண்டுநடாத்தும் நிறுவனங்களுக்கு உரிமத்தை வழங்குவதற்கும் அவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் மத்திய வங்கிகளுக்கு இச்சட்டம் தெளிவான அதிகாரத்தை வழங்கியதோடு இதன்மூலம், வங்கித்தொழில் துறையின் பாதுகாப்பையும் ஆற்றல்வாய்ந்ததன்மையையும் ஊக்குவிப்பதுடன் வைப்பாளர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் நலனையும் பாதுகாக்கின்றது.

மேலும், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பது மத்திய வங்கிச் சட்டத்தின் முக்கியமானதொரு குறிக்கோளாக அடையாளம் காணப்பட்டதுடன், தாக்குபிடிக்கும் தன்மைக்கொண்ட மற்றும் ஆற்றல்வாய்ந்த வங்கித் துறையைப் பேணுவதற்கான அவசியத்தையும் அது வலியுறுத்தியது.

### ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தோற்றமைப்பின் பரிணாமம்

இலங்கை வங்கித்தொழில் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது அத்துறை முழுவதும் மேற்பார்வை, முன்மதியுடைய ஒழுங்குவிதிகள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் ஆளுகை நடைமுறைகளை வலுப்படுத்தும் நோக்கில், சர்வதேச நியமங்களுக்கு இசைந்துசெல்லும் வகையில் தொடர்ந்தும் பரிணமித்து வருகிறது. இதற்கமைவாக, இலங்கை மத்திய வங்கியானது 1993ஆம் ஆண்டில் பாசல் I உடன் அணிசேர்ந்த மூலதனப் போதுமாந்தன்மைத் தேவைப்பாடுகளை தொடக்கத்தில் பின்பற்றியதோடு, கொடுகடன் இடர்நேர்விற்கான குறைந்தபட்ச மூலதன நியமங்களை நிறுவியதுடன் பின்னர் 2008இல் பாசல் II இற்கு மாற்றமடைந்து இது குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள், மேற்பார்வை மீளாய்வு மற்றும் சந்தை ஒழுங்குமுறை ஆகிய மும்முனை அணுகுமுறையை உள்ளடக்கிய, அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் இடர்நேர்வு உணர்திறன் கொண்ட கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தியது. நிதியியல் அதிர்வுகளைத் தாங்கும் உலகளாவிய வங்கித்தொழில் துறையின் தாக்குபிடிக்கும் தன்மையை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு வங்கி மேற்பார்வைக்கான பாசல் குழுவால் நடைமுறைப்படுத்தப்பட்ட நெருக்கடிக்குப் பிந்திய நியமங்களுடன் இசைந்துசெல்லும் வகையில், 2016ஆம் ஆண்டில் பாசல் III இன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் மீதான வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் அறிமுகப்படுத்தப்பட்டமையானது ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்களில் ஒரு முக்கிய மைற்கல்லாக அமைந்தது.

மேலும், தோற்றம்பெற்றுவரும் சந்தை நிலைமைகள் மற்றும் அபிவிருத்திகளுடன் தொடர்ச்சியாக அணிசேர்வதை உறுதிசெய்யும் வகையில், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி அவ்வப்போது பணிப்புரைகளை வெளியிட்டது. அதில் உள்ளடங்கும் அம்சங்கள் பின்வருமாறு:

- நிறுவன ஆளுகை
- ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு
- பாசல் III இன் கீழ் முடுக்கி விகிதம்
- திரவத்தன்மை காப்பு விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதியிடல் விகிதம் உள்ளடங்கலாக நியதிச் சட்ட திரவத்தன்மை விகிதங்கள் மீதான பணிப்புரைகள்
- இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 9: நிதியியல் சாதனங்களுடன் இசைந்துசெல்லும் வகையில் கொடுகடன் வசதிகள் மற்றும் ஏனைய நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல், அங்கீகரித்தல் மற்றும் அளவிடுதல்.
- உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குபிடிக்கும் தன்மை பற்றிய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மீதான பணிப்புரைகள்
- உரிமம்பெற்ற வங்கிகளின் பாரிய கடன் வெளிப்படுத்துகைகள் தொடர்பான பணிப்புரை
- உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்வசதிகள் தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட பிணையங்கள் மற்றும் வரையறைகள் தொடர்பான ஒழுங்குமுறைகள்.

### வங்கத்தொழில் துறையின் தாக்குபிடிக்கும் தன்மை

வங்கித்துறையின் மொத்தச் சொத்துத்தளமானது 2025ஆம் ஆண்டு இறுதியில் ரூ.24.9 ரில்லியனுக்கும் விஞ்சியதாகக் காணப்பட்டது. இத்துறையானது வங்கிச் சேவைகளின் கிடைக்கக்கூடிய தன்மையை அதிகரிப்பதன் மூலம் நிதியியல் இடையீட்டிற்கு ஆதரவளிப்பதற்காக 3,642 கிளைகள் கொண்ட வலையமைப்பினூடாக 11 வெளிநாட்டு வங்கிகள் உள்ளடங்கலாக 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் 6 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த

வங்கிகளுடன் செயற்படும் 30 உரிமம்பெற்ற வங்கிகளை உள்ளடக்கியுள்ளது. நாட்டின் வங்கித்துறையின் பரவலாக்கமானது (ஒவ்வொரு 100,000 நபர்களுக்குமான வங்கிக் கிளையின் எண்ணிக்கை) 2025ஆம் ஆண்டின் இறுதியில் 17.37 ஆகக் காணப்பட்டது.

பொருளாதார நடவடிக்கைகளின் மெதுவான மீட்சி, அரசியல் நிச்சயமற்றதன்மைகள் மற்றும் அசாதாரண நிலையுடைய மோசமான பொருளாதார நிலைமைகள் போன்றவற்றுடன் இணைந்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று, உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பிந்திய இடையூறுகள் போன்றன உள்ளடங்கலாக இலங்கை கடந்த சில ஆண்டுகாலமாக பல பொருளாதார மற்றும் நிதியியல் சவால்களை எதிர்கொண்டது. எனினும், இச்சவால்களுக்கு மத்தியில், மத்திய வங்கியினால் வங்கித் தொழில் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட முன்கூட்டிய முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களினால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டு, இலங்கையின் வங்கித்தொழில் துறையானது தாக்குபிடிக்கும் தன்மையுடன் தொடர்ந்தும் காணப்பட்டது.

பாசல் III நியமங்களை அடிப்படையாகக் கொண்டு வலுவான மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்களைப் பேணியமை மற்றும் இ.நி.அ நியமம் 9 கணக்கீட்டு நியமங்களிற்கமைவாக எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளுக்கான போதியளவான பெறுமதி இழத்தலுக்கான ஏற்பாடுகளை வங்கிகள் மேற்கொண்டமை போன்றன இக்காலகட்டத்தில் வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதில் பாரியளவில் பங்களித்திருந்தன.

வங்கித்தொழில் துறை எதிர்கொள்ளும் தொடர்ச்சியான பொருளாதார சவால்களைக் கருத்திற்கொண்டு, பொருளாதாரத்தில் ஏற்படும் கசிவுத் தாக்கங்களைக் குறைக்கும் அத்துடன் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்தும் பொருட்டு 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தை (சிறப்பு ஏற்பாடுகள்) இயற்றுதல், நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவை நிறுவுதல், உரிமம்பெற்ற வங்கிகளுக்கான அவசரகாலக் கடன்கள் மற்றும் முற்பணங்களை வழங்குவதற்கான கட்டமைப்பொன்றை உருவாக்குதல் மற்றும் வங்கி மீள்மூலதனமயமாக்கல் உபாயத்தை உருவாக்குதல் உள்ளிட்ட பல நெருக்கடித் தயார்நிலை வழிமுறைகளை மத்திய வங்கி முன்னெடுத்தது.

இதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியானது இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வையை வலுப்படுத்துவதன் மூலம் உரிமம்பெற்ற வங்கிகளின் மேற்பார்வையை பலப்படுத்தியதோடு, உள்நாட்டு முறைமைசார் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான தீவிர மேற்பார்வையையும் உறுதிசெய்தது. மேலும், இலங்கை மத்திய வங்கியானது வங்கிக் குழுக்களுக்கான ஒருங்கிணைந்த மேற்பார்வையை ஏற்றுக்கொண்டதுடன், செயற்றிறன்மிக்க ஒருங்கிணைந்த இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வையை நடத்துவதற்காக இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஆகியவற்றுடனான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதோடு இதன்மூலம், ஒட்டுமொத்த முறைமையையும் பாதிக்கும் இடர்நேர்வுகளிற்கெதிராக வங்கித்தொழில் முறைமையின் தாக்குபிடிக்கும் தன்மையை வலுப்படுத்தியது.

## 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் திருத்தச் சட்டம்

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகள் மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வங்கி உரிமத்திலுள்ள குறைந்தபட்ச தேவைப்பாடுகள், ஆர்வலர் பொருத்தப்பாடு, வங்கி சொத்தாண்மை, நிறுவன ஆளுகை, தொடர்புடைய தரப்பு கொடுக்கல்வாங்கல்கள், ஒருங்கிணைந்த மேற்பார்வை, மூலதனம் மற்றும் திரவத்தன்மைக் கட்டமைப்பு, மற்றும் பாரியளவிலான வெளிப்படுத்துகைகள் உள்ளடங்கலாக பல முக்கிய பகுதிகளில், உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, மத்திய வங்கியானது 2024ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டத்தை உருவாக்கியது.

வங்கிச்சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தங்களை அடிப்படையாகக் கொண்டு, கடந்த காலங்களில் வங்கிகளின் கடன் மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளில் அழுத்தத்தை ஏற்படுத்திய அரச வங்கிகளின் தொடர்புகள் காரணமாக உருவான கடன் ஒருமுகப்படுத்தல் இடர்நேர்வினைக் குறைப்பதற்கு பாரிய கடன் வெளிப்பாடுகள் தொடர்பாகத் திருத்தியமைக்கப்பட்ட பணிப்புரைகள் வெளியிடப்பட்டன. அதன்படி, உரிமம்பெற்ற வங்கிகள் அரசாங்கத்திற்கான கடன் வெளிப்பாடுகளைப் படிப்படியாக குறைக்க வேண்டிக்கொள்ளப்பட்டன.

அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட கட்டமைப்பொன்றின் கீழ், தகுதி அடிப்படையிலான மற்றும் வெளிப்படையான சபை நியமனங்கள் மூலம் அவற்றின் ஆளுகை மேம்பட்டுள்ளதோடு இது தொடர்பாக மத்திய வங்கி, தொடர்புடைய உரிமம்பெற்ற வங்கிகளுக்கு சுயாதீனமான பணிப்பாளர்களை நியமிப்பதற்கு வசதிப்படுத்தியது. இச்சீர்திருத்தங்களின் பிரகாரம், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சபைகளின் சுயாதீனமும் இயக்கவாற்றலும் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2019ஆம் ஆண்டு முதல் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் கொவிட்-19 நோய்ப்பரவலினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கும் தனிநபர்களுக்கும், கடன் தவணை ஒத்திவைப்பு, சலுகை வட்டி வீதங்களில் கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் வளம்பெறத்தக்க கடன்பாட்டாளர்களை மீட்டெடுப்பதற்காக கொவிட்-19 புத்துயிரளித்தல் பிரிவுகள் போன்ற பல்வேறு நிவாரண வழிமுறைகளை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தியது. மேலும், அசாதாரண பேரண்டபொருளாதார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களின் நிலைபெறத்தக்க பொருளாதார மீட்புப் பிரிவுகளை வசதிப்படுத்துவதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளின் சொத்துத் தரத்தை மேம்படுத்துவதற்கும் இலங்கை மத்திய வங்கியானது 2024 மார்ச்சில் வியாபார மீட்புப் பிரிவினைத் தாபித்தல் பற்றிய வழிகாட்டல்களை வழங்கியதுடன் அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயற்றிறன்மிக்க நிவராணத்தை வழங்குவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, 2025 திசெம்பரில் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் சுற்றறிக்கையினை வழங்கியது.

மேலும், காலநிலை தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் சமூக ரீதியில் அனைவரையும் உள்ளடக்கிய நிதியியல் முறைமையினைப் பேணிவளர்ப்பதற்கு இலங்கை மத்திய வங்கியானது நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0இனை அங்குரார்ப்பணம் செய்ததுடன்

நிதியியல் குற்றம் சார்ந்த இடர்நேர்வுகளை அடையாளங்கண்டு தணிப்பதற்கு வங்கிகளுக்குள் செயன்முறைகளையும் கட்டுப்பாடுகளையும் வலுப்படுத்துவதற்கு பணம்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான தளப் பரீட்சிப்புக்களை நடாத்தியது.

வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களின் கீழ் கரைகடந்த வங்கித்தொழில் நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்கும் வங்கித்தொழில் துறையின் தாக்குபிடிக்கும்தன்மையையும் உறுதிப்பாட்டையும் மேலும் வலுப்படுத்துவதற்கும் பங்களிக்கும் வகையில், 2021ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களை வரைவு செய்வதிலும் இலங்கை மத்திய வங்கி பங்களித்தது.

**டிஜிட்டல் தழுவலானது இலங்கையில் வங்கித் தொழிலை துரிதமாக மீளவடிவமைத்து, வினைத்திறன், அணுகல்தன்மை மற்றும் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்தும் அதேவேளை உறுதியான இணையப் பாதுகாப்பு ஆளுகையை அவசியப்படுத்துகின்றது.**

### வங்கித்தொழில் துறையின் டிஜிட்டல் நிலைமாற்றம்

வங்கித்தொழில் துறையில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று டிஜிட்டல் பயன்பாட்டைத் துரிதப்படுத்திய அதேவேளை வாடிக்கையாளர் நடத்தை மற்றும் பணி வழங்கலையும் மாற்றியமைத்தது. தீவிரமான போட்டிக்கு மத்தியில் பரிணமித்துவரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு வங்கிகள் செயல்திறன், அணுகல்தன்மை மற்றும் தாக்குப்பிடிக்கும்தன்மை போன்றவற்றை மேம்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளன. மேம்படுத்தப்பட்ட பயனாளர் அனுபவத்துடன் கூடிய டிஜிட்டல் மற்றும் செல்லிடத் தொலைபேசி வங்கித் தளங்கள், நிகழ்நேர வங்கிகளுக்கு இடையேயான கொடுப்பனவுகள், டிஜிட்டல் முறையினூடாகத் தொடங்குதல் (eKYC, vKYC), கிளவுட் உட்கட்டமைப்பு, மற்றும் டிஜிட்டல் உதவியாளர்கள், சாட்போட்கள் உள்ளிட்ட செயற்கை நுண்ணறிவு சார்ந்த தானியக்கம் போன்ற புத்தாக்கங்கள் வேகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, வங்கித்தொழில் சேவைகள் வழங்கப்படும் விதத்தை மாற்றியமைத்து வருகின்றன. இம்முன்னேற்றங்கள் தீர்மானமெடுக்கும் திறனையும் வாடிக்கையாளர் அனுபவத்தையும் மேம்படுத்தியுள்ள அதேவேளை இணையப் பாதுகாப்பு இடர்நேர்வுகளையும் அதிகரிக்கச்செய்துள்ளதோடு இதற்கு வலுவான ஆளுகையும் தொழிற்பாட்டுக் கட்டுப்பாடுகளும் அவசியமாகின்றன.

### தொழில்நுட்ப இடர்நேர்வு மற்றும் இணையத் தாக்குபிடிக்கும்தன்மை பற்றிய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

தொழில்நுட்பம் தொடர்பான இடர்நேர்வுகளுக்கு எதிராக நிதியியல் துறையின் தாக்குபிடிக்கும்தன்மையை மேம்படுத்தும் நோக்கில், இலங்கை மத்திய வங்கியானது 2021இல் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குபிடிக்கும்தன்மை குறித்த ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றை வெளியிட்டதோடு தொழில்நுட்ப இடர்நேர்வு ஆளுகை, தகவல் பாதுகாப்பு, தகவல் முறைமையின் கிடைப்பனவு, மற்றும் அனர்த்த மீட்பு, ஊழியர் தேர்ச்சிகள் மற்றும் மூன்றாந்தரப்பு உட்கட்டமைப்பின் பயன்பாடு போன்றவற்றை உள்ளடக்கிய குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை கட்டமைத்தது. மேலும், உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாட்டுத் தாக்குபிடிக்கும்தன்மையை வலுப்படுத்துவதற்கும் வாடிக்கையாளர் தகவல்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சம்பவங்களை முறையிடுவது குறித்து 2025ஆம் ஆண்டில் சுற்றறிக்கையொன்றை வழங்கியதோடு இது தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சம்பவங்கள், அத்துடன் இணையவழி மற்றும் டிஜிட்டல் மோசடிகள் ஆகியவற்றை உடனடியாக முறையிடுவதற்கு கோருகிறது. இதற்கு மேலதிகமாக, வங்கித்தொழில் துறையில் பொறுப்பான செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டை உறுதிசெய்யும் வழிகாட்டுதல்களை உருவாக்குவதை வசதிப்படுத்துவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளினால் செயற்கை நுண்ணறிவு ஏற்றுக்கொள்ளப்படும் தற்போதைய நிலையை மதிப்பீடுசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கி அண்மையில் ஆய்வொன்றை நடாத்தியது.

ஒழுங்குமுறைப்படுத்தல், சந்தை அபிவிருத்திகள் மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் வகையில் முன்மதிமிக்க வழிமுறைகளை உரிய நேரத்தில் பின்பற்றுவதினூடாக இலங்கை மத்திய வங்கி வங்கித் தொழில் துறையின் உறுதிப்பாட்டையும் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் தொடர்ந்து மேம்படுத்தும் அதேவேளை தொழில்நுட்பம் சார்ந்த மேற்பார்வை கருவிகளை அறிமுகப்படுத்துவதினூடாக மேற்பார்வை செயற்றிறனையும் மேம்படுத்தும்.

# வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வையும்

இலங்கை மத்திய வங்கிக்கு 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 61ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம் 2000[1]ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டம் மற்றும் 2016ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நுண்பாக நிதித்தொழில் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் முறையே நிதிக் கம்பனிகள், சிறப்பியலப்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை மத்திய வங்கியானது, திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்கு விதிகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் முதனிலை வணிகர் கம்பனிகளையும் மேற்பார்வை செய்கிறது. தொடர்புடைய முக்கிய தொழிற்பாடுகளாவன.

- **உரிமம் வழங்குதல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்:** இலங்கை மத்திய வங்கியானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கான உரிமங்களை/பதிவுகளை வழங்குதல் மற்றும் முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல்களை உருவாக்குதல்.
- **வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் தொடர்ச்சியான கண்காணிப்புக்கள் மற்றும் நியதிச் சட்டப் பரிசீலிப்புக்கள்:** ஒழுங்குமுறைப்படுத்தல் இணக்கத்தை உறுதிசெய்வதற்கும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் உறுதிப்பாட்டை மதிப்பீடுசெய்வதற்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியானது தொடர்ச்சியான கண்காணிப்புக்களையும் நியதிச் சட்ட பரிசீலிப்புக்களையும் நடாத்துகிறது.
- **ஆளுகை மேற்பார்வை:** வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், மற்றும் ஏனைய முக்கிய பொறுப்புவாய்ந்த ஆட்களினதும் தகுதியையும் பொருத்தப்பாட்டையும் இலங்கை மத்திய வங்கி மதிப்பீடுசெய்து ஒப்புதலளிக்கின்றது.
- **ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்:** வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரமுள்ளது.
- **விசாரணைகள்:** இலங்கை மத்திய வங்கி அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில் தொடர்பான விசாரணை நடத்துகின்றது. மேலும் நிறுவனங்கள் சட்ட விரோதமாக வைப்புகளை ஏற்கவில்லை அல்லது அங்கீகாரம் இல்லாமல் செயற்படவில்லை என்பதை உறுதிசெய்கிறது.

நேரடி ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வையிடலுக்கு அப்பால் இலங்கை மத்திய வங்கியானது இத்துறையில் இயலாற்றலைக் கட்டியெழுப்புதல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை நடாத்துதல், நீதிமன்ற நடவடிக்கை முறைகளை வசதிப்படுத்தல் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகளைக் கவனித்தல் போன்றவற்றிலும் பங்களிப்பினை வழங்குகின்றது.

## பணிப்புரைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களின் ஆலோசனையுடன் தற்போதைய சந்தை அபிவிருத்திகள் மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கு இசைந்துசெல்லும் வகையில் அவற்றின் தற்போதைய ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தி வலுப்படுத்துவதற்கு முன்மதிமிக்க ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன. வைப்புத்தொகைகள் மற்றும் படுகடன் சாதனங்களுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள், நிதிக் கம்பனிகளுக்கான திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளுக்கான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச முக்கிய மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரைகள் 2025ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய முன்மதிமிக்க வழிமுறைகளின் பட்டியலில் உள்ளடங்குகின்றன.[2]

## ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்கள்

படுகடன் சாதனங்களை வழங்குதல், பங்கு மூலதனத்தினை அதிகரித்தல்/குறைத்தல், சொத்தாண்மை கைமாற்றல்கள், அகவிதிகளைத் திருத்தல், துணைக் கம்பனிகளை உருவாக்குதல், வருடாந்த கிளை விரிவாக்கத் திட்டங்கள், முக்கிய பொறுப்பு வாய்ந்த ஆட்களை நியமித்தல், தெடர்தல், இராஜினாமா செய்தல், ஓய்வு பெறுதல் தொடர்பான விடயங்கள் போன்றவற்றுக்கு மத்திய வங்கி வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களுக்கு 1,121 ஒழுங்குமுறைப்படுத்தல் ஒப்புதல்களை வழங்கியது.

## நியதிச் சட்ட பரீட்சிப்பு மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு

இலங்கை மத்திய வங்கி, 16 நிதிக் கம்பனிகள், மூன்று முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் இரு உரிமம்பெற்ற நுண்பாக நிதிக்கம்பனிகள் தொடர்பில் நியதிச் சட்டப் பரீட்சிப்புக்களை நடாத்தியது. முறைகேடுகளைப் பரீட்சிப்பதற்கு நான்கு நிதிக் கம்பனிகளுக்காக உடனடிப் பரீட்சிப்புக்களை நடாத்தியது. மேலும், முக்கியமாக, பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுடன் தொடர்புடைய மதிப்பீட்டையும் 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம் உள்ளடங்கலாக ஏற்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் போன்றவற்றுக்கு பொருத்தமான ஏற்பாடுகளுடன் இணங்குவித்தலையும் கவனத்திற்கொண்டு, நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள் மீதான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மேற்பார்வை நடாத்தப்பட்டது. அதேநேரத்தில், தேவையேற்படும் போது நிதியியல் உளவறிதல் பிரிவுடன் கூட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பரீட்சிப்புக்ள நடாத்தப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியானது அதன் பின்நெற்முறை அறிக்கையிடல் முறைமையைப் பயன்படுத்தி, நிதியியல் தகவல்கள், கணக்காய்வாளர் அறிக்கைகள், வெளிவாரித் தரமிடல்கள் மற்றும் ஊடக அறிக்கைகள் என்பவற்றை பகுப்பாய்வுசெய்தது. தளத்திற்கு வெளியிலான கண்காணிப்பு நடவடிக்கைகளை மத்திய வங்கி தொடர்ந்தும் நடாத்தியது. அடையாளம் காணப்பட்ட இடர்நேர்வுகள் தொடர்பில் தகவலறிந்த தீர்மானத்தை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு ஆளுகைச் சபைக்கு அறிவிக்கப்பட்டது. தொடர்ச்சியான மேற்பார்வையை வசதிப்படுத்தும் பொருட்டு, நிதிக் கம்பனிகளை மிகக் குறைந்த இடர்நேர்வு முதல் மிகவும் உயர்வான இடர்நேர்வு வரையிலான பிரிவுகளாக வகைப்படுத்தி, மத்திய வங்கி அதன் உள்ளக மேற்பார்வை தரமிடல்களைத் தொடர்ந்து தயாரித்து வந்தது. நிதிக் கம்பனித் துறையை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தின் கட்டம் IIஇன் கீழ் நிதிக் கம்பனிகளைக் கண்காணிக்கும் பணியிலும் வங்கி ஈடுபட்டதுடன், முக்கியமாகக் கொள்கைச் சிக்கல்கள் மற்றும் உரிமம் இரத்து செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தொடர்பான 354 பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு தீர்வினைக் கண்டது.

## வரையறைகள் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

உடனடித் திருத்த நடவடிக்கை கட்டமைப்பு மற்றும் ஏனைய ஏற்புடைய சட்ட/ ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகளின் கீழ், இணக்கமற்ற நிதிக் கம்பனிகளுக்கு எதிராக மத்திய வங்கி உடனடி நடவடிக்கையை மேற்கொண்டது:

- மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்றாத நிதிக் கம்பனிகள் மீது வைப்புத்தொகை ஏற்றல், கடன் வழங்குதல் மற்றும் கடன்பெறுகை ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மேலும், இணக்கத்தை எட்டிய நிதிக் கம்பனிகளுக்கு தொடர்புடைய கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன.

[1] இலங்கை மத்திய வங்கி நிதி நிறுவனங்களின் மேற்பார்வை, ஒழுங்குமுறை மற்றும் தீர்வுக்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நிதித் தொழில் சட்டத்திலும், நிதி குத்தகை தொழிலில் அடையாளப்படுத்தப்பட்ட கரிசனைகளை நிவர்த்திசெய்ய நிதிக் குத்தகைக்கு விடுதல் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

[2] https://www.cbsl.gov.lk/en/laws/directions-circulars-guidelines-for-non-banks

- மூலதனம் மற்றும் திரவத்தன்மை மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனான தொடர்ச்சியான இணங்குவிப்பின்மையை கருத்திற்கொண்டு நிதிக் கம்பனி மீது தீர்மான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
- ஒழுங்குமுறைப்படுத்தல் கரிசனைகளைத் தீர்வுகாண்பதற்கு சபைகள் மற்றும் மூத்த முகாமைத்துவதுடன் கூடிய கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
- தீர்த்துக்கட்டல் செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு முறிவடைந்த நிதிக் கம்பனிகளின் தீர்த்துக்கட்டுநர்களுடன் கூட்டிணைதல்.

## தொடர்பாடல் மற்றும் தகவல் பரவல்

சந்தை வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக, முன்மதியுடைய மூலனத் தேவைப்பாடுகளுடன் இணங்காமை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் என்பவற்றை சுட்டிக்காட்டி வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பெயர்கள் இலங்கை மத்திய வங்கியின் வலைத்தளத்தில்[3] பிரசுரிக்கப்பட்டன. வங்கியானது பின்வருபவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம், ஆர்வலர்களுடனான ஈடுபாட்டையும் தீவிரப்படுத்தியது:

- ஒழுங்குமுறைப்படுத்தல் முன்னேற்றங்கள் தொடர்பான நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள் போன்றவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்
- பணிப்பாளர் சபை, மூத்த முகாமைத்துவம், தொழிற்துறை அமைப்புக்கள், வெளிவாரியக் கணக்காய்வாளர்கள், மற்றும்
- துறைவாரியிலான கரிசனைகளுக்கு தீர்வுகாண்பதற்கு சர்வதேச முகவராண்மைகள்

துறை சார்ந்த தகவல்களின் கொடுப்பனவை மேம்படுத்த, இலங்கை மத்திய வங்கியானது நிதிக்கம்பனிகளின் துறையின் காலாண்டு நிதித் தகவல்களை வெளியிட்டதுடன் உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற உலகலாவிய நிறுவனங்களுடனும்[4] மற்றும் அரச நிறுவனங்களுடனும் தகவல்களை பகிர்ந்துள்ளது.

மத்திய வங்கியானது பொதுமக்கள், சட்ட நடைமுறைப்படுத்தல் அலுவலர்கள், அரசாங்க அலுவலர்கள், பத்திரிகையாளர்கள், இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் ஊழியர்கள், மற்றும் ஏனைய துறை பங்கேற்பாளர்கள் உள்ளடங்கலாக, பரந்தளவிலான ஆர்வலர்களினை இலக்காகக் கொண்டு, முக்கியமாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பு மற்றும் அதிகாரமளிக்கப்படாத வைப்பேற்றல்/ நிதித்தொழில்களுடன் தொடர்புடைய அனைத்தையுமுள்ளடக்கிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தொடரை நடைமுறைப்படுத்தியது. ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள், இணையவழி அமர்வுகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆர்வலர் கலந்துரையாடல்கள் உள்ளடங்கலாக இம்முயற்சிகள் தளங்களினூடாக வழங்கப்பட்டன.

இதற்கமைவாக, மத்திய வங்கியானது ஆர்வலர்களின் அறிவையும் தொழில்முறைத் தரங்களையும் மேம்படுத்தும் நோக்கில், குறிப்பாக நிதிக் கம்பனிகளுக்கு ஏற்புடைய பணிப்புரைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக, பல்வேறு கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. மத்திய வங்கியின் தகுதியும் அனுபவமும் வாய்ந்த வளவாளர்களினால் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் வழிநடாத்தப்பட்டன.

மேலும், அதிகாரமளிக்கப்படாத வைப்பேற்றல் மற்றும் சட்டவிரோத நிதித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் குறித்து பொதுமக்களுக்குக் அறிவூட்டுகின்ற அதேவேளை நிதியியல் அறிவினை மேம்படுத்துவதிலும் வலுவான கவனம்செலுத்தி பல்வேறு விழிப்புணர்வு அமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதே நேரத்தில், அதிகாரமளிக்கப்படாத நிதியியல் நடவடிக்கைகள் தொடர்பான சட்டக் கட்டமைப்பு, ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் அமலாக்க பொறிமுறைகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்காக சிறப்பு இயலாற்றல் மேம்பாட்டு அமர்வுகள் நடத்தப்பட்டன. கிராமப்புறங்களில் சமூகத் தலைவர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட களப்பணி முயற்சிகள், சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரிடையே விழிப்புணர்வை விரிவுபடுத்த உதவியதோடு, அதன்மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு ஆதரவளித்து வாடிக்கையாளர் பாதுகாப்பையும் வலுப்படுத்தின.

### 2025இன் முக்கிய பண்புகள்

- உரிமம் வழங்குதல், முன்மதிமிக்க ஒழுங்குவிதிகள், தொடர்ச்சியான மேற்பார்வை (பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கர-வாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான மேற்பார்வை உள்ளடங்கலாக), நியதிச்சட்ட பரீட்சிப்புக்கள், மற்றும் பணிப்பாளர்கள், முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், மற்றும் முக்கிய பொறுப்புவாய்ந்த ஆட்கள் போன்றோரின் ஆளுகை மதிப்பீடுகள் போன்றவற்றினூடாக ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்தியது.
- படுகடன் வழங்கல்கள், மூலதன மாற்றங்கள், சொத்துடைமை பரிமாற்றல்கள், கிளை விரிவாக்கத் திட்டங்கள், இணை நிறுவனங்களின் உருவாக்கம் மற்றும் முக்கிய பொறுப்புவாய்ந்த ஆட்களுடன் தொடர்புடைய விடயங்கள் என்பவற்றை உள்ளடக்கி 1,121 ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிகள் வழங்கப்பட்டன.
- முன்மதிமிக்க மூலதனத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறிய அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகளுக்குட்பட்டிருந்த வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை பகிரங்கமாக வெளிப்படுத்தியதன் மூலம் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தியது.
- ஒழுங்குமுறைப்படுத்தல் விடயங்கள் மற்றும் துறை அபிவிருத்திகள் தொடர்பில் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், சபைகள், மூத்த முகாமைத்துவம், வெளிவாரி கணக்காய்வாளர்கள், தொழிற்துறை அமைப்புக்கள், மற்றும் சர்வதேச முகவராண்மைகள் போன்றவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட கிரமமான கலந்துரையாடல்களின் மூலம் ஆர்வலர் ஈடுபாட்டை வலுப்படுத்தியது.
- அங்கீகாரச் சான்றிதழ்களை வழங்குதல், வருடாந்த சான்றிதழ்களைப் புதுபித்தல், மற்றும் இணங்குவிப்பை உறுதிப்படுத்துவதற்கு தளத்திலான மற்றும் தளத்திற்கு வெளியிலான மேற்பார்வையை நடாத்துதல் போன்ற உள்ளடங்கலா பணத் தரகுத் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தலை வலுப்படுத்தியது.

### பணத்தரகுத் தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தல்

மத்திய வங்கியானது 2018இன் 1ஆம் இலக்க மற்றும் 2019இன் 1ஆம் இலக்க பணத்தரகு ஒழுங்குவிதிகளின் கீழ் பணத்தரகு துறையினை ஒழுங்குமுறைப்படுத்துகின்றது. மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் வகிபாகமானது உள்ளடக்குவது:

- தகைமையுடைய பணத்தரகுக் கம்பனிகளுக்கு அதிகாரமளித்தல் சான்றிதழ்களை வழங்குதல்
- அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர் கம்பனிகளுக்கான வருடாந்த சான்றிதல் கட்டணத்தை விதித்தல்
- வழிகாட்டல்கள், சுற்றறிக்கைகள் மற்றும் மேற்பார்வை பரீட்சிப்புக்கள் (தளத்திலான மற்றும் தளத்திற்கு வெளியிலான) ஊடாக இணங்குவித்தலைக் கண்காணித்தல்

[3] https://www.cbsl.gov.lk/authorized-financial-institutions/licensed-finance-companies
[4] https://www.cbsl.gov.lk/en/statistics/statistical-tables/financial-sector

# வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் பரிணாம வளர்ச்சியும் ஒழுங்கமுறைப்படுத்தல் இயக்கவாற்றலும்



வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் பரிணாம வளர்ச்சியானது, நீடித்து நிலைத்திருக்கக்கூடிய மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாப்பதில் இலங்கை மத்திய வங்கியின் நீண்டகால அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. ஏறத்தாழ நூற்றாண்டு காலமாக, நிதியியல் நிறுவனங்கள் துறையானது ஒரு குறிப்பிடத்தக்கப் பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளதுடன் போதியளவு சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத பிரிவினருக்குச் சேவையை வழங்குகின்ற அதேவேளை பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு ஆதரவளிக்கும் வகையில் பாரம்பரிய வங்கித்தொழில் முறைமைக்கு அப்பால்சென்று நிதியியல் பணிகளை வழங்குவதில் முக்கியப் பங்காற்றியது.

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் நிலைமாற்றமானது இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட உறுதிப்பாட்டு வழிமுறைகள், நிறுவனம்சார் அபிவிருத்திகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

### ஆரம்பகாலம் 1940 - 1970

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் தோற்றம் 1940-களில் தொடங்குகிறது. வங்கித்தொழில் துறையினால் போதுமானளவு செயற்படுத்தப்படாத கொடுகடன் கேள்விகளை நிறைவேற்றுவதற்காக நிதிக் கம்பனிகளின் எழுச்சியானது முறையான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் தொடக்கத்தைக் குறித்தது. இவ்வளர்ச்சிக் காலப்பகுதியில், முறையான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு இல்லாத நிலையில் இத்துறையானா் பாரியளவில் விரிவடைந்தது. இலங்கை மத்திய வங்கி மற்றும் அதன் வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 1950களில் தாபிக்கப்பட்ட போதிலும், நிதிக் கம்பனிகள் 1980 வரையில் முறைமைசார் மேற்பார்வையின் நோக்கெல்லைக்கு வெளியிலேயே இருந்தது.

**வங்கியின் வகிபாகம் >** நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை உறுதிசெய்தல்

1970-களின் பிற்பகுதி வரை நிலவிய இந்த ஒழுங்குமுறைப்படுத்தல் வெற்றிடமானது, ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிதிக் கம்பனிகளின் அதிகரிப்புக்கு வழிவகுத்தது. அவற்றுள் பல, குறிப்பாக 1977-க்கு முந்தைய காலகட்டத்தில் முறிவடைந்தன. இம்முறிவடைதல்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிதியியல் இடையீட்டினால் ஏற்படும் இடர்நேர்வுகளை எடுத்துக்காட்டியதோடு, வைப்பாளர்களைப் பாதுகாப்பதற்கும் பொதுமக்கள் நம்பிக்கையை பேணுவதற்கும் நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் முறையான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றின் அவசியத்தையும் வலுப்படுத்தின.

## முறையான ஒழுங்குமுறைப்படுத்தலின் அறிமுகம் - 1979-1999

### 1979ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டதை இயற்றுதல்

நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டமியற்றப்பட்டதன் மூலம் முக்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் மைல்கல் எட்டப்பட்டது. இது முதன்முறையாக நிதிகம் கம்பனிகள் மீது முறையான ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையை அறிமுகப்படுத்தியது. துறைசார்ந்த நடவடிக்கைகளைக் கண்காணித்தல், வைப்பாளர்களைப் பாதுகாத்தல் மற்றும் முன்மதிமிக்க ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெய்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு இச்சட்டமாது இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கட்டமைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தலையீட்டின் தொடக்கத்தைக் குறித்தது. தொடக்கத்தில், நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பானது இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தை இயற்றுதல்

இதன் விளைவாக, நிதிக் கம்பனிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு மாற்றாக நிதிக் கம்பனிகள் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டதுடன் முன்மதிமிக்க ஒழுங்குவிதிகளை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் அதிகாரத்தை மேம்படுத்துவதன் மூலம் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை நவீனப்படுத்தியது. இச்சட்டத்தைத் தொடர்ந்து, 1988ஆம் ஆண்டில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைக்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களமென்ற பிரத்தியேகத் திணைக்களமொன்றை தாபித்தது. வங்கிகளின் மேற்பார்வையிலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைச் செயன்முறையின் இந்நிறுவனரீதியல் பிரித்தமையானது செயற்திறன்மிக்க துறைசார் குறித்த மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பு போன்றவற்றுக்கு வழிவகுத்தது.

### 1980ஆம் ஆண்டில் நிதிக் கம்பனிகளின் முன்னெடுப்புக்களை மறுசீரமைத்தல்

1980இன் பிற்பகுதியில், மோசமான ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளின் காரணமாக, பல்வேறு நிதிக் கம்பனிகள் கடுமையான நிதிசார் பிரச்சனைகளை எதிர்கொண்டன. அதற்கு பதிலளிக்கும் வகையில், இத்துறையை முறைப்படுத்துவதற்கு மறுசீரமைப்பு முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. 1988ஆம் ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 72 ஆக விளங்கிய செயற்பாட்டிலுள்ள நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை, ஒழுங்குமுறைப்படுத்தல் தலையீடு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகளின் மூலம் 1990ஆம் ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 40 ஆகக் குறைக்கப்பட்டது.

## ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கெல்லை, ஒழுங்குமுறைப்படுத்தல் சீர்திருத்தங்கள் மற்றும் உறுதிப்பாட்டு வழிமுறைகள் போன்றவற்றின் விரிவாக்கம்: 2000 - 2025

### 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதி குத்தகைக்குவிடல் சட்டத்தை இயற்றுதல்

2000ஆம் ஆண்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் புதிய வகைகளை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் காப்பினைக் கொண்ட காலகட்டமாக அமைந்தது. இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கெல்லையின் கீழ் நிதி குத்தகை வசதிகளை வழங்கும் நிறுவனங்களை கொண்டுவருவதற்காக நிதிக் குத்தகைக்குவிடல் சட்டமியற்றப்பட்டது.

### 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டதை இயற்றுதல்

முன்பிருந்த நிதிக் கம்பனிச் சட்டத்திற்கு பதிலாக, நிதித் தொழில் சட்டத்தினை இயற்றியதன் மூலம் குறிப்பிடத்தக்க சீர்திருத்தம் நிகழ்ந்தது. நிதித் தொழில் சட்டமானது நிதிக் கம்பனிகளுக்கான உரிமத்தை வழங்குதல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைசெய்தல் போன்றவற்றை மேலும் வலுப்படுத்தியதுடன் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிதித் தொழிலை விசாரணைசெய்து வழக்குத்தொடர்வதற்கான மேம்பட்ட அதிகாரத்தையும் வழங்கியது. இலங்கையில் நிதித் தொழிலை ஆளுகைசெய்யும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை இச்சட்டவாக்கம் நவீனப்படுத்தியது.

### வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைவு பற்றிய முதல் நிகழ்ச்சித்திட்டம்

இத்துறையில் உள்ள கட்டமைப்பு ரீதியான நலிவடைதல்கள் மற்றும் பாதிப்புகள் குறித்த கரிசனைகள் அதிகரித்து வரும் நிலையில், மத்திய வங்கியானது 2014 சனவரியில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பதற்கான முதல் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதேநேரத்தில், துறையானது 58 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களை உள்ளடக்கியிருந்தது. இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2020 நவெம்பர் மாத இறுதிக்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் எண்ணிக்கை 42 ஆகக் குறைக்கப்பட்டது.

### முதனிலை வணிகர் கம்பனிகளின் மேற்பார்வையை வலுப்படுத்தல்

முதனிலை வணிகர் கம்பனிகளுக்கு ஏற்புடைய மேற்பார்வை கட்டமைப்பை வலுப்படுத்தி மேற்பார்வைசெய்யும் நோக்குடன், 2016 யூன் 03 அன்று நடைமுறைக்குவரும் வகையில், இலங்கை மத்திய வங்கியானது 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) போன்றவற்றின் ஏற்பாடுகளின் கீழ் முதனிலை வணிகர் கம்பனிகளை மேற்பார்வைசெய்தல், பரீட்சித்தல் மற்றும் விசாரணை செய்தல் போன்ற செயற்பாடுகளை பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு மாற்றியது.

### உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் மேற்பார்வை

இதற்குமேலதிகமாக, இலங்கை மத்திய வங்கியானது 2018 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் மேற்பார்வையைத் தொடங்கியது.

### வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பற்றிய இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம்

அதனைத் தொடர்ந்து, 2020ஆம் ஆண்டில் வலுவான மற்றும் மேலும் நிலையான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் துறையைப் பேணி வளர்க்கும் குறிக்கோளுடன், இலங்கை மத்திய வங்கியானது வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறைகான ஒருங்கிணைப்பு முதன்மைத் திட்டம் என்ற இரண்டாவது ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மூலதனப் பற்றாக்குறையுள்ள நிதிக் கம்பனிகள், ஒரே குழுவில் தொழிற்படும் நிறுவனங்கள், மற்றும் தனியான சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் போன்றவற்றை ஒருங்கிணைப்பதில் முதன்மைத் திட்டத்தின் கட்டம் I கவனம்செலுத்தியது. கட்டம் I நிறைவடைந்ததைத்தொடர்ந்து, நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 2025இறுதியளவில் 32ஆக வீழ்ச்சியடைந்தது. முதன்மைத்திட்டத்தின் கட்டம் II இற்கான திருத்தப்பட்ட கட்டமைப்பானது தற்போது தொழிற்பாட்டிலுள்ளதுடன் இதன் செயலாக்கக் காலம் 2025 தொடக்கம் 2028 வரை நீடித்துள்ளது.

### துறைசார் தாக்குபிடிக்கும் தன்மையை மேம்படுத்தல்

கடந்தகால நிதியியல் நெருக்கடிகள் மற்றும் நிறுவனம் முறிவடைதலிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையாகக் கொண்டு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினுள் நிறுவன ஆளுகை, மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக, மத்திய வங்கியானது ஒழுங்குமுறைப்படுத்தல் பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் அறிமுகப்படுத்தியது.

இவ் வழிமுறைகள் சபை மேற்பார்வை, ஆளுகை நடைமுறைகள், மற்றும் உள்ளக நெருக்கடிகள் போன்றவற்றின் குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கிய நலிவடைதலுக்கு தீர்வுகண்ட அதேவேளை பொறுப்புவாய்ந்த தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக முக்கியப் பொறுப்புவாய்ந்த ஆட்களுக்கான தகுதி மற்றும் பொருத்தமான தகைமைகளையும் வலுப்படுத்தின. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையில் தாக்குபிடிக்கும்தன்மையையும் அதிர்வினை உள்ளீர்க்கும் இயலாற்றலையும் மேம்படுத்துவதற்காக, மைய மூலதனம், மூலதனப் போதுமாந்தன்மை, கொடுகடன், திரவத்தன்மை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புகள் வடிவமைக்கப்பட்டன. 2025ஆம் ஆண்டின் இறுதியளவில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையானது மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட 32 நிதிக் கம்பனிகள், 1 சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்குவீடும் கம்பனிகள், 4 உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் 5 முதனிலை வணிகர் கம்பனிகளைக் கொண்டிருந்தது.

### அதிகாரமளிக்கப்படாத வைப்பேற்றல் மற்றும் நிதித்தொழில் நடவடிக்கைகளை ஒழித்தல்

இந்நடவடிக்கைகளைக் கண்டறிதல், தடுத்தல் மற்றும் அவற்றுக்கு எதிராக நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற நோக்கங்களுடன் அதிகாரமளிக்கப்படாத வைப்பேற்றல் மற்றும் நிதித்தொழில் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய விசாரணைகளை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் நடாத்தியதோடு இதன்மூலம் பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கின்றது.

### சீர்குலைவிலிருந்து நிலையுறுதிப்பாட்டினை அடைதல்

இல ங்கையின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையின் பரிணாமம், *சுபீட்சத்திற்கான முற்தேவைப்பாடொன்றாக* உறுதிப்பாட்டினை அடைவதில் இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ள நீடித்த அபிமானத்தை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. தொடக்கத்தில், கொடுகடன் வழங்குநர்களின் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத தோற்றப்பாட்டிலிருந்து, துறையானது நிதியியல் முறைமையின் நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த தூணாக நிலைமாற்றமடைந்துள்ளது. தொடர்ச்சியான சட்டவாக்கச் சீர்திருத்தங்கள் மேற்பார்வை இயலாற்றலை வலுப்படுத்தி, ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களை மேம்படுத்தியுள்ளதோடு உரியகாலத்தில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தலையீட்டை இயலச்செய்துள்ள அதேவேளை ஒருங்கிணைப்பு முன்னெடுப்புக்கள் கட்டமைப்புசார் பாதிக்கப்படக்கூடியதன்மைகளை தணித்துள்ளதுடன் துறையின் ஒட்டுமொத்த ஆற்றல்வாய்ந்த தன்மையையும் மேம்படுத்தியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியானது *"சுபீட்சத்திற்கான உறுதிப்பாடு"* என்ற தொனிப்பொருளின் கீழ் அதன் 75ஆவது ஆண்டுநிறைவினைக் கொண்டாடும் நேரத்தில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையானது ஒழுங்குமுறைப்படுத்தல் தொலைநோக்கு, நிறுவனம்சார் வலுப்படுத்தல், மற்றும் முனைப்புமிக்க மேற்பார்வை போன்றன எவ்வாறு நிலைபெறத்தக்க நிதியியல் உறுதிப்பாட்டிற்கு பங்களிக்கின்றன என்பதற்கு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை சிறந்த சான்றாக விளங்குகின்றது. முன்னோக்கிப் பார்க்கையில், தொடர்ச்சியான ஒழுங்குமுறைப்படுத்தல் பதிலளிப்பு, இடர்நேர்வு அடிப்படையிலான மேற்பார்வை, மற்றும் முன்னோக்கிய கொள்கை வழிமுறைகள் போன்றன அனைவரையுமுள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்தி, நிதியியல் சேவைகளை விரிவாக்கல், மற்றும் தேசிய சுபீட்சத்தை உறுதிப்படுத்தும் அதேவேளை நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டைப் பாதுகாக்கின்றது.

**ஒழுங்குமுறைப்படுத்தப்படாத கொடுகடன் சூழலிலிருந்து நன்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் தூணாக உருவெடுப்பதில், ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையும் நிறுவனரீதியிலான வலுவூட்டுதலும் முறைமை ரீதியான உறுதிப்பாட்டை எவ்வாறு மேம்படுத்துகின்ற என்பதை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறை எடுத்துக்காட்டுகின்றது.**

## நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் நிதியியல் அறிவு

நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட மற்றும் வலுவான ஆளுகைக் கட்டமைப்பினுள் முக்கிய ஆர்வலர்களுடனான நெருங்கிய கூட்டிணைப்பில் இலங்கை மத்திய வங்கியானது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் செயற்திறன்மிக்க, உரியகால மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்தியது. இலங்கை மத்திய வங்கியினுள் தாபிக்கப்பட்ட தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயச் செயலகம் முறைமைசார் கண்காணிப்பையும் நடைமுறைப்படுத்தல் செயன்முறையின் மதிப்பீட்டையும் காலாண்டு அடிப்படையில் மேற்கொண்டு, பொறுப்புக்கூறலையும் உபாயக் குறிக்கோள்களுடன் அணிசேர்ந்திருப்பதையும் உறுதிப்படுத்தியது.

"நிதியியல் அறிவு மற்றும் இயலாற்றல் விருத்தி" என்பது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் முக்கிய தூணாக விளங்குகின்றது. இப்பின்னணியில், குடித்தொகையின் அனைத்து பிரிவுகளிடையேயும் நிதியியல் இயலாற்றலை உயர்த்துவதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய, கட்டமைக்கப்பட்ட, மற்றும் தேசியளவில் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பு போன்றவற்றை நிறுவுவதற்கு இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024-2028) 2024 நடுப்பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டது. வழிகாட்டலின் நடவடிக்கைத் திட்டமானது தற்போது தொழிற்படுத்தப்பட்டு வருவதோடு, இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகளையும், ஆர்வலர்களினால் வழிநடத்தப்படும் ஒருங்கிணைந்த முன்னெடுப்புகளையும் கட்டம் கட்டமாகவும் முறையாகவும் நடைமுறைப்படுத்துவதற்கான உபாய ரீதியிலான பணிப்புரையை வழங்குகிறது.

### நிதியியல் அறிவு வழிகாட்டலின் கீழான நிதியியல் அறிவு முன்னெடுப்புக்கள்

நிதியியல் அறிவு வழிகாட்டலின் கீழ், களனிப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டதிலிருந்தான நிதியியல் ஆதரவு போன்றவற்றுடன் நிதியியல் அறிவு பாடவிதானமானது வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு 2025 யூலை 03இல் முறையாக அங்குராா்ப்பணம் செய்யப்பட்டது. பரந்தளவிலான அணுகல், அனைவரையும் உள்ளடக்குதல், மற்றும் சமத்துவமான சென்றடைதல் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கு பாடவிதானமானது இலங்கை மத்திய வங்கியின் இணையதளத்தினூடாக மூன்று மொழிகளிலும் பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்யப்பட்டதோடு இதன்மூலம் பன்முக சமூக பொருளாதார பின்னணிகளைச்சேர்ந்த தனிப்பட்டவர்கள் பொறுப்பவாய்ந்த நிதியியல் தீர்மானங்களை எடுப்பதற்கு அதிகாரமளிப்பட்டது.

### நிதியியல் அறிவுசார்ந்த காணொளித் தொடர்கள்







அணுகக்கூடிய மற்றும் ஈடுபடுகின்ற டிஜிட்டல் உள்ளடக்கத்தினூடாக முக்கிய கற்றல் பெறுபேறுகளை வலுவூட்டும் குறிக்கோளுடன், நிதியியல் அறிவு பாடவிதானத்துடன் அணிசேர்ந்து யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை நிதியியல் ஆதரவுடன் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் இரு தொனிப்பொருளிலான நிதியியல் அறிவு காணொளித் தொடர்களை உருவாக்கியது. பரவலாகக் காணப்படும் நிதியியல் இடர்நேர்வுகள் மற்றும் நடத்தைசார் சவால்கள் குறித்து விழிப்பூட்டலை உயர்த்துவதன் மூலம் பொது மக்களிடையே காணப்படும் நிதியியல் அறிவிலுள்ள முக்கிய இடைவெளிகளை நிவர்த்திசெய்வதற்கு இத்தகைய காணொளித் தொடர்கள் வடிவமைக்கப்பட்டன.

குறிப்பாக, முறைசாரா கடன்பாடுகளைச் சார்ந்திருத்தல், முன்மதியற்ற செலவின முறைகள், போதியளவற்ற நிதியியல் திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத வைப்பேற்றல் மற்றும் பிரமிட் திட்டங்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் ஆகியவற்றில் சார்ந்திருப்பது போன்ற சிக்கல்கள் தொடர்பில் இந்த உள்ளடக்கம் கவனம்செலுத்துகின்றதோடு இதன்மூலம் தகவலறிந்த தீர்மானத்தை மேற்கொள்ளுதலையும் பொறுப்புவாய்ந்த நிதியியல் நடத்தையையும் ஊக்குவிக்கின்றது.

### நிதியியல் அறிவு மாத நிகழ்ச்சித்திட்டம்

நிதியியல் அறிவு வழிகாட்டல் நடைமுறைப்படுத்தலின் கீழ் குறிப்பிடத்தக்க மைல்கல்லொன்றாக, "நிதியியல் அறிவு மாதம் - 2025" இனை 2025 செத்தெம்பர் 10 அன்று முக்கிய ஆர்வலர்களுடனான ஒத்துழைப்பில் இலங்கை மத்திய வங்கியானது வெற்றிகரமாக அங்குராா்ப்பணம் செய்து, நாட்டில் நிதியியல் விழிப்பூட்டலையும் வலுப்படுத்தலையும் மேம்படுத்தியது. 2025 செத்தெம்பர் மற்றும் ஒத்தோபர் மாதங்களில், மாத்தளை, கிளிநொச்சி, அனுராதபுரம், பதுளை, திருகோணமலை மற்றும் காலி ஆகிய இடங்களில் "பின் லிட் எக்ஸ்போ - 2025" என்ற தலைப்பில் பிராந்திய நிதியியல் அறிவு தின நிகழ்ச்சித்திட்டங்கள் 30,000இற்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன் நடத்தப்பட்டன.

### கொடுகடன் ஆலோசனை மையம்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மத்திய வங்கிச் சட்டத்துடன் இசைந்துசெல்லும் வகையில் இலங்கை வங்கிகள் அமைப்புடனான கூட்டிணைவில் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுகின்ற கொடுகடன் ஆலோசனை மையமானது அதன் மறுசீரமைப்பினைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியுள்ளதோடு நிதியியல் அறிவு, வசதிக்குட்படுத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு போன்றவற்றை வலுப்படுத்துவதற்கு பங்களித்து வருகின்றது. குறிப்பாக கொடுகடன் கட்டுப்பாடுகளையும் நிதியியல் அழுத்தத்தையும் எதிர்கொள்ளும் தனிநபர்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் போன்றவற்றுக்கு கொடுகடன் ஆலோசனை மையம், இலக்கிடப்பட்ட நிதியியல் ஆலோசனையையும் படுகடன் தீர்மான ஆதரவினையும் வழங்குகின்ற அதேவேளை நிதியியல் திட்டமிடல், கொடுகடன் முகாமைத்துவம் மற்றும் நிதி அணுகல் போன்றன தொடர்பான வழிகாட்டலையும் வழங்கின்றது.

2025இல், கொடுகடன் ஆலோசனை மையமானது பிரதானமாக செயற்படா நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளிலிருந்தான 1,257 விசாரணைகளை கையாண்டுள்ளதுடன் மத்தியஸ்தம், நலன் பிணக்குத் தீர்த்தல் மற்றும் கடன் மீள்அட்டவணைப்படுத்தல் வழிகாட்டல் ஆகியவற்றின் மூலம் ஏறத்தாழ

75சதவீத விசாரணைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது. எதிர்வரும் காலத்தில், பயிற்சி பெற்ற கொடுகடன் ஆலோசகர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலமும் மக்களை சென்றடைவதை மேம்படுத்துவதன் மூலமும் பிராந்திய மட்டத்திற்கு கொடுகடன் ஆலோசனை மைய பணிகளை விரிவுபடுத்தலானது தனிப்பட்டவர்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதியியல் வழிகாட்டலை பரந்தளவிலான மற்றும் உரிய நேரத்திலான அணுகலை இயலச்செய்யும்.

### நிதியியல் அறிவு மற்றும் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதில் பிராந்திய அலுவலகங்களின் வகிபாகம்

2025இல், பிராந்திய அலுவலகங்கள் நாடளாவிய ரீதியில் 635இற்கு மேலான நிதியியல் அறிவு விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி, ஏறத்தாழ 70,000 பங்கேற்பாளர்களை சென்றடைந்ததோடு, பரந்த அடிப்படையிலான நிதியியல் வலுப்படுத்தலுக்கான மத்திய வங்கியின் ஈடுபாட்டை வலுப்படுத்தியது.

### பிராந்திய மன்றங்களை நடாத்துதல்

ஆண்டு காலப்பகுதியில் மூன்று பிராந்திய மன்றங்கள் கூட்டப்பட்டு, பிரதேச மட்டத்தில் நிதியியல் அறிவினையும் நிதியியல் வசதிக்குட்படுத்தலையும் முன்னேற்றுவதற்கான மத்திய வங்கியின் உபாயரீதியிலான ஈடுபாட்டை எடுத்துக்காட்டியதுடன் நாடளாவிய ரீதியில் மத்திய வங்கியின் நிறுவனம்சார் பிரசன்னத்தை வலுப்படுத்தியது மேலும் வலுப்படுத்தின இம்மன்றங்கள் முறையே மாத்தறை, நுவரெலியா மற்றும் மாத்தளையிலுள்ள பிராந்திய அலுவலகங்களுடனான நெருங்கிய ஒத்துழைப்பில், ஹம்பாந்தோட்டை, நுவரெலியா மற்றும் மாத்தளையில் வெற்றிகரமாக இடம்பெற்றன.

முக்கிய அரசாங்க நிறுவனங்கள், உரிமம்பெற்ற வங்கிகள், பொலிஸ், ஆயுதப் படைகள் போன்றவற்றிலிருந்தான சிரேஷ்ட பிரதிநிதிகள் மற்றும் முக்கிய பிராந்திய முயற்சியாண்மையாளர்கள் போன்றோருடன் மத்திய வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் இணைந்து ஆளுநரும் அனைத்து மன்றங்களிலும் கலந்துகொண்டனர்.

### தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் கட்டம் II இனை நோக்கி

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் கட்டம் I இனை வெற்றிகரமாக நிறைவுசெய்ததைத் தொடர்ந்து, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் கட்டம் II இனை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் வகையில் தொடர்ச்சியான ஆயத்த முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பின்னணியில், இலங்கை மத்திய வங்கியானது அதன் உள்நாட்டு நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பிலிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவி ஆகிய இரண்டையும் பெற்றுக்கொண்டது.

i. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் கட்டம் I இன் அனைத்தையுமுள்ளடக்கிய கால இறுதி மதிப்பீட்டை நடாத்துவதற்கு

ii. வசதிக்குட்படுத்தல் அளவீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய ரீதியாக பிரதித்தித்து வப்படுத்துகின்ற நிதியியல்

iii. சான்று அடிப்படையிலான வடிவமைப்பு மற்றும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் கட்டம் II இனை உருவாக்குதல் போன்றவற்றை வலுப்படுத்துவதற்கு சிறப்பியபுவாய்ந்த தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு இந்த ஆதரவு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**இலங்கை மத்திய வங்கிக்கும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பிற்குமிடையிலான உள்நாட்டு நடைமுறைப்படுத்தல் செயற்றிட்டம்** வரைபடம் - 10




உலகளவில் ஒப்பிடத்தக்க மத்திய வங்கித்தொழில் நிறுவனங்களினால் பின்பற்றப்படும் சர்வதேச நடைமுறைகளுடன் அணிசேர்ந்தும் நிதியியல் வசதிக்குட்படுத்தலை முன்னேற்றுவதில் இலங்கை மத்திய வங்கியின் உபாய ரீதியிலான வகிபாகத்தை மேலும் வலுப்படுத்தியும் அதன் முக்கிய பொறுப்பாணையையும் தொழிற்பாட்டு பொறுப்புக்களையும் மிகவும் துல்லியமாக பிரதிபலிப்பதையும் நோக்காகக் கொண்டு, இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது 2026 சனவரி 01 தொடக்கம் நிதியியல் வசதிக்குட்படுத்தல் திணைக்களமென முறையாக மீளப்பெயரிடப்பட்டது.

# நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

வரைபடம் - 11

**உங்களது நிதியியல் உரிமைகளைப் பாதுகாத்தல்**




2025ஆம் ஆண்டில், இலங்கை மத்திய வங்கியானது மேற்பார்வை நிறைவேற்றுதல், முறைப்பாட்டினைக் கையாளுதல், விசாரணைகள், மற்றும் பொதுமக்களுடனான ஈடுபாடு போன்றவற்றுக்கு முக்கியத்துவமளித்து, 2023ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம்செலுத்தியது. ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு முயற்சிகள் சந்தை நடத்தை மேற்பார்வையினை வலுப்படுத்தல், நிதியியல் வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்கு பதிலிறுத்தல், தடைசெய்யப்பட்ட திட்டங்களை இனங்காணுதல், மற்றும் இலக்கிடப்பட்ட அணுகுமுறையினூடாக வாடிக்கையாளர் விழிப்புணர்வை மேம்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தன.

### சந்தை நடத்தை மேற்பார்வை

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதை மதிப்பிடுவதற்கு மத்திய வங்கியானது ஆண்டுக்காலப்பகுதியில் நான்கு முழுமையான சந்தை நடத்தைப் பரீட்சிப்புக்கள் மற்றும் மூன்று தொனிப்பொருள் சார்ந்த மீளாய்வுகளைகளையும் மேற்கொண்டது. இம்மேற்பார்வை நடவடிக்கைகள் நுண்பாக கணக்குகள், டிஜிட்டல் நிதியியல் உற்பத்திகள், மற்றும் கொடுகடன் அட்டைத் தொழிற்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தன. தொழிற்பாட்டு ரீதியிலான இடைவெளிகள், வெளிப்படுத்துகை நடைமுறைகளின் நலிவடைதல்கள், முறைப்பாட்டு கையாளுதல் செயன்முறையிலுள்ள குறைபாடுகள், மற்றும் நடத்தையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் போன்றவற்றை இனங்காண்பதற்கு இத்தகைய பரீட்சிப்புக்கள் மேற்பார்வையாளர்களை இயலச்செய்துள்ளது. இனங்காணப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கான குறித்த மேற்பார்வை பணிப்புரைகள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளுடன், பரீட்சிப்பு முடிவுகள் நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டன.

### நிதியியல் வாடிக்கையாளர் முறைப்பாட்டினைக் கையாளுதல்

நிதியியல் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை கையாளுதல் மற்றும் தீர்மானமெடுத்தலை வலுப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு ரீதியிலான முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2025 காலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கியானது 5,610 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொண்டது.

அவற்றில் 4,252 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு விடயங்களுடன் தொடர்புபட்டவையாகும். இதில், ஆண்டுகாலப்பகுதியில் 2226 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்ட அதேவேளை 2025 இறுதியில் 2,026 வழக்குகள் மீளாய்விலிருந்தன. நிறுவனம்சார் பதிலிறுப்புக்களை உறுதிப்படுத்தல், நிதியியல் பணி வழங்குநர்களிடமிருந்தான தெளிவுபடுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுதல், திருத்த நடவடிக்கைகளை வசதிப்படுத்தல், நிவாரணக் கடப்பாடுகளுடன் இணங்குவதை உறுதிசெய்தல் போன்றன தொடர்பில் முறைப்பாட்டு கையாளுதல் முயற்சிகள் கவனம்செலுத்தின. முறைப்பாடுகளின் இவ் அதிகரிப்பானது பொதுமக்களிடையே அதிகரித்த விழிப்புணர்வையும் இலங்கை மத்திய வங்கியின் முறைப்பாட்டு தீர்மானப் பொறிமுறைகளின் பயன்பாட்டையும் பிரதிபலித்தது.

## பொதுமக்கள் விழிப்பூட்டல்

இலக்கு வைக்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினூடாக நிதியியல் இடர்நேர்வுகள் குறித்த பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான தொழிற்பாட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாடசாலைகள், நிர்வாகப் பிரிவுகள் மற்றும் ஆயுதப் படைகள் முழுவதும், ஒருங்கிணைக்கப்பட்ட விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் கல்விசார் வளங்களைப் பரவலடையச் செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரமிட் எதிர்ப்பு வாரம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கு, வாடிக்கையாளர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கு, மற்றும் மோசடியான நிதியியல் திட்டங்களை இனங்கண்டு தவிர்ப்பதற்கான பொதுமக்கள் இயலாற்றலை வலுப்படுத்துவதற்கு ஆண்டுகாலப்பகுதியில் 43 பொதுமக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## வாடிக்கையாளர் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனம்சார் அபிவிருத்தியும் சர்வதேச ஒத்துழைப்பும்

தொழிற்பாட்டு மேம்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், மத்திய வங்கியானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன், தற்போதுள்ள நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு செயன்முறைகள் குறித்து விரிவான மதிப்பீட்டை நடாத்தியது. இந்த மதிப்பீடானது மேற்பார்வை, முறைப்பாடு கையாளுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறைகளிலுள்ள தொழிற்பாட்டுக் குறைபாடுகளைக் கண்டறிவதில் கவனம் செலுத்தியது. ஆண்டுகாலப்பகுதியில், மத்திய வங்கியானது பன்னாட்டு நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்கமைப்பில் முழு உறுப்பினராகவும் விளங்குவதோடு, அன்றாட சந்தை நடத்தை மேற்பார்வையுடன் தொடர்புடைய நடைமுறை மேற்பார்வைக் கருவிகள், சக ஊழியர்களின் அனுபவங்கள் மற்றும் சர்வதேச வழக்கு ஆய்வுகளை தொழிற்பாட்டு ஊழியர்கள் அணுகுவதற்கு வழிவகுத்தது.

2025-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கைகள் சந்தை நடத்தையை மேற்பார்வையிடுவதற்கும், நிதியியல் வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளுவதற்கும், தடைசெய்யப்பட்ட திட்டங்களை விசாரணை செய்வதற்கும், பொதுமக்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்வதற்கும் மத்திய வங்கியின் இயலாற்றலை வலுப்படுத்தின. இந்த நடவடிக்கைகள், மேம்பட்ட மேற்பார்வை பதிலிறுப்பு, அதிகரித்த வாடிக்கையாளர் நம்பிக்கை, மற்றும் நிதியியல் துறை முழுவதும் நிதியியல் பாதுகாப்புத் தேவைப்பாடுகளை மிகவும் செயற்றிறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்துவதற்கும் பங்களித்தன.

### 2025இன் முக்கிய பண்புகள்

- மேற்பார்வை, முறைப்பாட்டுத் தீர்வு, விசாரணைகள் மற்றும் பொதுமக்கள் ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குமுறைப்படுத்தல்களின் (2023) நடைமுறைப்படுத்தல் வலுப்படுத்தப்பட்டது.
- நான்கு முழு அளவிலான பரீட்சிப்புக்கள் மற்றும் மூன்று தொனிப்பொருள்சார்ந்த மீளாய்வுகள் (நுண் கணக்குகள், டிஜிட்டல் உற்பத்திகள், கொடுகடன் அட்டைகள்) நடாத்தப்பட்டமையானது திருத்தமான மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிவகுத்தது.
- 5,610 முறைப்பாடுகள் பெறப்பட்டன (அவற்றில் 4,252 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பானவை) அவற்றுள் 2,226 தீர்க்கப்பட்டன, மீதமுள்ளவை ஆண்டு இறுதியில் மதிப்பாய்வில் உள்ளன.
- வாடிக்கையாளர் உரிமைகள் மற்றும் நிதியியல் இடர்நேர்வுகள் குறித்த 43 நிகழ்ச்சித்திட்டங்களுடன், பிரமிட் எதிர்ப்பு வாரம் உட்பட, இலக்கு வைக்கப்பட்ட பொது விழிப்புணர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் வாடிக்கையாளர் பாதுகாப்பு செயன்முறைகளின் தொழிற்பாட்டு மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டதோடு மேற்பார்வை, முறைப்பாடு கையாளுதல் மற்றும் நடைமுறைப்படுத்தல் இடைவெளிகள் கண்டறியப்பட்டன.






# நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்தல்

## தீர்மான அதிகாரம்

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களில் பொதுமக்கள் நம்பிக்கையைப் பேணுவதற்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கும் வலுவானதும் நம்பகத்தன்மைமிக்க தீர்மானக் கட்டமைப்பு அவசியமாகின்றது. மத்திய வங்கியானது 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அதன் செயற்றிறன்மிக்க தொழிற்பாட்டை உறுதிசெய்கின்ற அதேவேளை மத்திய வங்கியினால் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தீர்மான அதிகாரத்தை வழங்கியுள்ளது. இது இலங்கையின் நிதியியல் பாதுகாப்பு வலையமைப்பினையும் தீர்மானக் கட்டமைப்பையும் வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க மைற்கல்லை அடைந்துள்ளது.

2025இல், திட்டமிடல், நிறுவனம்சார் தயார்படுத்தல்நிலை மற்றும் ஆர்வலர் விழிப்பூட்டல் போன்றவற்றில் குறித்து கவனம்செலுத்தி, கட்டமைப்பின் தொழிற்பாட்டிற்கு கொண்டுவருவதில் மத்திய வங்கியானது தொடர்ந்தும் கவனம்செலுத்தியது. நியதிச்சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கமைவாக இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டுகாலப்பகுதியில், மத்திய வங்கியானது செயற்றிறன்மிக்க தீர்மானத்தை நிறைவேற்றுவதில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிதியியல் துறை உறுதிப்பாடு மற்றும் சீர்திருத்தங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொண்டது. திட்டமிடல் முறைகளை வலுப்படுத்துவதற்கும், ஊழியர் இயலாற்றலை மேம்படுத்துவதற்கும், அத்துடன் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுடன் இலங்கையின் தீர்மானக் கட்டமைப்பை மேலும் அணிசேர்ந்திருத்தல் போன்றவற்றுக்கு மேலே குறிப்பிட்ட தொழில்நுட்ப உதவி பங்களித்தது.

2025 ஆண்டுகாலப்பகுதியில், பொருத்தமான உபாயங்களைக் கண்டறிதல், தொழிற்பாட்டு மற்றும் நிதியியல் சாத்தியவளத்தை மதிப்பீடுசெய்தல், சாத்தியமானத் தடைகளைக் கண்டறிதல் போன்றவற்றில் கவனம் செலுத்தி பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் வகையில் மத்திய வங்கியானது நிறுவனம்சார் குறித்த தீர்மானத் திட்டங்களை உருவாக்கி, அதன்மூலம் நிதியியல் முறைமையின் பல்வேறு பிரிவுகளிடையிலான தீர்மானத் தயார்படுத்தலை மேம்படுத்தியது.

உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானத் தூண்டுதல்களின் உருவாக்குதலைத் தொடர்ந்து, 2025இல் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான தீர்மானத் தூண்டல்களை மத்திய வங்கி நிறைவுசெய்தது. வங்கித்தொழில் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) பிரயோகத்துடனான ஒத்திசைவுடன், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுடன் தொடர்புடைய தீர்மான நடவடிக்கைகளின் தொடக்கத்திற்கான குறிப்பாக, வெளிப்படையான மற்றும் உரிய கால அடிப்படையொன்றை வழங்குவதை இத்தூண்டல்கள் நோக்காகக்கொண்டுள்ளன.

வங்கித்தொழில் சட்டத்தின் 15ஆம் பிரிவின் பிரகாரம், 2024 ஒத்தோபர் 03 அன்று தாபிக்கப்பட்ட நிதியியல் உறுதிப்பாட்டு நிதியம் 2025 காலப்பகுதியில் தொடர்ந்தும் தொழிற்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும். அடுத்தடுத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளினூடாக நிதியத்தை உருவாக்குவதற்கான மேலதிக நிதியிடலை வழங்கும் உடன்படிக்கையுடன் ரூ.1,000 மில்லியன் கொண்ட ஆரம்ப நிதியத்தை நிதி அமைச்சு ஒதுக்கீடுசெய்தது.

2025 காலப்பகுதியில், மத்திய வங்கியானது சுயாதீன தொழில்சார் மதிப்பீட்டாளர்களின் குழுவை நியமித்ததுடன் நிர்வாகிகள் குழுவை நியமிப்பதற்கான செயன்முறையைத் தொடங்கிவைத்ததோடு இதனூடாக ஏதேனும் தீர்மான நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கான மத்திய வங்கியின் தொழிற்பாட்டு தயார்நிலையை வலுப்படுத்தியது.

உரிமம்பெற்ற வங்கிகள், மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள், உரிமம்பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபைகளின் தலைவர்கள், மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை இலக்கு வைத்து, வங்கித்தொழில் சட்டத்தின் தீர்மானக் கட்டமைப்பில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் தொடரினை மத்திய வங்கி நடாத்தியது. இதற்குமேலதிகமாக, உரிமம்பெற்ற வங்கிகளின் தொடர்புடைய அலுவலர்களுக்காக தீர்மானத் திட்டமிடலுடன் தொடர்புடைய பணிப்புரைகள் மற்றும் தரவு வார்ப்புருக்கள் தொடர்பாக நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தியது.

## இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டம்

இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டமானது நாட்டினுடைய பிரதான நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பொன்றாக தொடர்ந்தும் தொழிற்பட்டது. 2025 ஆண்டுகாலப்பகுதியில், இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் மற்றும் நிறுவனம்சார் இயலாற்றலை வலுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் தொடங்கி வைக்கப்பட்டன.

2024இல் தொடங்கப்பட்ட உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தினைத் 2025ஆம் ஆண்டில், மத்திய வங்கியானது தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தியது. ஆண்டிற்கு இலக்கிடப்பட்ட செயலாற்றத்தின் அடிப்படையிலான நிலைமைகளின் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இச்செயற்றிட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற கூட்டுக் கடன் தொகைகள் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ஐ.அ.டொலர் 130 மில்லியனாக அதிகரித்தது.

மேலும், இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்திற்கான நீண்டகால பொது விழிப்புணர்வு உபாயத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் பொருட்டு, 2025ஆம் ஆண்டில் இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டம் குறித்த பொதுமக்கள் விழிப்புணர்வின் அளவினை அளவிடுவதற்காக நாடளாவிய ரீதியிலான அடிப்படை அளவீடொன்று நடாத்தப்பட்டது.

இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தில் பொதுமக்கள் விழிப்புணர்லை மேம்படுத்தும் நோக்கத்துடன், “இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டம் மற்றும் வைப்பு காப்புறுதி காப்பீட்டுடன் உறுப்பினர் நிலையைக் காண்பித்தல்” தொடர்பில் 2025 திசெம்பர் 15 அன்று இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் உறுப்பினர் நிறுவனங்களுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன.

மேலும், நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ், கொள்கை சார்ந்த மேம்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் சர்வதேச வைப்பு காப்புறுதியாளர் அமைப்பினால் வெளியிடப்பட்ட செயற்றிறன்மிக்க வைப்பு காப்புறுதி முறைமைகளுக்கான முக்கிய கோட்பாடுகளுடன் இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்துடன் அணிசேர்வதற்கும் வழிமுறைகள் எடுக்கப்பட்டன. இடர்நேர்வு அடிப்படையிலான கட்டுப்பண முறை, இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்திற்கான இலக்கு நிதியிடல் மாதிரி, மற்றும் தீர்மான வழிமுறையாக நிதியியல் நிறுவனங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மாற்றுவதை வசதிப்படுத்துவதற்கு நிதியியல் உதவியை வழங்குவதற்கான கொள்கை போன்றவற்றை உருவாக்கியமை ஆண்டுகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட முக்கிய கொள்கை மேம்பாடுகளாக விளங்கின.

இலங்கை வைப்பு காப்புதித் திட்டத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனையும், கொடுப்பனவு வழங்கும் உட்கட்டமைப்பையும் மேம்படுத்தும் நோக்கத்துடன், மத்திய வங்கியானது தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பிற்கான மேம்பாடாக, இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்திற்கான முழுமையான ஒருங்கிணைந்த முகாமைத்துவ தகவல் முறைமையை நடைமுறைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில், மத்திய வங்கி இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் இழப்பீட்டு கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் கொண்டுநடாத்தியதுடன் அது தொடர்பான தகவல்களைத் தேவையான ஆர்வலர்களுக்கும் வழங்கியது. இதற்கு மேலதிகமாக, நெருக்கடி காலங்களில் பாரியளவிலான அல்லது ஒரே நேரத்தில் நிகழும் கொடுப்பனவுகளை முகாமைசெய்வதில் இலங்வை வைப்பு காப்புதிறுதித் திட்டத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிசெய்யும் நோக்கில், மத்திய வங்கியானது இலங்கை வைப்பு காப்புறுதித் திட்டத்திற்கான செயலாற்ற அடிப்படையிலான நிபந்தனையாக நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் அவசரக்காலத் திட்டத்தை உருவாக்கியுள்ளது. மேலும், ஒரே முகவர் வங்கியை அதிகளவில் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்கும், இழப்பீட்டு கொடுப்பனவை செயற்றிறன்மிக்க வகையில் பகிர்ந்தளிப்பதை உறுதிசெய்வதற்கும் மத்திய வங்கியானது பரந்த கிளை வலையமைப்புகளையும் போதுமான வளங்களையும் கொண்ட உரிமம்பெற்ற வங்கிகளை உள்ளடக்கிய அங்கீகாரம்பெற்ற முகவர் வங்கிகளின் கூட்டமைப்பை நிறுவுவதற்கான வழிமுறைகளை முன்னெடுத்தது.

இலங்கை மத்திய வங்கியானது இலங்கை வைப்புக்காப்புறுதி திட்டத்தின் நிர்வாகத்தினையும் முகாமைத்துவத்தினையும் தொடர்ந்து முன்னெடுத்த அதேவேளை வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வேண்டப்பட்டவாறு, இலங்கை வைப்புக் காப்புறுதியின் ஆண்டிற்கான நிதியியல் அறிக்கையினை உரிய காலத்தில் சமர்ப்பிப்பதையும் உறுதிப்படுத்தியது.

## தடைசெய்யப்பட்ட மற்றும் மோசடித் திட்டங்கள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுதல்

மத்திய வங்கியானது தகவல்களைச் சேகரித்தல், நிதியியல் பாய்ச்சல்களை சரிபார்த்தல், தொடர்புடைய அதிகாரிகளுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் உரிய நேரத்தில் தலையிடுவதற்கும் இடர்நேர்வு தணிப்பிற்கும் ஆதரவளிக்கும் வகையில் தீர்மானங்களை வெளியிடுதல் ஆகியவற்றின் மூலம் தடைசெய்யப்பட்ட மற்றும் மோசடித் திட்டங்கள் குறித்து விசாரணைகளை நடாத்துகிறது.

ஆண்டுகாலப்பகுதியில், இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்பான இரு விசாரணைகள் முடிவடைந்ததோடு இதன்மூலம், தடைசெய்யப்பட்ட திட்டங்களாகக் கண்டறியப்பட்டவற்றின் மொத்த எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது. 2025ஆம் ஆண்டின் இறுதியில், இரு விசாரணைகள் நடந்துகொண்டிருந்த அதேவேளை 21 உண்மைத் தகவல் கண்டறியும் விசாரணைகள் நிறைவடைந்திருந்தன.

## நிறுவனங்கள் சட்டவிரோதமாக வைப்புகளை ஏற்றுக்கொள்வதையோ அல்லது முறையான அதிகாரமின்றி செயற்படுவதையோ உறுதிசெய்தல்.

ஒழுங்குமுறைப்படுத்தப்படாத வைப்பேற்றல் மற்றும் நிதித் தொழில்களுடன் தொடர்புடைய முறைப்பாடுகள் மற்றும் தகவல்களுக்கு பதிலளிக்கும் வகையில், நிதித்தொழில் சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் 2025ஆம் ஆண்டளவில் 119 விசாரணைகளை மத்திய வங்கி முன்னெடுத்துள்ளது.

நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி, ஒப்படைப்பாளர்கள் அல்லது தனிநபர்கள் நிதித்தொழில் ஈடுபட்டனரா அல்லது வைப்புகளை ஏற்றுக்கொண்டனரா என்பதைக் கண்டறிவதே இந்த விசாரணைகளின் நோக்கமாக இருந்தது.

2025இல், மத்திய வங்கியானது நிதித்தொழில் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் விசாரணைக்கு உட்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் சொத்துக்களை அந்நியப்படுத்துவதைத் தடுக்கும் முடக்குதல் உத்தரவுகளுக்காக, கொழும்பு மேல் நீதிமன்றத்திடமிருந்து 23 முறை கால நீட்டிப்புகளைப் பெற்றுக்கொண்டது. மேலும், நிதிதொழில் சட்டத்தின் 45(3)ஆம் பிரிவின் கீழ் நீதவான் நீதிமன்றங்களின் உத்தரவுகளுடன் 03 நபர்கள் பயணத் தடைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் முரணாக நிதித்தொழிலை கொண்டு நடாத்திய அல்லது நடாத்திவரும் அல்லது வைப்புகளை ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக்கொண்டுவரும் நிறுவனங்கள்.'. தனிநபர்கள் குறித்த தீர்மானங்கள் பற்றி பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் வகையில், மத்திய வங்கியானது 42(10)ஆம் பிரிவின் பிரகாரம் நாளாந்த மற்றும் வார இறுதி பத்திரிக்கைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அறிவித்தல்களை வெளியிட்டது.

# கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்

இலங்கையின் தேசிய கொடுப்பனவு முறைமையானது மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்துகின்றதுடன் மொத்த விற்பனை கொடுப்பனவு முறைமை (பாரியளவிலான பெறுமதி கொடுப்பனவு முறைமை), சில்லறை கொடுப்பனவு முறைமைகள் மற்றும் உரிமம்பெற்ற பணி வழங்குநர்களினால் வழங்கப்படும் கொடுப்பனவு சேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. நாட்டினுடைய பாரியளவிலான பெறுமதி கொடுப்பனவு முறை என்பது மத்திய வங்கிக்கு சொந்தமான மற்றும் அதன் மூலம் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையாகும். சில்லறை கொடுப்பனவு முறைமைகளின் பிரதானமாக, (தேசிய சில்லறை கொடுப்பனவு வலையமைப்பின் தொழிற்பாட்டாளர்) லங்காபே (பிரைவெட்) லிமிடெட் நிறுவனத்தால் தொழிற்படுத்தப்படும் விரைவுப் கொடுப்பனவு முறைமைகள் மற்றும் தொகுதிக் கொடுப்பனவு முறைமைகள், 1 தொலைத்தொடர்பூட்டல் சேவை வழங்குநர்களால் தொழிற்படுத்தப்படும் இலத்திரனியல் பண முறைமைகள் மற்றும் பன்னாட்டு அட்டைத் திட்டங்களினால் தொழிற்படுத்தப்படும் கொடுப்பனவு அட்டை வலையமைப்புகள் ஆகியவை அடங்கும். அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை, உயர்ந்த பெறுமதியிலான வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளுக்கு ஆதரவளிப்பதுடன் சில்லறை கொடுப்பனவு முறைமைகள் உடனடி கொடுப்பனவுகளை ஆதரித்து, தனிப்பட்டவர்கள், தொழில்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு அணுகல்தன்மையையும் வசதியையும் மேம்படுத்துகின்றது.

**இலங்கையின் தேசிய கொடுப்பனவு முறைமை** வரைபடம் - 12




## கொடுப்பனவு முறைமையின் ஒழுங்குமுறைப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் முறைமைகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, அதன் ஸ்தாபனம், மேம்பாடு மற்றும் கொள்கை செயல்படுத்தலை வழிநடத்துவதன் மூலம் மத்திய வங்கி நாட்டின் கொடுப்பனவு தோற்றப்பாட்டினை வடிவமைக்கிறது. நாட்டில் தொழிற்படும் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை உறுதிசெய்வதற்கும், அதனுடன் தொடர்புடைய இடர்நேர்வுகளைக் கண்டறிந்து தணிப்பதற்கும் அவற்றை மேற்பார்வையிடுவதற்கு மத்திய வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது உரிமம்பெற்ற சேவை வழங்குநர்களினால் வழங்கப்படும் கொடுப்பனவுச் சேவைகளை உரிமத்தையளிக்கின்றதுடன் மேற்பார்வை செய்கின்றது. இது கொடுப்பனவு அட்டை வழங்குநர்கள், நிதியியல் கையகப்படுத்தபவர்கள், மற்றும் இ-பண முறைமைத் தொழிற்பாட்டாளர்கள் உள்ளடக்குகின்றது. பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை உறுதி செய்கின்ற அதேவேளை புத்தாக்கம் மற்றும் தொழில் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காகவும் இடர்நேர்வு அடிப்படையிலான ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படுகின்றன. பின்டெக்சுக்கான தேவைப்பாடுகளைக் குறிப்பிடும், கொடுப்பனவுடன் தொடர்புடைய செல்லிடத் தொலைபேசி செயலிகள் மற்றும் அட்டை அடிப்படையிலான இலத்திரனியல் வர்த்தகக் கொடுப்பனவுகளுக்கான பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களினால் மூன்றாம் தரப்பு நிதியியல் தொழில்நுட்ப (பின்டெக்ஸ்) சேவைகள் வழிநடாத்தப்படுகின்றன. கடன் அட்டை வழிகாட்டுதல்கள், குறிப்பாக வாடிக்கையாளர் பாதுகாப்பு அம்சங்களில் கவனம்செலுத்தி, கடன் அட்டை வழங்குநர்களுக்கு ஏற்புடைய தேவைப்பாடுகளை வரையறுக்கின்றன. நிதியியல் துறை புதுமைகளை ஊக்குவிப்பதற்காக, மத்திய வங்கியானது 2020ஆம் ஆண்டில் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பை அறிமுகப்படுத்தியது. ஏற்புடைய மத்திய வங்கியின் பணிப்புரைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் மற்றும் விதிகள் போன்றவற்றின் தற்காலிகத் தளர்த்தலுடன் இது புத்தாக்க பின்டெக் உற்பத்திகளை பரிசோதிப்பதற்கான கட்டுப்படுத்தப்பட்ட நேரடிச் சூழலை வழங்குகின்ற அதேவேளை

பாராளுமன்றச் சட்டங்கள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குவிதிகளின் முழுமையான இணங்குவிப்பையும் உறுதிப்படுத்துகின்றது.

### பாரியளவிலான பெறுமதி கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை முறைமைரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த ஒரு செலுத்துகை முறை ஆகும். பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இடையேயான பாரியளவிலான பெறுமதி கொடுப்பனவுகளை, பாதுகாப்பான மற்றும் திரும்பப் பெற முடியாத வகையில், அதேநேர தீர்ப்பனவினை வசதிப்படுத்துகின்றது. ஆகையினால், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் ஏதேனும் முறிவடைதலானது முக்கியத் தொழிற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கலாம் என்பதோடு நிதியியல் முறைமையினதும் பரந்தளவிலான பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. 2024 இல் ISO 20022 உடன் இசைந்துசெல்லும் வகையில் முறைமையின் கொண்டு சென்றுள்ள LankaRTGS எனும் புதிய முறைமையுடனான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினை மேம்படுத்துவதைத் தொடர்ந்து, மத்திய வங்கி தொழிற்பாட்டு, வினைத்திறன் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினைத் தொடர்ந்தும் வலுப்படுத்தியது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் பங்கேற்பாளர்களில் மத்திய வங்கி, 24 உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், 1 உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கி, 7 அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் மத்திய வைப்பக முறைமை ஆகியவை அடங்கும்.

வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணக் கொடுக்கல்வாங்கல்கள், அரசாங்கப் பிணையங்கள் கொடுக்கல்வாங்கல்கள், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களின் உள்நாட்டுப் பிரிவு, சில்லறை வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு மைய (லங்காபே) தேறிய தீர்ப்பனவு, ஏனைய பங்கேற்பாளர்களுக்கிடையிலான நிதிய மாற்றல்கள் மற்றும் வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்கள் போன்றன உள்ளடங்கலாக பல்வேறு வகையிலான கொடுக்கல்வாங்கல்களின் நிதிய தீர்ப்பனவிற்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ஆதரவளிக்கின்றது.

தங்குதடையற்ற கொடுக்கல்வாங்கல் தீர்ப்பனவினை உறுதிப்படுத்துவதற்கு, மத்திய வங்கியானது தகைமையுடைய பிணையுறுதியாகத் தொழிற்படும் அரச பிணையங்களுடனான அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களுக்கான பிணையுறுதியளிக்கப்பட்ட நாளுக்குள்ளான திரவத்தன்மை வசதியினை வழங்குகின்றது.

**2025இல் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் தீர்ப்பனவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி மற்றும் வகைகள் (ரூ.பில்)** கிராப் - 02




2025இல், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை ஏறத்தாழ ரூ.430 றில்லியன் பெறுமதி கொண்ட 597,859 கொடுக்கல்வாங்கல்களைச் செயற்படுத்தியது.

### சில்லறை கொடுப்பனவு முறைமைகளின் தொழிற்பாடுகள்

நாட்டின் சில்லறைக் கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பான, நம்பகமான மற்றும் வினைத்திறன்மிக்க தொழிற்பாட்டின் காரணமாக, பொதுமக்களிடையே டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பயன்பாடு தொடர்ந்தும் வளர்ச்சியடைந்துள்ளது.

லங்காபேவினால் தொழிற்படுத்தப்படும் முக்கிய சில்லறை வர்த்தகக் கொடுப்பனவு முறைமைகள் பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்று ஆளி, விரைவான கொடுப்பனவு முறைமை, பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளி, பொதுவான விற்பனை நிலைய ஆளி, இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை, மற்றும் காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமை போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

இணையவழி வங்கித்தொழில், செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில், தன்னியக்க கூற்றுப் பொறி, கியோஸ்க்குகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள கருமப்பீடங்களில் நேரடியாகச் செலுத்துதல் போன்ற கொடுப்பனவு வழிகளினூடாக அதேநேர நிதிய மாற்றல்களை மேற்கொள்வதற்கு விரைவான கொடுப்பனவு முறைமை இயலச்செய்துள்ளது. லங்காகியூ ஆர், லங்காபே இணையவழி கொடுப்பனவு தளம், ஜஸ்ட்பே, GovPay மற்றும் நேரடிப் பற்று போன்றன விரைவான கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பில் தொழிற்படுத்துகின்றன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூ. 23.13 றில்லியன் கொண்ட மொத்த கொடுக்கல்வாங்கல் பெறுமதியுடன் 2025ஆம் ஆண்டில் விரைவான கொடுப்பனவு முறைமையின் பெறுமதி 34.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைக் காண்பித்துள்ளது. இது சில்லறை கொடுப்பனவுகளுக்காக விரைவான

**RTGS முறைமையின் வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களின் வளர்ச்சி: 2015 – 2025** கிராப் - 03



கொடுப்பனவு முறையின் அடிப்படையிலான கொடுப்பனவு வழிகளை அதிகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

ஆதரவளிக்கு செல்லிடத் தொலைபேசி செயலிகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்காக, வணிகர்கள் LANKAQR பொறிமுறையை தேசிய விரைவுப் பதிலிறுப்பு குறியீட்டு நியமமாகப் பயன்படுத்துகின்றனர்.

லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளமானது இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகார சபை, ஊழியர் சேமலாப நிதியம் போன்ற அரச நிறுவனங்களுக்கு அதேநேர கொடுப்பனவுகளை வசதிப்படுத்துகின்றதுடன் உறுப்பினர் நிதியியல் நிறுவனங்களின் வாடிக்கையாளர்கள் தமது நடைமுறைக் கணக்கு அல்லது சேமிப்புக் கணக்கிலிருந்து அரசாங்க நிறுவனமொன்றுக்கு உடனடியாக, வசதியாகவும் பாதுகாப்பாகவும் பணத்தை மாற்றிக்கொள்ளவதற்கு இது அனுமதிக்கின்றது.

2025இல், லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளமானது ரூ.3.40 றில்லியன் கொண்ட மொத்த கொடுக்கல்வாங்கல் பெறுமதியுடன் கொடுப்பனவுகளை மேற்கொண்டு 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 90 சதவீதத்தை விஞ்சிய வளர்ச்சியனை எடுத்துக்காட்டியது.

### விரைவான கொடுப்பனவுகளின் வளர்ச்சி: 2015 - 2025

கிராப் - 04




### லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளத்தினூடாக அரச நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகளின் வளர்ச்சி: 2017 - 2025

கிராப் - 05




GovPay 2025 பெப்புருவரியில் தொடங்கப்பட்டதுடன் சொந்தமாக தகவல் தொழில்நுட்ப முறைமையைக் கொண்டிராத அரசாங்க நிறுவனங்கள் வழங்கும் சேவைகளுக்காகப் பொதுமக்களிடமிருந்து டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலச்செய்துள்ளது. இப்பொறிமுறையானது டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொண்டுள்ள அரசாங்க நிறுவனங்களின் உள்ளடக்கத்தை மேலும் விரிவுபடுத்துகின்ற அதேவேளை பொது மக்களுக்கு அவர்களின் வினைத்திறனையும் அணுகல்தன்மையையும் மேம்படுத்துகின்றது. 2026இல் உள்ளவாறு, 254 நிறுவனங்கள் GovPay இல் இணைக்கப்பட்டுள்ளதுடன் 2025இல் தளத்தினூடாக செயற்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூ. 2.27 பில்லியனாக விளங்கியது.

## SWIFT முறைமையின் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியானது எல்லை தாண்டிய மற்றும் உள்நாட்டு கொடுப்பனவு செய்திகளை அனுப்புவதற்கும் பெறுவதற்கும் SWIFT நிதியியல் தொடர்பூட்டல் வலையமைப்பைப் பயன்படுத்துகிறது. உலகளாவிய நியமங்கள் மற்றும் பன்னாட்டு நடைமுறைப்படுத்தல் காலக்கெடுவிற்கு இணங்க, மத்திய வங்கியானது தனது அனைத்து SWIFT அடிப்படையிலான முறைமைகளையும் ISO 20022 செய்திப் பரிமாற்ற நியமங்களை மாற்றும் பணியை 2025 நவெம்பர் 22 வெற்றிகரமாக நிறைவுசெய்தது. இம்மாற்றமானது இலங்கையின் கொடுப்பனவு உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதோடு, சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் தொடர்ச்சியான இணக்கத்தை உறுதிசெய்து, நிதியியல் செய்திப் பரிமாற்றத்தின் வினைத்திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துகிறது.

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் தொழிற்பாடுகள்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் உறுப்பினராக, மத்திய வங்கியானது 2025ஆம் ஆண்டிலும் இந்தப் பல்தரப்பு தீர்ப்பனவு முறைமையில் தனது பங்கைத் தொடர்ந்து நிறைவேற்றியது.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பங்கேற்கும் மத்திய வங்கிகள் பிராந்தியங்களுக்கு இடையேயான கொடுப்பனவுகளை நிகர அடிப்படையில் தீர்த்துக்கொள்வதற்கு இயலச்செய்துள்ள அதேவேளை வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு மற்றும் பரிமாற்றச் செலவுகளின் பயன்பாட்டைக் குறைப்பதோடு, அதன் உறுப்பு நாடுகளான வங்காளதேசம், பெலாரஸ், பூட்டான், ஈரான், இந்தியா, மாலைத்தீவுகள், மியான்மார், நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியவற்றுக்கு இடையே வர்த்தகம் மற்றும் வங்கி உறவுகளையும் ஊக்குவிக்கிறது.

## 2025இன் முக்கிய தலைப்புக்கள்

- டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதன் மூலம் அனைவரையும் உள்ளடக்குதல், வினைத்திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்தும் கொள்கை வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இது லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம் மற்றும் இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி போன்றவற்றின் கொடுப்பனவு கட்டணங்களைக் குறைத்தல், GovPay கொடுக்கல்வாங்கலுக்கான உயர்ந்தபட்சத் தொகையினைக் கட்டாயமாக்குதல், மற்றும் மொத்த சில்லறைக் கொடுப்பனவுகளுக்காக இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமைகள் கொடுக்கல்வாங்கல் வரையறையை ரூ.5 மில்லியனிலிருந்து ரூ.10 மில்லியனிற்கான உயர்த்துதல் போன்றன உள்ளடங்கும்.
- டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளில் மோசடிகளையும் ஏமாற்றுக்களையும் குறைக்கும் வகையில், கொடுப்பனவுச் செயலி நிறுவப்பட்டுள்ள சாதனங்களிலுள்ள தொலைபேசி இலக்கமானது வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குடன் பதிவுசெய்யப்பட்ட இலக்கம் பொருந்துகிறதா என்பதை உறுதிப்படுத்துமாறு செல்லிடத்தொலைபேசி செயலி வழங்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- எல்லை தாண்டிய இணக்கத்தன்மையை அதிகரித்து, தேசிய கொடுப்பனவு உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், LANKAQR வணிகர்களிடம் AliPay+ வசதி கொண்ட செயலிகளினூடாக சுற்றுலாப் பயணிகள் மேற்கொள்ளும் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்வதற்காக LANKAQR இனை AliPay+ உடன் இணைக்க ஒப்புதலளிக்கப்பட்டது.
- பின்டெக் நிறுவனங்களுக்கு அதிக அணுகலை வழங்கும் வகையில், தகுதி நிபந்தனைகளைத் தளர்த்தி பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தல் பரிசோதனைக் கட்டமைப்பினால் திருத்தியமைக்கப்பட்டது.
- இலங்கையை நாணயத்தைக் குறைவாகப் பயன்படுத்தும் பொருளாதாரமாக மாற்றுவதற்கும், பாதுகாப்பான, அனைவரையு-முள்ளடக்கிய மற்றும் உலகளவில் இணைக்கப்பட்ட கொடுப்பனவு முறைமை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் நிதியியல் நலனோன்புகையை உறுதிசெய்வதற்கும் உபாய வழிகாட்டுதலை வழங்கும் வகையில், தேசிய கொடுப்பனவு சபையின் உறுப்பினர்களுடன் இணைந்து 2026-2027ஆம் ஆண்டிற்கான தேசிய கொடுப்பனவு முறைமை வழிகாட்டல் உருவாக்கப்பட்டது.
- பொதுமக்களிடையே விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக, ஹம்பாந்தோட்டை, நுவரெலியா, தம்புள்ளை மற்றும் மத்திய வங்கி வளாகங்களில் டிஜிட்டல் கொடுப்பனவுகள் குறித்த இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் நடாத்தப்பட்டன.

### பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகளை ஒழுங்குமுறைப்படுத்தலும் மேற்பார்வையும்

2024ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகளினூடாக விடுக்கப்பட்ட (2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ்) இலங்கையில் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வைசெய்வதற்கு மத்திய வங்கி தொடங்கியது.

இவ்வொழுங்குமறைப்படுத்தலானது அனைத்து பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களையும் மத்திய வங்கியில் பதிவு செய்யக் கட்டாயப்படுத்தி, பதிவுசெய்யப்படாத வழங்குநர்கள் தமது தொழிற்பாடுகளை முறைப்படுத்துவதற்கும் ஒழுங்குமறைப்படுத்தப்பட்ட சூழலில் வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதற்கும் அனுமதிக்கின்றது.

பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களை பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் ஒழுங்குவிதிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை கட்டமைப்பின் கீழ் பதிவு-செய்யும் வகையில், 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகளாக 2025 திசெம்பர் 31 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்கள் வழங்கப்பட்டன.

### வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்களைத் தீர்ப்பனவுசெய்தல்

வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளை நடாத்துவதற்கு 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு, மத்திய வங்கியானது வெளிநாட்டுச் செலாவணி, தங்கம் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்களுடன் தொடர்புடைய சர்வதேசத் தொழிற்பாடுகளை செயற்படுத்து-கின்றது. இந்நடவடிக்கையின் பாகமாக, மத்திய வங்கியானது அதன் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு முகாமைத்துவம் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் தொடர்பான அனைத்து கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு மற்றும் இணக்கத்தை உடனடியாகவும் துல்லியமாகவும் முகாமைசெய்து, தீர்ப்பனவுச் செயன்முறையின் பாதுகாப்பையும் வினைத்திறனையும் உறுதிப்படுத்துகின்றது.

இதற்குமேலதிகமாக, மத்திய வங்கியானது நொஸ்ரோ மற்றும் கட்டுக்காவல் கணக்குகளை திறப்பதையும் மூடுவதையும் கையாளுகின்றதுடன் குறிப்பாக வெளிநாட்டு ஒதுக்கு முகாமைத்துவத்தின் நோக்கத்திற்காக அவற்றின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கை சார்ந்த விடயங்களையும் கவனத்திற்கொள்கின்றது.

### லங்காசெக்யூர் முறைமையையும் அதன் சேவைகளையும் பாராமரித்தல்

மத்திய வைப்பக முறைமையினையும் பத்திரங்களற்ற பிணையங்கள தீர்ப்பனவு முறைமையினையும் உள்ளடக்குகின்ற லங்காசெக்யூர் முறைமை 2025ஆண்டு முழுவதும் 100 சதவீத தொழிற்பாட்டுடன் இயங்குகின்றது. மத்திய வைப்பக முறைமையானது பத்திரங்களற்ற அரச பிணையங்களின் சொத்துரிமையைப் பதிவுசெய்கின்ற அதேவேளை அத்தகைய பிணையங்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கு பத்திரங்களற்ற பிணையங்களின் தீர்ப்பனவு முறைமையை வசதிப்படுத்திகின்றது.

கடந்த ஆண்டு காலப்பகுதியில், லங்காசெக்யூர் முதன்மை வழங்கல்கள், இரண்டாந்தர சந்தை வர்த்தகங்கள் (உடனடி, மீள்கொள்வனவு மற்றும் வாக்குறுதிக் கொடுக்கல்வாங்கல்கள்), திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், நாளுக்குள்ளேயான திரவத்தன்மை வசதி, மற்றும் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக லங்காசெக்யூர் 649,629 கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு காலப்பகுதியில், மத்திய வைப்பக முறைமை கணக்கு உடைமையாளர்களுக்கு பிணைய உடைமைகள், கொடுக்கல்வாங்கல்கள், வட்டி மற்றும் முதிர்ச்சி கொடுப்பனவுகள் போன்றவற்றின் காலமுறையான இலத்திரனியல் அறிக்கைகள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக, இத்தகைய வசதிகளுக்காகப் பதிவுசெய்துள்ள மத்திய வைப்பக முறைமை கணக்கு உடைமையாளர்களுக்கு பிணையங்களுடன் தொடர்புடைய பற்று மற்றும் வரவுக் கொடுக்கல்வாங்கலுக்கான அதேநேர அறிவிப்புக்கள் குறுஞ்செய்தி மற்றும்.'.அல்லது மின்னஞ்சல் விழிப்பூட்டல்களினூடாக வழங்கப்பட்டன.

மேலும், பதிவுசெய்யப்பட்ட மத்திய வைப்பக முறைமை கணக்கு வைத்திருப்பவர்கள், லங்காசெக்யூர் இணைய வசதியினூடாக தமது பிணையங்கள் கணக்கு விபரங்களை இணையவழியில் பார்க்க முடியும். அரச பிணையங்கள் முதலீட்டின் பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேலும் மேம்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய சேவைகளுக்கிடையில், வருடாந்த அல்லது காலமுறையான கணக்காய்வுகள், விசா தொடர்பான விண்ணப்பங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சமர்ப்பிப்புக்கள் போன்ற குறித்த நோக்கங்களுக்கான வெளிநின்ற பிணைய நிலுவைகளின் அறிக்கைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் வசதிகள் வழங்கப்பட்டன.

# கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பரிணாம வளர்ச்சி




இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பரிணாம வளர்ச்சியானது நவீனமயப்படுத்தலினதும் புத்தாக்கத்தினதும் தொடர்ச்சியானப் பயணத்தைப் பிரதிபலிக்கின்றது. மத்திய வங்கியானது தேசிய கொடுப்பனவு முறைமையை கையேடு மற்றும் காகித அடிப்படையிலான செயன்முறைகளிலிருந்து, வேகமான, ஒன்றோடொன்று இணக்கமான மற்றும் சர்வதேச அளவில் இணைக்கப்பட்ட டிஜிட்டல் சூழலமைப்பாக முனைப்புடன் வழிநடத்தியுள்ளது. இது நிலைத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்குதல் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு, பாதுகாப்பான மற்றும் வினைத்திறன்மிக்க கொடுப்பனவு பொறிமுறைகளை இயலச்செய்வதோடு புத்தாக்கங்களின் மூலம் பொருளாதாரத்தின் பரிணமித்துவரும் தேவைகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

### அடித்தளத்தை அமைத்தல்: காசோலைத் தீர்ப்பனவிலிருந்து உடனடிக் கொடுப்பனவுகள் வரை

வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளை முறைப்படுத்துவதில் மத்திய வங்கியின் உருவாக்கம் முக்கியத் திருப்புமுனையாக விளங்கியது. வங்கிகளுக்கான வங்கியாளர் என்ற தனது வகிபாகத்தை ஏற்று, மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகளுக்கான காசோலைத் தீர்ப்பனவுத் தொழிற்பாட்டை தொடங்கியது.

### இலங்கை தானியங்கி தீர்ப்பனவு மையத்தைத் தாபித்தல்

நாளாந்த தீர்ப்பனவிற்காக வழங்குகின்ற காசேலைகளின் அளவினை அதிகரிக்கும் நோக்கத்துடன், செயன்முறையை தன்னியக்கப்-படுத்துவதற்கான தேவையாக இது மாறியுள்ளது. இதற்கமைவாக, இலங்கை தானியங்கித் தீர்ப்பனவு மையமானது 1988இல் தாபிக்கப்பட்டது. இது காசோலைகளைத் தீர்ப்பனவுசெய்வதற்கு தேவைப்படும் காலத்தை கணிசமானளவு குறைத்தது.

### இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் அறிமுகம்

வங்கிகளுக்கிடையிலான இலத்திரனியல் நிதிய மாற்றல்களை வசதிப்படுத்துவதற்கு 1993இல் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு, காசோலைகள் அல்லது செலுத்தல் கட்டளைகள் போன்ற காகித ஆவணங்களைப் பயன்படுத்தாமல், ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கோ அல்லது பல கணக்குகளுக்கோ கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இயலச்செய்து, வங்கிகளிடையே இலத்திரனியல் கொடுப்பனவுகளின் புதிய சகாப்தத்தை குறித்துக்காட்டியது.

இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையானது இணையவழி வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுத் தளமொன்றுக்கு 2010இல் தரமுயர்த்தப்பட்டு, சில்லறை வர்த்தக இலத்திரனியல் மாற்றல்களுக்கான நிதியத்தை அதே நாளில் கிடைப்பனவுச் செய்தற்கு இயலச்செய்து, குறைந்த பெறமதியுடைய கொடுப்பனவு செயன்முறையின் வேகம், வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை குறிப்பிடத்தக்களவில் மேம்படுத்தியது.

### கொடுப்பனவு முறைமைகள் உட்கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல்

2002இல், மத்திய வங்கியானது நிதியியல் சந்தை அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கு சட்டம் மற்றும் நிறுவனம்சார்ந்த சீர்திருத்தங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, தேசிய கொடுப்பனவு முறைமையின் முழுமையான நவீனமயப்படுத்தலைத் தொடங்கியது.

### தீர்ப்பனவுத் தொழிற்பாடுகளின் உபாய ரீதியிலான பங்காற்றல் - லங்காகிளியர் முறையைத் தாபித்தல்

நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மத்திய வங்கியானது அதன் தீர்மானத் தொழிற்பாடுகளை இலங்கையிலுள்ள மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கூட்டு உரிமையிலான நிறுவனமான லங்கா கிளியர் (பிரைவெட்) லிமிடெட் (தற்போது லங்காபே (பிரைவெட்) லிமிடெட் என மீளப்பெயரிடப்பட்டுள்ளது) வசம் ஒப்படைத்தது.

லங்காபே பிரைவெட்டின் (லிமிடெட்) ஆளுகை மாதிரியானது இலங்கையிலுள்ள சில்லறைக் கொள்வனவு வசதியில் துரித முன்னேற்றத்தை வசதிப்படுத்தியது. 2006இல் காசோலை பிம்பப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் தொடக்கத்தை முக்கிய அடைவுகள் உள்ளடக்கியது. இது தீர்ப்பனவிற்கான வழங்கப்பட்ட காசோலைகளுக்கான பின்வரும் தொழில் நாளின் நிதியங்களின் கிடைப்பனவினை நாடளாவிய ரீதியில் இயலச்செய்தது.

### அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினைத் தொடங்குதல்

உயர்ந்தளவு பெறுமதியுள்ள மற்றும் காலவரையறுக்குட்பட்ட கொடுப்பனவுகள் போன்றவற்றின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவினைப் பின்பற்றுவதற்கான முதல் தெற்காசிய நாடாக இலங்கையை மாற்றிய 2003இல் அறிமுகப்படுத்தப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையானது தேசிய கொடுப்பனவு முறைமையில் முன்னேற்றத்திற்கான முக்கிய மைற்கல்லாக அமைந்தது. 2024இல் ISO 20022 தகவல் தொடர்பு நியமத்திற்கு மேம்படுத்தப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைய நாட்டின் நிதியியல் முறைமையின் முதுகெலும்பாக விளங்கி, ரூ.1.8 றில்லியன் கொண்ட நாளாந்த சராசரியுடன் 2025இல் ரூ.400 றில்லியனை விஞ்சுகின்ற கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டது.

### சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தல்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டமானது கொடுப்பனவு முறைமைகளின் ஒழுங்குமுறைப்படுத்துநர் மற்றும் மேற்பார்வையாளராக மத்திய வங்கியின் வகிபாகத்தை மேலும் வலுப்படுத்திய அதேவேளை பாதுகாப்பை உறுதிசெய்து புத்தாக்கத்தை ஊக்குவித்தது.

### தேசிய கொடுப்பனவு சபையினைத் தாபித்தல்

பொர் அதிகாரசபை மற்றும் நிதியியல் சந்தைப் பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழுமமொன்றாக கொடுப்பனவு தொழிற்துறையின் உபாயப் பாதையை வழிநடத்துவதற்காக 2006ஆம் ஆண்டில் தேசிய கொடுப்பனவு சபை நிறுவப்பட்டது.

## இயங்கக்கூடிய கொடுப்பனவு உட்கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தல்

### பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளி

2013ஆம் ஆண்டில் பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் தொடக்கமானது நாட்டில் டிஜிட்டல் ரீதியிலான தழுவலையும் கொடுப்பனவுச் சேவையினையும் துரிதப்படுத்தி, இலங்கையின் இயங்கக்கூடிய உடனடிக் கொடுப்பனவுகளின் புதிய சகாப்தத்தை உருவாக்கியது. பொதுவான அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் கீழ், 2013இல் தொடங்கி வைக்கப்பட்ட பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆளியானது நாட்டில் ஏதேனும் தன்னியக்க கூற்றுப் பொறியிலிருந்து காசினை எடுப்பனவுசெய்வதற்கு பொதுமக்களை இயலச்செய்த அதேவேளை நாட்டில் ஏதேனும் நிதியியல் நிறுவனத்தின் வாடிக்கையாளர்களுக்கு நிதியப் பரிமாற்றல்களை மேற்கொள்வதற்கு பொதுமக்களை இயலச்செய்ததோடு, அத்தகைய கொடுப்பனவுச் சேவைகளை அணுகுவதற்கு வாடிக்கையாளர்கள் தமது சொந்தமான வங்கிகளுக்கு விஜயம்செய்ய வேண்டிய தேவை நீக்கப்பட்டது.

### லங்காபே தேசிய அட்டைத் திட்டம்

மேலும், 2018இல் அறிமுகப்படுத்தப்பட்ட லங்காபே தேசிய அட்டைத் திட்டமானது கொடுப்பனவு அட்டைகளின் வழங்கலை வசதிப்படுத்தியது. இங்கு உள்நாட்டு பொதுவான கொடுக்கல்வாங்கல்கள் உள்நாட்டு பொதுவான விற்பனை மையக் கொடுக்கல்வாங்கல்களினூடாக அனுப்பப்படும் அதேவேளை சர்வதேச கொடுக்கல்வாங்கல்கள் கூட்டு அட்டை வலையமைப்பினூடாக அனுப்பப்படுகின்றன.

### உடனடிக் கொடுப்பனவு முறைமை

இலங்கையின் உடனடிக் கொடுப்பனவு முறைமையான பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, இலங்கையின் டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான புதிய சகாப்தத்தினை தொடங்கிவைத்த மைற்கல்லொன்றாகும் என்பதோடு பொதுமக்களுக்கான புத்தாக்கமிக்கதும் அனைவரையுமுள்ளடக்கிய டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான அடித்தளமாக அமைந்தது.

### பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியினால் செயற்படுத்தப்பட்ட புத்தாக்கங்கள்: LANKAQR, ஜஸ்ட்பே, லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம் மற்றும் GovPay

பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியின் இயங்கக்கூடிய மற்றும் பன்முகக் கட்டமைப்பானது கணக்கிலிருந்து கணக்கிற்கு உடனடிக் கொடுப்பனவினை மேற்கொள்வதற்கு இயலச்செய்துள்ள புதிய டிஜிட்டல் கொடுப்பனவுச் சாதனங்கள் மற்றும் நிதிய மாற்றல் முறைகளின் உருவாக்கத்தை முன்னெடுத்த பல்வேறு அம்சங்களை அறிமுகப்படுத்தவதற்கு வழிவகுத்தது. இயங்கக்கூடிய விரைவுப் பதிலிறுப்பு குறியீட்டு கொடுப்பனவுகளுக்கான LANKAQR (2018), எந்தவொரு செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவுச் செயலிக்கான வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குகளை இணைப்பதற்கான ஜஸ்ட்பே, மற்றும் அவர்களின் வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்தும் இ-வர்த்தக கொடுக்கல்வாங்கல்களுக்கான ஜஸ்ட்பே வெப் போன்றன பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளியில் கட்டமைக்கப்பட்ட முக்கியப் புத்தாக்கங்களாகும் என்பதோடு இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான அணுகலையும், வசதியையும் வினைத்திறனையும் குறிப்பிடத்தக்க வகையில் விரிவுபடுத்தியது.

அரசாங்க நிறுவனங்களுக்கு உடனடிக் கொடுப்பனவுகளை வசதிப்படுத்தும் வகையில், 2017இல் தொடங்கப்பட்ட லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளம் மற்றும் 2025இல் தொடங்கப்பட்ட GovPay ஒழுங்கேற்பாடு போன்றவற்றை பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி வசதிப்படுத்தியது.

### போட்டித்தன்மைவாய்ந்த மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் கொடுப்பனவு சூழலுக்கு வழிவகுத்தல்

நாட்டின் கொடுப்பனவுச் சூழலில் போட்டித்தன்மை, புதுமை மற்றும் பாதுகாப்பை இயலச்செய்யும் உகந்த சூழலை மத்திய வங்கி உருவாக்கியுள்ளது. கொடுப்பனவு அட்டைகள், QR இனை இயலச்செய்துள்ள கொடுப்பனவு செயலிகள், இ-பண முறைமைகள் மற்றும் கொடுப்பனவு பைகள் போன்றன உள்ளடங்கலாக பல்வேறு டிஜிட்டல் கொடுப்பனவு சாதனங்களின் அறிமுகத்தை இத்தகைய சூழல் வசதிப்படுத்தியது. 1989ஆம் ஆண்டில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கொடுப்பனவு அட்டைகள் 2009 மற்றும் 2013இல் உரிமக் கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. செல்லிடத்தொலைபேசி அடிப்படையிலான இ-பண சேவை வழங்குநர்களும் 2012இல் உரிமம் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது, QR கொடுப்பனவுகளை ஏற்றுக்-கொண்டுள்ள 400,000 மேற்பட்ட LANKAQR வணிகர்களுடன் இலங்கையில் 30இற்கும் மேற்பட்ட ஜஸ்ட்பே மற்றும் LANKAQR வசதி கொண்ட செல்லிடத்தொலைபேசி செயலிகளை இயலச்செய்து, சிறிய பெறுமதியிலான சில்லறை வர்த்தகக் கொடுப்பனவுகளுக்காக காசின் மீதான தங்கியிருத்தலைக் குறைத்தது. 2020இல் பின்டெக் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பரிசோதனைக் கட்டமைப்பினூடாக நிதியியல் தொழில்நுட்பப் (பின்டெக்) புத்தாக்கங்கள் மேலும் ஊக்கவிக்கப்பட்டு, இது பின்டெக் நிறுவனங்களுக்கு முழுமையான வர்த்தக ரீதியிலான செயற்பாட்டிற்கு முன்னர் தளர்த்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின கீழ் அவற்றின் தீர்மானங்களைப் பரிசோதிப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்துநரின் மேற்பார்வையில் கட்டுப்படுத்தப்பட்ட சூழலை வழங்குகின்றது.

### இலங்கை கொடுப்பனவு முறைமையின் உலகளாவிய ஒருங்கிணைப்பு

மத்திய வங்கியானது 2023இல் சீனாவின் யூனியன்பே, 2024இல் இந்தியாவின் தேசிய கொடுப்பனவுகள் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனம் (NIPL ) மற்றும் 2025இல் AliPay+ International போன்றவற்றுடன் LANKAQR இன் ஒருங்கிணைப்பின் மூலம் இலங்கையின் கொடுப்பனவு முறைமையின் சர்வதேச இணைப்பை வசதிப்படுத்தியது. LANKAQR இன் சர்வதேசமயப்படுத்தப்பட்ட ஒன்றோடு ஒன்று இணக்கமான வடிவமைப்பானது வெற்றிகரமான ஒருங்கிணைப்புக்களை இயலச்செய்வதில் முக்கியப் பங்காற்றியுள்ளது.

இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பரிணாம வளர்ச்சியானது கையால் காசோலைகளைத் தீர்ப்பனவு முறையிலிருந்து, இன்று கிடைக்கப்பெறும் சர்வதேச அளவில் இணைக்கப்பட்ட டிஜிட்டல் கொடுப்பனவு சூழல் முறைமையை நோக்கிய முற்போக்கானதொரு மாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவுத் துறையின் நிலைமாறும் தன்மையால் உந்தப்பட்டு, இம்மாற்றம் தொடர்ந்து பரிணமித்து வருகின்றதோடு ஆதரவான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் தொடர்ச்சியான தொழிற்துறைப் புதுமைகளுக்கான தேவையை உருவாக்குகிறது. இந்த இன்றியமையாத விடயங்களை அடையாளங்கண்டு, மத்திய வங்கியானது கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பான மற்றும் வினைத்திறனை மேம்படுத்து-வதற்கு வளர்ச்சியடைந்துவரும் தொழில்நுட்பங்களை முனைப்புடன் ஊக்குவிக்கும் அதேவேளை எல்லை தாண்டிய ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதோடு இலங்கையின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் தொழில்நுட்ப முன்னேற்றத்திலும் செயல்பாட்டுச் சிறப்பிலும் முன்னணியில் இருப்பதை உறுதிசெய்கிறது.

# நாணயத் தொழிற்பாடுகள்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், மத்திய வங்கியானது நாணயத் தாள்கள் மற்றும் குற்றிகளை வெளியிடுதல் மற்றும் அவற்றின் முழு வாழ்வியல் சுற்றுவட்டத்தினை நிர்வகித்தல் போன்ற பொறுப்புடன் உரித்தளிக்கப்பட்டுள்ளது.

இப்பொறுப்பாணையை நிறைவேற்றுவதில், இலங்கை மத்திய வங்கியானது தூய்மையான, பாதுகாப்பான மற்றும் போதுமானளவு சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தை உறுதிப்படுத்தி, முழுக் காசு சுழற்சியை மேற்பார்வைசெய்து, அதன் மூலம் இலங்கை ரூபாவில் பொதுமக்கள் நம்பிக்கைக்கும் நாட்டுக்கிடையில் காசுக் கொடுக்கல்வாங்கலின் செயல்திறன்மிக்க தொழிற்பாட்டிற்கும் ஆதரவளிக்கின்றது.

## நாணயத்திற்கான பொறுப்புக்களும் அண்மைய போக்குகளும்

இலங்கை மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அதன் தேவைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நாணயத் தாள்களையும் குற்றிகளையும் வழங்குவதோடு அவற்றினால் திரும்ப வழங்கப்படும் மிகை நாணயங்களையும் ஏற்கின்றது. இத்தொடர்ச்சியான வழங்கல் மற்றும் மீளப்பெறுதல் முறைமையினூடாக, இலங்கை மத்திய வங்கியானது சுற்றோட்டத்திலுள்ள நாணய மட்டத்தினை நிர்வகிப்பதுடன், பொதுமக்கள் கையிலுள்ள நாணயங்கள் மற்றும் குற்றிகளின் பெறுமதியினைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பொருளாதாரத்தில் நாணயத்திற்கான கேள்வியை அளவீடுசெய்யும் முக்கிய தொழிற்பாட்டு குறியீடொன்றாகவும் பணியாற்றுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் நாணயமானது, சுழற்சியிலிருந்து திரும்பப் பெறப்பட்டு அகற்றப்படும் வரை, வங்கியின் பொறுப்பாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

2024இல் ரூ. 1,358.72 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025இல் 15.5 சதவீதத்தால் ரூ. 1,568.94 பில்லியனுக்கு சுற்றோட்டத்திலுள்ள நாணய வளர்ச்சியுடன், நாணயத் தாள்களுக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## நாணய முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியில் நாணய முகாமைத்துவமானது நாணயத் தாள்களை வடிவமைத்தல், அச்சிடுதல் மற்றும் வார்த்தல், கட்டளையை முன்வைத்தல், இருப்பு முகாமைத்துவம், பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்ற நாணயத்தை மாற்றீடு செய்தல், போலிநாணயத்தாளினைத் தடுத்தல், நாணய செயல்முறை மற்றும் பொதுமக்கள் விழிப்பூட்டல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## நாணயத் தாளின் வடிவமைப்பு

இலங்கை மத்திய வங்கியானது தொழிற்பாட்டு மற்றும் தேசிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் புதிய நாணய வடிவமைப்புகள், புதிய தொடர்கள் மற்றும் ஞாபகார்த்த வெளியீடுகளை காலத்திற்கு காலம் அறிமுகப்படுத்துகின்றது. 2025ஆம் ஆண்டு ஒகத்து மாதத்தில், இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டுநிறைவை குறிக்கும் வகையில், ரூ. 2,000 சுற்றோட்ட நியமத்திலான ஞாபகார்த்த நாணயத் தாள் வெளியிடப்பட்டதுடன், தேசத்தின் முன்னேற்றத்திற்கான அத்திவாரமாக பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்கான மத்திய வங்கியின் தளராத அர்ப்பணிப்பினை பிரதிபலித்து “சுபீட்சத்திற்கான உறுதிப்பாடு” எனும் 75ஆவது ஆண்டுநிறைவு கருப்பொருளுக்கு ஒத்திசைவாக இந்நாணயத் தாள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் ஐந்தாவது ஞாபகார்த்த நாணயத் தாளென்பதுடன், 50 மில்லியன் நாணயத் தாள்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட வழங்கலாகவும் வெளியிடப்பட்டது.

## அச்சிடுதல் மற்றும் வார்த்தல்

இலங்கையில் நாணயத்தை வெளியிடும் ஒரே நிறுவனம் என்ற வகையில், முறைமைசார் திட்டமிடல், துல்லியமான எதிர்வுகூறல், தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் உரிய காலத்தில் கட்டளையை முன்வைத்தல் என்பவற்றினூடாக நாணயத் தாள்களினதும் குற்றிகளினதும் போதுமானளவு வழங்கலொன்றினை உறுதிசெய்வதற்கான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் காணப்படுகின்றது.

## கட்டளையை முன்வைத்தல்

வருடாந்த நாணயத்திற்கான கட்டளைகள், பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்ற நாணயத்தை மாற்றீடுசெய்வதற்கான தேவைகள், அவசரகால இருப்பு மட்டங்கள் மற்றும் நிலவுகின்ற பொருளாதார நிலைமைகள் போன்ற அடிப்படையில் எறிவுசெய்யப்பட்ட வழங்கல் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படுகின்றன. கட்டளை அளவுகள் மற்றும் வழங்குநர்களின் தயார்நிலை என்பவற்றின் அடிப்படையில், ஒப்புக்கொள்ளப்பட்ட விநியோக அட்டவணைக்கு இணங்க சரக்குகள் விநியோகிக்கப்படுகின்றன.

## இருப்பு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியானது, நிலையானதும் தடையற்றதுமான வழங்கலை உறுதி செய்வதற்காக, முறைமைசார் கேள்வி எதிர்வுகூறலால் ஆதரவளிக்கப்பட்டு, நாணயத் தாள்களினதும் குற்றிகளினதும் போதுமானளவு இருப்பினை பேணுகின்றது. வழங்கல் தாமதங்கள், இயற்கை அனர்த்தங்கள் அல்லது குறிப்பாக பண்டிகை காலங்களில் கேள்வியில் ஏற்படும் உடனடி அதிகரிப்புக்கள் போன்ற எதிர்பாராத நிகழ்வுகளிலிருந்து வரும் இடர்நேர்வுகளை தணிப்பதற்காக பாதுகாப்பான இருப்பு மட்டங்கள் பேணப்படுகின்றன. அனைத்து சூழ்நிலைகளிலும் நாட்டின் நாணயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வங்கியின் திறனை உறுதி செய்வதற்கான பரந்தளவிலான அவசரகால உபாயத்தின் பகுதியொன்றாக இது அமைகின்றது.

## பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்ற நாணயத்தை மாற்றீடு செய்தல்

இலங்கை மத்திய வங்கியானது, கிழிந்த, உருச்சிதைக்கப்பட்ட அல்லது பிற விதங்களில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்ற நாணயத் தாள்களையும் குற்றிகளையும் முறைமைசார் விதத்தில் திரும்பப் பெற்று, அவற்றை பயன்படுத்துவதற்குப் பொருத்தமான நாணயங்களாக மாற்றுவதனூடாக, சுழற்சியிலுள்ள நாணயங்களின் தரத்தினை உறுதிசெய்கின்றது.

## போலியானநாணயத்தாளை ஒழித்தல்

போலியான நாணயத்தாளை தடுக்கும் நோக்கிலும் பொதுமக்கள் நம்பிக்கையை பேணும் வகையிலும், இலங்கை மத்திய வங்கியானது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் போலிநாணயத்தாள் பணியகத்துடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

## விழிப்புணர்வு

மேலும், வங்கியானது, சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அலுவலர்கள், காசினைக் கையாளுபவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோருக்கான உண்மையான நாணயத்தாளின் பாதுகாப்பு அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் உண்மையான நாணயத்தாள்களுக்கும் போலிகளுக்கும் இடையிலான வேறுபாட்டினை அடையாளம் காணும் திறனை மேம்படுத்துகின்றன.

## நாணயமாற்றல்

இலங்கை மத்திய வங்கியானது, இலங்கை வங்கியின் புறக்கோட்டை கிளையில் அமைந்துள்ள பொதுமக்கள் நாணயமாற்றுக் கருமபீடத்தினூடாகவும், மத்திய வங்கியின் தலைமையகத்தில் அமைந்துள்ள சேதமடைந்த நாணயத்தாள்களை மாற்றும் கருமபீடத்தினூடாகவும், நாணய மாற்று சேவைகளை வசதிப்படுத்துகின்றது.

## நாணயத் தொழிற்பாடுகளை சீரமைத்தல்

சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அதிகரிப்பு, நாணயத் தொழிற்பாடுகளின் வளர்ச்சிப்பெற்றுவரும் அளவு மற்றும் ஏற்கனவேயுள்ள நாணய செயல்முறைப்படுத்தல் உட்கட்டமைப்பிற்குள் காணப்படும் இயலாற்றல் தடைகள் என்பவற்றிற்கு பதிலிறுத்தும் வகையில், இலங்கை மத்திய வங்கி 2025 திசெம்பரில் அதன் நாணயத் தொழிற்பாடுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய சீரமைப்பினை முன்னெடுத்தது.

### 2025ஆம் ஆண்டிற்கான முக்கிய பண்புகள்

- உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்காக ரூ. 496.95 பில்லியனாகவிருந்ததோடு, அதில் ரூ. 496.29 பில்லியன் நாணயத் தாள்களையும் ரூ. 0.66 பில்லியன் நாணயக் குற்றிகளையும் மொத்தமாக வழங்கியதுடன், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த வைப்புக்கள் நாணயத் தாள்களில் ரூ. 287.08 பில்லியன் தொகையாகவிருந்தன.
- நீதிமன்ற நடவடிக்கை முறைகளுக்காக நாணயத் தாள்களைப் போலியாக உருவாக்கியமைக்கான சான்றாக போலிநாணயத் தாள்களை அடையாளம் காணும் வழக்குகளுக்காக 83 சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், போலிநாணயத் தாள்களுடன் தொடர்புடைய 13 நீதிமன்ற வழக்குகளுக்காக பிரசன்னப்படுத்தப்பட்டது.
- இலங்கை மத்திய வங்கியிலுள்ள நாணய மாற்று கருமப்பீடங்களினூடாக ரூ. 1,139 மில்லியன் நாணயத் தாள்களும், ரூ. 11.84 மில்லியன் நாணய குற்றிகளும் மாற்றப்பட்டதோடு, மாற்றப்பட்ட சேதமடைந்த நாணயத் தாள்கள் ரூ. 196.46 மில்லியனாகவிருந்தன.
- வங்கியானது ரூ. 91.23 பில்லியன் தொகையான 141.55 மில்லியன் நாணயத் தாள் துண்டுகளை சுழற்சியிலிருந்து அகற்றியது.

## வரைபடம் 1 - 5ஆவது ஞாபகார்த்த நாணயத் தாளின் மாதிரி

வரைபடம் - 13

### முன்பக்கம்




### பின்பக்கம்




**முன்பக்கம்:**

மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டிடம் மற்றும் கொழும்பு வெளிச்சவீடு கடிகார கோபுரம், அண்மைய நகர அபிவிருத்திகளைக் காட்சிப்படுத்தும் கலைநயமிக்க கொழும்பு வானோரத் தோற்றம் மற்றும் 75வது ஆண்டுநிறைவு இலச்சினை ஆகியவற்றுடன் இப்படம் அமைந்துள்ளது. பாதுகாப்பு அம்சங்களைச் சுட்டிக்காட்டும் எண் குறியீடுகள் (1, 2, 3, 4, 5) இப்படத்தின் மீது பொதிக்கப்பட்டுள்ளன.

**பின்பக்கம்:**

இந்நாணயத்தாள், இலங்கையின் கலைநயமிக்க வரைபடம், நீல அல்லி, மற்றும் மத்திய வங்கியின் நோக்கு கூற்று ஆகியவை இடம்பெற்றுள்ளன. இவை பொருளாதார தாக்குபிடிக்கும்தன்மை மற்றும் முன்னேற்றத்திற்கான மத்திய வங்கியின் அர்ப்பணிப்பை அடையாளப்படுத்துகின்றன. மேலும், அதன் மீது (1, 2, 5) என்ற எண்களும் பொதிக்கப்பட்டுள்ளன.

### ரூ. 2000 ஞாபகார்த்த நாணயத் தாள்

இலங்கை மத்திய வங்கி அதன் 75ஆவது ஆண்டுநிறைவைக் குறிக்கும் முகமாக 2025 ஓகத்து 28 அன்று ரூ.2000 ஞாபகார்த்த நாணயத் தாளை வெளியிட்டது.





**1 2 தோற்றம்**

தாளின் வடிவமைப்பில் மறைக்கப்பட்ட நுண்ணிய எழுத்துக்களைப் பார்க்கவும்.

வாள் ஏந்திய சிங்கத்தைக் கொண்ட நீர்வரி அடையாளத்தைப் பார்ப்பதற்கு நாணயத் தாளை வெளிச்சத்தில் பிடிக்கவும்.

நாணயத் தாளை வெளிச்சத்தில் நீங்கள் பிடிக்கின்ற போது ஊடாகப் பார்க்கும் பாதுகாப்புப் பண்பில் வாள் ஏந்திய சிங்கத்தின் முழுமையான உருவத்தைப் பார்க்கவும்.



**3 சரித்துப்பார்த்தல்**

நீலத்தில் இருந்து பச்சையாகவும் மறுதலையாகவும் நிறம் மாறுகின்ற பாதுகாப்பு நூலில் வர்ண மாற்றத்தைப் பார்ப்பதற்கு தாளை மேலிருந்து கீழ் சரித்துப் பார்க்கவும் அத்துடன் பாதுகாப்பு நூலில் கொழும்பு வெளிச்சவீட்டு மணிக்கூட்டுக் கோபுரத்தையும் 2000 எண்ணையும் கொண்ட உருவத்தையும் பார்க்கவும்




**4 தொட்டுணர்தல்**

2000 வகை மற்றும் வங்கியின் தலைப்பில் உயர்த்தப்பட்ட அச்சினைத் தொட்டுணரவும்.

அத்துடன் ஒவ்வொரு கட்டம் மீதும் வைர வடிவத்துடனான ஆறு கட்டங்களையும் உணருங்கள். நாணயத் தாளின் பெறுமதியினை கட்புலக் குறைப்பாடு உடையோர் இனங்காண்பதற்கு தொட்டுணரக்கூடிய பண்பு உதவுகின்றது.




**5 கூர்ந்துநோக்குதல்**

புற ஊதா வெளிச்சத்தின் கீழ் நாணயத் தாளை கூர்ந்துநோக்கி முன்பக்கம் மீது ஆண்டுநிறைவு கருப்பொருள் அதேபோன்று தொடுவானம் என்பவற்றில் ஒளிரும் இரட்டை நிறங்கள் தோன்றுவதைப் பார்க்கவும்.

நாணயத்தின் வகையும் புற ஊதா வெளிச்சத்தின் கீழ் தோன்றுகின்றது. இப்பண்பு இயந்திரம் வாசிக்கத்தக்கதாகும்.

# நாணய முகாமைத்துவத்தின் பரிணாம வளர்ச்சி




**கடந்த 75 ஆண்டுகாலமாக, மாறிவரும் பொருளாதார நிலைமைகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு தேவைப்பாடுகள் மற்றும் அதிகரித்து வரும் பொதுமக்கள் எதிர்பார்க்கைகள் என்பவற்றிற்கு ஏற்ப இலங்கையில் நாணய முகாமைத்துவமானது குறிப்பிடத்தக்களவு பரிணமித்துள்ளது. இம் முன்னேற்றமானது, இலங்கை மத்திய வங்கியின் இலங்கை நாணயத்தின் மீதான நம்பிக்கையை பேணுவதற்கும், தேசிய பணச் சுழற்சியின் நேர்மையையும் நிலையுறுதித்தன்மையையும் நிலைநிறுத்துவதற்கான தொடர்ச்சியான கடமைப்பொறுப்பினை பிரதிபலிக்கிறது.**

### சட்டக் கட்டமைப்பின் தோற்றம்: நாணய முகாமைத்துவத்தின் ஆளுகை

இலங்கையில் நாணய முகாமைத்துவத்திற்கான முறைமைசார் கட்டமைப்பானது, 1884ஆம் ஆண்டின் தாள் நாணயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நாணயச் சபை முறைமை தாபிக்கப்பட்டதுடன் தோற்றம்பெற்றது. இக்கட்டமைப்பானது, 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டம் இயற்றப்படும் வரை தொடர்ந்ததோடு, 1950 ஓகத்து 28 அன்று இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்படுவதற்கான சட்ட அடித்தளத்தை வழங்கி, நாட்டின் நாணய வரலாற்றில் முக்கிய மைல்கல்லொன்றாக அமைந்தது. அக்காலப்பகுதி முதல், இலங்கையின்

சட்டப்பூர்வமான நாணயத்தை வெளியிடுதற்கான, முகாமைசெய்வதற்கான, பாதுகாப்பதற்கான ஏகப் பொறுப்பினை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொண்டது.

நாணய முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆரம்பத்தில் மத்திய வங்கியின் வங்கித்தொழில் மற்றும் நாணயத் திணைக்களத்தின் நாணயப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

## இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்தினை தாபித்தல்

1978இல் நாணயத் திணைக்களம் தாபிக்கப்பட்டதுடன் நாணய முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிறுவனசார் இயலாற்றல் மேலும் வலுப்படுத்தப்பட்டு, இதன் மூலம் நாணயத் தொழிற்பாடுகளை குறிப்பிடத்தக்களவு விரிவடையசெய்தது. வடிவமைப்பு மற்றும் உற்பத்தி முதல் சுற்றோட்டம் மற்றும் இறுதியான அகற்றல் வரை நாணயத்தின் முழு வாழ்வியல் சுற்றுவட்டத்தினையும் முகாமைசெய்யும் பொறுப்பானது நாணயத் திணைக்களத்திடம் உரித்தளிக்கப்பட்டுள்ளது. நாணயத் திணைக்களத்தின் முக்கிய நாணய முகாமைத்துவத் தொழிற்பாடுகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

- நாணயத்தாள் அச்சிடுதல் மற்றும் வார்த்தல் தேவைப்பாடுகளை மதிப்பீடுசெய்தல்
- வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (பெறுகை)
- வழங்கல் மற்றும் விநியோகம் (தரத்தினையும் அளவினையும் உறுதிசெய்தல்)
- பயன்படுத்துவதற்குப் பொருத்தமற்ற நாணயத்தை சுற்றோட்டத்திலிருந்து உரிய நேரத்தில் திரும்பப் பெறுதல்
- நாணய அத்தாட்சிப்படுத்தல் மற்றும் போலிநாணயத்தாள் தடுப்பு நடவடிக்கைகள்

நாணயவிதிச் சட்டத்தை மாற்றீடுசெய்து, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதுடன், நாணய முகாமைத்துவத்திற்கான சட்டக் கட்டமைப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டு, மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மையும் பொறுப்புக்கூறுந்தன்மையும் ஆளுகையும் மேம்படுத்தப்பட்ட அதேவேளை, நாணய வெளியீட்டினதும் முகாமைத்துவத்தினதும் மீதான அதன் பிரத்தியேக அதிகாரமும் பிரதிபலிக்கப்பட்டது.

1970இல் நாணயப் பயன்பாட்டிலிருந்து செல்லுபடியற்றதாக்கப்பட்டதன் பின்னர் சட்டப்பூர்வ நாணயங்களாக கருதப்படாத 1970 ஒத்தோபர் 26ஆம் திகதிக்கு முன்னைய திகதியை தாங்கிய ரூ. 50 மற்றும் ரூ. 100 நாணயத் தாள்கள் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் அனைத்து நாணயத் தாள்களும் குற்றிகளும் சட்டப்பூர்வ நாணயங்களாகும்.

## நாணய வகைக் கட்டமைப்பின் பரிணாமம்




இலங்கை மத்திய வங்கி 1951இல் VIவது ஜோர்ஜ் மன்னர் தொடரின் கீழ், ரூ. 1/- மற்றும் ரூ. 10/- நாணய வகைகளை உள்ளடக்கிய அதன் முதல் நாணயத்தாள் தொடரை வெளியிட்டது. அக்காலப்பகுதி முதல், இலங்கையின் நாணயக் கட்டமைப்பானது, பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம் மற்றும் நாணய முகாமைத்துவம் என்பவற்றிற்கு பதிலிறுக்கும் வகையில் படிப்படியாக பரிணாமமடைந்துள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னரான ஆரம்ப காலங்களில், அவ்யுகத்தின் கொள்வனவு சக்தியை பிரதிபலிக்கும் வகையில் ரூ. 1/-, ரூ. 2/-, ரூ. 5/-, ரூ. 10/-, ரூ. 50/- மற்றும் ரூ. 100/- போன்ற குறைந்தளவிலான நாணய வகைகள் வெளியிடப்பட்டன. அடுத்து வந்த தசாப்தங்களில், அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்காக, நாணய வகைகள் படிப்படியாக உயர்த்தப்பட்டதுடன், 1979இல் ரூ. 20/- அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் 1981இல் ரூ. 500/- மற்றும் ரூ. 1,000/-, 1998இல் ரூ. 200/- அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மேலும் 2000களில் பாரிய மதிப்பிலான கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தும் வகையில் ரூ. 2,000/- மற்றும் ரூ. 5,000/- நாணயத் தாள்கள் வெளியிடப்பட்டன.

2011இலிருந்து படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்ட பதினொன்றாவது தொடர் உள்ளிட்ட நவீன நாணயத் தொடர்கள், ரூ. 20/- முதல் ரூ. 5,000/- வரையான முழுமையான நாணய வகை வீச்சுக்களை கொண்டுள்ளதோடு, போலிநாணயங்களைத் தடுப்பதற்காகவும் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தில் உயர்ந்த கொடுக்கல்வாங்கல் தேவைகளை உள்ளடக்குவதற்கும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு அம்சங்களினால் ஆதரவளிக்கப்பட்டுள்ளன. இப்பரிணாமமடைந்த கட்டமைப்பானது, பொருளாதார நிதர்சனங்கள், தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டு வகைகள் என்பவற்றை பூர்த்தி செய்வதற்கான இலங்கை மத்திய வங்கியின் நாணய கட்டமைப்பின் தொடர்ச்சியான ஏற்றதாக்கிக்கொள்ளும்தன்மையை பிரதிபலிக்கிறது.

அதேபோன்று, நாணய வகைகள், அளவுகள் மற்றும் உலோகக் கலவைகள் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களினூடாக, பாவனைக்காலம், கையாள்வதில் எளிமை மற்றும் செலவில் செயற்திறன்மிக்கத்தன்மை என்பவற்றை மேம்படுத்தி நாணயம் பரிணாமமடைந்துள்ளன. 2017இல் அறிமுகப்படுத்தப்பட்ட மிக அண்மைய சுற்றோட்டத்திலுள்ள நாணயக் குற்றித்தொடர்கள், நான்கு நாணய வகைகளை உள்ளடக்கியுள்ளதோடு அனைத்தும் துருப்பிடிக்காத உருக்கில் வார்க்கப்பட்டுள்ளன.

## நாணயத் தாளின் கணக்கிடல், எண்ணுதல் மற்றும் தரம் பிரித்தல் முறைமையை தாபித்தல்

கைகளினால் செய்முறைப்படுத்தப்படும் கணக்கிடல், வகைப்படுத்தல், மற்றும் அழிக்கப்படுதல் முறைமைகள், 1992இல் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட அதிவேக நாணயத்தாளின் கணக்கிடல், எண்ணுதல் மற்றும் தரம் பிரித்தல் செயன்முறையினால் படிப்படியாக மாற்றீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவை மேலும் மேம்பட்ட நாணயத்தாள் செயலாக்க முறைமைகளாக பல்வேறு தரப்படுத்தல்களை கொண்டமைந்தன. இம்முறைமைகள், பயன்படுத்துவதற்குப் பொருத்தமானவற்றை தரம் பிரித்தல், சரிபார்த்தல், பொதிசெய்தல், சுருக்கி உறையிடப்படல், தன்னியக்கமாக கணக்கீடு செய்தல், மற்றும் சிற்றறிகின்ற முறைமையின் மூலம் பாதுகாப்பாக அழித்தல் என்பவற்றை வசதிப்படுத்துகின்றன. தற்போது பாவனையிலுள்ள நாணயத்தாள்களைச் செய்முறைப்படுத்தும் இயந்திரங்கள் 2013இல் தொழிற்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட்டன.



இயந்திரங்கள் மூலம் செய்முறைப்படுத்த முடியாத சேதமடைந்த நாணயத் தாள்கள், கடுமையான மேற்பார்வைக் கட்டுப்பாடுகளின் கீழ் கைகளினால் கையாளப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்ட தூளாக்கும் முறைமைகளை பயன்னடுத்தி அழிக்கப்படுகின்றன. இம்மேம்பாடுகள், உயர்ந்தளவில் தன்னியக்கமாக்கப்பட்ட, செயல்திறன்வாய்ந்த மற்றும் பாதுகாப்பான தொழிற்பாட்டு கட்டமைப்பை தோற்றுவித்ததுடன், உள்நாட்டு கட்டுப்பாடுகளை வலுப்படுத்தி, தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை குறைத்து, நாணயத்தின் முழு வாழ்வியல் சுற்றுவட்டத்திற்கிடையிலான சேவை வழங்கலை மேம்படுத்தியுள்ளது.

**வங்கியின் வகிபாகம் >** நாணயத் தொழிற்பாடுகள்

## ஞாபகார்த்த நாணயத்தாள் மற்றும் குற்றிகளின் வெளியீடு

1998ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நாணயவிதிச் சட்டம் (திருத்தப்பட்டது) 52அ பிரிவினை அறிமுகப்படுத்தி, ஞாபகார்த்த நாணயத்தாள்களையும் குற்றிகளையும் வெளியிடுவதற்கும், அவற்றின் முகப்பெறுமதியையும் விட அதிகமான விலைக்கு விற்பனை செய்வதற்கும் வெளிப்படையான தத்துவமளிப்பினை மத்திய வங்கிக்கு வழங்கியது. இவ்வேற்பாடானது, 1998 பெப்புருவரி 4ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்ததாக கருதப்படுவதுடன், மேலும் அத்திகதிக்கு முன்னர் வெளியிடப்பட்ட அல்லது விற்பனைசெய்யப்பட்ட எந்தவொரு ஞாபகார்த்த நாணயத்தாளோ அல்லது குற்றியோ சட்டபூர்வமாக வெளியிடப்பட்டதாகவோ அல்லது விற்கப்பட்டதாகவோ அங்கீகரிக்கப்படுகின்றது.

1957இல் வெளியிடப்பட்ட முதல் ஞாபகார்த்த நாணயத்திலிருந்து, இலங்கை மத்திய வங்கி 76 ஞாபகார்த்த நாணயங்களை வெளியிட்டுள்ளது இதில் 71 நாணயத் குற்றிகளும் 5 நாணயத் தாள்களும் உள்ளடங்குகின்றன. இவ்வெளியீடுகள் சட்டப்பூர்வ நாணய நிலைமைகளை கொண்டிருந்தாலும், அவை முக்கியமாக நாணயவியல், கல்விசார் மற்றும் சேகரிப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

## நாணய அரும்பொருட்காட்சிசாலை

1982இல் முதன்முதலாக நிறுவப்பட்டு காலப்போக்கில் விரிவுபடுத்தப்பட்ட நாணய அரும்பொருட்காட்சிசாலையினூடாக பொதுமக்களின் அறிவு விருத்தியானது மேலும் ஆதரவளிக்கப்படுகின்றது. 2011இல் திறக்கப்பட்டு, சென்றல் பொயின்ட் கட்டடத்தில் அமைந்துள்ள நவீன பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலையானது, நாணயத்தின் பரிணாமம், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் மத்திய வங்கியின் வகிபாகம் என்பவவை பற்றிய ஊடாடும் காட்சிதிரைகளையும் கல்விசார் உள்ளடக்கங்களையும் வழங்கி, பொதுமக்களுக்கு சென்றடையும் நிதியியல் அறிவினையும் மேம்படுத்தும் முக்கிய தளமாக செயல்படுகின்றது.

## நாணயத் தொழிற்பாடுகளை சீரமைத்தல்

தோற்றம்பெற்றுவரும் தொழிற்பாட்டு தேவைப்பாடுகளுக்கு பதிலிறுக்கும் வகையில், நாணயத் திணைக்களமானது, நாணயத் தொழிற்பாடுகளை சீரமைக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதுடன், நடுத்தர கால தொழிற்பாட்டு தடங்கல்களுக்கு தீர்வுகாண்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இச்செயற்திட்டமானது, செயல்முறைப்படுத்தல் இயலாற்றலை விரிவடையசெய்வதுடன், தொழிற்பாட்டு பணிப்போக்குகளை எளிமைப்படுத்துதல், கைகளால் செய்முறைப்படுத்தும் தலையீட்டை குறைத்தல், பத்திரமான மற்றும் பாதுகாப்பான தரநிலைகளை வலுப்படுத்துதல், மற்றும் மத்திய வங்கியின் காசு முகாமைத்துவ தொழிற்பாடுகளின் தாக்குப்பிடிக்குந்தன்மையை மேம்படுத்துதல் என்பவற்றில் கவனம் செலுத்துகின்றது.

## எதிர்காலத்திற்கு தயாரான நாணய முகாமைத்துவ முறைமையொன்றினை நோக்கி

இலங்கை மத்திய வங்கியானது அதன் 75 ஆண்டு பயணத்தின் போது, பொருளாதார மற்றும் தொழிற்பாட்டு பதட்டமாக காலக்கட்டங்களிலும் கூட தாக்குப்பிடிக்குந்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் பொதுமக்கள் நம்பிக்கை என்பவற்றை உறுதிசெய்யும் வகையில், நாட்டின் நாணய முறைமையை தொடர்ச்சியாக வலுப்படுத்தி வந்துள்ளது. பல தசாப்தங்களாக அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, வங்கி வலுவான வியாபாரத் தொடர்ச்சி ஏற்பாடுகள், பாதுகாப்பான களஞ்சிய கட்டமைப்பு, மற்றும் செயல்திறன்மிக்க காசு விநியோக கட்டமைப்புகள் என்பவற்றை கட்டியெழுப்பியுள்ளதுடன், இவை நாடளாவிய ரீதியில் நாணயத்தை இடையூறின்றி பொதுமக்கள் அணுகும் வசதியை பாதுகாக்கின்றன. அவசரக்கால திட்டமிடலிலும் தொழிற்பாட்டு நெகிழ்வுத்தன்மையிலும் நவீன கட்டமைப்பிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மேம்பாடுகள், அனைத்து சூழ்நிலையிலும் தேசிய நாணயத்தின் தரம், நேர்மை மற்றும் நம்பகத்தன்மையை என்பவற்றை பாதுகாக்கும் மத்திய வங்கியின் அர்பணிப்பினை எடுத்துக்காட்டுகின்றன.

கொடுப்பனவுத் தோற்றப்பாடு தொடர்ச்சியாக பரிணாமமடைந்து கொண்டிருந்தாலும், பணம் பொருளாதாரத்தின் முக்கியமானதும் அனைவரையுமுள்ளடக்கியதுமான கூறொன்றாக காணப்படுகின்றது. முன்னோக்கி பார்க்கையில், நாணய முகாமைத்துவத்தின் எதிர்காலமானது பாரியளவிலான தன்னியக்கமாக்கம், தரவு அடிப்படையிலமைந்த கேள்வி எதிர்வுகூறல், மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள், மற்றும் நிலைபெறத்தக்க நடைமுறைகள் என்பவற்றால் வடிவமைக்கப்படும். 75 ஆண்டுகால நிறுவனசார் அறிவினையும் பொதுச் சேவையையும் அடிப்படையாகக் கொண்டு, மத்திய வங்கியானது, பாதுகாப்பானதும் தாக்குப்பிடிக்குந்தன்மைமிக்கதும் நம்பகமானமானதுமாக பரிமாற்றல் ஊடகமாக பணம் தொடர்ந்து தொழிற்படுவதை உறுதி செய்வதில் அர்பணிப்புடன் செயல்படுவதோடு, எதிர்கால தலைமுறைகளுக்கான பொருளாதார நிலையுறுதித்தன்மைக்கும் சுபீட்சத்திற்கும் ஆதரவளிக்கும்.



# பன்னாட்டு ஈடுபாடுகள்

இலங்கை மத்திய வங்கியானது, உலகளாவிய சமூகத்துடனான நிதியியல் மற்றும் பொருளாதார ஈடுபாடுகளில் நாட்டினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் நீண்ட காலமாக முக்கிய பங்காற்றி வருகின்றது. 2025இல், வங்கியானது, பல்புடை மற்றும் இருபுடை நிறுவனங்களுடனும், வெளிநாட்டு மத்திய வங்கிகளுடனும், சர்வதேச நிதியியல் நிறுவனங்களுடனும் ஏனைய உலகளாவிய ஆர்வலர்களுடனும் உபாய ரீதியான பங்குடைமையை பேணிவளர்ப்பதன் மூலம், அதன் சர்வதேச பிரசன்னத்தை தொடர்ச்சியாக வலுப்படுத்தியது. சர்வதேச மன்றங்களில் முனைப்பாக பங்குபற்றியமை, கூட்டிணைந்த முன்னெடுப்புக்கள் மற்றும் அறிவு பகிர்வு தளங்கள் என்பவற்றினூடாக, வங்கியானது கொள்கை ஒருங்கிணைப்பினையும், தொழில்நுட்ப ஒத்துழைப்பினையும், நிறுவனம்சார் இயலளவையும் மேலும் மேம்படுத்தியது.

## பல்புடை மற்றும் இருபுடை நிறுவனங்களுடனான ஈடுபாடுகள்

மத்திய வங்கியானது, 2025இல் பன்னாட்டு நாணய நிதியத்துடனான இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறையாக்கத்திற்கு ஆதரவளிப்பதில் தொடர்ந்தும் முக்கிய பங்காற்றியது. அரசாங்கத்துடனும் ஏனைய தொடர்புடைய ஆர்வலர்களுடனுமான நெருங்கிய ஒருங்கிணைப்பில், உடன்பட்ட சீர்திருத்தங்களினதும் பேரண்டப்பொருளாதார கொள்கை வழிமுறைகளினதும் வெற்றிகரமான நடைமுறையாக்கத்தினை உறுதி செய்வதற்காக, பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களுடன் கொள்கை ஆலோசனைகளிலும், நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகளிலும், தொழில்நுட்ப கலந்துரையாடல்களிலும் மத்திய வங்கி முனைப்புடன் ஈடுபட்டது.

2025இல், இலங்கை மத்திய வங்கிக்கும் சீன மக்கள் வங்கிக்குமிடையிலான இருதரப்பு நாணயப் பரஸ்பரப் பரிமாற்றல் உடன்படிக்கை நீடிக்கப்பட்டது. மத்திய வங்கியானது, இந்திய ரிசேர்வ் வங்கியுடனான சிறப்பு பரஸ்பரப் பரிமாற்றல் உடன்படிக்கைக்கான இரண்டாவது பிற்சேர்க்கையில் கைச்சாத்திட்டதுடன், பல்வேறு விடயங்கள் குறித்து பரஸ்பர ஆர்வமுள்ள அனைத்தையுமுள்ளடக்கியதும் ஆக்கப்பூர்வமானதுமான உயர் மட்ட கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டன.

2025இல், மத்திய வங்கியானது, நிதியியல் அறிவினையும் வசதிக்குட்படுத்தலையும் மேம்படுத்துதல் மற்றும் நிதியியல் துறை பாதுகாப்பு வலையையும் தீர்மான கட்டமைப்பினையும் வலுப்படுத்துதல் உள்ளடங்கலாக, நிதியியல் முறைமையை முன்னேற்றுவதற்கு பல்வேறு சர்வதேச பங்காளர்களுடன் அதன் ஒத்துழைப்பினை வலுப்படுத்தியது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையும், நிதியியல் அறிவு பற்றிய பாடவிதானத்தினத்தினையும் விழிப்புணர்வூட்டும் ஆவணங்களையும் உருவாக்கவும் வெளியிடவும் தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவிகளை வழங்கின. நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்புடனான ஈடுபாடானது, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கும் அதன் அடுத்த கட்டத்தை உருவாக்குவதற்குமான நிதியியல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்க உதவிய அதேவேளை, 2025இல் மத்திய வங்கியானது, நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பின் பாலின ரீதியில் அனைவரையுமுள்ளடக்கும் நிதித் தூதுவ நிறுவனமாகவும் அங்கீகரிக்கப்பட்டது. மேலும், உலக வங்கியினால் ஆதரவளிக்கப்பட்ட நிதியியல் துறை பாதுகாப்பு வலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிறுவனம்சார் இயலாற்றல் மற்றும் ஆளுகை கட்டமைப்பை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டதுடன், செயலாற்றல் அடிப்படையிலான நிதியிடலினூடாக நிதியியல் உதவியும் வழங்கப்பட்டது.

மேலும், இலங்கை மத்திய வங்கியானது, தென்கிழக்காசிய மத்திய வங்கியின் இயலாற்றல் மேம்பாடு மற்றும் கொள்கை உரையாடல் முன்னெடுப்புக்களில் முனைப்புடன் பங்குபற்றியதனூடாக, பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தியது.

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவானது, 2026ஆம் ஆண்டிற்கான ஆசிய பசுபிக் குழுமத்தின் 3வது பரஸ்பர மீளாய்வினை தயாரிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி, சர்வதேச அமைப்புக்களுடன் பரந்தளவில் ஈடுபட்டது.

மத்திய வங்கியானது, பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட சார்க்பினான்ஸ், பிரெஞ்சு அபிவிருத்தி முகவராண்மை மற்றும் பிரான்சு மத்திய வங்கி போன்ற சர்வதேச அமைப்புக்களுடன் நாணயக் கொள்கை, நிதியியல் துறை உறுதித்தன்மை மற்றும் சீர்திருத்தங்கள், சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் துறை நிகழ்ச்சித்திட்டங்கள், பேரண்ட நிதியியல் மேற்பார்வை மற்றும் நிலைப்பெறுத்தக்க நிதி போன்ற துறைகளில் பல்வேறு கொள்கைசார் கூட்டங்களில் பங்குபற்றியது. மேலும், பொருளாதார கொள்கை கலந்துரையாடல்களில் மத்திய வங்கியின் டிஜிட்டல் பிரசன்னத்தையும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய ஆர்வலர்களிடையே நிறுவனம்சார் சிந்தனைகளை பகிரும் தலைமைத்துவத்தையும் வலுப்படுத்துவதற்காக, இந்தியாவுடன் இணைந்து நேர்காணலொன்றை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. இத்தொடரானது, முக்கிய பொருளாதார பிரச்சினைகள் குறித்து முதன்மைக் கொள்கை வகுப்பாளர்களுடனும் நிபுணர்களுடனும் கலந்துரையாடல்கள் இடம்பெறச் செய்வதை நோக்காகக் கொண்டுள்ளது.

## பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர்

மத்திய வங்கி அலுவலர்கள், பன்னாட்டு நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக தொடர்ச்சியாக பணிபுரிந்து, பேரண்டப்பொருளாதார கொள்கை மற்றும் சர்வதேச பொருளாதார விவகாரங்களில் அவர்களின் நிபுணத்துவத்தினைப் பிரதிபலிக்கின்றனர். அவ்வலுவலர், இலங்கை, இந்தியா, வங்காளதேசம் மற்றும் பூட்டான் என்பனவற்றை உள்ளடக்கிய நாடுகளின் நலவுரித்துக்களை உலகளாவிய மட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வல்லமையினை நன்கு கொண்டிருந்தார்.

## இயலாற்றலைக் கட்டியெழுப்புதல்

கொள்கைமயப்படுத்தப்பட்ட ஈடுபாடுகளுக்கு இணையாக, இயலாற்றல் அபிவிருத்தியும் அறிவாற்றல் பகிர்வும் மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைகளில் முக்கிய பாகமொன்றாக உருவாகின. மத்திய வங்கியின் அலுவலர்கள், பெரும்பாலும் பன்னாட்டு நாணய நிதியம், தென்னாசிய பிராந்திய பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி நிலையம், டியூச்புண்டெஸ்ர் வங்கி, தென்கிழக்காசிய மத்திய வங்கி நிலையம் போன்ற நிறுவனங்களால் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டங்கள், இணைக்கற்றல் முன்னெடுப்புக்கள், சர்வதேச மன்றங்கள் மற்றும் சாவதேச மாநாடுகள் என்பவற்றில் பங்குபற்றினர். முதலீடுகள் தொடர்பான மத்திய வங்கி அலுவலர்களின் பகுப்பாய்வு இயலாற்றலை மேம்படுத்துவதற்கும் மாதிரிகளையும் கட்டமைப்புக்களையும் உருவாக்குவதற்குமான தொழில்நுட்ப உதவி கிடைக்கப்பெற்றது.

மத்திய வங்கியானது, அதன் அறிவு மற்றும் அனுபவங்களை சக மத்திய வங்கிகளுடன் பகிர்ந்துக்கொண்டது. பிஜி ரிசர்வ் வங்கியால் நடாத்தப்பட்ட இணைக்கற்றல் பரிமாற்றமானது, நுகர்வோர் பாதுகாப்பு, நிலைப்பெறத்தக்க நிதி, டிஜிட்டல் நிதியியல் சேவைகள் மற்றும் சந்தை நடத்தைக்கான மேற்பார்வை போன்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கியது. மத்திய வங்கியானது, நேபாள ராஷ்டிர வங்கியின் அலுவலர்களுக்கான ஆளுகை, இடர்நேர்வு அடிப்படையிலான கணக்காய்வு, தகவல் முறைமைகள் கணக்காய்வு மற்றும் உலகளாவிய உள்ளக கணக்காய்வு நியமங்கள் என்பன பற்றிய பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடாத்துதல் போன்ற இரட்டை பங்காற்றியது. மத்திய வங்கியானது, 18ஆவது வருடாந்த மத்திய வங்கி இடர்நேர்வு முகாமையாளர்கள் மாநாட்டில் "நெருக்கடிக்கும் மீட்சிக்கும் மத்தியில் ஐந்தொகை இடர்நேர்வுகளை முகாமைசெய்தல் - இடர்நேர்வு குறிக்காட்டி அணுகுமுறை" என்ற தலைப்பில் குழும முன்வைப்பாளராக பங்குபற்றியது.

## கொடுகடன் தரமிடலும் ஒழுங்குமுறைப்படுத்தல் உடன்படிக்கைகளும்

இலங்கையின் நிதியில் நம்பகத்தன்மையை பேணுவதற்காக, மத்திய வங்கி, பிட்ச், மூடிஸ், ஸ்டான்டட் அன்ட் புவர் போன்ற கொடுகடன் தரமிடல் நிறுவனங்களுடன் 2025 முழுவதும் அதன் ஒத்துழைப்பை தொடர்ச்சியாக முன்னெடுத்தது.

## ஆளுநரின் சர்வதேச ஈடுபாடுகள் - 2025

2025இல், ஆளுநரின் சர்வதேச ஈடுபாடுகள், பல்புடை நிறுவனங்களுடன் உறவுகளை வலுப்படுத்துவதிலும், நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்குந்தன்மையை மேம்படுத்துவதிலும், நிதியியல் வசதிக்குட்படுத்தலை முன்னேற்றுவதிலும், முதலீட்டாளர் நம்பிக்கைக்கு ஆதரவளிப்பதிலும் கவனம் செலுத்தின. இந்த ஈடுபாடுகள், ஆழமான கொள்கை கலந்துரையாடல்கள், நடைமுறையிலுள்ள சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றகரமான மீளாய்வுகளையும் அத்துடன் அபிவிருத்தி பங்காளர்களுடனும், ஒழுங்குமுறைப்படுத்துநர்களுடனும், பிராந்திய இணைத்தரப்பினர்களுடனும் பரந்தளவிலான ஒத்துழைப்பினையும் ஏற்படுத்த ஏதுவாகவிருந்தன.

### பல்புடை நிறுவனங்களுடனான ஈடுபாடுகள்

ஆண்டு முழுவதிலும் பன்னாட்டு நாணய நிதியத்துடனும் உலக வங்கியுடனுமான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மையமாக காணப்பட்டது. ஆளுநர், பரந்தளவில் அறிவினை பகிர்வதற்கு வசதியளித்த, பன்னாட்டு நாணய நிதிய - யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை பிராந்திய மாநாட்டில் “தோற்றம்பெற்று வருகின்ற மற்றும் முன்னணியிலுள்ள ஆசியாவில் பொருளாதார கொள்கை வகுப்பாளர்களுக்கான அடுத்த கட்டம் என்ன?” குறித்த அமர்வில் பெப்ருவரியில் குழு அங்கத்தவராக பங்குபற்றினார். இதனைத் தொடர்ந்து, மாச்சு மாதத்தில் டோக்கியோவில் இடம்பெற்ற, கூட்டுத்தாபன ஒத்துழைப்பினூடாக பிராந்தியத் தாக்குப்பிடிக்குந்தன்மை மீது கவனம் செலுத்திய பன்னாட்டு நாணய நிதிய உயர் மட்ட நிகழ்வு இடம்பெற்றதோடு, ஆளுநர் “மீளவலுப்படுத்தப்பட்ட உலகளாவிய நிதியியல் பாதுகாப்பு வலை மற்றும் அதன் மையத்தில் பன்னபட்டு நாணய நிதியத்தின் வகிபாகம்” குறித்த அமர்வில் குழு அங்கத்தவராக பங்குபற்றி தனது பங்களிப்பை வழங்கினார்.

மேலும், ஏப்பிறல் மாதத்தில் இடம்பெற்ற பன்னாட்டு நாணய நிதிய-உலக வங்கியின் வசந்தக்கால கூட்டங்கள் மற்றும் ஒத்தோபர் மாதத்தில் இடம்பெற்ற வருடாந்த கூட்டங்கள் என்பவற்றில் பங்குபற்றியமையானது, பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் அடையப்பட்ட முன்னேற்றத்தை மீளாய்வு செய்யவும், கொள்கை முன்னுரிமைகள் பற்றி கலந்துரையாடவும், தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி தேவைகளை அடையாளம் காணவும், அபிவிருத்தி பங்காளர்கள், சர்வதேச நிதியியல் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர் குழுக்களுடன் பரந்தளவிலான இருதரப்பு கூட்டங்களை நடாத்தவும் தளங்களை வழங்கின.

### பிராந்திய ஒத்துழைப்பும் அறிவினை பகிர்தலும்

நேபாள ராஷ்டிர வங்கியும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பும் ஏற்பாடு செய்த 6வது தெற்காசிய தலைவர்கள் வட்டமேசை கலந்துரையாடலில் பங்குபற்றியதனூடாக, ஆளுநர் பிராந்தியக் கொள்கை உரையாடல்களுக்கு முனைப்புடன் பங்களித்தார். இக்கலந்துரையாடல்கள், டிஜிட்டல் கொடுப்பனவுகளிலுள்ள இணையவழி இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கும், பாதிப்படையக்கூடிய நிலையிலிருக்கும் குழுக்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், தெற்காசியா முழுவதும் டிஜிட்டல் நிதியியல் உட்கட்டமைப்பின் தாக்குப்பிடிக்குந்தன்மையை அதிகரிப்பதற்குமான இயலாற்றலையும் வலுப்படுத்துகின்றது.

நமீபியாவில் இடம்பெற்ற நிதியியல் வசதிக்குட்படுத்தல் கூட்டமைப்பின் உலகளாவிய கொள்கை மன்றம் மற்றும் புதுடெல்லியில் இடம்பெற்ற கௌடில்யா பொருளாதார மாநாட்டின் ஈடுபாடுகள் பிராந்திய அறிவுப் பரிமாற்றத்திற்கும் கொள்கை மேம்பாட்டிற்குமான இலங்கையின் அர்ப்பணிப்பை மேலும் வலுப்படுத்தியது.

### நிதியியல் நிலையுறுதித்தன்மையும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஈடுபாடுகளும்

நிதியியல் முறைமையின் நிலையுறுதித்தன்மையை உறுதி செய்தல் உயர்ந்த முன்னுரிமையாக தொடர்ச்சியாக இருந்து வந்தது. மாட்ரிட்டில் இடம்பெற்ற நிதியியில் நிலையுறுதித்தன்மை குழு முழுநிறைவுக் கூட்டம் மற்றும் மாநாட்டில் ஆளுநரின் பங்குபற்றலானது, நிதியியல் நிலையுறுதித்தன்மைக்கான உலகளாவிய இடர்நேர்வுகள் மற்றும் அவற்றைத் தணிப்பதற்குத் தேவையான கொள்கை வழிமுறைகள் பற்றிய கலந்துரையாடல்களை வசதிப்படுத்தியது. இந்த ஈடுபாடுகள், உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தல் நியமங்களுடன் இலங்கை அணிசேர்வதை வலுப்படுத்தவும், அமைப்பு முழுவதுமான இடர்நேர்வுகளின் கண்காணிப்பினை மேம்படுத்தவும் உதவியாகவமைந்தன.

### பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கடப்பாட்டினை முன்னேற்றுதல்

டோக்கியோவில் இடம்பெற்ற ஆசிய பசுபிக் குழுமத்தின் வருடாந்தக் கூட்டத்தில் ஆளுநரின் பங்கேற்பானது 2025இன் முக்கிய மைல்கல்லொன்றாக அமைந்தது. பல்வேறு உயர்மட்ட இருதரப்பு கலந்துரையாடல்கள், பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் நியமங்களுக்கான இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பினை மீளுறுதிசெய்ததோடு, 2026 மாச்சில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ள பரஸ்பர மதிப்பீட்டிற்கான தயார்ப்படுத்தலின் மீதும் கவனம் செலுத்தியது. இந்த ஈடுபாடுகள், ஆசிய பசுபிக் குழுமத்தின், செயலகத்துடனும், நன்கொடையாளர்களுடனும், தொழில்நுட்ப ஆதரவு வழங்குநர்களுடனும் மேம்பட்ட ஒத்துழைப்பை வசதிப்படுத்தி, பல்வேறு இலக்கிடப்பட்ட தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகலை பெற்றுக்கொள்வதை உறுதி செய்தன.

### வர்த்தகமும் முதலீட்டாளர்களுக்கு சென்றடைதலும்

இலங்கையின் வெளிநாட்டுத் துறைக்கும் முதலீட்டுச் சூழலிற்கும் ஆதரவளிப்பதில், ஆளுநர் ஐக்கிய அமெரிக்க வர்த்தக பிரதிநிதியுடன் ஈடுபட்ட கலந்துரையாடல்கள், வரி குறைப்புக்கள் பேச்சுவார்த்தை மீதான முன்னேற்றத்திற்கு பங்களித்து, தற்போது இடம்பெற்றுவரும் செயல்முறையொன்றாக காணப்படுகின்றது.

ஒகத்தில், கொழும்பு பங்கு பரிவர்த்தனையினாலும் அரசாங்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினாலும் சிங்கப்பூரில் ஒழுங்குப்படுத்தப்பட்ட “இன்வெஸ்ட் ஸ்ரீலங்கா” முதலீட்டாளர் மன்றத்தில் மன்றத்தில் ஆளுநர் பங்குபற்றினார். இம்மன்றமானது, சர்வதேச முதலீட்டாளர்களிடம் இலங்கையை ஊக்குவிக்கும், சந்தை நம்பிக்கையை வலுப்படுத்தும், முதலீட்டாளர்களுக்கு சென்றடைதலிற்கு ஆதரவளிக்கும் முக்கிய தளமொன்றாக அமைந்தது.

அனைத்து சர்வதேச ஈடுபாடுகளிலும், ஆளுநர் முக்கிய உலகளாவிய மற்றும் பிராந்திய ஆர்வலர்களுடனான உறவுகளை செயல்திறன்மிக்க வகையில் வலுப்படுத்தி, பேரண்டப்பொருளாதார நிலையுறுதித்தன்மை குறிக்கோள்களுக்கு ஆதரவளித்து, முதலீட்டாளர்கள் மற்றும் அபிவிருத்தி பங்காளர்களின் நம்பிக்கையையும் மேம்படுத்தினார். இந்த ஈடுபாடுகள், வெளிவாரி மதிப்பீடுகளுக்கான தயார்நிலையை மேம்படுத்தவும், நிதியியல் நிலையுறுதித்தன்மை கட்டமைப்புகளை வலுப்படுத்தவும், நிதியியல் துறையில் அதீத தாக்குப்பிடிக்குந்தன்மையையும் வசதிக்குட்படுத்தலையும் ஊக்குவிக்கவும் குறிப்பிடத்தக்களவு பங்களித்தன.

### “ஏ தர” மத்திய வங்கி ஆளுநர்களுக்கான விருது - 2025

பொருளாதார முகாமைத்துவத்திற்கான உன்னதமிக்க தலைமைத்துவத்தினையும் தலைசிறந்த பங்களிப்பினையும் அங்கீகரிக்கும் வகையில் குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் 2025இல் வழங்கப்பட்ட “ஏ தர” மத்திய வங்கி ஆளுநர்களுக்கான விருது வழங்கி ஆளுநர் கௌரவிக்கப்பட்டார். இப்பாராட்டானது, அடையப்பட்ட பெறுபேறுகளை மாத்திரமின்றி, மாறாக அவற்றிற்கு அடித்தளமாக இருந்த சுயாதீனத்தன்மை, ஒழுக்கம் மற்றும் உபாய ரீதியான பார்வை என்பவற்றையும் அங்கீகரிக்கின்றது.

# ஒப்படைக்கப்பட்ட ஏனைய பொறுப்புக்கள்

## வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்தலும் மேம்படுத்தலும்

அரசாங்கத்தின் முகவரொன்றாக, மத்திய வங்கி, நாட்டில் வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்கு முறைப்படுத்தவும் மேம்படுத்தவும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணி சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இப்பொறுப்பாணையின் கீழ், இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றில் முக்கியப்பங்காற்றுகின்றது:

- வெளிநாட்டுச்செலாவணிச் சந்தையின் அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லுமாறு ஏற்கனவேயுள்ள கொள்கைகளின் செயல்திறன்மிக்கத்தன்மை மதிப்பீடு செய்து, புதிய கொள்கைகளுக்கான அவசியத்தை இனங்காணுதல்
- வெளிநாட்டுச்செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் வெளியிடுவதற்கு அமைச்சருக்கு பரிந்துரை செய்தல்
- வெளிநாட்டுச்செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான பணிப்புரையை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்குதல்
- வெளிநாட்டுச்செலாவணி வணிகங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட நாணய மாற்றுனர்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் அனுமதிகளை வழங்குதல்
- பொது அனுமதிகளின் கீழ் உள்ளடக்கப்படாத வெளிநாட்டு செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான சிறப்பு அனுமதிகளை வழங்குதல்
- வெளிநாட்டு செலாவணிச் சட்டத்துடனான இணங்கியொழுகுதலை கண்காணித்து, மீறல்களுக்கு எதிராக விசாரணைகளைத் தொடங்குதல்
- இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட விதிகளுடன் இணங்கியொழுகும் வகையில், ஏற்றுமதி வருவாய்களை இலங்கைக்கு மீளனுப்புவதையும் எஞ்சியிருக்கின்ற மாற்றல்களையும் கண்காணித்தல்

### ஏற்றுமதிப் பெறுகைகளை மீளனுப்புதல்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள விதிகளிற்கமைய, ஏற்றுமதி வருவாய்களை இலங்கைக்கு மீளனுப்புவதைக் கண்காணிக்கின்றது. 2025இல், மொத்த ஏற்றுமதி வருவாய் மீளனுப்புதலும் மாற்றுதலும் முறையே ஐ.அ.டொலர் 17,103 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 5,207 மில்லியன் தொகையாகவிருந்தன.

### கண்காணிப்பு மற்றும் நடைமுறையாக்கல் வழிமுறைகள்

ஏற்கனவேயுள்ள வெளிநாட்டு செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பில் முறையான இணங்குவித்தலை உறுதி செய்வதற்காக, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட திட்டத்துடன் ஆண்டு முழுவதும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மீதும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுனர்கள் மீதும் மேற்பார்வை நடாத்தப்பட்டது. அதன்படி, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மீது மொத்தமாக 16 பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுனர்கள் மீது 24 தளத்திலான பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஏற்றுமதி வருவாய்களை மீளனுப்புதல் மற்றும் மாற்றுதல் மீதான நாட்டின் தேவைப்பாடுகள் மீது ஏற்றுமதியாளர்களின் இணங்குவித்தல் மட்டத்தின் மேற்பார்வையை வலுப்படுத்துவதில், கண்டறியப்பட்ட இணங்கியொழுகாமைகள் மீதான 201 ஏற்றுமதியாளர்கள் தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், 2025இல் முற்தவணைக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தபோதிலும், பொருட்கள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படாததாக அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளைத் முன்னெடுப்பதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. அவ்வாண்டுக்காலப்பகுதியில், வெளிநாட்டு செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை மீறிய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு ரூ. 34 மில்லியன் மொத்தத் தொகையான தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

### வெளிநாட்டு செலாவணி உரிமம் வழங்குதலும் பொதுமக்கள் விழிப்புணர்வும்

ஒழுங்குமுறைப்படுத்தல் முயற்சிகளின் பாகமொன்றாக, இலங்கை மத்திய வங்கி, 2025இல் புதிய அனுமதிப்பத்திரம் உள்ளடங்கலாக 59 நாணய மாற்றுனர்களுக்கும், உரிமம்பெற்ற நிதி நிறுவனங்களுக்கு 06 அனுமதிப்பத்திரங்களையும் ஹோட்டல்களுக்கும் 12 அனுமதிப்பத்திரங்களையும் வழங்கியது. வங்கித்தொழில் முறைமையில் வெளிநாட்டு நாணயத்தை வைப்பு செய்வதன் குறைந்தபட்ச நியதி தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்கு, அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுனர்களும் இணைந்து 2025இல் மொத்தம் ஐ.அ.டொலர் 171 மில்லியனை வைப்பு செய்துள்ளனர். 2024இல் வங்கித்தொழில் முறைமையில் அவர்களின் வைப்பு தொகையுடன் ஒப்பிடுகையில் இது முன்னேற்றமொன்றாகும்.

ஆர்வலர்களின் ஈடுபாட்டையும் பொதுமக்கள் விழிப்புணர்வையும் மேம்படுத்துவதற்காக:

- இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தல், வெளிநாட்டுச்செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டு இணங்குவிப்பு தேவைப்பாடுகள் பற்றிய மெய்நிகர் விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்தியது.

### 2025ஆம் ஆண்டிற்கான முக்கிய பண்புகள்

- வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ், மூலதனக் கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய வெளிப்பாய்ச்சல்கள் மீதான குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் தளர்த்தும் வகையில் கட்டளைகள் வெளியிடப்பட்டன.

  i. கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு, அதன் வியாபாரத்தை வெளிநாடுகளில் விரிவுபடுத்தும் நோக்கத்திற்காக, வெளிநாடுகளில் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் சாதாரணப்பங்குகளில் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக, ஐ.அ.டொலர் 750,000 வரை அல்லது அதன் தேறிய சொத்துகளின் 20 சதவீதம் வரை, இதில் எது குறைவானதோ அதை, முதலீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

  ii. பட்டியலிடப்படாத நிறுவனங்களுக்கு, மேலே 1(i)இல் குறிப்பிடப்பட்ட அதே நிபந்தனைகளின் கீழ், ஐ.அ.டொலர் 200,000 வரை முதலீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

  iii. வெளிநாட்டு செலாவணி வருவாயுடனான நிறுவனங்கள் வெளிநாடுகளில் தமது வியாபாரத்தை விரிவுபடுத்த உதவுவதற்காக, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிகளினூடாக மேற்கொள்ளப்படும் மூலதன கொடுக்கல்வாங்கல்களுக்கான வரையறை ஐ.அ.டொலர் 500,000 ஆக உயர்த்தப்பட்டது.

  iv. வதிவோரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படும் மூலதனக்கொடுக்கல்வாங்கல்களுக்கான அதிகபட்ச வரையறை ஐ.அ.டொலர் 25,000 ஆக உயர்த்தப்பட்டது.

- ஏற்கனவேயுள்ள பணிப்புரைகளை திருத்தியதன் மூலம், அங்கீகரிக்கப்பட்ட நாணய மாற்றுனர்களுக்கு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டு, தமது வளாகங்களில் பிரத்தியேகமாக நாணய மாற்றுத் தொழிலில் மாத்திரம் ஈடுபடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மூன்று (3) ஆண்டுகளுக்கும் ஒருமுறை தமது அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க அனுமதியளிக்கப்பட்டதுடன், மேற்குப் மாகாணத்திற்கும் சுற்றுலாத் தலங்களுக்கும் வெளியே நாணய மாற்றுத் தொழிலை நடாத்துவதற்கு ஊக்குவிக்கும் நோக்கில், பிரதானமாக அவர்களின் புவியியல் இருப்பிடங்களை அடிப்படையாகக் கொண்டு மூலதன தேவைப்படுத்தல் மீதான மாற்றங்களும் கொண்டு வரப்பட்டன.

- மேலும், மத்திய வங்கி, மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக 03 சிறப்பு ஒப்புதல்களையும், 82 அனுமதிகளையும் அளித்து, வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் வெளிமுகப் பணவனுப்பல்கள் உள்ளிட்டவற்றிற்கு 929 இசைவுச் சான்றிதல்களையும் வழங்கியது.

# இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியினை ஒழுங்கு முறைப்படுத்தலும் ஊக்குவித்தலும்



**இலங்கை மத்திய வங்கியின் கீழ் தொழிற்படும் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களமானது, இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் பொறுப்புடைய முக்கிய அதிகாரமொன்றாக தொழிற்படுகின்றது. 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் முகவராக தொழிற்படும் இத்திணைக்களமானது, நாட்டின் ஆர்வலர்களின் நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதில் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் முக்கியப் பங்காற்றுகின்றது.**

### இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பரிணாம வளர்ச்சி

இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவ கட்டமைப்பானது கடந்த ஏழு தசாப்தங்களாக குறிப்பிடத்தக்களவிலான நிலைமாற்றத்திற்குட்பட்டுள்ளது. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டத்தின் கீழ் அடித்தளம் அமைக்கப்பட்டதுடன், இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டது. 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்துடன் அனைத்தையுமுள்ளடக்கிய சட்ட கட்டமைப்பு தோற்றம்பெற்று, பற்றாக்குறையான வெளிநாட்டு செலாவணி வளங்களை நிர்வகிப்பதற்கும் நடைமுறை மற்றும் மூலதன கொடுக்கல்வாங்கல்கள் ஆகிய இரண்டையும் இறுக்கமாக ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மத்தியில் கட்டுப்பாடுமயப்படுத்தப்பட்ட அமைப்பொன்றினை நிறுவியது.

[1] நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் - வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பணிகள், வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் முதலீட்டு வருமானம், கடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் வாழக்கைச் செலவுகளுக்காக குடும்பத்தினர் அனுப்பும் பணம் போன்ற ஒவ்வொரு பன்னாட்டு கொடுப்பனவுகளையும் உள்ளடக்குகின்றன.

[2] மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் - முதலீடுகள் அல்லது சொத்து பரிமாற்றல்களுடன் தொடர்புடைய எல்லை தாண்டிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது. (உ-ம் வதிவற்றோரினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், வதிவோர் மேற்கொள்ளும் வெளிநாட்டு முதலீடுகள் மற்றம் புலம்பெயர் நிதிய மாற்றல்கள்).

### திறந்த பொருளாதார சீர்த்திருத்தங்களும் பகுதியளவிலான தாராளமயமாக்கலும்

1977இல் முன்னெடுக்கப்பட்ட தாராளமய-மாக்கல் சீர்திருத்தங்கள் கட்டமைப்புசார் மாற்றமொன்றினை அடையாளப்படுத்தியது. வர்த்தக சீர்திருத்தங்கள், 1994இல் பன்னாட்டு நாணய நிதியத்தின் VIII ஆம் உறுப்புரையின் கடப்பாடுகளை இலங்கை ஏற்றுக்கொண்டதன் பின்னணியில், செலாவணிக் கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்தி, நடைமுறைக்கணக்கு மாற்றத்தக்கத்தன்மையை முறைசார்ந்ததாக்கியது. மூலதனப் பாய்ச்சல்கள் படிப்படியாக தாராளமயமாக்கப்பட்ட அதேவேளை, எல்லைகளுக்கிடையிலான முதலீடுகளை வசதிப்படுவதற்கு வெளிவாரி மூலதன அசைவுகள் மட்டுப்பாடுகளுக்கும் அனுமதிகளுக்கும் உட்பட்டவையாகக் காணப்பட்டன.

### இலங்கையிலுள்ள வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டனமப்பினது பரிணாம வளர்ச்சி

| 1953-1977 | 1977-1994 | 1990-2017 | 2017-2020 | 2020-2023 | 2023க்குப் பிறகு |
|---|---|---|---|---|---|



| கட்டுப்பாட்டு சகாப்தம் | நடைமுறைக் கணக்குக் கொடுக்கல் வாங்கல்களை படிப்படியாகத் தளர்த்தல் | செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மூலதனக் கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்தல் | வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் மூலதனக் கட்டுப்பாடுகளை தொடர்ந்தும் தளர்த்தல் | அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான தற்போதையக் கட்டுப்பாடுகள் | தற்காலிக் கட்டுப்பாடுகளை படிப்படியாக நீக்குதல் |
|---|---|---|---|---|---|

இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியை ஒழுங்குமுறைப்படுத்துவதிலும் ஊக்குவிப்பதிலும் ஏற்பட்டுள்ள கட்டமைப்புசார் மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஒழுங்குமுறைப்படுத்தல் பயணமானது கடுமையாக் கட்டுப்பாடுகளிலிருந்து மேலும் தாராளமயமாக்கப்பட்ட கட்டமைப்பு நோக்கி முன்னேற்றமடைந்துள்ளது.

### 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டத்திற்கு மாற்றமடைதல்

இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணியை ஒழுங்குமுறைப்படுத்தி ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் உத்தியோகப்பூர்வமாக நீக்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டில் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டம் இயற்றப்பட்டது. இது வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியில் முக்கிய மைற்கல்லொன்றாக அமைந்தது.

வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய மாற்றங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- முழு நடைமுறைக் கணக்கு மாற்றத்தக்க நியதிச்சட்ட உத்தரவாதம்
- வெளிநாட்டு நாணயத்தை ஈட்டுபவர்கள் தமது வருவாயை அனைத்து நடைமுறை மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்கு பயன்படுத்துவதற்கான சுதந்திரம்
- அமைச்சரவையின் ஒப்பதலுடன், ஒழுங்குவிதிகளையும் கட்டளைகளையும் வெளியிடுவதற்கு, அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகையினை வரையறுப்பதற்கும் நிதி அமைச்சருக்கு அதிகாரமளித்தல்
- வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் அனைத்து மீறல்களும், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களுக்கு முரணானவையாக இருப்பதால் அவை இணங்காமைகளாகக் கருதப்படுகின்றன.
- நிர்வாக நியாயமானத் தன்மையை உறுதிசெய்வதற்கான மேன்முறையீட்டு அதிகாரசபையொன்றாக விசாரனைச் சபையினைத் தாபித்தல்
- இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே வெளிநாட்டுச் செலாவணி அனுப்பப்படுவது நிதியியல் உறுதிப்பாட்டிற்கு சாத்தியமான அச்சுறுத்தலாகக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுச் செலாவணி பணவனுப்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தல்

இதற்கமைவாக, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரசபையாக வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களமானது நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு பங்களிக்கும் வினைத்திறனான, செயற்றிறன்மிக்க மற்றும் ஒழுங்காக நிர்வகிக்கப்படும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியை வசதிப்படுத்தும் தொலைநோக்குப் பார்வையுடன் தொழிற்படுகின்றது.

**2017ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டமானது வெளிநாட்டுச் செலாவணியை ஒழுங்குமுறைப்படுத்துவதிலும் ஊக்குவிப்பதிலும் கவனம்செலுத்தி, இலங்கையில் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்கையின் பரிணாம வளர்ச்சியில் முக்கிய மைற்கல்லொன்றை குறித்துக்காட்டியது.**

வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் முகவராண்மையாக வெளிநாட்டுச் செலாவணிச் சட்டமானது,

- தரவுத் தூண்டல் பகுப்பாய்வினால் ஆதரவளிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் தொடர் தாரளமயமாக்கலை உறுதிசெய்வதற்காக தாராளமயமாக்கப்பட்ட மூலதன வகைகளை அரசாங்கத்திற்கு பரிந்துரைக்கின்றது
- வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை நடாத்துவதில் உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுநர்களுக்கு பணிப்புரைகளை வழங்குதல்
- உரிமம்பெற்ற வங்கிகள், அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுநர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணி வணிகங்களில் ஈடுபடுவதற்கு அனுமதிகளை வழங்குதல்
- வெளிநாட்டுச் செலாவணி அறிக்கையிடல் முறைமையினூடாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கள் தொடர்பில் தரவுகளையும் தகவல்களையும் சேகரித்தல்
- முன்னர் தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின்படி தளத்திலான மற்றும் தளத்திற்கு வெளியிலான கண்காணிப்புக்களினூடாக வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்களின் மேற்பார்வையினை தொடர்ந்தும் கொண்டுநடாத்துகின்றதுடன் தேவையானவிடத்து உரிமங்களை இடைநீக்கம் செய்தல் அல்லது நீக்குதல் மற்றும் நாணய அபாரதங்களை விதித்தல் போன்ற நடைமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.
- பொதுத் தகவல்களின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

## நெருக்கடி முகாமைத்துவதிற்கான ஏற்பாடுகள்

வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடிச் சூழல்நிலைகளில் தலையீடுகளை உடனடியாகச் செயற்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் போதியளவு கருவிகளை வழங்குகின்றது. அண்மைய வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியின் மத்தியில் இவை நிரூபிக்கப்பட்டன. தோற்றம்பெற்றுவரும் பிரச்சனைகளை எதிர்வுகூறும் வகையில், நாடு மீட்சிப் பாதையில் செல்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில், செயற்றிறன்மிக்க கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அவை,

- வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை ஊக்குவிப்பதற்கு சிறப்பு வைப்புக் கணக்குகளை அறிமுகப்படுத்தல்
- வதியும் நிறுவனங்களுக்கிடையே சில உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதன் மூலம், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கு இடையூறு விளைவிக்காமல் (உ-ம். வலு மற்றும் மின்சக்தி உற்பத்தித் துறை) அந்நிறுவனங்கள் இறக்குமதித் தேவைப்பாடுகளை செயற்றிறன்மிக்க வகையில் முகாமைசெய்வதற்கு வழிவகுத்தது.

தற்காலிக அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட இவ் வழிமுறைகள் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில்ட சாதகமான முன்னேற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் படிப்படியாகத் தளர்த்துவதற்கான முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, நாட்டின் உலகளாவிய ஒருங்கிணைப்பை ஆழப்படுத்துவதையும் வெளிப்புற உறுதிப்பாட்டை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட, மேலும் சந்தைசார்ந்த கட்டமைப்பைப் பிரதிபலிக்கும் வகையில், இலங்கை நிறுவனங்களின் உலகளாவிய விரிவாக்கத்தை வசதிப்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து, மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளைத் தளர்த்துவதற்கு மத்திய வங்கி தற்போது உறுதிபூண்டுள்ளது.

# ஊழியர் சேமலாப நிதியம்

ஊழியர் சேமலாப நிதியமானது இலங்கை மத்திய வங்கியினாலும் தொழில் திணைக்களத்-தினாலும் இணைந்து நிர்வகிக்கப்படுவதோடு, நாட்டின் பிரதான ஓய்வுகாலநிதியமாக தனது நிலைப்பாட்டை தொடர்ச்சியாக வலிமைப்படுத்தி-வருகின்றது. 2025 நிறைவடைகின்ற காலப்பகுதி-யினுள், நிதியத்தின் சொத்து அடிப்படை ரூ. 5 டிரில்லியன் என்ற முன்னெப்-பொழுதுமில்லாத மட்டமொன்றினை எட்டி, நிதியியல் முறைமைக்கான அதன் அளவையும் முறைமைசார் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கிறது.

ஒழுக்கவியல்சார்ந்த நிதிய முகாமைத்து-வத்திற்கான இலங்கை மத்திய வங்கியின் அர்பணிப்பிற்கு, அதன் உறுப்பினர்களால் வழங்கப்படும் போட்டித்தன்மைமிக்க வருவாய்கள் சான்றாகும். நிதியமானது, அதன் பங்காளர்களின் நீண்டகால செல்வத்தை முன்னுரிமைப்படுத்துவதனூடாக, சந்தை அளவுகோல்களை தொடர்ச்சியாக விஞ்சி செயலாற்றிய வீதங்களை அறிவிப்பதற்காக மாறும் பொருளாதார தோற்றப்பாடுகளில் வெற்றிகரமாக பயணித்தது. 2025இற்காக, இலங்கை தொடர்புடைய அமைச்சர்களிடமிருந்து ஒப்புதல் பெறப்படுவதற்கு உட்பட்டு, மத்திய வங்கியானது 10 சதவீத வட்டியை விட அதிகமாக அறிவிப்பதற்கு எதிர்பார்த்திருக்கின்றது.

2025 முழுவதும், ஊழியர் சேமலாப நிதியமானது உபாயரீதியான சொத்துப்பட்டியல் மீள்சமநிலைப்படுத்தலை மேற்கொண்டது. இது பங்குரிமை மூலதனச் சந்தையில் முன்னோக்கிய அணுகுமுறையுடன் கூடிய, கம்பனி தொகுதிக் கடன்களிலும் சூழல், சமூக மற்றும் ஆளுகை கருப்பொருளிலமைந்த முறிகளிலும் முதலீடுகளில் பன்முகமாக ஈடுபடுவதை உள்ளடக்குகின்றது. சந்தையின் உயர்வான போக்குகளின் மீது மூலதனமயமாக்கும் அதேவேளை, அதேநேரத்தில் குறை செயலாற்ற சொத்துக்களை விற்பனை செய்வதனூடாக, நிதியமானது அதன் இடர்நேர்வு-சீராக்கப்பட்ட செயலாற்றலை மேம்படுத்தி, நீண்டகால நிலைப்பெறுந்தன்மையை உறுதி செய்துள்ளது.

இம்முன்மதிமிக்க நிதியியல் முன்னின்று நடாத்தும் பொறுப்பு மற்றும் உறுப்பினர் மையப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு சீர்திருத்தங்கள் என்பவற்றின் ஒருங்கிணைந்த முயற்சிகளினூடாக, ஊழியர் சேமலாப நிதியமானது, இலங்கையின் தொழிற்படைக்கான பாதுகாப்பானதும் கண்ணியமானதுமான ஓய்வூதியத்தினை வழங்கும் அதன் பணியில் உறுதியாகக் காணப்படுகின்றது.

முழுமையான விபரங்களுக்கு, தயவுசெய்து ஊழியர் சேமலாப நிதிய இணையதளத்தில் கிடைக்கப்பெறும் ஆண்டறிக்கையை பார்க்கவும்[1].

# பொதுப்படுகடன் முகாமைத்துவம்

2025 காலப்பகுதியில், இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட பொதுப்படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடானது, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலைமாறுகால சட்டக் கட்டமைப்பிற்குள் மேற்கொள்ளப்பட்டது. அச்சட்டத்தின் 132ஆம் பிரிவிற்கமைய, தொழிற்பாட்டிற்காக வேறான பொதுப்படுகடன் முகாமைத்துவ அதிகாரத்தை நிறுவும் தொடர்புடைய சட்டம் நடைமுறைக்கு வரும் வரை, அரசப் பிணையங்களை வழங்குதல் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவம் தொடர்பில் இடைக்கால அடிப்படையில் மாத்திரமே அரசாங்கத்தின் முகவராக தொடர்ச்சியாக செயல்பட இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அதன்படி, 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப்படுகடன் முகாமைத்துவ சட்டம் முழுமையாக தொழிற்படுத்தப்படும் வரை, 2025 திசெம்பர் வரை பொதுபடுகடன் முகவர் தொழிற்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டது. இப்பொறுப்புகள் அனைத்தும் நிதி அமைக்கத்தின கீழ் தாபிக்கப்பட்ட பொதுப்படுகடன் முகாமைத்துவ அளுவலகத்திற்கு 2026 சனவரி 01 முதல் மாற்றம் செய்யப்பட்டன.

பொதுப்படுகடன் முகாமைத்துவ சட்டத்தினதும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினதும் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கியானது, அரசப் பிணையங்களுக்கான பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையையும் மத்திய வைப்பக முறைமையையும் தொடர்ச்சியாக தொழிற்படுத்தும். முதனிலை வணிகர்களின் மேற்பாடுவையும் மத்திய வங்கியில் மேற்கொள்ளப்படும்.

இதற்கு மேலதிகமாக, இலங்கை மத்திய வங்கி, நாட்டுக்கான பன்னாட்டு கொடுகடன் தரமிடல்களை பெற்றுக்கொள்ளும் செயன்முறைமையை வசதிப்படுத்தியது.

முழுமையான விபரங்களுக்கு, தயவுசெய்து பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலக இணையதளத்தை பார்க்கவும்[2].

# நிதியியல் உளவறிதல் பிரிவு

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ், அதிமேதகு சனாதிபதியினால் ஆக்கப்பட்ட கட்டளையின் நியதிகளின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினுள் தொழிற்பாட்டு ரீதியாக சுயாதீன நிறுவனமொன்றாக நிதியியல் உளவறிதல் பிரிவு தொழிற்படுகின்றது.

நிதியியல் உளவறிதல் பிரிவின் தொழிற்பாட்டு நோக்கெல்லையானது, நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்திலிருந்து பெறப்படுகின்றது. நிதியியல் உளவறிதல் பிரிவானது, பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் தொடர்புடைய சட்டவிரோத செயற்பாடுகளை தடை செய்தல், கண்டறிதல், புலனாய்வு செய்தல் என்பவற்றினை வசதிப்படுத்துகின்றது.

2025இல், நிதியியல் உளவறிதல் பிரிவானது முனைப்பானதும் எதிர்வினையானதுமான நிதியியல் உளவறிதலை பரப்புதல், வலுப்படுத்தப்பட்ட மேற்பார்வை மற்றும் நடைமுறையாக்கல் நடவடிக்கைகள், மேம்படுத்தப்பட்ட ஆர்வலர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் பணம் தூ யதாக்கலுக்-கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் பேரழிவு ஆயுதங்களுடன் தொடர்புபட்டு ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் என்பவற்றுடன் தொடர்புடைய சட்ட சீர்திருத்தங்களை வசதிப்படுத்தல் என்பவற்றினூ டாக, தேசிய பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதிகளுக்கு நிதியிடலைத் தடைசெய்தல் மற்றும் பேரழிவு ஆயுதங்களுடன் தொடர்புபட்டு ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தியது.

பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்-திற்கு நிதியளித்தல் தேசிய ஒருங்கிணைத்தல் குழுவின் தலைமைத்துவத்தின் கீழ், நிதியியல் உளவறிதல் பிரிவானது, பரஸ்பர மதிப்பீடு-2026 இற்கான தயாரிப்பாக நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல/பேரழிவு ஆயுதங்களுடன் தொடர்புபட்டு ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு அனைத்தையுமுள்ளடக்கியதும் உபாய ரீதியானதுமான வழிமுறைகளை மேற்கொண்டு வந்துள்ளது.

நிதியியல் உளவறிதல் பிரிவானது, உயர்தர நிதியியல் உளவறிதலை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் சட்ட அமலாக்க மற்றும் தகைமையுடைய அதிகாரங்களுக்கு காலந்தவறாது பரப்புதல் என்பவற்றினூடாக தொழிற்பாட்டு செயல்திறன்மிக்கத்தன்மையை எடுத்துக்காட்டி, செயலாற்றக்கூடிய நிதியியல் நுண்ணறிவை உருவாக்கும் அதன் முக்கிய தொழிற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொள்கின்றது.

முழுமையான விபரங்களுக்கு, தயவுசெய்து நிதியியல் உளவறிதல் பிரிவின் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் ஆண்டறிக்கையை பார்க்கவும்[3].

[1] *https://epf.lk/?page_id=243*

[2] *https://www.treasury.gov.lk/web/public-debt-management-office/section/public%20debt%20management%20office*

[3] *https://fiusrilanka.gov.lk/annual_reports.html*

# இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவராண்மை தொழிற்பாட்டினது சுருக்கமும் அதன் முடிவுறுத்தலும்



## பொதுப்படுகடன் முகாமைத்துவத்தில் மத்திய வங்கியின் பாரம்பரிய வகிபாகம்

### படுகடன் முகாமைத்துவ முகராண்மைப் பணிகள்

1950இல் தாபிக்கப்பட்டது முதல், மத்திய வங்கியானது நாணயவிதிச் சட்டத்தின் நீக்கப்பட்ட 113ஆம் பிரிவின் கீழ் அரசாங்கத்தின் முகவராக வரையறுக்கப்பட்ட படுகடன் முகாமைத்துவ தொழிற்பாட்டினை மேற்கொண்டது.

இவ்வியலாற்றலில், மத்திய வங்கியானது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் ஆகிய இரண்டிலும் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் உள்ளடங்கலாக சந்தைப்படுத்தத்தக்க பிணையங்களின் வழங்கல்களினூடாக அரசாங்கத்தின் நிதியிடலை திரட்டுவதற்காக பொறுப்புடையதாகவிருந்தது.

### முக்கிய சீர்திருத்தங்களும் படுகடன் சந்தைகளின் நவீனத்துவமும்

பல தசாப்தங்களாக, மத்திய வங்கி பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கான நிறுவனசார் மற்றும் சந்தை உட்கட்டமைப்பை படிப்படியாக வலுப்படுத்தியது. முக்கிய மைல்கற்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- **1986** – வாராந்த திறைசேரி உண்டியல்கள் ஏலங்களின் அறிமுகம்
- **1997** – திறைசேரி முறிகளின் வழங்கல்
- **1998** – ஏல முறைமையின் தன்னியக்கமாக்கம்
- **2000** – முதனிலை வணிகர் முறைமையின் தாபனம்
- **2004** – முழுமையான பத்திரங்களற்ற அரசாங்க பிணையங்கள் முறைமையொன்றிற்கான நிலைமாற்றம்
- **2006** – வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறைசேரி முறிகள் சந்தையினை திறத்தல்
- **2007** – பன்னாட்டு மூலதன சந்தையில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்
- **2008** – வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு திறைசேரி உண்டியல்களின் சந்தையினை திறத்தல்
- **2017** – அரசாங்க பிணையங்களுக்கான இணைய அடிப்படையிலான ஏல முறைமையின் அறிமுகம்

இச்சாதனங்கள், பொதுச் செலவீனங்களுக்காக நிதியத்தை திரட்டுவதற்கு அரசாங்கத்தை இயலுமைப்படுத்திய அதேவேளை, உள்ளூர் மூலதன சந்தைகளின் அபிவிருத்திக்கும் ஆதரவளித்தன.

### அரசாங்கப் பிணையங்கள் சந்தை உட்கட்டமைப்பு அபிவிருத்தி

பல தசாப்தங்களாக மத்திய வங்கி, பொதுப்படுகடன் முகாமைத்துவத்திற்கான நிறுவனசார் மற்றும் சந்தை உட்கட்டமைப்பை முன்னேற்றகரமாக வலுப்படுத்தியுள்ளது. 1986இல் வாராந்த திறைசேரி உண்டியல் ஏலங்களின் அறிமுகம், 1997இல் திறைசேரி முறிகள் வழங்கல் மற்றும் 1998இல் ஏலச் செயன்முறை தன்னியக்கப்படுத்தல் என்பன முக்கிய மைற்கல்களில் உள்ளடங்குகின்றன.

இம்மறுசீரமைப்புக்களின் பின்னர் 2000ஆம் ஆண்டில் முதன்மை வணிகர் முறைமையினைத் தாபித்தல், 2024இல் பத்திரங்களற்ற அரசாங்கப் பிணையங்கள் முறைமைக்கு மாறுதலடைதல் மற்றும் 2006இல் திறைசேரி முறிகளுக்காக முதன்முதலாக உள்நாட்டு அரசாங்கப் பிணையங்கள் சந்தையினை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக படிப்படியாக திறத்தல் அத்துடன் அதனைத்தொடர்ந்து 2008இல் திறைசேரி உண்டியல்களுக்காக திறத்தல் என்பன அமைந்திருந்தன. வெளிப்படைத்தன்மை மற்றும் சந்தை அடிப்படையிலமைந்த நடைமுறைகளுக்கான அதன் கடமைப் பொறுப்பிற்கிசைவாக மத்திய வங்கி 2017 இலும் 2023 இலும் முறையே திறைசேரி முறிகளினதும் திறைசேரி உண்டியல்களினதும் முதனிலை வழங்கல்களுக்காக வலைத்தளம் அடிப்படையிலமைந்த தளங்களை அறிமுகப்படுத்தியது.

### நிதியங்களைத் திரட்டுதலும் படுகடன் தீர்ப்பனவும்

இக்காலம் முழுவதும் மத்திய வங்கி முன்மதிமிக்க இடர்நேர்வு முகாமைத்துவக் கரிசனைகளுக்குட்பட்டு, சாத்தியமாகக் குறைந்த செலவில் அரசாங்கத்தின் நிதியிடல் தேவைப்பாடுகளை நிறைவுசெய்யும் குறிக்கோளை மத்திய வங்கி நாடியது. அதேவேளை, அரசாங்கத்தின் இறை முகவர் என்ற வகையில் அதன் வகிபாகத்தின் கீழ் மத்திய வங்கி அப்போது இடம்பெற்ற பொருளாதார நெருக்கடியின் பின்னர் 2022 ஏப்பிறலில் இலங்கையின் வெளிநாட்டு பொதுப்படுகடன் தீர்ப்பனவு தொடர்பில் அதன் இடைக்கால கொள்கையினை அறிவிக்கும் வரை உரியகால பொதுப்படுகடன் தீர்ப்பனவின் கரைபடியாத பதவினையும் பேணியது.

### அரசாங்கத்தின் படுகடன் மறுசீரமைப்பிற்கு முன்னெடுப்புகளை வசதிப்படுத்தல்

பன்னாட்டு நாணய நிதியத்துடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ், படுகடன் மறுசீரமைப்பு செயல்முறை முழுவதும் மத்திய வங்கி அரசாங்கத்திற்கு பரந்தளவிலான தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாட்டு ஆதரவுகளை வழங்கியது. இவ்வாதரவானது, முதலில் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை முன்னெடுப்பில் கவனம் செலுத்தியதுடன், பின்னர் வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு விரிவுபடுத்தப்பட்டது. இதன் பின்னணியில், மத்திய வங்கியானது, அதன் திறைசேரி உண்டியல்களின் உடைமைகளையும் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்களையும் மறுசீரமைத்தல் உள்ளடங்கலாக, 2023 யூலை மாதத்தில் அறிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் உள்நாட்டு படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் பங்குபற்றியது.

இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது, அரசாங்கத்திற்கும் தொடர்புடைய கடன்கொடுநர்களுக்குமிடையில் எட்டப்பட்ட உடன்படிக்கைகளுடன் இசைந்து செல்லும் வகையில், உடன்பட்ட கொடுப்பனவு ஏற்பாடுகளை தொழிற்படுத்துவதன் மூலமும் மறுசீரமைக்கப்பட்ட திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலமும், திறைசேரி முறிகள், இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் உள்நாட்டு சட்டத்தாலான வெளிநாட்டு நாணயத்தால் குறித்துரைக்கப்பட்ட வங்கிக் கடன்கள் என்பவற்றை மறுசீரமைப்பதற்கு வசதியளித்தது.

### பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினை தாபித்தல்

பன்னாட்டு நாணய நிதிய-விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான அர்ப்பணிப்புக்களுடன் இசைந்து செல்லும் வகையிலும், சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கவும், 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் 2024 திசெம்பரில் தாபிக்கப்பட்டது.

முன்னதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களம் ஆகியவற்றில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளை பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் ஒன்றிணைத்தது. சுமூகமான நிலைமாற்றத்தினை வசதிப்படுத்துவதற்காக, ஏழு தசாப்தங்களுக்கு மேலாக பெற்றுக்கொண்ட அதன் நிறுவன அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு, மத்திய வங்கி பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் அலுவலர்களுக்கு பரந்தளவிலான பணியிடப் பயிற்சியை வழங்கியது.

நிலைமாற்றக் கட்டத்தின் போது, படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகள் ஆரம்பத்தில் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன் பின்னர், நிதி அமைச்சின் அனுமதியின் கீழ் அவை மேற்கொள்ளப்பட்டன. கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட இத்தொடர்ச்சியான அணுகுமுறையானது, தொழிற்பாட்டு நிலையுறுதித்தன்மையையும் செயல்திறன்மிக்க அறிவு பரிமாற்றத்தையும் உறுதிசெய்து, 2025 திசெம்பரில் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் முழுமையான தொழிற்பாட்டினை உச்சமடையசெய்தது.

### பொதுப்படுகடன் முகாமைத்துவ ஆளுகை மறுசீரமைப்புக்கள்

இறை மற்றும் நாணய அதிகாரிகளுக்கிடையிலான செயல்திறன்வாய்ந்த ஒருங்கிணைப்பு பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு அத்தியாவசியமாக விளங்குகின்றது. இந்நோக்கில், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் மத்திய வங்கியின் ஆளுநரினால் தலைமை வகிக்கப்பட்டு, உறுப்பினரொருவராக திறைசேரிக்கான செயலாளரை உள்ளடக்குகின்ற ஒருங்கிணைப்புச் சபை உயர்மட்ட கொள்கை ஒருங்கிணைப்பினை வசதிப்படுத்துவதற்காகத் தாபிக்கப்பட்டுள்ளது.

தொழிற்பாட்டு மட்டத்தில் திறைசேரிக்கான துணைச் செயலாளர் தலைமை வகிக்கின்ற அத்துடன் மத்திய வங்கியிலிருந்து பிரதிநிதிகளை உள்ளடக்குகின்ற பொதுப்படுகடன் ஒருங்கிணைப்புக் குழு படுகடன் முகாமைத்துவக் கருமங்கள் மீது முன்னெடுக்கப்படுகின்ற கூட்டிணைப்பிற்கு ஆதரவளிக்கின்றது.

நிதி அமைச்சின் கீழ் முழுமையாக தொழிற்படுகின்ற பொதுப்படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தைத் தாபித்தமை நாணயக் கொள்கை வகுத்தல் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவம் என்பவற்றில் மத்திய வங்கியின் இரட்டை வகிபாகத்திலிருந்து தோன்றுகின்ற நீண்டகாலமாக இருந்துவருகின்ற அக்கறை முரண்பாட்டினை மேலும் இல்லாதொழித்துள்ளது. இந்நிறுவனசார் வேறாக்கமானது சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கு ஒப்பாக அதன் முதன்மைக் குறிக்கோளாக விலை உறுதிப்பாட்டைப் பேணுதலும் அதன் இரண்டாம் குறிக்கோளாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பாதுகாத் தலும் என்ற அதன் மையப் பொறுப்பாணைகள் மீது பிரத்தியேகமாக கவனம்செலுத்துவதற்கு மத்திய வங்கியை இயலச்செய்துள்ளது.

வங்கியை முகாமைசெய்தல்

# மனித மூலதன முகாமைத்துவம்

## திறமைகளை ஆட்சேர்ப்பு செய்யும் முன்னெடுப்புக்கள்

பரிணமித்துவரும் நிறுவன ரீதியான தேவைகளுக்கு பதிலிறுக்கும் வகையில், அதன் பொறுப்பாணைகளை செயற்திறன்மிக்க வகையில் நிறைவேற்றவும், தொழிற்பாடுகள் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்யவும், 2025 முழுவதும் இலங்கை மத்திய வங்கியானது இலக்கிடப்பட்ட திறமைகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் தொழிற்படையை வலுப்படுத்து-வதற்குமான பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. அவ்வாண்டுக்காலப்பகுதியில், வங்கி பல்வேறு திணைக்களங்களுள் அடையாளங்கண்ட பன்முகத்தன்மைமிக்க பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்ததனூடாக அதன் தொழிற்படையை தொடர்ச்சியாக வலுப்படுத்தியதுடன், அலுவலர்களின் தேவைப்பாடுகளில் பொருத்தமான சமநிலையை பேணும் நோக்கில், வங்கியின் அதிகாரப்படிநிலையின் அடிமட்டத்தில் முக்கிய பொது ஆட்சேர்ப்பு செயல்முறையையும் இறுதிப்படுத்தியது. இவ்வாட்-சேர்ப்பு முயற்சிகள், சிறப்பியல்புவாய்ந்த அறிவு, கைத்தொழில் அனுபவம் மற்றும் பல்வகை தொழில்முறைசார் நோக்குகள் என்பவற்றை கொண்டமைந்ததோடு, தொழிற்பாட்டு செயல்திறன்மிக்-கத்தன்மைக்கும் சாதகமாகப் பங்களித்தன.

## மனிதவலுவினை திட்டமிடல்

வங்கியில் தொழிற்படை மேம்படுத்துகைக்கு ஆதரவளிக்கும் நோக்கில், ஆண்டுக்காலப்பகுதியில் ஆளொருவர் பணியாற்றுகின்ற நேரத்தை கணக்கிடுதல் உள்ளடங்கலாக, அறிவியல் ரீதியாக மற்றும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி, கட்டமைக்கப்பட்ட மனிதவலு திட்டமிடல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இவ்வணுகுமுறையானது, வரையறுக்கப்பட்ட திட்டமிடல் எல்லைக்குள் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அனைத்து நிறுவன நடவடிக்கைகளையும் அடையாளங்காண்பதுடன், ஒவ்வொரு நடவடிக்கையும் வெவ்வேறு அலுவலர் மட்டங்களில் புரியப்படுவதற்கு தேவையான நேரத்தை மதிப்பிட்டு, மேம்படுத்தப்பட்ட அலுவலர் தேவைப்பாட்டினை நிர்ணயிப்பதற்கு பிரயோகிக்கப்-படுகின்றது. இச்செயல்முறையின் பெறுபேறுகள், எதிர்கால ஆட்சேர்ப்பு தீர்மானங்களுக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, வங்கியின் செயல்திறன் மிக்கதும் வினைத்திறன்-மிக்கதுமான தொழிற்பாட்டினையும், நிறுவன தேவைப்பாடுகளுடன் மனிதவளத்தை தொடர்ச்சியாக அணிசேர்ப்பதினையும் உறுதி செய்யும். மனிதவலுத் தேவைப்பாடுகள் செயல்முறையின் மூலம் அலுவலர் தேவைப்பாடுகள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொரு பதவியுடனும் தொடர்புடைய நடவடிக்கைகளையும் பொறுப்புக்களையும் தெளிவாக வரையறுப்பதன் மீது முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அதன்படி, வங்கிக்குள் தொழில் தொடர்பிலான விபரணங்கள் உருவாக்கப்பட்டு தரப்படுத்தப்படுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுவதுடன், வகிபாகங்களின் தெளிவுத்-தன்மையை வழங்கி செயல்திறன்மிக்க தொழிற்-படையை பணியமர்த்துவதற்கு ஆதரவளிக்கின்றன.

## தொழில் முன்னேற்றமும் உள்ளக திறமைகள் குழாமின் அபிவிருத்தியும்

தொழில் முன்னேற்றத்திற்கும் உள்ளக திறமைகள் குழாமின் அபிவிருத்திக்குமான வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் பாகமொன்றாக, தலைமைத்துவத்தினையும் முகாமைத்துவ இயலாற்றலையும் வலுப்படுத்தும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரிகள் பதவியுயர்த்தப்பட்டு, உபாய ரீதியில் நியமிக்கப்பட்டனர். அதன்படி, துணை ஆளுநர் மட்டத்திற்கான மூத்த தலைமைத்துவ பதவிகளுக்கு பதவியுரிமையுடையவர்கள் நியமிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, திணைக்களத் துணை பணிப்பாளர் மற்றும் மேலதிக துணைப் பணிப்பாளர் போன்ற நடுத்தர மட்டப் பதவிகளுக்கு தகைமைவாய்ந்த அதிகாரிகள் பதவியுயர்த்தப்பட்டனர். இம்முன்னேற்றகரமான முன்னெடுப்புக்கள் தலைமைத்துவ அபிவிருத்தி, பதவியுரிமையுடையவர்களின் தயார்நிலை மற்றும் உள்ளக திறமைகள் குழும மேம்பாடுகள் என்பவற்றின் மீதான வங்கியின் தொடர்ச்சியான கவனத்தை பிரதிபலிக்கின்றன.

## மனிதவள உபாய ரீதியான சீரமைப்புத் திட்டம்

### நிலைமாற்றமடையும் மனிதவள முன்னெடுப்புக்கள்

எதிர்காலத்திற்குத் தயாரான தகைமைவாய்ந்ததும் உயர் செயலாற்றமிக்கதுமான தொழிற்படையொன்றினைக் கட்டியெழுப்பும் வங்கியின் அர்ப்பணிப்புடன் இசைந்து செல்லும் வகையில், தற்போது நடைமுறையிலுள்ள மனிதவள உபாய ரீதியான சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நிலைமாற்றமடையும் மனிதவள முன்னெடுப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இம்முன்னெடுப்புக்கள், செயலாற்ற முகாமைத்துவம், தகைமை மதிப்பீடு, தலைமைத்துவ அபிவிருத்தி, தொழில் குடும்ப அடிப்படையிலான கட்டமைப்பு, நெகிழ்சித்தன்மைமிக்க பணிபுரியும் ஏற்பாடுகள் மற்றும் திறமைகளின் ஈடுபாடு உள்ளடங்கலாக முக்கிய துறைகளை உள்ளடக்கியிருந்தன.

### மேம்பட்ட செயலாற்ற மதிப்பீட்டு முறைமை

செயல்திறன்மிக்க முகாமைத்துவத்திற்கும் உயர் செயலாற்ற கலாசாரத்திற்கும் ஆதரவளிக்கும் வகையில், 2025 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், மேம்படுத்தப்பட்ட செயலாற்ற மதிப்பீட்டு முறைமையை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியது. திருத்தப்பட்ட இக்கட்டமைப்பானது, திணைக்களத்தின் குறிக்கோள்களுடனும் வங்கியின் உபாய ரீதியான முன்னுரிமைகளுடனும் அலுவலர்களின் இலக்குகளை அணிசேர்ப்பதன் மூலம், தனிநபர் மற்றும் நிறுவனசார் செயலாற்றலை வலுப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட அதேவேளை, தெளிவாக வரையறுக்கப்பட்ட இலக்குகள் மற்றும் தகைமை அடிப்படையிலான மதிப்பீடுகள் என்பவற்றினூடாக வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறுந்தன்மையையும் தொடர்ச்சியான தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தியையும் வலுப்படுத்துகிறது. இச்செயல்முறையானது, கைகளால் செய்முறைப்படுத்துவதற்கு பதிலாக துல்லியத்தன்மை, நிலையானத் செயல்திறன்மிக்கத்தன்மை மற்றும் ஒட்டுமொத்த வினைத்திறன்மிக்கத்தன்மை என்பவற்றை ஒழுங்குமுறைப்படுத்திய டிஜிட்டல் தளமாக செயல்படும் இணைய அடிப்படையிலான செயலாற்ற மதிப்பீட்டு முறைமையை மாற்றீடுசெய்வதன் மூலம் மேலும் வலுப்படுத்தப்பட்டது.

### அனைத்தையுமுள்ளடக்கிய தகைமை கட்டமைப்பு

வங்கியின் பரிணமித்து வரும் தொழிற்பாட்டு தேவைகளுடன் இசைந்து செல்லும் வகையில் மனிதவள நடைமுறைகளை நவீனப்படுத்தவும், தகைமை அடிப்படையிலான திறமைகள் முகாமைத்துவத்தை வலுப்படுத்தவும், தமைமைத்துவ தகைமை மாதிரி, தொழில்நுட்ப தகைமை மாதிரி, மற்றும் தலைமைத்துவ மதிப்பீடு மற்றும் சுயவி-வரப்படுத்தல் கட்டமைப்பு என்பவற்றை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமைமைத்துவ தகைமை மாதிரி என்பது, ஏற்றதாக்கிக்கொள்ளுந்தன்மை, உபாய நோக்கு, இடர்நேர்வு விழிப்புணர்வு, புத்தாக்கத்தன்மை, ஆர்வலர் அனைவரையும் உள்ளடக்குந்தன்மை, மற்றும் திறமைகள் அபிவிருத்தி போன்ற தகைமைகளில் கவனம் செலுத்தி, வங்கியின் அனைத்து மட்டங்களுக்-கிடையிலும் தேவையான முக்கிய தலைமைத்துவ நடத்தைகள் மற்றும் இயலாற்றலை வரைவிலக்கணப்-படுத்துகின்றது. தொழில்நுட்ப தகைமை மாதிரியானது, குறிப்பிட்ட பதவிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களை எடுத்துக்காட்டும் கட்டமைக்கப்பட்ட கட்டமைப்பினை வழங்கி, தொழில் தேவைப்பாடுகளுக்கும் நிறுவனசார் நோக்கங்களுக்குமிடையேயான அணிசேர்தலை உறுதிசெய்கின்றது. இம்மாதிரிகளுக்கு நிறைவளிக்கும் வகையில், தலைமைத்துவ மதிப்பீடு மற்றும் சுயவிவரப்படுத்தல் கட்டமைப்பானது, மூன்று அடுக்குகளைக் கொண்ட சுயவிவரப்படுத்தலொன்றாக நிறுவப்பட்டு, அதில் தலைமைத்துவ சுயவிபரப்படுத்தல் மையம், நடுத்தர முகாமைத்துவ சுயவிபரப்படுத்தல் மையம், மற்றும் நிறைவேற்று சுயவிபரப்படுத்தல் மையம் என்பவற்றை உள்ளடக்குவதோடு, வங்கியின் பல்வேறு மட்டங்களுக்கிடையிலுள்ள தகைமைகளை மதிப்பீடு செய்து மேம்படுத்துவதற்கு வசதியளிப்-பதுடன், தற்போதைய மற்றும் எதிர்கால பதவி-களுக்கான தயார்நிலையையும் உறுதி செய்கின்றது.

### தொழில் குடும்ப அடிப்படையிலான கட்டமைப்பு

தொழில் குடும்ப அடிப்படையிலான கட்டமைப்பானது, இலங்கை மத்திய வங்கிக்காக ஒத்த தொழிற்பாட்டு பொறுப்புகளை கொண்ட மற்றும் தேவைப்படும் ஒப்பிடத்தக்க அறிவு, திறன் மற்றும் தகைமைகள் என்பவற்றுடன் பதவிகளை ஒருங்கே குழுவாக்கும் பேரண்ட மட்டக் கட்டமைப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட தொழில் குடும்பங்களுக்குள் தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைப்பது தலைமைத்துவ மற்றும் தொழில்நுட்ப இயலாற்றலை மேம்படுத்துவதற்கும் கட்டமைக்கப்பட்ட முறையில் இடமாற்றத்தையும் முன்னேற்றத்தையும் எளிதாக்குவதற்கும் வசதியளிக்கின்றது.

### மனிதவள முகாமைத்துவ வியாபார செயன்முறைகளை மீள்வடிவமைத்தலும் நவீனப்படுத்தலும்

மேலும், ஏற்கனவேயுள்ள மனிதவளத்துடன் தொடர்புடைய செயல்முறைகளை மீள்கட்டமைப்பதன் மற்றும் புதிய பணிப்போக்குகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் வங்கியானது, செயல்திறன்மிக்கத்தன்மையையும் வினைத்திறன்மிக்கத்தன்மையையும் மேம்படுத்துவதிலும், சிறந்த நடைமுறைகளுடன் அணிசேர்வதிலும் கவனம் செலுத்தியது. 2025இன் இறுதிக்குள், செயல்முறை மீள்வடிவமைப்பின் குறிப்பிடத்தக்க பகுதி நிறைவடைந்ததுடன், வங்கியின் மனிதவள நிலைமாற்றமடையும் பயணத்தில் முக்கிய மைல்கல்லொன்றை பிரதிநிதித்துவப்படுத்தியது.

### நிலைமாற்ற முகவர் முன்னெடுப்பு

இலங்கை மத்திய வங்கியின் நிறுவனசார் சீர்திருத்தச் செயற்றிட்டத்துடனும் மனிதவள உபாய ரீதியான சீரமைப்புத் திட்டத்துடனும் இசைந்து செல்லும் வகையில், மாற்றமேற்படுத்தும் முன்னோடிகளாக அதிகாரிகள் செயல்படுவதற்கு இயலுமைப்படுத்துவதனூடாக, நிறுவனசார் துரிதத்தன்மை, தலைமைத்துவம் மற்றும் இயலாற்றல் விருத்தி, கலாசார நிலைமாற்றம் மற்றும் வங்கிக்கிடையில் மக்களை மையப்படுத்திய சீர்திருத்தங்களின் நிலைபெறத்தக்க நடைமுறைப்படுத்தல் என்பவற்றை ஆதரவளித்து, உள்ளக மாற்றும் இயலாற்றலை மேம்படுத்துவதற்காக நிலைமாற்ற முகவர் முன்னெடுப்பானது தொடக்கிவைக்கப்பட்டது.

ஊழியர் ஈடுபாட்டையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்துவதற்காக, மத்திய வங்கி, திறந்த, முன்கூட்டிய நிகழ்ச்சி நிரலற்ற கலந்துரையாடல்கள் மற்றும் பொதுக் கலந்துரையாடல் கூட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டு, திறந்த மனப்பான்மைக்கான உணர்விற்கும், கூட்டாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தளத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

## பயிற்சிகளும் அபிவிருத்தியும்

அவ்வாண்டுக்காலப்பகுதியில், வங்கியின் பயிற்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக முக்கிய கொள்கை முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகள், திறமைகளைப் பேணி வளர்க்கும் மற்றும் ஊழியர்களின் தொழில்சார் நிபுணத்துவ வளர்ச்சியில் முதலீடு செய்யும் வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை பிரதிபலித்து, கற்றல் வாய்ப்புகளில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தின் மூலம் நிறைவளிக்கப்பட்டது. வங்கியானது, முதுமானி கற்கைகளைத் தொடர்வதற்கு அலுவலர்களை ஊக்குவிக்கும் அதேவேளை, வெளிநாட்டு நிகழ்ச்சிகள், இணையவழி கருத்தரங்குகள் மற்றும் நேரடியான மற்றும் மெய்நிகர் பயிற்சி இயங்கு முறைமைகள் என்பவற்றில் பரந்தளவு பங்கேற்புடன், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு பயிற்சித்திட்ட வெளிப்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை பதிவுசெய்தது. இதற்கு மேலதிகமாக, தொழிற்பாட்டு, தலைமைத்துவ மற்றும் ஆதரவளிக்கும் ஊழியர்கள் பிரிவுகளுக்கான இலக்கிடப்பட்ட பயிற்சி முன்னெடுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, இயலாற்றல் விருத்திக்கான முழுமையானதும் அனைவரையுமுள்ளடக்கியதுமான அணுகுமுறை வலுப்படுத்தப்பட்டது.

**2025 திசெம்பர் 31இலுள்ளவாறு முக்கிய மனிதவள புள்ளிவிபரவியல்** வரைபடம்- 14




## வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம்

2025இல், இலங்கை மத்திய வங்கியின் மனித மூலதன அபிவிருத்திப் பிரிவாகத் தொழிற்படுகின்ற வங்கித்தொழில் கற்கைகளிற்கான ஆய்வு நிலையமானது, வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் தொழில்சார் அபிவிருத்திக்கும் இயலாற்றலை கட்டியெழுப்புவதற்குமான முன்னணி நிறுவனமொன்றாக அதன் வகிபாகத்தை மேலும் வலுப்படுத்தியது. வங்கித்தொழில் கற்கைகளிற்கான ஆய்வு நிலையமானது, இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களின் திறன்கள், அறிவு மற்றும் தொழிற்பாட்டு தயார்நிலை என்பவற்றினை மேம்படுத்திய கட்டமைக்கப்பட்டதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் விழிப்புணர்வு முன்னெடுப்புக்கள் என்பவற்றை வழங்கிய அதேவேளை, அதன் கற்றல் வாய்ப்புக்களை பரந்த நிதியியல் துறையில் உள்ள பங்கேற்பாளர்களுக்கும் விரிவுபடுத்தியது.

ஆய்வு நிலையமானது தொழில்நுட்ப, பகுப்பாய்வு மற்றும் உபாய ரீதியான தகைமைகள் என்பவற்றின் அபிவிருத்தியை வலியுறுத்தி, ஆற்றல்வாய்ந்த நிதியியல் தீர்மானத்தை மேற்கொள்வதற்கு ஆதரவளிக்கும் சிக்கலான தரவுகளை செயல்முறைப்படுத்தவும், தரவுசார் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளவும், செயலாற்றக்கூடிய நுண்நோக்குகளை உருவாக்கவும் அலுவலர்களை இயலுமைப்படுத்தியது. நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு நுண்ணறிவு மேலும் மேம்படுத்தப்பட்டு, முக்கிய மத்திய வங்கித்தொழில் பணிகளை நிர்வகிப்பதற்கும், இயக்கவாற்றல்மிக்க சந்தை நிலைமைகளுக்கு ஏற்றதாக்கிக்கொள்வதற்கும், தகவலறிந்த உபாய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அலுவலர்கள் தயார்படுத்தப்பட்டனர். இலக்கிடப்பட்ட இயலாற்றல் விருத்தி அமர்வுகள் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்பு, தலைமைத்துவ மற்றும் தொழில்சார் நிபுணத்துவ தகைமைகள் என்பன முறையாக உருவாக்கப்பட்டு, நெறிமுறைசார் நடைமுறை, பொறுப்புக்கூறுந்தன்மை மற்றும் தொழிற்பாட்டு ரீதியான உன்னதம் என்பவற்றின் கலாசாரமொன்றினை பேணிவளர்த்தன. அலுவலர் அபிவிருத்தியில் தொழிற்பாட்டு செயல்திறன்மிக்கத்தன்மையையும் நிறுவன ஒருங்கிணைப்பையும் மேம்படுத்தும் வகையில், வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையமானது 2025இல், மனிதவளத் திணைக்களத்தின் பயிற்சி தொழிற்பாடுகளின் ஒருங்கிணைப்பை ஆரம்பித்ததுடன், ஒருமுகப்படுத்தப்பட்ட பயிற்சி தொழிற்பாடுகள் 2026 சனவரி 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்தன.

இலங்கை மத்திய வங்கி, தொழிற்பாடுகளிலும் தொழில்நுட்பத்திலும் தோற்றம்பெற்று வரும் போக்குகளையும் சவால்களையும் முன்கூட்டியே இனங்கண்டு, ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்கள், ஊழலுக்கு எதிரான வழிமுறைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு, இணையவழி சேவையகங்கள் (cloud computing) உள்ளடங்கலாக தொழில்நுட்ப புத்தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வு அமர்வுகளை முன்னெடுத்தது. பிராந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான ஒன்றிணைவானது, கற்றல் வாய்ப்புக்களை வளப்படுத்தி, அறிவுப் பரிமாற்றம், கற்றல் விஜயங்கள் மற்றும் எல்லை கடந்த தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தி என்பவற்றை வசதிப்படுத்தி, உள்ளக அலுவலர்களுக்கும், பரந்தளவிலான நிதியியல் சூழலமைப்பிலுள்ள பங்கேற்பாளர்களும் பயனடைந்தனர்.

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம், தனது ஒருங்கிணைந்ததும் முன்னோக்கியதுமான இயலாற்றல் விருத்திக்கான அணுகுமுறையினூடாக, தொழில்நுட்ப தகைமையையும் ஒழுங்குமுறைப்படுத்தல் விழிப்புணர்வையும் மாத்திரமன்றி, நிறுவனசார் செயல்திறனை வலுப்படுத்தி, நிறுவனசார் நவீனமயப்படுத்தலுக்கு ஆதரவளிப்பதுடன், இலங்கையின் நிதியியல் முறைமையின் நிலையுறுதித்தன்மை, தாக்குப்பிடிக்குந்தன்மை மற்றும் நிலைபெறத்தக்க வளர்ச்சிக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களித்தது.

# தகவல் தொழில்நுட்பம்

2025 காலப்பகுதியில், தாக்குப்பிடிக்குந்தன்மை, பாதுகாப்பு, மேம்படுத்துகை மற்றும் நவீனமயமாக்கல் என்பவற்றினூடாக வங்கியின் முக்கிய உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் தகவல் தொழில்நுட்ப நோக்கு விளங்கியது.

## தற்போதைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் செயல்முறைகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மீளாய்வு

தற்போதைய கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் செயல்முறைகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மீளாய்வினை முன்னெடுத்தமையானது முக்கிய முன்னெடுப்புக்களில் ஒன்றாக காணப்பட்டது. தொடர்புடைய திணைக்களங்களிடையே ஏற்கனவேயுள்ள பணிச்செயல்முறைகளின் விரிவான வியாபாரச் செயன்முறை திட்டமிடல் நிறைவு செய்யப்பட்டு, வினைத்திறனின்மையும் முக்கிய தடைகளும் அடையாளங்காணப்பட்டன. இம்முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, பணிச்செயல்முறைகளை எளிமைப்படுத்தும், கைகளால் ஏற்படும் தலையீடுகளை குறைக்கும் மற்றும் கட்டம் கட்டமான தானியக்கத்தை செயல்படுத்தும் நோக்கமுடைய எதிர்கால நிலையினை நோக்கிய செயல்முறைகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

## இணைய அடிப்படையிலமைந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஏல முறைமை

இதற்கு இணையாக, வங்கியின் முக்கிய முறைமைகளை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் மேற்கொள்ளப்பட்டது. இணைய அடிப்படையிலமைந்த திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஏல முறைமையின் அபிவிருத்தி கணிசமானளவு மேம்பட்டதுடன், முக்கிய முறைமைக் கூறுகள் நிறைவடைந்தன. இம்முன்னெடுப்பானது, உள்நாட்டு சந்தைத் தொழிற்பாடுகளின் செயல்திறன்மிக்கத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் பயனர் அனுபவம் என்பவற்றை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வெளிவாரி ஆர்வலர்களுக்காக தெரிவுசெய்யப்பட்ட நிதியியல் மற்றும் பொருளாதார தரவுகளுக்கான கட்டுப்படுத்தப்பட்ட அணுகலை இயலுமைப்படுத்தும் பாதுகாப்பான திறந்த செயலி நிரலாக்க இடைமுகத்திற்கான ஆரம்பக் கட்ட பணியும் மேற்கொள்ளப்பட்டது. வங்கியின் மனிதவளத் திணைக்களமானது செயல்படுத்தப்பட்ட முறைமைகளிலிருந்து பயனடைந்து, ஆட்சேர்ப்பு செயல்முறையை ஒழுங்குமுறைப்படுத்தி எளிமைப்படுத்தியது.

## மையப்படுத்தப்பட்ட பாரிய தரவு மற்றும் தரவு களஞ்சியப்படுத்தல் தளம்

மையப்படுத்தப்பட்ட பொதுவான தரவு மற்றும் தரவு களஞ்சியப்படுத்தல் தளத்திற்கான வழிகாட்டலின் நிறுவுகையானது 2025இல் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு முக்கிய கொள்கை முன்னெடுப்பாகும். வழிநடாத்தல் மற்றும் தரவு முகாமைத்துவக் குழுக்கள் உள்ளடங்கலாக ஆளுகைக்கட்டமைப்புக்கள் நிறுவப்பட்டன.

இம்முன்னெடுப்பானது, வங்கிக்கிடையில் தரவு ஒருங்கிணைப்பை முன்னேற்றுதல், பகுப்பாய்வு இயலாற்றலை மேம்படுத்தல் மற்றும் சான்றடிப்படையிலான தீர்மானத்தை மேற்கொள்ளல் என்பவற்றை நோக்கிய உபாய மாற்றத்தை பிரதிபலிக்கிறது.

### மத்திய வங்கியில் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு

வரைபடம் - 15

**மத்திய வங்கிக்கிடையில் பாதுகாப்பானதும், நம்பகத்தன்மையானதும், நவீனமானதுமான டிஜிட்டல் தொழிற்பாடுகளை இயலுமைப்படுத்தும் ஒருங்கிணைந்த குழு.**

| உட்கட்டமைப்பும் தொழிற்பாடுகளும் | செயலிகளும் முறைமைகளும் | தகவல் பாதுகாப்பு | தரவும் பகுப்பாய்வும் | தகவல் தொழில்நுட்ப ஆளுகையும் இணங்குவிப்பும் |
|---|---|---|---|---|
| தரவு மையங்கள், சேவையகங்கள், வலையமைப்புக்கள் மற்றும் இறுதி பயனர் சாதனங்களை பேணுதல் | மைய வங்கித்தொழிலை வடிவமைத்து, உருவாக்கி பேணுதல். | மத்திய வங்கியின் தகவல் சொத்துக்களை பாதுகாத்து இணையவழி தாக்குப்பிடிக்குந்தன்மை உறுதி செய்தல். | தரவு முகாமைத்துவம், அறிக்கையிடல் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றினூடாக கொள்கை வகுத்தலை ஆதரவளித்தல். | தகவல் தொழில்நுட்ப கொள்கைகளை வரைவிலக்கணப்படுத்தி, இடர்நேர்வுகளை நிர்வகித்து, தரநிலைகளுடன் இணங்கியொழுகுதல். |

## ஒழுங்குமுறைப்படுத்தல் தொழில்நுட்பமும் மேற்பார்வை ஆதரவும்

ஒழுங்குமுறைப்படுத்தல் தொழில்நுட்பத்தினதும் மேற்பார்வை ஆதரவினதும் முன்னேற்றத்தினையும் இவ்வாண்டு அனுபவித்தது. மத்திய வங்கியானது, தொடர்புடைய தரப்பு கொடுக்கல்வாங்கல் அத்துடன் இணைய மற்றும் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு சம்பவங்கள் மீதான மேம்படுத்தப்பட்ட அறிக்கையிடல் உள்ளடங்கலாக புதிய மற்றும் செம்மைப்படுத்தப்பட்ட பின்னெட் ஒழுங்குமுறைப்படுத்தல் திரட்டுக்களை நடைமுறைப்படுத்தியது.

வணிக நுண்ணறிவு கருவிகளை பயன்படுத்தி, கொள்கை பகுப்பாய்வு, மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ கண்காணிப்பு என்பவற்றிற்கு ஆதரவளிப்பதற்காக பகுப்பாய்வு நோக்குத்தளமும் அறிக்கையிடல் தீர்வுகளும் உருவாக்கப்பட்டன. வங்கியின் பரிணமித்துவரும் கொள்கை மற்றும் தொழிற்பாட்டு தேவைப்பாடுகளுடன் அணிசேர்வதற்காகவும், ஐ.எஸ்.ஓ தரநிலைகளுடன் அணிசேர்வதற்காகவும் பல்வேறு உள்ளக முறைமைகள் மேம்படுத்தப்பட்டன.

## தேசிய ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை பேணுதல்

மத்திய வங்கியானது, முதன்மை தரவு மையத்திற்கான தொலைத்தொடர்புகள் துறை அமைப்பு-942 தரநிலை-3 சான்றிதழை வெற்றிகரமாக புதுப்பித்ததன் மூலம், அதன் தேசிய ரீதியில் முக்கியத்துவம்வாய்ந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பிற்கான துறை ரீதியாக முன்னணிவாய்ந்த தரநிலைகளைப் பேணியது.

அனர்த்த மீட்பு இயலாற்றல்கள், தலைமை அலுவலகத்திற்கும் அனர்த்த மீட்பு தளத்திற்குமிடையிலான விஞ்சிய வலையமைப்புக்களுடன் வலுப்படுத்தப்பட்டு, தாக்குப்பிடிக்குந்தன்மையையும் தோல்வி மாற்று அமைப்பு தயார்நிலையும் குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தின. இதற்கு இணையாக, CBSLNET VPNஇன் (மெய்நிகர் தனியார் வலையமைப்பு) பாதுகாப்பும் மேம்படுத்தப்பட்டு, வலுவான குறிமுறியாக்கமும் அதீத நம்பகமான தரவு குடைவெளி உறுதித்தன்மையும் வழங்கப்பட்டது.

## ஊழியர் சேமலாப நிதியத்தின் தகவல் தொழில்நுட்ப முறைமை

மேலும், மத்திய வங்கியானது, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு முக்கிய செயலியையும், உட்கட்டமைப்பினையும், தொழிற்பாட்டு ஆதரவு சேவைகளையும் தொடர்ச்சியாக வழங்கி, முறைமையில் உறுதித்தன்மை, தரவு ஒருமைப்பாடு மற்றும் இடையூரற்ற சேவைகளை உறுதி செய்கின்றது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் பைல்நெட் ஆவண முகாமைத்துவ முறைமையை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடையப்பட்டதுடன், உற்பத்தித்திறனை மேம்படுத்துவதை நோக்கிய முக்கிய கட்டமொன்றாகவும் இது அமைந்தது.

## முறைமையின் பாதுகாப்பும் தாக்குப்பிடிக்குந்தன்மையும்

2025 முழுவதும் முறைமையின் பாதுகாப்பினையும் தாக்குப்பிடிக்குந்தன்மையையும் உறுதி செய்தலானது முக்கிய முன்னுரிமையொன்றாக காணப்பட்டது. உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத்தொடர்புக்கான சங்கத்தின் வாடிக்கையாளர் பாதுகாப்பு திட்டம் உள்ளடங்கலாக பன்னாட்டு தகவல் பாதுகாப்பு தரநிலைகளுடன் முழுமையான இணங்குவிப்பும் பேணப்பட்டது.

முக்கிய முறைமைகளுக்கிடையில் வழமையான நலிவுறுநிலை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், முக்கிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தளங்களுக்கான சுயாதீன பாதுகாப்பு மதிப்பீடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஆளுகை மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளுடன் இசைந்து செல்லும் வகையில், மத்திய வங்கி சிறப்புரிமை உள்நுழைதல் முகாமைத்துவ தீர்வினை நடைமுறைப்படுத்தியது. மேலும், தோற்றம்பெற்று வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான வங்கியின் தயார்நிலையை வலுப்படுத்துவதற்காக, தகவல் மற்றும் இணைய பாதுகாப்பு பற்றிய பயனர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டன.



# பொது நிருவாகம்

இலங்கை மத்திய வங்கியானது நிறுவன நிருவாகம், பெறுகை முகாமைத்துவம், ஓய்வூதிய நிதியங்களின் நிருவாகம், உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளின் வசதிப்படுத்துதல், சொத்து சரிபார்ப்பு மற்றும் அகற்றல், மற்றும் மூத்த முகாமைத்துவத்திற்குத் தேவையான செயலக மற்றும் நெறிமுறை சார்ந்த ஆதரவை வழங்குதல் போன்ற பல்வேறு தொழிற்பாடுகளின் ஊடாக 2025ஆம் ஆண்டில் அதன் நிறுவன ரீதியிலான நிருவாகத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தியது.

## நிறுவன நிருவாகம்

2025ஆம் ஆண்டு காலப் பகுதியில், மத்திய வங்கியானது பொறுப்புக்கூறல், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் சிறந்த ஆளுகையை வலுப்படுத்தி ஏற்புடைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க அதன் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தியது. இது வங்கிச் சொத்துக்களுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய காப்புறுதி உள்ளடக்கத்தைப் பேணல், வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் தபால் முகாமைத்துவம் சேவைகளை மேற்பார்வைசெய்தல், எழுதுகருவிகள் மற்றும் சரக்கு என்பவற்றை வினைத்திறனாக முகாமைசெய்தல், நிறுவனத்திற்கான நிகழ்வுகளை ஒழுங்குசெய்தல், மற்றும் ஆளும் சபை சார்பாக சேவை வழங்குநர்களுடன் உடன்படிக்கைகளை நிறைவேற்றுதல் என்பவற்றை உள்ளடக்கியது.

## பெறுகை முகாமைத்துவம்

ஆண்டுகாலப் பகுதியில் பெறுகை நடவடிக்கைகள் 2025ஆம் ஆண்டிற்கான ஆளும் சபை அங்கீகரித்த வரவுசெலவுத் திட்டத்திலிருந்து பெறப்பட்ட வருடாந்த பெறுகைத் திட்டத்துடன் இணைந்தவகையில் மேற்கொள்ளப்பட்டன. அனைத்துப் பெறுகைகளும் தேசிய பெறுகை தரநிலைகளுடன் இணங்கிச்செல்லும் வகையில், மத்திய வங்கி கையேட்டில் குறித்துரைக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டன. 2025 சனவரி 01ஆம் திகதியிலிருந்து தேசிய பெறுகை வழிகாட்டல்கள்-2024 நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், வலுப்படுத்தப்பட்ட பெறுகைக் கட்டமைப்பொன்றுக்கு இலங்கை மத்திய வங்கி நிலைமாறத் தொடங்கியது. இம்மறுசீரமைப்புக்களுடன் இணைந்த வகையில், தற்போது பல்வேறுபட்ட திணைக்கங்களிடையே மேற்கொள்ளப்பட்ட பெறுகைத் தொழிற்பாடுகளை ஒன்றிணைத்து 2026ஆம் ஆண்டிலிருந்து பிரத்தியேகமான பெறுகைத் திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கு அனுமதித்தது. இலங்கை மத்திய வங்கி காலக்கெடுவுடனான அவசர பெறுகைத் தேவைகளுக்கு உடனுக்குடன் பதிலளித்ததுடன் கட்டாய பிரதிநிதித்துவத்தின் ஊடாக அனைத்து மத்தியமயப்படுத்தப்பட்ட பெறுகைக் குழுக்களுக்கும் பங்களிப்புச்செய்தது.

## ஓய்வூதிய நிதியங்களின் நிருவாகம்

இலங்கை மத்திய வங்கி 2,266 பயனாளர்களுக்கு சேவைசெய்கின்ற அதன் ஓய்வூதிய நிதியங்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முகாமைசெய்தது. பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்துடன் தொடர்பான கொடுப்பனவுகளை செயன்முறைப்படுத்தல், சேமலாப நிதிய மீதிகளை வெளியிடல், மற்றும் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் மற்றும் விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டங்களை நிர்வகித்தல் என்பவற்றை இப்பொறுப்புக்கள் உள்ளடக்குகின்றன. ஓய்வூதிய விதிகளுக்கேற்ப வாழ்வியல் சான்றிதழ்களின் சரிபார்த்தலையும் சேகரித்தலையும் உள்ளடக்கிய பயனாளர்களுடனான தொடர்பூட்டலும் மேற்கொள்ளப்பட்டது.

## ஊழியர் நலனோம்புகை மற்றும் ஆதரவு முன்முயற்சிகள்

ஊழியர் திருப்திக்கான முகாமைத்துவத்தின் அர்ப்பணிப்பின் ஓர் அங்கமாக, வங்கியின் ஊழியர் நன்மைத் திட்டங்களின் கீழ் மருத்துவ மற்றும் ஊழியர் கடன் வசதிகள் போன்ற நன்மைகள் ஊழியர்களுக்குத் தொடர்ந்து கிடைக்கப்பெறுகின்றன.

## பாதுகாப்புச் சேவைகள்

கடுமையான கண்காணிப்பு நெறிமுறைகள், வழமையான பரிசோதனைகள் மற்றும் முன்கூட்டிய தீயணைப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தொடர்ச்சியான இயலாற்றலைக் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்களுடன் கூடிய மேம்பட்ட பாதுகாப்புத் தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைப்பதனூடாக ஆளணியினர் மற்றும் முக்கியமான உட்கட்டமைப்புகளைப் பாதுகாப்பதற்காக வலுவான பாதுகாப்பு நிலையொன்றுக்கு இலங்கை மத்திய வங்கி முன்னுரிமையளித்துள்ளது.

## அளவீட்டுச் சபை

2025ஆம் ஆண்டில், பயன்பாட்டிலிருந்து ஒதுக்கிய, சேதமடைந்த, நன்னிலைப்படுத்தமுடியாத அல்லது திருத்தியமைக்கமுடியாத நிலையான சொத்துக்களைக் கண்டறிவதற்கு இலங்கை மத்திய வங்கி அளவீட்டுச் சபையொன்றை பூர்த்திசெய்தது. மத்திய வங்கிக் கையேட்டின் பொருத்தமான ஏற்பாடுகளுக்கமைய அகற்றல் நடவடிக்கைகள் கண்டிப்பாக மேற்கொள்ளப்பட்டன.

## செயலக மற்றும் நெறிமுறை ஆதரவு

ஆளுநர் மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் உத்தியோகபூர்வ கடமைகள் சுமுகமாக நிறைவேற்றப்படுவதனை உயர்மட்ட செயலக மற்றும் நெறிமுறை ஆதரவினூடாக இலங்கை மத்திய வங்கி உறுதிசெய்தது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விஜயங்களை ஒருங்கிணைத்தல், உத்தியோகபூர்வ நிகழ்வுகளை ஏற்பாடுசெய்தல் மற்றும் ஆண்டு முழுவதும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரமுகர்களுடனான ஈடுபாடுகளை வசதிப்படுத்துதல் போன்றவற்றை இது உள்ளடக்கியருந்தது.

## சட்ட அலுவல்கள்

2025ஆம் ஆண்டில், இலங்கை மத்திய வங்கியானது தேசிய கொள்கை உருவாக்கத்தின் மட்டத்தில் தேசிய முக்கியத்துவமிக்க விடயங்களுக்கான சட்ட ரீதியிலான உள்ளடக்கங்களை வழங்குகின்ற அதேவேளை சட்ட ரீதியிலான முரண்பாடுகளில் நிறுவனத்தின் நலன்களைப் பாதுகாப்பதனூடாக அதன் சட்ட அலுவல்களை வினைத்திறனாக முகாமைசெய்தது. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டம், 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்பவற்றிற்கான திருத்தங்கள் அதேபோன்று புதிய கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டமொன்றை அறிமுகம்செய்தல் உள்ளடங்கலாக நிதியியல் துறைச் சட்ட மறுசீரமைப்புக்களின் சில முன்னெடுப்புக்களில் இலங்கை மத்திய வங்கி முனைப்புடன் ஈடுபட்டது. இதற்கு மேலதிகமாக, நுண்நிதி மற்றும் கொடுகடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டமூலம், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம்), பொது வர்த்தகத் தொழில்முயற்சித் சட்டம் மற்றும் மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை சட்டமூலம் போன்றவற்றின் உருவாக்கத்திற்கான தொழில்நுட்ப உதவியினையும் இலங்கை மத்திய வங்கி வழங்கியது.

### எமது ஓய்வுபெற்றவர்களைப் பாராட்டுதல் - 2025

பல ஆண்டுகால அர்ப்பணிப்புமிக்க சேவையின் பின்னர் 2025 இல் ஓய்வுபெற்ற அலுவலர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்களின் பெறுமதிமிக்க பங்களிப்புக்கள் நிறுவனத்தின் மீது நீடித்த தாக்கத்தினை விட்டுச்சென்றுள்ளதுடன் அவர்களின் எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



**ஜானக கருணாரத்ன**
முன்னாள் துணை ஆளுநர்

- **ஜமால்தீன் அமீர், செயலாளர்**
  செயலாளர்
- **சாலிய குணதிலக்க,**
  மேலதிகப் பணிப்பாளர், பாதுகாப்புச் சேவைகள்

## தகவல் மற்றும் வெளிப்படை தன்மைக்கான உரிமை

2025ஆம் ஆண்டில் மத்திய வங்கி ஆண்டு முழுவதும் தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்களைச் செயல்படுத்தி, வெளிப்படைத்தன்மைக்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்தியது. சரியான நேரத்தில் பதில்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை கண்டிப்பாகப் பின்பற்றுதல் ஆகியவை வெளிப்படையான மற்றும் பொறுப்புணர்வுள்ள நிருவாகத்திற்கான மத்திய வங்கியின் உறுதிப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

**2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 10ஆம் பிரிவிற்கு இணங்க 2025ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் தகவலுக்கான உரிமை தொடர்பான ஆண்டறிக்கை**

| | | |
|---|---|---|
| 01 | இலங்கை மத்திய வங்கியினால் 2025ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | 220 |
| 02 | 2025ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் வழங்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | 155 |
| 03 | 2025ஆம் ஆண்டின் போது, தகவல் வழங்குவதற்கு மறுக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | 46 |
| 04 | ஏனைய பகிரங்க அதிகார சபைகளுக்கு முன்னனுப்பப்பட்ட தகவல் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை (11 தகவல் கோரிக்கைகளுக்கு பகுதியளவான தகவல்கள் வழங்கப்பட்டன.) | 30 |
| 05 | 2025ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டு 2025 திசெம்பர் 31ஆம் திகதியன்று செயலாக்கத்தில் இருந்த தகவல் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை | 9 |
| 06 | இலங்கை மத்திய வங்கியினால் தகவல் வழங்குகைக்காக ஆண்டின் போது, சேகரிக்கப்பட்ட கட்டணங்களின் தொகை | ரூ. 27,750/- |
| 07 | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் மறுக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 15 |
| 08 | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் மறுக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை | 31 |
| 09 | தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 7 |
| 10 | தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவின் பணிப்புக்கிணங்க தகவல் வழங்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை | 2 |
| 11 | பெயர்குறிக்கப்பட்ட அலுவலருக்கு மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 47 |
| 12 | இலங்கை மத்திய வங்கியில் பதிவேடுகளைப் பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அழித்தல் தொடர்பான நடைமுறைகள் | குறிப்பு 01 |
| 13 | தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் | பொருத்தமற்றது |

*குறிப்பு 01: தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 7ஆம் பிரிவு மற்றும் எழுத்திலான ஏனைய தொடர்புடைய சட்டங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக இலங்கை மத்திய வங்கி பதிவேடுகளையும் தகவல்களையும் பேணிவருகின்றது.*

## உள்ளக மற்றும் வைப்புக் காப்புறுதி நிதியங்களின் முகாமைத்துவம்

உள்ளக நிதியங்களினதும் வைப்புக் காப்புறுதித் திட்டத்துடன் தொடர்புடைய நிதியங்களினதும் முகாமைத்துவமானது வங்கியின் பரந்தளவிலான கொள்கைசார் குறிக்கோள்களினை நிறைவுசெய்கின்ற ஒன்றிணைக்கப்பட்ட முதலீட்டுக் கட்டமைப்பொன்றின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் நிலைபெறத்தக்க இடர்நேர்வு சீராக்கப்பட்ட வருவாய்களை முன்னுரிமைப்படுத்துகின்ற பொருத்தமான முதலீட்டுக் கொள்கைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் இந்நிதியங்கள் முகாமைத்துவம்செய்யப்படுகின்றன.

ஆளும் சபையின் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள், இடர்நேர்வு ஏற்பு மற்றும் உபாய ரீதியிலான சொத்துப் பங்கீட்டுப் பிரமாணங்கள் போன்றவற்றினால் வழிநடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினை அனைத்து முதலீட்டு நடவடிக்கைகளும் பின்பற்றுகின்றன.

தொடர்ச்சியான சந்தைப் பகுப்பாய்வுகள் மற்றும் முன்மதிமிக்க இடர்நேர்வுக் கண்காணிப்பு என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்ட தீர்மானங்களுடன் அரசாங்கப் பிணையங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான சொத்து வகுப்புக்களுக்கிடையே சொத்துப்பட்டியல்கள் பன்முகப்படுத்தப்படுகின்றன.

உள்ளக முதலீட்டு மேற்பார்வைக் குழுவினூடாக இந்நடவடிக்கைகளின் மேற்பார்வை மேலும் வலுப்படுத்தப்படுகின்றது.

இந்நிதியங்களின் முகாமைத்துவமானது வெளிப்படைத்தன்மை, தாக்குப்பிடிக்கும்தன்மை மற்றும் வங்கியின் குறிக்கோள்களுடன் அணிசேர்ந்து காணப்படுவதனை வலுப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு முறைமைகள், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப ரீதியிலான தளங்கள் மற்றும் கடுமையான இணங்குவித்தல் நடைமுறைகள் உறுதிப்படுத்துகின்றன.

# ஆளுகை

இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பானது அதன் தொழிற்பாடுகளின் வினைத்திறனான மேற்பார்வை, பொறுப்புக்கூறல் மற்றும் ஆற்றல்வாய்ந்த முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆளும் சபை மற்றும் நாணயக் கொள்கைச் சபை என்பவற்றை உள்ளடக்கி இரட்டை சபை முறையொன்றின் கீழ் இலங்கை மத்திய வங்கி தொழிற்படுகின்றது.

## ஆளும் சபை

இச்சபை நாணயக் கொள்கை தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியின் அலுவல்களின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாகவுள்ளது. இச்சபை இதற்கு தலைவராகக் கடமையாற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அவர்களையும் பொருளாதாரம், வங்கித்தொழில், நிதி, கணக்கியல் மற்றும் கணக்காய்வு, சட்டம் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் விடயங்களில் நிபுணத்துவம் பெற்ற ஏனைய ஆறு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

பொதுவான கொள்கைகளை நிர்ணயித்தல், நிறுவன உபாயத்தை உருவாக்குதல், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் நிதியியல் அறிக்கைகளை அங்கீகரித்தல், உள்ளக கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்புக்களை மேற்பார்வையிடுதல் உள்ளடங்களான பொறுப்புக்களை ஆளும்சபை கொண்டுள்ளது.

## நாணயக் கொள்கைச் சபை

நாணயக் கொள்கைச் சபையானது வங்கியின் நாணயக் கொள்கையை உருவாக்குவதுடன் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இணங்கிச் செல்கின்ற நெகிச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறைமை உள்ளடங்கலாக அதன் நடைமுறைப்படுத்தலையும் மேற்பார்வைசெய்கின்றது. இது மத்திய வங்கியின் ஆளுநரை தலைவராகவும், ஆளும் சபையின் உறுப்பினர்களையும், பொருளியல் அல்லது நிதியியல் நிபுணர்கள் இருவரையும், விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றுக்குப் பொறுப்புக்கூறுகின்ற இரண்டு துணை ஆளுநர்களையும் உள்ளடக்குகின்றது.

இக்கட்டமைப்பினூடாக, இலங்கை மத்திய வங்கி வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் உறுதிப்பாட்டினைப் பேணுவதனை உறுதிப்படுத்துகின்றது.

## நியமனங்கள் மற்றும் பதவிக்காலம்

ஆளுநர் மற்றும் அனைத்து சபை உறுப்பினர்களும், நிதி அமைச்சரின் பரிந்துரை மற்றும் அரசியலமைப்பின் 41அ ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்துடன் சனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். ஆளுநரைத் தவிர, ஏனைய அனைத்து சபை உறுப்பினர்களும் நிறைவேற்றல்லாத உறுப்பினர்களாகப் பணியாற்றுகின்றனர்.

ஆளுநர் மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆறு ஆண்டு காலத்திற்குப் பணியாற்றுகின்றனர். இது உயர்ந்தபட்சமாக மொத்தம் பன்னிரெண்டு ஆண்டுகள் வரை நீடிக்கப்படக்கூடியது.

## ஆளும் சபை - உள்ளமைப்பு

- முனைவர். பி.நந்தலால் வீரசிங்க (தலைவர்)
- திரு. நிஹால் பொன்சேகா - நியமன உறுப்பினர்
- முனைவர். ரவீந்தர ரத்நாயக்க - நியமன உறுப்பினர்
- திரு. அனுஷ்க விஜேசிங்க - நியமன உறுப்பினர்
- திரு. விஸ்வநாதமூர்த்தி கோவிந்தசாமி - நியமன உறுப்பினர்
- திரு. மணில் ஜயசிங்க - நியமன உறுப்பினர்
- திரு. மைத்திரி விக்ரமசிங்க - நியமன உறுப்பினர்
  - *செயலாளர் - திருமதி. டிமுது. சமரதுங்க - உதவி ஆளுநர்*

## நாணயக் கொள்கைச் சபை - உள்ளமைப்பு

- முனைவர். பி.நந்தலால் வீரசிங்க (தலைவர்)
- திரு. நிஹால் பொன்சேகா - நியமன உறுப்பினர்
- முனைவர். ரவீந்தர ரத்நாயக்க - நியமன உறுப்பினர்
- திரு. அனுஷ்க விஜேசிங்க - நியமன உறுப்பினர்
- திரு. விஸ்வநாதமூர்த்தி கோவிந்தசாமி - நியமன உறுப்பினர்
- திரு. மணில் ஜயசிங்க - நியமன உறுப்பினர்
- திரு. மைத்திரி விக்ரமசிங்க - நியமன உறுப்பினர்
- முனைவர். (செல்வி) துஷ்னி வீரகோன் - நியமன உறுப்பினர் (நிபுணர்)
- முனைவர். பிரியங்க துனுசிங்க - நியமன உறுப்பினர் (நிபுணர்)
- திரு. சந்திரநாத் அமரசேகர- (விலை உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பான துணை ஆளுநர்)
- திரு. சிரிகுமார குடாகம- (நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பான துணை ஆளுநர்)
  - *செயலாளர்: திருமதி. டிமுது. சமரதுங்க - உதவி ஆளுநர்*

## சபை கூட்டங்கள்

ஆளும் சபை குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுகின்றது, அதே நேரத்தில் நாணயக் கொள்கைச் சபை குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடுகின்றது. தலைவரால் அல்லது இரண்டு உறுப்பினர்களின் எழுத்துமூல வேண்டுகோளின் பேரில் இக்கூட்டங்கள் கூட்டப்படலாம்.

ஆளும் சபைக் கூட்டத்திற்கான குறைந்தளவு அங்கத்தவர்களின் எண்ணிக்கை ஐந்தாக இருப்பதுடன் நாணயக் கொள்கைச் சபைக் கூட்டத்திற்கான குறைந்தளவு அங்கத்தவர்களின் எண்ணிக்கை (ஆளுநர் அல்லது விலை உறுதிப்பாட்டுக்குப் பொறுப்பான துணை ஆளுநர் உட்பட) எட்டாக காணப்படுகின்றது.

நாணயக் கொள்கைச் சபையானது ஒவ்வொரு கூட்டத்தின் பின்னரும் அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் பொருளாதாரக் கண்ணோட்டம் பற்றிய பகுப்பாய்வுகளுடன் கூடிய அதன் கொள்கைத் தீர்மானங்களை வெளியிடுகின்றது.

## 31 திசெம்பர் 2025இல் உள்ளவாறான மத்திய வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பு

வரைபடம் - 16




** பொதுப் படுகடன் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் 2025 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்டன, பொதுப் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளின் முழுப் பொறுப்பும் 2026 சனவரி 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதத்தில் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.*

*** பிரதேச அபிவிருத்தி திணைக்களம், 2026 சனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் நிதியியல் வசதிற்குட்படுத்தல் திணைக்களம் என பெயர்மாற்றப்பட்டுள்ளது.*

ஆளுகை

## சபை துணைக்குழுக்கள்

ஆளுகையை வலுப்படுத்துவதற்கும் அனைவரையும் உள்ளடக்கிய மேற்பார்வையை உறுதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கி, ஆளும் சபையின் கீழ் பல விசேட குழுக்களைத் தொழிற்படுத்துகின்றது.

இக்குழுக்களில் பின்வருவன அடங்கும்:

- கணக்காய்வுக் குழு
- சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு
- சபை மனிதவள மற்றும் ஊதியக் குழு
- ஒழுக்கவியல் குழு

## ஏனைய கொள்கை தொடர்பான குழுக்கள்

மத்திய வங்கி, பொருளாதார நிலைமைகளை பகுப்பாய்வு செய்வதற்கும் கொள்கைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கும் பிரத்தியேகமான குழுக்களையும் தாபித்துள்ளது.

- நாணய கொள்கைக் குழு
- நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழு

## மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாட்டுக்குழுக்கள்

இக்குழுக்கள், கொள்கைகளின் நடைமுறைப்படுத்தலுக்கு ஆதரவளித்து தொழிற்பாட்டு விடயங்களை மேற்பார்வை செய்கின்றன. இக்குழுக்களில் பின்வருவன அடங்கும்:

- நிறுவன முகாமைத்துவக் குழு
- தகவல் தொழில்நுட்ப மேற்பார்வைக் குழு
- முதலீட்டு மேற்பார்வைக் குழுக்கள்
  - உள்ளக முதலீட்டு மேற்பார்வைக் குழு
  - பன்னாட்டு ஒதுக்கு முதலீட்டு மேற்பார்வைக் குழு
  - ஊழியர் சேமலாப நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு
- நிதியியல் அல்லா இடர்நேர்வு முகாமைத்துவ குழு
- நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவ குழு
- மனித மூலதனக் குழு

## தொழிற்பாட்டுக் குழுக்கள்

- சந்தைத் தொழிற்பாட்டுக் குழுக்கள்
- மனித மூலதனக் குழுக்கள்
- நலக் குழுக்கள்
- வியாபாரத் தொடர்ச்சி திட்டமிடல் குழுக்கள்

## தேசிய மட்ட குழுக்கள்

நிதியியல் துறை அபிவிருத்தி மற்றும் உறுதிப்பாட்டினை மேம்படுத்தும் முக்கிய தேசிய குழுக்களுக்கும் மத்திய வங்கி பங்களிப்புச் செய்கின்றது. இக்குழுக்களில் பின்வருவன அடங்கும்:

- இறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டின் ஒருங்கிணைப்பிற்கான குழு
- நிதியியல் துறை மேற்பார்வைக் குழு
- நெருக்கடி முகாமைத்துவ குழு
- தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் குழு
- தேசிய கொடுப்பனவுக் குழு
- பணம் தூயதாக்கலுக்கெதிராக மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழு

## நடத்தைக் கோவை

இலங்கை மத்திய வங்கியின் நடத்தைக் கோவையானது குழு உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களிடையே நேர்மை, தொழில்வாண்மை, மற்றும் தார்மீக நடத்தையை மேம்படுத்துகின்றது. இது உயர் தார்மீகம்சார்ந்த தரநிலைகளைக் கடைப்பிடித்தல், அக்கறை முரண்பாடுகளைத் தவிர்த்தலும் வெளிப்படுத்துதலும், உணர்திறன் மிக்க தகவல்களின் கடுமையான இரகசியத்தன்மை மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் உள்ளகக் கொள்கைகளுக்கு முழுமையாக இணங்குதல் ஆகியவற்றிற்கு பொறுப்பாணையளிக்கின்றது.

## தகவலறியும் கட்டமைப்பு

பிரத்தியேக தகவலறியும் பொறிமுறையானது தவறான நடத்தை, ஒழுக்க விழுமியங்களற்ற நடத்தை பற்றி இரகசியமாக அறிக்கையிடுவதற்கு ஊழியர்களை இயலடையச்செய்வதன் ஊடாக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலிற்கு ஆதரவளிக்கின்றது. நல்லெண்ணத்துடன் செயற்படும் தகவல்தெரிவிப்பவர்கள், பழிவாங்கும் நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்கப்படுவதுடன் அனைத்து அறிக்கைகளும் பக்கச்சார்பற்ற விசாரணைக்கும் பொருத்தமான சீராக்கல் நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படுகின்றன.

## தரவு ஆளுகை

துல்லியத்தன்மை, பாதுகாப்பு மற்றும் அதன் தரவுகளின் நம்பகத்தன்மையை பாதுகாப்பதற்கு மத்திய வங்கி முன்னுரிமையளிக்கின்றது. தரவு முகாமைத்துவம் மீதான வலுவான கொள்கைகள், அதிகாரமளிக்கப்படாத அணுகல் அல்லது மீறுகைகளுக்கு எதிரான பாதுகாப்பு மற்றும் உணர்திறன்மிக்க தகவல்களின் பாதுகாப்பான கையாளுகையை உறுதிசெய்வதற்கான கடுமையான வகிபாக அடிப்படையிலான அணுகல் கட்டுப்பாடுகள் என்பவற்றை தரவு ஆளுகைக் கட்டமைப்பு உள்ளடக்குகின்றது.

## சபை துணைக் குழுக்கள்

### கணக்காய்வு குழு

**நோக்கம் மற்றும் செயல்**

கட்டமைக்கப்பட்டதும் முறைமைப்படுத்தப்பட்டதுமான வழியில் ஆலோசனை மற்றும் வழிகாட்டலை வழங்கும்போது, வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துதல். 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 103ஆம் பிரிவின்படி, உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு, நிதியியல் அறிக்கை நேர்மைத்தன்மை, வெளியக கணக்காய்வாளர்களுடனான ஈடுபாடு, தகவல்தெரிவித்தல், இணங்குவித்தல் மற்றும் மோசடியை அறிக்கையிடுதல் உள்ளடங்கலாக உள்ளகக் கட்டுப்பாடுகளின் மதிப்பீடு ஆகியவற்றைக் மேற்பார்வைசெய்தலும், உள்ளக கணக்காய்வுப் பரிந்துரைகளுடனான இணங்குவிப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்குள் செயல்திறனைக் கண்காணிப்பது அவசியமாகும்.

**உறுப்பினர்கள்**

**திரு. மணில் ஜயசிங்க**
தலைவர்

**முனைவர். ரவீந்தர ரத்நாயக்க**
உறுப்பினர்

**திரு. மைத்ரி விக்ரமசிங்க,**
சனாதிபதி சட்டத்தரணி உறுப்பினர்

### சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு

**நோக்கம் மற்றும் செயல்**

தொழில்முயற்சி சார்ந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றின் நடைமுறைப்படுத்தலையும் ஆளுகைச் சபையிலிருந்து முறைசார் பிரதிநிதிநிதித்துவமொன்றினூடாக மத்திய வங்கியின் இணங்குவிப்புத் தொழிற்பாடுகளையும் மேற்பார்வைசெய்தல். இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்புடன் இணைந்த வகையில் பன்னாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களைத் தொடர்ந்து இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பு மீதான பிரத்தியேகமான இலக்கை உறுதிப்படுத்தும் பரந்த உபாயங்கள் மற்றும் கொள்கைகளை நிர்ணயித்தல் சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவின் பொறுப்பாகும்.

**உறுப்பினர்கள்**

**திரு. நிஹால் பொன்சேகா**
தலைவர்

**திரு. ரெவின் ஜயசேகர**
சுயாதீன வெளிவாரி உறுப்பினர்

**திரு. ரனேல் விஜேசிங்க**
சுயாதீன வெளிவாரி உறுப்பினர்

### ஒழுக்கவியல் குழு

**நோக்கம் மற்றும் செயல்**

இலங்கை மத்திய வங்கியின் கொள்கைகள், தீர்மானங்கள் மற்றும் தொழிற்பாடுகள் என்பன 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 22 மற்றும் 25ஆம் பிரிவுகளின் கீழான தேவைப்பாடுகளுக்கு துணைபுரிகின்ற ஒழுக்கவியல் கோட்பாடுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள், மற்றும் சிறந்த ஆளுகை நடைமுறைகளுடன் அணிசேர்கின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆலோசனை மற்றும் மேற்பார்வை அமைப்பாகச் செயற்படல்.

**உறுப்பினர்கள்**

**திரு. அனுஷ்க விஜயசிங்க**
தலைவர்

**முனைவர். ரவீந்தர ரத்நாயக்க**
உறுப்பினர்

**திரு. அமல் கப்ரால்**
வெளியக உறுப்பினர்

அனைத்து துணை ஆளுநர்களும்

### சபை மனிதவளம் மற்றும் ஊதியக் குழு

**நோக்கம் மற்றும் செயல்**

வங்கியின் மூலோபாய குறிக்கோள்களுடன் ஒழுங்கமைந்த, பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல், அவ்வாறே உயர் திறன்மிக்க திறமைசாலிகளை தக்கவைத்துக் கொள்ளல் மற்றும் ஊக்குவித்தல் போன்ற இலங்கை மத்திய வங்கியின் ஊதியக் கட்டமைப்பு தொடர்பில் ஆளுகைச் சபைக்கு ஆலோசனை வழங்கலும் பரிந்துரைகளை வழங்கலும்.

**உறுப்பினர்கள்**

**திரு. நிஹால் பொன்சேகா**
தலைவர்

**திரு. விஸ்வநாதமூர்த்தி கோவிந்தசாமி**
உறுப்பினர்

**திரு. மணில் ஜயசிங்க**
உறுப்பினர்

**திரு. சந்திரசிறி ஹேவபத்திரினி**
வெளிவாரி உறுப்பினர்

ஆளுகை

## கொள்கை தொடர்பான பிற குழுக்கள்

### நாணயக் கொள்கைக் குழு

**நோக்கம் மற்றும் செயல்**

பேரண்ட பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் எறிவுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் பொருத்தமான எதிர்கால நாணயக் கொள்கை பணிப்புரைகள் மீதான பரிந்துரைகளை நாணயக் கொள்கைச் சபைக்கு மேற்கொள்தல்.

**உள்ளமைப்பு**

ஆளுநர் (தலைவர்), அனைத்து துணை ஆளுநர்கள், பொறுப்பான உதவி ஆளுநர்கள் மற்றும் பொருளாதார ஆராய்ச்சி, புள்ளிவிபரவியல், சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தலைவர்கள் மற்றும் பணம் மற்றும் வங்கித்தொழில் பிரிவை மேற்பார்வை செய்கின்ற பொருளாதார ஆராய்ச்சியின் மேலதிகப் பணிப்பாளர்.

### நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு குழு

**நோக்கம் மற்றும் செயல்**

உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களால் எடுத்துக்காட்டப்பட்ட நிதியியல் முறைமை உறுதிப்பாடு தொடர்பான விடயங்களை மதிப்பிடுதல், நிதியியல் முறைமையிலுள்ள இடர்நேர்வுகளைக் கண்காணித்தல், உறுப்பினர்கள் வழங்கும் தொழில்நுட்ப உள்ளீடுகளின் அடிப்படையில் அத்தகைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை ஆளுகை சபைக்கு வழங்குதல் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் குழுவின் முக்கிய பணியாகும்.

**உள்ளமைப்பு**

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக்கு பொறுப்பான துணை ஆளுநர் (தலைவர்), பேரண்ட முன்மதியுடைய கொள்கைளுக்கு பொறுப்பான துணை ஆளுநர், விலை உறுதிப்பாட்டுக்கு பொறுப்பான துணை ஆளுநர், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு, வங்கி மேற்பார்வை, வங்கி அல்லாத நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான உதவி ஆளுநர்கள் மற்றும் மேற்படி அனைத்து திணைக்களங்களினதும் பணிப்பாளர்கள்.

## மேற்பார்வை/முகாமைத்துவ/தொழிற்பாட்டுக் குழு

### நிறுவன முகாமைத்துவ குழு

**நோக்கம் மற்றும் செயல்**

வங்கியின் மனித மூலதன போட்டித்திறன் மற்றும் நிலைபெறுதன்மை மீது தாக்கமொன்றை ஏற்படுத்தும் கொள்கை முன்மொழிவுகள் மற்றும் குறித்து ஆளும் சபைக்கு பரிந்துரைகளை வழங்குதல், மற்றும் நிறுவனத் துணைத் தொழிற்பாடுகள் தொடர்பிலான பிரச்சனைகளைத் தீர்த்தல். சில தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவிற்கு ஆளுகைச் சபையானது அதன் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளது

**உள்ளமைப்பு**

ஆளுநர் (தலைவர்),

அனைத்து துணை ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள்

### சந்தைத் தொழிற்பாட்டுக் குழு

**நோக்கம் மற்றும் செயல்**

நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்துசெல்லத்தக்க விதத்தில் விரும்பத்தக்க மட்டமொன்றில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தைப் பேணுவதற்கு வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையில் ரூபா திரவத்தன்மையை முகாமைசெய்தல் மற்றும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத வீச்சுடன் இசைந்துசெல்லும் வகையில் உரிய உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பாக நாளாந்த பரிந்துரைகளை முன்வைத்தல்

**உள்ளமைப்பு**

விலை உறுதிப்பாட்டுக் கொத்தணிக்குப் பொறுப்பான துணை ஆளுநர் (தலைவர்), பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான உதவி ஆளுநர் மற்றும் அவற்றின் பணிப்பாளர்கள்.

### தகவல்தொழில்நுட்ப மேற்பார்வைக் குழு

**நோக்கம் மற்றும் செயல்**

நிறுவன இலக்குகளுடனான வங்கியின் தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பக் கட்டமைப்பின் உபாயப் பணிப்புரை மற்றும் ஒருங்கிணைப்பை வழங்குதல், மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வுசெய்தல் மற்றும் பரிந்துரைத்தல்.

**உள்ளமைப்பு**

தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்திற்கு பொறுப்பான துணை ஆளுநர் (தலைவர்) அனைத்து உதவி ஆளுநர்கள் தகவல் தொழில்நுட்பத்தின் பணிப்பாளர்

### நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு

**நோக்கம் மற்றும் செயல்**

இலங்கை மத்திய வங்கிக்கான தொழிற்பாட்டு மற்றும் இணங்குவித்தல் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான பொருத்தமான கட்டமைப்பொன்று நடைமுறையிலிருப்பதை உறுதிப்படுத்தல் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் இணங்குவித்தல் இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையானது ஆளும் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள், நடவடிக்கைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இசைந்துசெல்லும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதை மேற்பார்வையிடல்.

**உள்ளமைப்பு**

ஆளும் சபையினால் நியமிக்கப்பட்ட மூத்த துணை ஆளுநர்/துணை ஆளுநர் (தலைவர்), அனைத்து துணை ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல் பணிப்பாளர்/முதன்மை இடர்நேர்வு அலுவலர், முதன்மை இணங்குவித்தல் அலுவலர் (உறுப்பினர்கள்) அவதானிப்பாளர்கள்: முதன்மைத் தகவல் பாதுகாப்பு அலுவலர், முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர்

# ஆளுகை

## நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு

### நோக்கம் மற்றும் செயல்

இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதிக்கின்ற சந்தை, கொடுகடன், திரவத்தன்மை மற்றும் ஏனைய இடர்நேர்வுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடர்நேர்வு ஆர்வத்தினுள் காணப்படுவதை மேற்பார்வைசெய்து உறுதிப்படுத்தல்

### உள்ளமைப்பு

நிதித் திணைக்களத்தை மேற்பார்வை செய்கின்ற துணை ஆளுநர் (தலைவர்), உள்நாட்டு விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பான துணை ஆளுநர்கள், உள்நாட்டு விலை உறுதிப்பாட்டுக் கொத்தணி மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொத்தணியின் கீழுள்ள திணைக்களங்களுக்குப் பொறுப்பான அனைத்து உதவி ஆளுநர்கள், மற்றும் நிதித் திணைக்களத்திற்குப் பொறுப்பான உதவி ஆளுநர்

வாக்களிக்காத உறுப்பினர்கள்: பொருளாதார ஆராய்ச்சி, சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம், முதலீட்டு முகாமைத்துவத் திணைக்களம் என்பவற்றின் பணிப்பாளர்கள், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல்/முதன்மை இடர்நேர்வு அலுவலர், முதன்மைக் கணக்காளர் மற்றும் முதன்மை உள்ளக கணக்காய்வாளர்.

## முதலீட்டு மேற்பார்வைக் குழுக்கள்

### நோக்கம் மற்றும் செயல்

பரந்தளவிலான முதலீட்டுத் தீர்மானங்களை எடுக்கும் போது முதலீட்டு வழிகாட்டுதல்களை பின்பற்றுவதை உறுதிசெய்தல். முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்கும் மீளாய்வு செய்வதற்கும் உள்ளீடுகளை வழங்குதல், ஆளும் சபையின் உபாய ரீதியிலான தீர்மானங்களை தொழிற்பாட்டு பணிப்புரைகளாக மாற்றுதல். நிதிய முகாமைத்துவத் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படும் முதலீட்டு நடவடிக்கைளை மேற்பார்வை செய்தல். புதிய வழங்குநர்கள்/இணைத்தரப்பினர்களை ஒப்புதலளித்தலும் முதலீட்டுச் செயலாற்றம், இடர்நேர்வு மற்றும் இணங்குவித்தலை கண்காணித்தலும், கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களிலிருந்து குறிப்பாக தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் தேவையான விலகல்களை பரிந்துரைத்தல்.

### உள்ளமைப்பு

தொடர்புடைய திணைக்களங்களுக்குப் பொறுப்பான துணை ஆளுநர் (தலைவர்), முதலீட்டுக் கொள்கைக் கூற்றுக்களில் எடுத்துரைக்கப்பட்டவாறான உரிய திணைக்களங்களை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான உதவி ஆளுநர்
அவதானிப்பாளர்கள்: தொடர்புடைய திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் முதன்மை இடர்நேர்வு அலுவலர்

## மனித மூலதன குழு

### நோக்கம் மற்றும் செயல்

வங்கியின் மனித மூலதனத் தேவைகளை வலுப்படுத்துவதற்காக கவனம் செலுத்துவதுடன் அதற்கான ஆலோசனை மற்றும் உபாய வழிகாட்டுதல்களை வழங்குதல்

### உள்ளமைப்பு

மனிதவளத்திற்கு பொறுப்பான துணை ஆளுநர் (தலைவர்), மனிதவளத்திற்கு பொறுப்பான உதவி ஆளுநர் (துணைத் தலைவர்), முதன்மை மனிதவள அதிகாரி, மனித வள உபாயங்கள் சீரமைத்தல் கருத்திட்டத்தின் பணிப்பாளர், மனிதவள, வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு, அலுவலர் பணிகள் முகாமைத்துவம், இடர்நேர்வு முகாமைத்துவம், தொடர்பூட்டல் திணைக்கங்களின் தலைவர்கள், வங்கியின் செயலாளர் மற்றும் தொடர்புடைய உதவி ஆளுநர்களால் நியமிக்கப்பட்ட கொத்தணிகளை பிரதிநிதித்துவம்செய்கின்ற நான்கு நிரந்தரமற்ற உறுப்பினர்கள்.

## நலக் குழு

### நோக்கம் மற்றும் செயல்

பாதுகாப்புடன் தொடர்புடைய கரிசனைகள் முன்கூட்டியே நிவர்த்திசெய்வதன் மூலமும், ஊழியர்களின் நலனோன்புகையைப் பேணுவதன் மூலமும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை உறுதிசெய்யுங்கள்.

### உள்ளமைப்பு

ஊழியர் பணிகள் முகாமைத்துவப் பொறுப்பான துணை ஆளுநர் (தலைவர்)

அலுவலர் பணிகள் முகாமைத்துவத் திணைக்களம், வசதிகள் முகாமைத்துவம், செயலகம், பாதுகாப்பு பணிகள், மனித வளங்கள் (முதன்மை மனித வளங்கள் அலுவலர் உள்ளடங்கலாக) வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுகள் மையம், கொள்கை மீளாய்வு மற்றும் கண்காணிப்பு, இடர்நேர்வு முகாமைத்துவம், மற்றும் சட்டத் திணைக்களம் போன்றவற்றின் தலைவர்கள்

## வியாபாரத் தொடர்ச்சி திட்டமிடல் குழு

### நோக்கம் மற்றும் செயல்

தயார்நிலையை வலுப்படுத்துவதன் மூலமும், நிறுவனசார் தாக்குபிடிக்கும்தன்மையை மேம்படுத்துவதன் மூலமும், சீர்குலைக்கும் நிகழ்வுகளுக்கு உரிய நேரத்தில் பதிலளிப்பதை ஒருங்கிணைப்பதன் மூலமும், மத்திய வங்கியின் முக்கிய செயற்பாடுகளின் தொடர்ச்சியை உறுதிசெய்தல். வியாபாரத் தொடர்ச்சித் திட்டமிடலை மேற்பார்வைசெய்தல், தொழிற்பாட்டு உறுதிப்பாட்டிற்கான தோற்றம்பெற்று வரும் இடர்நேர்வுகளைக் கண்காணித்தல், இலங்கை மத்திய வங்கி மோசமான நிலைமைகளின் போது செயற்றிறன்மிக்க வகையில் தொழிற்படுவதற்கான இயலாற்றலைப் பேணுதலை உறுதிசெய்தல் போன்றவற்றுக்கு குழு பொறுப்பாக இருக்கின்றது.

### உள்ளமைப்பு

கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகளுக்குப் பொறுப்பான துணை ஆளுநர்

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள், தகவல் தொழில்நுட்பம், வசதிகள் முகாமைத்துவம், பாதுகாப்பு பணிகள், மனித வளங்கள், நிதி, பொதுப் படுகடன் மற்றும் நாணயத் திணைக்களம் போன்ற திணைக்களங்களின் தலைவர்கள்

# சபை உறுப்பினர்கள்





2025 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு

**ஆளுகை > சபை உறுப்பினர்கள்**



**பி நந்தலால் வீரசிங்க**

ஆளுநர்/முதன்மை நிறைவேற்று அலுவலர்

பொருளியலில் முனைவர் பட்டம், அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

பொருளியலில் விஞ்ஞான முதுமானி பட்டம், அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

விஞ்ஞானமானி, களனிப் பல்கலைக்கழகம், இலங்கை

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- தலைவர் - ஆளும் சபை
- தலைவர் - நாணயக் கொள்கைச் சபை
- பெயர்குறிக்கப்பட்ட அலுவலர் - இலங்கை மத்திய வங்கி (2016 இன் 12ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்)



**நிஹால் பொன்சேகா**

சபை உறுப்பினர்

விஞ்ஞானமானிப் பட்டம், இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு, இலங்கை

சக உறுப்பினர், பட்டய வங்கியாளர்கள் நிறுவனம், ஐக்கிய இராச்சியம்.

கௌரவ சக உறுப்பினர், பட்டய பிணையங்கள் மற்றும் முதலீடுகள் நிறுவனம் (FCSI), ஐக்கிய இராச்சியம்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
- தலைவர் – சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு
- தலைவர் - சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு
- தலைவர் - சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு



**ரவிந்திர ரத்நாயக்க**

சபை உறுப்பினர்

பொருளியலில் முனைவர் பட்டம், லா ட்றோப் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

பொருளாதார அபிவிருத்தியில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா, கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைமாணிப் பட்டம் (பொருளியலில் கௌரவம்), பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
- உறுப்பினர் - கணக்காய்வுக் குழு
- உறுப்பினர் - ஒழுக்கவியல் குழு



**அனுஷ்க விஜேசிங்க**

சபை உறுப்பினர்

பொருளியளில் முதுமானிப் பட்டம், லீட்ஸ் பல்கலைக்கழம், ஐக்கிய இராச்சியம்.

பொருளியலில் இளமானிப் பட்டம், பல்கலைக்கழகக் கல்லூரி, லண்டன், ஐக்கிய இராச்சியம்.

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
- தலைவர் - ஒழுக்கவியல் குழு



**விஷ்வநாதமூர்த்தி கோவிந்தசாமி**

சபை உறுப்பினர்

வியாபார முதுமானி பட்டம், மின்னியல் பொறியியலில் இளமாணிப் பட்டம், ஹார்ட்போர்ட் பல்கலைக்கழகம், ஐக்கிய அமெரிக்கா.

சக உறுப்பினர், சான்றுபடுத்தப்பட்ட தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவகம், இலங்கை.

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
- உறுப்பினர் - சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு



**மனில் ஜயசிங்க**

சபை உறுப்பினர்

சக உறுப்பினர், பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம், ஐக்கிய இராச்சியம்

சக உறுப்பினர், சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவகம், இலங்கை

உறுப்பினர், பட்டய பொது நிதி மற்றும் கணக்கீட்டு நிறுவகம்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
- தலைவர் - கணக்காய்வுக் குழு
- உறுப்பினர் - சபை மனித வள மற்றும் ஊதியங்கள் குழு



**மைத்திரி விக்ரமசிங்க**

சபை உறுப்பினர்

சனாதிபதி சட்டத்தரணி, சக உறுப்பினர், பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் நிறுவகம்,

சட்ட இளமாணி (கௌரவ) கொழும்பு பல்கலைக்கழகம்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - ஆளும் சபை
- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை
- உறுப்பினர் - கணக்காய்வுக் குழு



**துஷ்னி வீரகோன்**

சபை உறுப்பினர்

பொருளியலில் முனைவர் பட்டம், மன்செஸ்டர் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

பொருளியலில் முதுமாணி, மன்செஸ்டர் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

பொருளியலில் இளமாணி, பெல்பாஸ்ட் குயின்ஸ் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை



**பிரியங்க துனுசிங்க**

சபை உறுப்பினர்

பொருளியல் பேராசிரியர், பொருளியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- நியமிக்கப்பட்ட உறுப்பினர் - நாணயக் கொள்கைச் சபை



**சந்திரநாத் அமரசேகர**

துணை ஆளுநர்

பொருளியலில் முனைவர் பட்டம், மன்செஸ்டர் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

பொருளியலில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம், மன்செஸ்டர் பல்கலைக்கழகம், ஐக்கிய இராச்சியம்

பொருளியலில் கலைமாணிப் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- உறுப்பினர் - நாணய கொள்கைச் சபை
- உறுப்பினர் - ஒழுக்கவியல் குழு



**சிறிகுமார குடகம**

துணை ஆளுநர்

சட்ட முதுமாணிப் பட்டம், மொனாஷ் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா

சட்ட முதுமாணிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம்

சட்ட இளமாணிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகம்

**இலங்கை மத்திய வங்கியில் தற்போதைய பதவி நிலைகள்:**

- உறுப்பினர் - நாணய கொள்கைச் சபை
- உறுப்பினர் - ஒழுக்கவியல் குழு

# கூட்டாண்மை முகாமைத்துவம்



**ருவனி குணசேகர**
உதவி ஆளுநர்

**சமிந்த பண்டார**
உதவி ஆளுநர்

**பி.கே.ஜி ஹரிஸ்சந்திர**
உதவி ஆளுநர்
(பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளார்)

**சந்திரநாத் அமரசேகர**
துணை ஆளுநர்

**நந்தலால் வீரசிங்க**
ஆளுநர்


**அனுராதா டில்ருக்ஷி**
உதவி ஆளுநர்
**டிமுது சமரதுங்க**
உதவி ஆளுநர்
**இனோக்கா மொஹொட்டி**
உதவி ஆளுநர்
**நெலுமணி டவுலகல**
மூத்த துணை ஆளுநர்
**சிறிகுமார குடகம**
துணை ஆளுநர்
2025 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு

# முதன்மை அலுவலர்கள்

## திணைக்களத் தலைவர்கள்



## ஆளுகை > முதன்மை அலுவலர்கள்

**மகிந்த பர்னாந்து**
பணிப்பாளர், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவித்தல்

**மேனகா ஜயவர்த்தன**
பணிப்பாளர், வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம்

**டிலேனி கருணாரத்ன**
பணிப்பாளர், வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள்

**சிசிர விதாரன**
பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவம்

**பிரியந்த ஹேரத்**
பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பம்

**சத்துர ஆரியதாச**
பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி

**ராஜா தயாநந்த**
செயலாளர்

**கல்ஹாரி மாயாதுன்ன**
முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர்

**சமன் நாணயக்கார**
முதன்மை இணங்குவித்தல் அலுவலர்



**பிரியந்த திலகவீர**
பணிப்பாளர், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு

**அனில் பெரேரா**
பணிப்பாளர், சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம்

**சஞ்சீ பாலசூர்ய**
முதன்மை தகவல் பாதுகாப்பு அலுவலர்

**சுபானி கீர்த்திரத்ன**
பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு

**லசந்தி சிறிமான்னே**
முதன்மைக் கணக்காளர்

**றுக்ஷனா த சில்வா ஜயதிலக**
பணிப்பாளர், வங்கி மேற்பார்வை

2025 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு

## மேலதிகத் திணைக்களத் தலைவர்கள்



**சுரேக்கா கெடவல**
மேலதிகப் பணிப்பாளர், வங்கி மேற்பார்வை



**லசந்தா சிறிவர்தன**
மேலதிக கண்காணிப்பாளர், ஊழியர் சேமலாப நிதியம்



**லசித பத்பேரிய**
மேலதிகப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சி



**சுனந்த ஒபேசேகர**
மேலதிகப் பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்



**உதயந்தி தென்னகோன்**
மேலதிகப் பணிப்பாளர், செயலகத் திணைக்களம்



**சந்திரிகா ராஜபக்ஷ**
மேலதிக கண்காணிப்பாளர், ஊழியர் சேமலாப நிதியம்



**டில்ஹான் த சில்வா**
மேலதிக் கண்காணிப்பாளர், நாணயம்



**லங்காபதி சிறிதரன்**
மேலதிகப் பணிப்பாளர், பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்பு



**அயேஷ் ஆரியசிங்க**
மேலதிகப் பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு



**இந்துனில் ஏக்கநாயக்க**
மேலதிகப் பணிப்பாளர், வங்கித்தொழில் கற்கைகளுக்கான நிலையம்



**சத்துர கமகே**
மேலதிகப் பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பம்



**பிரியங்கா வீரசேகர**
மேலதிக செயலாளர், செயலகத் திணைக்களம்



**எரந்தி வீரசிங்க**
மேலதிகப் பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை



**மனீஷா விமலசூர்ய**
மேலதிகப் பணிப்பாளர், கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்



**சிசிர ஜயசேகர**
மேலதிக முதன்மைக் கணக்காளர்



**விபுல விக்கிரமாராச்சி**
மேலதிகப் பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சி



**நிஷாந்த ஜயவீர**
மேலதிகப் பணிப்பாளர், முதலீட்டு முகாமைத்துவம்



**மல்காந்தி வரகாகொட**
மேலதிகப் பணிப்பாளர், மனித வளங்கள்



**நயனா பெரேரா**
மேலதிக கண்காணிப்பாளர், ஊழியர் சேமலாப நிதியம்



**மானில் தமயந்தி**
மேலதிக கண்காணிப்பாளர், நாணயத் திணைக்களம்



**ஷான் குறிஞ்சீதரன்**
மேலதிகப் பணிப்பாளர், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை



**பவித்ரி விதானகே**
மேலதிகப் பணிப்பாளர், சட்டம்



**டிலினி விலத்கமுவ**
மேலதிகப் பணிப்பாளர், சட்டம்



**எரந்தி லியனகே**
மேலதிக செயலாளர், செயலகத் திணைக்களம்



**பிரதீபா குமாரி**
மேலதிகப் பணிப்பாளர், வங்கி மேற்பார்வை



**நிரோதா மல்லிகாராச்சி**
மேலதிகப் பணிப்பாளர், மனித வளங்கள்

# கணக்காய்வுக் குழு அறிக்கை

**மத்திய வங்கியின் ஆளும் சபை மற்றும் முகாமைத்துவத்திற்குக் கட்டமைக்கப்பட்ட மேற்பார்வை மற்றும் வழிகாட்டலினைக் கணக்காய்வுக் குழு தொடர்ந்து வழங்கியமையானது ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், இணங்குவிப்பு உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் என்பவற்றின் செயற்றிறனை வலுப்படுத்தியது.**

## 1. கணக்காய்வுக் குழுவின் வகிபாகம்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 103(4) ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வு குழுவின் தத்துவங்களும், கடமைகளும் மற்றும் தொழிற்பாடுகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் (அ) உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டை மேற்பார்வை செய்தல் (ஆ) முதன்மை உள்ளகக் கணக்காய்வாளரினால் வழங்கப்பட்ட கண்டறிவுகளுடனும் விதப்புரைகளுடனும் இணங்கியொழுகுவதனைக் கண்காணித்தல் (இ)கணக்காய்வாளர்களின் கண்டறிவுகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு அவர்களைச் சந்தித்தல் அத்துடன் (ஈ) வருடாந்த நிதிசார் கூற்றுக்களைக் கணக்காய்வாளர்களுடன் மீளாய்வுசெய்தல். இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 103(6)ஆம் பிரிவிற்கிணங்க, ஆளும் சபை, மத்திய வங்கியின் கணக்காய்வுப் பட்டயத்தில் கணக்காய்வு குழுவின் அமைப்பையும் தத்துவங்களையும், கடமைகளையும், தொழிற்பாடுகளையும் வரையறுத்துக்கூறுதல் வேண்டும். இச்சட்ட அடித்தளம் கணக்காய்வுக் குழுவிற்கு தன்னாட்சியை வழங்கி, இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளில் ஒழுங்குபடுத்தல் இணங்குவிப்பு மற்றும் பொதுமக்கள் நம்பிக்கையை மேம்படுத்துகின்ற அதேவேளை உள்ளக கட்டுப்பாட்டுப் பொறிமுறைகள் வினைத்திறனாக தொழிற்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடன் அணிசேர்ந்து ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம், இணங்குவிப்பு மற்றும் தவிர்க்கமுடியாத நிதியியல் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் மத்திய வங்கியின் அர்ப்பணிப்பினை வலுப்படுத்தி, இவ்வதிகாரசபையை மேற்பார்வைசெய்கின்றது.

2025ஆம் ஆண்டில் ஆளும் சபையினால் நியமிக்கப்பட்ட பின்வரும் உறுப்பினர்களைக் கணக்காய்வுக் குழு உள்ளடக்கியிருந்தது.

i. திரு.மனில் ஜயசிங்க - தலைவர்
ii. முனைவர். ரவிந்திர ரத்நாயக்க - உறுப்பினர்
iii. திரு. ரஜீவ் அமரசூரிய - உறுப்பினர் (2025 யூன் 27 வரை)
iv. திரு. மைத்திரி எவன் விக்ரமசிங்க - உறுப்பினர் (2025 ஒத்தோபர் 23 முதல் நடைமுறைக்கு வரும் வகையில்)

ஆளும் சபையின் செயலாளர் கணக்காய்வு குழுவின் செயலாளராவார் என்பதுடன் முதன்மை உள்ளகக் கணக்காய்வாளர் உதவிச் செயலாளராக செயற்படுகின்றார். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி, அவதானிப்பாளராக அனைத்து கணக்காய்வுக் குழு கூட்டங்களிலும் பங்குபற்றுவார்.

குழு உறுப்பினர்களும் கூட்ட சமூகமளிப்பும்

| | பங்குபற்றுவதற்கு தகைமையுடையோர்/ பங்குபற்றியவர்கள் |
|---|---|
| **திரு. மனில் ஜயசிங்க**<br>தலைவர் 13/13 | 13/13 |
| **முனைவர். ரவிந்திர ரத்நாயக்க**<br>உறுப்பினர் 13/13 | 13/13 |
| **திரு. ரஜீவ் அமரசூரிய**<br>உறுப்பினர் 08/05 | 08/05 |
| **திரு. மைத்திரி விக்ரமசிங்க**<br>உறுப்பினர் 02/02 | 02/02 |

## 2. இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வுச் சாசனம்

ஆளும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் கணக்காய்வுச் சாசனமானது ஆளுகை தொடர்பான பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கமைய அதன் செயற்றிறன்மிக்க தொழிற்பாட்டை உறுதிசெய்யும் வகையில், கணக்காய்வுக் குழுவின் உள்ளமைப்பு, அதிகாரம், தத்துவங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை வரைவிலக்கணம் செய்கின்றது. வங்கியின் தொழிற்பாடுகளின் ஆளுகை, இணங்குவிப்பு, இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாட்டுச் சூழலையும் நிதியியல் அறிக்கையிடலையும் சுயாதீனமாக மேற்பார்வை செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட, முறைமைசார்ந்த கட்டமைப்பை இச்சாசனம் வழங்குகின்றது.

அதன் பொறுப்பானையை நிறைவேற்றும் வகையில், கணக்காய்வு குழு, அதன் கடமைகளை செயற்றிறன்மிக்க விதத்தில் நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்குத் தேவையான மற்றும் தொடர்புடைய பதிவுகள், தரவுகள், முகாமைத்துவ ஆளணி, மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் போன்றவற்றை தடையின்றி அணுகும் அதிகாரத்தை கொண்டுள்ளது. தேவைப்படும் போது, சுயாதீன ஆலோசகர்களையும் ஏனைய ஆலோசனைச் சேவைகளையும் ஈடுபடுத்துவதற்கான அதிகாரத்தையும் சாசனம் குழுவிற்கு வழங்கி, தீர்மானத்தை மேற்கொள்ளல் மற்றும் தகவலறிந்த ஆளுகைக் குறிக்கோளை வசதிப்படுத்துகின்றது.

மேலும், கணக்காய்வு குழுவானது ஆளும் சபை, உள்ளகக் கணக்காய்வாளர்கள், வெளிவாரி கணக்காய்வாளர்கள், மற்றும் ஏனைய உத்தரவாத வழங்குநர்களுக்கிடையில் முக்கிய தொடர்பாக கணக்காய்வு குழு செயற்பட்டு, கணக்காய்வுச் செயன்முறைகள் வினைத்திறன்மிக்க வகையில் நடத்தப்படுகின்றதையும், கண்டறிதல்கள் உடனடியாகக் கவனிக்கப்படுவதையும் ஆளுகைக் கட்டமைப்புக்கள் தோற்றம்பெற்றுவரும் இடர்நேர்வுகளுக்கு தாக்குப்பிடிக்கும்தன்மை கொண்டதாக இருப்பதையும் உறுதிசெய்கின்றது. நிதிசார் அறிக்கையிடல் விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்களுக்குமிடையிலான கருத்துவேறுபாடுகளை தீர்ப்பதற்கு குழு மேலும் வலுப்படுத்தப்பட்டு, ஏற்புடைய கணக்கீட்டுத் தரநிலைகளுக்கிணங்க நிதியியல் அறிக்கைகள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தை வழங்குகின்றதை உறுதிசெய்கின்றது. இக்கணக்காய்வுச் சாசனமானது அதன் உள்ளமைப்பு, கூட்ட நடப்பெண், கூட்ட காலஆயிடை, நிகழ்ச்சிநிரல் நிர்ணயம், அறிக்கையிடல் கடப்பாடுகள் மற்றும் அதன் செயலாற்றலை மதிப்பிடல் உள்ளடங்கலாக கணக்காய்வுக் குழுவின் தொழிற்பாடுகளுக்கான செயன்முறைசார்ந்த வழிகாட்டல்களையும் நிறுவுகின்றது.

இக்குழுவானது நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அதன் நடவடிக்கைகள், முக்கிய தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள் அதேபோன்று கணக்காய்வுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் முகாமைத்துவத்தின் முன்னேற்றம் ஆகியவற்றைத் தொகுத்து ஆளும் சபைக்கு அறிக்கையிட வேண்டியது அவசியமாகும். இக்கட்டமைக்கப்பட்ட அறிக்கையிடல் பொறிமுறையானது மத்திய வங்கியின் நிதியியல் மற்றும் தொழிற்பாட்டு தாக்குப்பிடிக்கும்தன்மையை வலுப்படுத்தி, தொடர்ச்சியான மேற்பார்வையையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துகின்றது.

### 3. கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

#### 3.1. உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு தொடர்பான மேற்பார்வை

கணக்காய்வு குழுவானது,

i. உள்ளகக் கணக்காய்வு சாசனத்தை மீளாய்வுசெய்து ஒப்புதலளித்தது.

ii. 2026ஆம் ஆண்டிற்கான இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வு திட்டத்தை மீளாய்வுசெய்து பரிந்துரைசெய்ததுடன், இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வு திட்டம்-2025 இன் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்தது.

iii. உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் முன்னேற்றத்தினை காலாண்டு அடிப்படையில் மீளாய்வுசெய்தது.

iv. செயன்முறை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் உள்ளகக் கணக்காய்வு பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைப்பாட்டை காலாண்டு அடிப்படையில் மீளாய்வுசெய்தது.

v. காலாந்தர சுய மதிப்பீட்டு அறிக்கை மற்றும் 2024ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடு பற்றிய தற்போதைய கண்காணிப்பு மீதான அறிக்கையை மீளாய்வுசெய்தது.

vi. உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் 2026ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டத்தை மீளாய்வுசெய்து பரிந்துரைசெய்தது.

vii. 2026ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் திணைக்களம்சார் வரவுசெலவுத் திட்டத்தை மீளாய்வுசெய்தது.

viii. உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் வருடாந்த நன்னடத்தைக் கோவை மற்றும் அக்கறை முரண்பாட்டுப் பிரகடனத்தை மீளாய்வுசெய்தது.

ix. வருடாந்த உள்ளகக் கணக்காய்வு சேவைநாடி பின்னூட்டல் அளவீட்டின் பெறுபேறுகளை மீளாய்வுசெய்தது.

#### 3.2. நிதியியல் கூற்றுக்கள் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வு

கணக்காய்வு குழுவானது,

i. 2024ஆம் நிதியாண்டிற்கான வருடாந்த நியதிச்சட்ட கணக்காய்வு மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளரின் 2025ஆம் நிதியாண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்தது.

ii. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வுசெய்தது.

iii. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் பகிர்ந்தளிக்கத்தக்க இலாபத்தின் தீர்மானத்தை மீளாய்வுசெய்தது.

iv. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்வுடன் தொடர்புடைய, கணக்காய்வாளர் தலைமை அதிபரினால் நியமிக்கப்பட்ட வெளிவாரி கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்படும் இடைக்கால முகாமைத்துவ கடிதத்தையும் இறுதி முகாமைத்துவக் கடிதத்தையும் மத்திய வங்கி முகாமைத்துவத்தின் கருத்துக்களையும் மீளாய்வுசெய்தது.

v. 2023ஆம் நிதியாண்டிற்கான வெளிவாரி கணக்காய்வு அவதானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தல் நிலையின் முன்னேற்றத்தினை மீளாய்வுசெய்தது.

vi. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் மத்திய வங்கியின் பதிலிறுப்புக்களை உள்ளடக்கிய மத்திய வங்கியின் அலுவல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபரின் வரைவு அறிக்கையை மீளாய்வுசெய்தது.

vii. 2023 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை உள்ளடக்கிய மத்திய வங்கியின் அலுவல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபரின் அறிக்கையின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தல் நிலையின் முன்னேற்றத்தினை மீளாய்வுசெய்தது.

viii. 2024 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு மத்திய வங்கியின் ஆறு ஓய்வூதிய நிதியங்களின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வுசெய்தது.

ix. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வுசெய்தது.

x. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான நிதியியல் உறுதிப்பாட்டு நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வுசெய்தது.

xi. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களை மீளாய்வுசெய்தது.

xii. 2024 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பதிலிறுப்புக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபரின் அறிக்கையை மீளாய்வுசெய்தது.

xiii. மத்திய வங்கியின் புதிய கணக்கீட்டுத் தரநியமங்கள் கணக்கீட்டு கொள்கைகளின் மீளாய்வுச் செயன்முறை மற்றும் புதிய எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரியை பின்பற்றுவதனை மீளாய்வுசெய்தது.

#### 3.3. ஏனைய நடவடிக்கைகளின் மீளாய்வு

கணக்காய்வு குழுவானது,

i. மத்திய வங்கியின் கணக்காய்வுச் சாசனத்தை மீளாய்வுசெய்தது.

ii. இலங்கை மத்திய வங்கியின் தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு நிலைப்பாட்டை மீளாய்வுசெய்தது.

iii. வங்கியின் பல்வேறு உயர் மட்டத்திலான கொள்கைகளை மீளாய்வுசெய்து அதன் கரிசனைகள் தொடர்பில் ஆளுகைச் சபைக்கு அதன் கருத்துக்களை வழங்கியது.

iv. மத்திய வங்கியின் திணைக்களங்கள், குழுக்கள் மற்றும் முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்ட அதன் சொந்தத் தீர்மானங்களை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்வதற்காக நடைமுறைப்படுத்தல் நிலையை மீளாய்வுசெய்தது.

v. மத்திய வங்கி வரவுசெலவுத் திட்டம், வரவுசெலவுத் திட்ட செயலாற்றம் மற்றும் நிதியியல் செயலாற்றத்தை மீளாய்வுசெய்தது.

# இடர்நேர்வு முகாமைத்துவமும் இணங்குவித்தலும்

## இடர்நேர்வு முகாமைத்துவம்

பல்வேறு இடர்நேர்வுகள் நிறைந்த சூழலில் தொழிற்பட்டுவரும் நிலையில், மத்திய வங்கியின் குறிக்கோள்கள் அல்லது நற்பெயரைக் குறைத்துமதிப்பிடக்கூடிய நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை மத்திய வங்கி பின்பற்றுவது இன்றியமையாததாகும். அதன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைக் கூற்றில் எடுத்துக்காட்டப்பட்ட குறித்துரைப்புக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள இக்கட்டமைப்பானது, அனைத்து தொழிற்பாட்டு மட்டங்களிலும் செயல்திறன்மிக்க இடர்நேர்வு தணிப்பு உபாயங்களை இயலச்செய்து பல்வேறு ஆர்வலர்களிடையே கட்டமைக்கப்பட்ட இடர்நேர்வு பொறுப்பாண்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வழிவகுத்து, மத்திய வங்கியை உலகளாவிய தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் இணங்கச்செய்கின்றது.

சபை உப குழுக்களுள் ஒன்றான சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவானது, ஆளும் சபையிலிருந்தான முறைசார் பிரதிநிதித்துவமொன்றினூடாக மத்திய வங்கியின் அனைத்துமட்ட இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் இணங்குவிப்புத் தொழிற்பாட்டையும் மேற்பார்வைசெய்து, மத்திய வங்கியைப் பாதிக்கும் தோற்றம்பெற்றுவரும் இடர்நேர்வுப் போக்குகளை மீளாய்வுசெய்கின்றது.

2025ஆம் ஆண்டில், மத்திய வங்கியானது, இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான மேலிருந்து கீழ் நோக்கிய அணுகுமுறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இடர்நேர்வு ஏற்புக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தப்படுத்துவதனூடாக அதன் பரந்த நிறுவனம்சார் சீர்திருத்த நிகழ்ச்சிநிரலின் ஓர் அங்கமாக, தொழில்முயற்சி முழுவதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை வலுப்படுத்துவதில் மேலதிக முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. இடர்நேர்வுகளின் மட்டம் மற்றும் வகைகளை முறையாக வெளிப்படுத்தி, உபாய ரீதியிலான குறிக்கோள்களைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்வதற்கு வங்கி விரும்புகின்றது. மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளை உள்ளடக்கிய முதலாவது இடர்நேர்வு ஏற்பு அறிக்கை அறிமுகப்படுத்தப்பட்டமை இது தொடர்பான முக்கிய மைல்கல்லாகும். ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இவ்வறிக்கையானது, வங்கியின் உபாய நோக்கங்களை அடைவதற்காக வங்கி ஏற்றுக்கொள்வதற்கு விரும்புகின்ற இடர்நேர்வுகளின் மட்டம் மற்றும் வகைகளை முறையாக விளக்குகின்றது. இது இடர்நேர்வு முகாமைத்துவத்தில் அடிப்படை மாற்றமொன்றைக் குறிப்பதுடன், மத்திய வங்கியின் ஆணை மற்றும் உபாயம் சார்ந்த முன்னுரிமைகளுக்கு இடையே தெளிவான சீரமைப்பை ஏற்படுத்துவதற்கு இயலச்செய்தது.

மேலும், கொள்கைசார் தீர்மானம் மேற்கொள்வதை ஆதரவளிக்கும்வகையில் ஐந்தொகை இடர்நேர்வுகளின் வினைத்திறனானதும் முன்மதிமிக்கதுமான முகாமைத்துவத்தினை உறுதிசெய்வதற்கு ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஐந்தொகை இடர்நேர்வு மதிப்பீட்டுக் கட்டமைப்பை மத்திய வங்கி தாபித்தது. புதிய நிறுவன முகாமைத்துவம் சார்ந்த குழுவான நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது மத்திய வங்கியின் ஐந்தொகை தொடர்பான நிதியியல் இடர்நேர்வுகளை மேற்பார்வைசெய்வதற்கும் ஆளும் சபைக்கு உரிய நேரத்தில் பரிந்துரைகளை வழங்குவதற்கும் ஐந்தொகை இடர்நேர்வு மதிப்பீட்டுக் கட்டமைப்பின் கீழ் 2025ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

## தொழிற்பாட்டு இடர்நேர்வு

மத்திய வங்கியானது உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கிணங்க, கீழிருந்து மேல் நோக்கிய இடர்நேர்வு கட்டுப்பாட்டு சுய-மதிப்பீட்டு அணுகுமுறையைப் பிரயோகிக்கித்து தனிப்பட்ட திணைக்களங்களின் முதன்மைப் பொறுப்பாளர்கள் என்ற வகிபாகத்தினை வலுப்படுத்துகின்றது. இடர்நேர்வுகள் உருவாகும் இடத்திலேயே அவை அடையாளம்காணப்பட்டு, மதிப்பிடப்பட்டு, முகாமைத்துவம்செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துவதில் இத்தகைய திணைக்கள மட்டத்திலான இடர்நேர்வு மதிப்பீடுகள் மிகவும் முக்கியமானவையாகும்.

நிகழ்வுகளையும் பதிலிறுப்பாக நடைமுறைப்படுத்தப்படும் சீராக்க நடவடிக்கைகளையும் கண்காணிப்பதனை இயலடையச்செய்து, நிகழ்வுகள் பற்றிய அறிக்கையிடல் முறைமையானது இக்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தப்படுகின்றது. இச்செயன்முறையின் மூலம் திரட்டப்படும் தகவல்கள், மத்தியப்படுத்தப்பட்ட இடர்நேர்வு வைப்பகமொன்றை உருவாக்குவதற்குப் பங்களிக்கின்றன. இத்தகைய இடர்நேர்வு கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டு அணுகுமுறையும் நிகழ்வுகள் பற்றிய அறிக்கையிடலும், இடர்நேர்வுகளை செயற்றிறனாக முகாமைசெய்வதற்கும் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டுச் சூழலை வலுப்படுத்துவதற்குமான மத்திய வங்கியின் இயலுமையை அதிகரிக்கின்றன.

## நிதியியல் இடர்நேர்வு

மத்திய வங்கியின் கொள்கைசார் பொறுப்பாணையை நடைமுறைப்படுத்தல் குறிப்பாக பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவம், உள்நாட்டுச் சந்தை திரவத்தன்மைத் தொழிற்பாடுகள் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடையதாக சந்தை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுக்கு தவிர்க்கமுடியாதவாறு உயர்வை வழங்குகின்றது. இத்தகைய பின்னணியில், மத்திய வங்கிகள் வலுவான நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புகளையும் உறுதியான மூலதனக் கொள்கைகளையும் உலகளாவிய அளவில் அதிகரித்தளவில் வலியுறுத்தியுள்ளன. அதற்கமைய, ஐந்தொகை இடர்நேர்வு மதிப்பீட்டுக் கட்டமைப்பு நிறுவப்பட்டதுடன் மத்திய வங்கி அதன் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்தியுள்ளதுடன், பல்வேறுபட்ட சூழ்நிலைகளின் கீழான அதன் சொத்துரிமை நிலைப் பாதையை முன்னறிவிப்பதற்காக அதன் ஐந்தொகையின் மீது அழுத்தச் சோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டதுடன், அவற்றின் பெறுபேறுகளை நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் ஆளும் சபை ஆகியவற்றிற்குத் கிரமமாக அறிக்கையிட்டது.

2025 காலப்பகுதியில், பன்னாட்டு ஒதுக்குகள், வைப்புக் காப்புறுதி மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் உள்ளடங்கலான உள்ளக முதலீட்டு நிதியங்களின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகள் என்பன கிரமமான அடிப்படையில் மீளாய்வுசெய்யப்பட்டன.

நிறுவப்பட்ட ஆளுகை மற்றும் மேற்பார்வை ஏற்பாடுகளுடன் இணங்கி, எவையேனும் பொருண்மிய மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு வெளிப்படுத்துகைகள் உரிய முதலீட்டு மேற்பார்வைக் குழுக்கள்/நிதியியல் அல்லாத இடர்நேர்வு முகாமைத்துவ குழுவிற்கு முறையே உடனடியாக அறிக்கையிடப்பட்டு சபை இடர்நேர்வு மேற்பார்வை குழுவினூடாக ஆளும் சபைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

## இணங்குவிப்பு பிரிவு

ஏற்புடைய சட்ட, ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் பன்னாட்டுத் தரநிலைகளின் கடைப்பிடித்தலை மத்திய வங்கி இணங்குவிப்புத் தொழிற்பாடு உறுதிப்படுத்துகின்ற அதேவேளை அனைத்து திணைக்களங்களும் தாபிக்கப்பட்ட பொறிமுறைகளினூடாக அவற்றின் உரிய தொழிற்பாடுகளிலிருந்து எழுகின்ற இணங்குவிப்பு இடர்நேர்வுகளை இனம்கண்டு, தணித்து, அறிக்கையிடுவதற்கு பொறுப்புமிக்கதாகக் காணப்படுகின்றன

நிறுவனத்திற்கிடையிலான இணங்குவிப்பு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் சுயாதீன மேற்பார்வை மத்திய வங்கியின் இணங்குவிப்புப் பிரிவினால் வழங்கப்படுகின்றது. அறிக்கையிடப்பட்ட இணங்குவிப்புப் பிரச்சினைகளை மீளாய்வுசெய்து மதிப்பீடுசெய்தல், அவற்றின் தீவிரத்தன்மையை மதிப்பீடுசெய்தல், முக்கிய விடயங்களை உரிய ஆளுகை மன்றங்களுக்கு கொண்டுசெல்வதை வசதிப்படுத்தி, பரிந்துரைக்கப்பட்ட சீராக்கல் நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலை கண்காணித்தல் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது.

மேலும், மத்திய வங்கி அதன் பன்னாட்டு ஒதுக்கு முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கடுமையான பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை முறியடித்தல் என்பவற்றின் தேவைப்பாடுகளை வலுப்படுத்துகின்றது. ஏற்புடைய சட்டவாக்க மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புக்களுடன் இணங்கி அனைத்து வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுக்கான உமது வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம் போன்றவற்றை பிரயோகிப்பதனை இது உள்ளடக்கி, அதனூடாக நிறுவனத்திற்கிடையே இணங்குவிப்பின் உறுதியான கலாசாரமொன்றை மேம்படுத்துகின்றது.

## தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு இடர்நேர்வு

தகவல் மற்றும் இணையப் பாதுகாப்புப் பிரிவானது இரண்டாம் வரிசைத் தொழிற்பாடாக மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினுள் 2025இல் தாபிக்கப்பட்டது. ஆளுகை, கொள்கை வழிகாட்டல், இணங்குவித்தல் மேற்பார்வை, மற்றும் தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைக் கண்காணித்தல் ஊடாக மத்திய வங்கிக்கிடையிலான இணைய தாக்குப்பிடிக்கும்தன்மையினை வலுப்படுத்துவதற்கு தகவல் மற்றும் இணையப் பாதுகாப்புப் பிரிவு பொறுபபாகவுள்ளது.

முதல்வரிசைத் தொழிற்பாடுகளைச் சுயாதீனமாகச் செயற்படுத்தி, தகவல் மற்றும் இணையப் பாதுகாப்புப் பிரிவானது அனைத்து திணைக்களங்களிலும் தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு இடர்நேர்வு அடையாளப்படுத்துதல், மதிப்பீடு மற்றும் தணித்தலை மேற்பார்வைசெய்கின்றது. முதல்வரிசை இடர்நேர்வு உரிமையாளர்கள் என்ற ரீதியில், அந்தந்தத் திணைக்களங்கள் இடர்நேர்வுகள் உருவாகும் மூலத்திலேயே அவற்றை இனங்கண்டு அறிக்கையிடுவதற்குப் பொறுப்பாகவுள்ள அதேவேளை, இணையப் பாதுகாப்புப் பிரிவானது நிதியியல் அல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் ஆளும் சபை ஆகியவற்றிற்கு கிரமமாக அறிக்கையிடப்படும் பெறுபேறுகளுடன் இடர்நேர்வு மதிப்பீட்டில் இசைவினை உறுதிசெய்து, பன்னாட்டு தகவல் பாதுகாப்புத் தரநியமங்களைக் கடைப்பிடிப்பதனை ஊக்குவிப்பதுடன் வலுவான இணைய இடர்நேர்வு நிலையொன்றைப் பேணுவதற்கான சீராக்கல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதை மேற்பார்வை செய்கின்றது.

# உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வானது மத்திய வங்கியின் விழுமியங்களை உருவாக்கி, பாதுகாத்து, நிலைபெறத்தக்கதாக்குவதற்கு சுயாதீன, இடர்நேர்வு அடிப்படையிலான, மற்றும் குறிக்கோள் உத்தரவாதம், ஆலோசனை, உள்நோக்கு மற்றும் தொலைநோக்கை வழங்குவதுடன் ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளை மதிப்பீடுசெய்து முன்னேற்றுவதற்கான முறைமை மற்றும் ஒழுக்கவியல் சார்ந்த அணுகுமுறையொன்றை கொண்டுவருவதன் ஊடாக அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு வங்கிக்கு உதவுகின்றது. இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் மூன்றாம் வரிசையாகத் தொழிற்படுகின்ற அதேவேளை, மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுக்களுக்கு மதிப்பைச் சேர்த்து, மேம்படுத்துவதற்கான எதிர்காலத்தை நோக்காகக் கொண்ட பரிந்துரைகளை வழங்குகின்றது. முதன்மை உள்ளக கணக்காய்வாளர், உள்ளகக் கணக்காய்வின் தலைவர் மத்திய வங்கியின் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு ரீதியாக கணக்காய்வுக் குழுவுக்கும் நிர்வாக ரீதியாக ஆளுநருக்கும் அறிக்கையிடுகின்றனர். உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டின் முக்கியத்துவமானது முதன்மை உள்ளக கணக்காய்வாளரின் நியமனம் மற்றும் பதவிநீக்கத்தை வரையறைசெய்கின்ற மத்திய வங்கிச் சட்டத்தின் 102ஆம் பிரிவில் உரியவாறு அங்கீகாரமளிக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை தொழிற்பாட்டின் ஆளுகை, சுயாதீனத்தன்மை மற்றும் குறிக்கோள்சார் தன்மையை நிலைநிறுத்தி முதன்மை உள்ளக கணக்காய்வாளரினால் தகவல்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலை உறுதிப்படுத்துகின்றது.

மத்திய வங்கிச் சட்டத்தின் 102 (5) ஆம் பிரிவிற்கிணங்கி, முதன்மை உள்ளகக் கணக்காய்வாளரின் வகிபாகங்களுடனும் பொறுப்புக்களுடனும் கூடிய சுயாதீனம், நிறுவனம்சார் நிலைமை, அறிக்கையிடல் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக உள்ளகக் காணக்காய்வின் நோக்கெல்லை, அதிகாரம், நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பன ஆளும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட மத்திய வங்கியின் கணக்காய்வு சாசனத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2025 இல் உள்ளகக் கணக்காய்வானது, 2009 இலிருந்து பின்பற்றப்பட்ட IIஅ தரநிலைகளுடன் இணங்குவதற்காக அதன் நீடித்த அர்ப்பணிப்பினை வலியுறுத்தி உள்ளக கணக்காய்வாளர்களின் நிறுவனத்தின் புதிய உலகளாவிய உள்ளகக் கணக்காய்வு தரநிலைகளைப் பின்பற்றியது.

## கணக்காய்வுகளை நடாத்துதல்

2025ஆம் ஆண்டு காலப்பகுதியில், இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டமானது வங்கியின் முக்கிய தொழிற்பாடுகளின் உள்ளடக்கத்தை உறுதிப்படுத்தி நிறைவேற்றப்பட்டதுடன் கொள்கை, இணங்குவிப்பு, தொழிற்பாட்டுசார்ந்த, தகவல் மற்றும் இணையப் பாதுகாப்பு, சட்ட மற்றும் ஏனைய தொடர்புடைய இடர்நேர்வுப் பகுதிகளை உள்ளடக்கிய வங்கியின் உபாய ரீதியிலான குறிக்கோள்களை அடைவதற்கான வங்கியின் தொழிற்பாடுகளை முன்னேற்றுவதற்கான கணக்காய்வுப் பரிந்துரைகளை வழங்கியது. மேலும், உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு மற்றும் வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடு என்பவற்றுக்கிடையிலான இடர்நேர்வு தொடர்பான தகவல்களைப் பகிர்தல் ஆண்டுகாலப்பகுதியில் தொடரப்பட்டது.

## கணக்காய்வு முன்னேற்றத்தை அறிக்கையிடல், மற்றும் கணக்காய்வுப் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் நிலைமைகளைப் பின்தொடர்தல்

ஆண்டுகாலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் கணக்காய்வுப் பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் என்பன ஆண்டுகாலப்பகுதியில் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடப்பட்டன. மேலும், கணக்காய்வுக் குழுவின் தீர்மானங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றின் முகாமைத்துவக் கடிதத்தில் எடுத்துக்காட்டப்பட்ட வெளிவாரி கணக்காய்வாளரின் அவதானங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றமும் கணக்காய்வுக் குழுவுக்கு காலாந்தர ரீதியில் அறிக்கையிடப்பட்டது.

## இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்

வங்கியின் அமைப்புசார்ந்த உபாயங்கள் மற்றும் குறிக்கோள்களுடன் இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் அணிசேர்தலை வலுப்படுத்துவதற்கு இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரிப்பதில் 2024 இல் பயன்படுத்தப்பட்ட பெறுமதிச் சங்கிலி அணுகுமுறையினை உள்ளகக் கணக்காய்வு தொடர்ந்து பயன்படுத்தியது. இது தொடர்பில், கணக்காய்வுக்குட்படுத்தப்படும் நடவடிக்கைகளின் இனம்காணல் மீதான விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் உரிய செயன்முறை உரிமையாளர்களுடன் அத்தகைய நடவடிக்கைகளை நேரடியாக செல்லுபடியானதாக்குவதற்கும் கணக்காய்வு எல்லையை இறுதிப்படுத்தும் போது வங்கியின் திணைக்களங்களுடன் நேருக்கு நேரான சந்திப்புக்களை உள்ளகக் கணக்காய்வு நடாத்தியது. அதற்கமைய, அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டு முறையியலொன்றை பிரயோகித்து, இறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வு எல்லையைப் பயன்படுத்தி 2026ஆம் ஆண்டிற்கான இடர்நேர்வு அடிப்படையிலான வருடாந்த கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

## ஆர்வலர் ஒத்துழைப்பு

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது அதன் தொழில்சார் தேர்ச்சியினையும் IIA இன் உலகளாவிய உள்ளகக் கணக்காய்வுத் தரநிலைகளுடன் அதன் வலுவான அணிசேர்தலையும் எடுத்துக்காட்டும் வகையில், 2025 மே மாதத்தில் நேபாள ராஷ்டிர வங்கி அலுவலர்களுக்காக, வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இடர்நேர்வு அடிப்படையிலான உள்ளக கணக்காய்வு தொடர்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை வசதிப்படுத்தியது.

மேலும், உள்ளக கணக்காய்வினால் வழங்கப்படும் உள்ளகக் கணக்காய்வுச் சேவையின் தரத்தினை மதிப்பிடுவதற்கு அதன் வருடாந்த உள்ளக கணக்காய்வு சேவைநாடி பின்னூட்டல் அளவீட்டினை உள்ளக கணக்காய்வு நடாத்தியதுடன் அதன் பெறுபேறுகள் கணக்காய்வுக் குழுவுக்கு தொடர்பூட்டப்பட்டன.

## தர உத்தரவாதமும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமும்

உள்ளகக் கணக்காய்வுத் தரநிலைகளுடன் உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாட்டு இணக்கத்தின் வெளிவாரி மற்றும் உள்ளக மதிப்பீடுகளையும் அதேபோன்று அதன் குறிக்கோள்களின் அடைதலையும் தொடர்ச்சியான முன்னேற்றத்தின் மேம்பாட்டையும் நோக்கிய உள்ளக கணக்காய்வின் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கான செலாற்ற அளவீடையும் உள்ளக கணக்காய்வில் தாபிக்கப்பட்ட தர உத்தரவாதம் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமானது உள்ளடக்குகின்றது.

உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாட்டினுள் தரத்தினை முன்னேற்றி தர உத்தரவாதம் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி, உள்ளகக் கணக்காய்வானது 2025 இல் காலாந்தர சுய மதிப்பீட்டையும் உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் தற்போதைய கண்காணித்தலையும் உள்ளடக்கிய உள்ளக மதிப்பீடுகளை நடாத்தியது.

02

# நிதியியல் அறிக்கைகள்


81 நிதியியல் மீளாய்வு
84 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை
88 நிதியியல் நிலைமைக் கூற்று
90 வருமானக் கூற்று
91 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று
92 உரிமை மூலதன மாற்றல் கூற்று
93 காசுப்பாய்ச்சல் கூற்று
95 நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

# நிதியியல் மீளாய்வு

### நிதியியல் செயலாற்றமும் பொறுப்புக்கூறலும்

இலங்கை மத்திய வங்கியானது, 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் உருவாக்கப்பட்டு ஆளப்படுகின்றது. இச்சட்டம் அதன் பொறுப்புகள், அதிகாரங்கள், ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் பொறுப்புகளை வரையறுக்கிறது. வங்கியானது இலங்கையின் உச்ச நாணய அதிகார சபையாகச் செயல்பட்டு, நாணயக் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல், நிதியியல் முறைமையினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல், கொடுப்பனவு முறைமை ஒழுங்குபடுத்தல், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மற்றும் நாணயம் வழங்குதல் என்பவற்றுக்கான அதிகாரசபையாக பணியாற்றுகின்றது.

அதன் பிரதான குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைவதுடன் அதனை தொடர்ந்து பேணுவதை இச்சட்டம் எடுத்துரைக்கின்ற அதேவேளை மற்றைய குறிக்கோளாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதை அடையாளப்படுத்துகின்றது. வங்கியின் வெற்றியானது வெறுமனே இலாபத்தன்மை மூலமாகவன்றி இக்குறிக்கோள்களை எய்துவதில் அதன் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் பற்றிய செயல்திறன்வாய்ந்த தன்மை மூலமே அளவிடப்படுகின்றது. இத்தனிச்சிறப்பே ஏனைய அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியினை வேறுபடுத்துகின்றது. அதன் நாணயக் கொள்கை சாதனங்களூடாகவும் வட்டி வீதங்களினூடாகவும் செலாவணி வீதங்களில் செல்வாக்குச் செலுத்துவதனூடாகவும் இலாபங்களை இலாபத்தன்மை மையப்படுத்தலானது அதன் குறிக்கோள்களை விட்டுக்கொடுப்பதில் ஊக்கமளிக்கும் நடவடிக்கைகளாக அமையலாம். இதன் பின்னணியில் மத்திய வங்கியின் நிதியியல் கூற்றுக்களானவை நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல், செலாவணி வீத முகாமைத்துவம் மற்றும் நாணய வழங்கல் போன்றவற்றின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் காரணமாக உறப்படுகின்ற இலாபங்களை அல்லது நட்டங்களை தேறியவாறான பெறுமதிகளில் பிரதிபலிக்கின்றன. இந்நிதியியல் கூற்றுக்களில் இதன் பின்னணியில் எடுத்துரைக்கப்பட்டவாறு, வங்கியின் நிதியியல் செயலாற்றுகையை பொருள்கோடல் செய்வதும் புரிந்துகொள்வதும் மிகமுக்கியமானதாகும்.

மத்திய வங்கிச் சட்டத்தின் பகுதி XVI (பிரிவுகள் 92 தொடக்கம் 99) ஆண்டுக்கான நிதியியல் அறிக்கைகளை தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் வெளியிடுதல் (99ஆம் பிரிவு) தொடர்பிலானவை உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புடைய நிதியியல் ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. மத்திய வங்கிச் சட்டத்தின் 101ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படவேண்டுமென்பதுடன் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் வெளியிடப்படுதல் வேண்டும். மேலும், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 103(4) ஈ பிரிவின் நியதிகளின் பிரகாரம் ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வாளர்களுடன் மீளாய்வுசெய்வது கணக்காய்வுக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வங்கியின் 2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிசைவாகவும் சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டு, மீளாய்வுசெய்யப்பட்டு, கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

### நிதியியல் மீளாய்வு

#### நிதியியல் நிலைமைக் கூற்று

2025 நிதியாண்டில், 2024 ஆண்டுடன் ஒப்பிடும்போது இலங்கை மத்திய வங்கியின் முழுமையான நிதியியல் நிலைமைக் கூற்று குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளது.

#### சொத்துக்களின் உள்ளமைப்பு

மொத்தச் சொத்துக்கள், 2025இல் ரூ.422.4 பில்லியனால் (10.9 சதவீதம்) அதிகரித்தது. ரூ.365.4 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களில் கணிசமான அதிகரிப்பு மற்றும் ரூ.57 பில்லியன் கொண்ட உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் அதிகரிப்பும் இவ் அதிகரிப்பிற்கு முதன்மைக் காரணமாக அமைந்திருந்தது.

எவ்வாறாயினும், வெளிநாட்டு நாணயச் சொத்துகளில் ஏற்பட்ட உயர்வானது முதன்மையாக இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு ஒதுக்குகள் 2024 ஆண்டில் ஐ.அ.டொலர் 5.6 பில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 6.1 பில்லியனாக அதிகரித்தமையினால் ஏற்பட்டது. இதனுடன், இலங்கை ரூபாயானது முந்தைய ஆண்டின் இறுதியில் ரூ. 292.58 இலிருந்து 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 309.99 ஆகக் தேய்மானமடைந்தமையாலும் ஏற்பட்டது. வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது நிலையான வருமான பிணையங்களில் அதிகரித்த முதலீடுகள் மேலும் நிலையான வைப்புக்கள், மீள்கொள்வனவு முதலீடுகள் மற்றும் பண மீதிகள் என்பவற்றின் அதிகரிப்பாகும்.

உள்நாட்டு நாணயச் சொத்துகளில் ஏற்பட்ட உயர்வு பெரும்பாலும், வங்கி வைத்திருக்கும் திறைசேரி முறிகளின் சந்தை மதிப்பு ரூ. 86.0 பில்லியன் அளவில் அதிகரித்ததினால் ஏற்பட்டது. இது ஆண்டின் இறுதியில் நிலவிய குறைந்த திறைசேரி முறிகளின் வருவாய் விகிதங்களினால் ஏற்பட்ட சந்தை மதிப்பீட்டு இலாபங்களை பிரதிபலிக்கிறது. இந்த உயர்வு, உள்நாட்டுப் பணச் சந்தையில் மேம்படுத்தப்பட்ட திரவத்தன்மை நிலைமைகளின் விளைவாக தேறிய திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் மீள்கொள்முதல் இருப்பு ரூ. 25.1 பில்லியன் குறைந்ததினால் பகுதியளவில் சமநிலைப்படுத்தப்பட்டது. மேலும், சௌபாக்யா திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் தீர்பனவு செய்யப்பட்டதையடுத்து, திறைசேரியிலிருந்தும் பிற அமைச்சுகளிலிருந்தும் பெற வேண்டிய தொகைகள் ரூ. 16.0 பில்லியன் குறைந்ததுடன், பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 4.2 பில்லியன் குறைந்தன.

**மொத்த சொத்துக்களின் உள்ளமைப்பு (ரூபா மில்லியன்)** வரைபடம் - 06



**நிதியியல் மீளாய்வு**

## பொறுப்புக்களின் உள்ளமைப்பு

இலங்கை மத்திய வங்கியின் மொத்தப் பொறுப்புக்கள், வருட காலப்பகுதியில் ரூ.135.4 பில்லியனால் அதிகரித்தது. உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களில் ரூ.249.6 பில்லியனால் அதிகரித்தமை மற்றும் ரூ.114.2 பில்லியனால் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களின் தேறிய குறைவடைந்தமையும் முதன்மைக் காரணமாக அமைந்திருந்தது.

**மொத்த பொறுப்புகளின் உள்ளமைப்பு (ரூபா மில்லியன்)** வரைபடம் - 07




உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களில் ஏற்பட்ட உயர்வு பெரும்பாலும் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அளவு ரூ. 210.2 பில்லியன் அளவில் அதிகரித்ததாலும், உள்நாட்டு சந்தை திரவத்தன்மை நிலைமைகளுக்கு ஏற்ப வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியில் வைத்துள்ள மீதிகள் ரூ. 46.7 பில்லியன் அளவில் உயர்ந்ததாலும் ஏற்பட்டது. எவ்வாறெனினும், ஆண்டின் இறுதியில், உள்நாட்டு நாணயச் சந்தையில் திரவத்தன்மையினை சீர்செய்ததன் விளைவாக துணைநில் வைப்பு வசதி மீதி ரூ. 18.0 பில்லியன் அளவில் குறைந்ததால், இந்த உயர்வு பகுதியளவில் சமநிலைப்படுத்தப்பட்டது.

தேறிய வெளிநாட்டு நாணயப் பொறுப்புகளில் ஏற்பட்ட குறைவு முக்கியமாக, ஆண்டின் போது மாதாந்திர மூலதனத் திருப்பிச் செலுத்தல்கள் மற்றும் தொடர்புடைய வட்டி செலுத்தல்களின் விளைவாக இந்திய றிசேர்வ் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த பொறுப்பு ரூ. 254.0 பில்லியன் அளவில் குறைந்ததினால் ஏற்பட்டது.இந்தக் குறைவு, இலங்கை மத்திய வங்கிக் கணக்குகளில் வைத்திருக்கும் அமெரிக்க டொலர் இருப்புகளுக்காக இலங்கை அரசாங்கத்திற்கான பொறுப்புகள் ரூ. 87.2 பில்லியன் அளவில் அதிகரித்ததாலும், இலங்கை மத்திய வங்கிக் கணக்குகளில் டொலர் மதிப்பில் பராமரிக்கப்படும் மீதிகளுக்காக வைப்பு காப்பீட்டு நிதிய பொறுப்புகள் ரூ. 11.6 பில்லியன் அளவில் உயர்ந்ததாலும் பகுதியளவில் ஈடு செய்யப்பட்டன.

மேலும், இலங்கை ரூபாயின் பெறுமதியானது சீனயுவானிற்கு எதிராக குறைந்ததன் காரணமாக சீன மக்கள் வங்கியுடனான பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்த பொறுப்பானது ரூ. 27.6 பில்லியன் அளவில் உயர்ந்ததுடன், 2025 ஆம் ஆண்டில் சிறப்பு எடுப்பனவு உரிமை அடிப்படையிலான பன்னாட்டு நாணய நிதியப் பொறுப்புகள் குறைந்திருந்தபோதிலும், சிறப்பு எடுப்பனவு உரிமைக்கு எதிராக இலங்கை ரூபாய் பெறுமதியானது குறைந்ததன் காரணமாக, ப.நா. நி தொடர்பான பொறுப்புகள் ரூ. 18.3 பில்லியன் அளவில் அதிகரித்தன.

## மொத்த உரிமை மூலதனம்

இலங்கை மத்திய வங்கியின் மொத்த உரிமை மூலதனமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2025 இல் ரூ.287 பில்லியனால் அதிகரித்தது. இது நடப்பு ஆண்டின் இலாபங்கள் ரூ. 193.1 பில்லியன், மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட திறைசேரி முறிகளின் சந்தை மதிப்பீடு மீதான இலாபங்கள் (ரூ. 87.7 பில்லியன்), இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட நியதிச்சட்ட சீராக்கங்கள் மற்றும் ஆயுட்கால மதிப்பீட்டு இலாபங்கள் ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 95 இற்கமைவாக பரிமாற்றப்பட்ட, தேறல் செய்யப்படாத மாற்றுவிகித மற்றும் விலை மீள்மதிப்பீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் சொத்துக்களின் பெறுமதி அதன் நாணயப் பொறுப்புக்களினதும் அதன் செலுத்தப்பட்ட மூலதனத்தினதும் மொத்தத்திற்குக் கீழ் வருகின்றதை அதன் கணக்காய்வுசெய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்கள் பிரதிபலிக்குமாயின், மூலதன மீளமைத்தல் தேவைப்பாடொன்று தூண்டப்படலாம் என்பதனை இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 97ஆம் பிரிவு எடுத்துரைக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயம், இலங்கை மத்திய வங்கியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாலும் அரசாங்க முகவராண்மைகளாலும் வைத்திருக்கப்படுகின்ற வைப்புக்கள் ஆகியவற்றை நாணயப் பொறுப்புக்கள் உள்ளடக்குகின்றன. அதற்கமைய, 2025 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்காக இலங்கை மத்திய வங்கியின் சொத்துக்கள் ரூ. 2,452.0 பில்லியன் கொண்ட ஆரோக்கியமான எல்லையொன்றினால் அதன் நாணயப் பொறுப்புக்களையும் செலுத்தப்பட்ட மூலதனத்தையும் விஞ்சியிருந்தன.

### வருமானக் கூற்று

## வருமானம், செலவுகள் மற்றும் தேறிய இலாபம்/(நட்டம்)

2024 ஆம் ஆண்டில் பதிவான ரூ. 274.8 பில்லியன் தேறிய இலாபம் ஒப்பிடும்போது, 2025 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியானது ரூ. 193.1 பில்லியன் தேறிய இலாபத்தை பதிவு செய்துள்ளது. இது அதே காலப்பகுதியில் மொத்த செலவுகள் குறைந்ததை விட, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணய மூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைவு காரணமாகும்.

**உரிமை மூலதனத்தின் உள்ளமைப்பு** வரைபடம் - 08



### வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்/(நட்டம்)

வரைபடம் - 09




### வெளிநாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்

வரைபடம் - 10




### உள்நாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்

வரைபடம் - 11




பரிசீலனையில் உள்ள காலப்பகுதியில், வெளிநாட்டு நாணயச் சொத்துக்களிலிருந்து கிடைத்த தேறிய வருமானம் ரூ. 44.2 பில்லியன் அளவில் குறைந்தது. வெளிநாட்டு வட்டி வருமானம் ரூ. 5.8 பில்லியன் அளவில் அதிகரித்த அதேவேளை, வெளிநாட்டு வட்டி செலவுகள் ரூ. 36.3 பில்லியன் அளவில் குறைந்தும் இருந்தபோதிலும், இந்தக் குறைவு ஏற்பட்டது. ஆனால், இவ்வளவான சாதகமான மாற்றங்களை விட, வெளிநாட்டு நாணய மறுமதிப்பீட்டு இலாபங்கள் ரூ. 18.7 பில்லியன் அளவில் குறைந்தது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது.

மேலும், உள்நாட்டு நாணய நிதிசார் சொத்துகளிலிருந்து கிடைக்கும் தேறிய வருமானம் ரூ. 38.3 பில்லியன் அளவில் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்ததனால், மொத்த தேறிய லாபத்தில் ஏற்பட்ட குறைவு மேலும் அதிகரித்தது.

### பகிர்ந்தளிக்கக் கூடிய இலாபங்கள்

பகிர்ந்தளிக்கக் கூடிய இலாபங்களை கணக்கிடும் போது, ஆரம்பத்தில் இருந்த எதிர்மறை பிடித்து வைக்கப்பட்ட வருவாய்களை மீட்டெடுக்க தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 95(2)ன் படி, தேறல் செய்யப்படாத மாற்றுவிகித மற்றும் விலை மீள்மதிப்பீட்டு இலாபங்கள், வரிக்கு பின்னரான தேறிய இலாபத்தில் சேர்க்கப்படாமல், அதற்குரிய தேறல் செய்யப்படாத மறுமதிப்பீட்டு கையிருப்பு கணக்குகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள இலாபத்தின் பகிர்வு, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 96ன் படி மேற்கொள்ளப்படுகிறது. இதில், விசேட ஒதுக்குகளுக்கான ஒதுக்கீட்டின் பின்னர் மத்திய வங்கியின் மொத்த நாணயப் பொறுப்புக்களுடன் எஞ்சியிருக்கின்ற பகிரத்தக்க வருமானத்தின் நூறு சதவீதத்திற்குச் சமமான தொகை, செலுத்தப்பட்ட மூலதனத்தின் மொத்தத் தொகை வரையும் பொது ஒதுக்குக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பொது ஒதுக்கமானது மத்திய வங்கியின் மொத்த நாணயப் பொறுப்புக்களின் குறைந்தது 6 சதவீதமாகக் காணப்படுகின்றது. அதன் பின்னர், எஞ்சியிருக்கின்ற பகிரத்தக்க வருமானங்கள் மத்திய வங்கிக்குச் செலுத்தவேண்டிய அரசாங்க பொறுப்புக்களை தீர்ப்பதற்கு பிரயோகிக்கப்படுதல் வேண்டும் அதன் பின்னர் மீதமாகவுள்ள இலாபங்கள் திரட்டு நிதியத்திற்குச் செலுத்துவதற்காக வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

இதற்கமைவாக, திரட்டு நிதியத்திற்குச் செலுத்துவதற்குரிய இலாபம் ரூ. 44.9 பில்லியன் ஆக இருந்தது. அதில், மத்திய வங்கிக்குச் செலுத்தவேண்டிய அரசாங்கப் பொறுப்புகளை மீட்டெடுத்த பின்னர், ரூ. 41.9 பில்லியன் தொகை திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்பட்டது.

நிதியியல் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயமும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களும் இதனைத் தொடர்ந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. BAN/G/CBSL/1/25/1
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 08 April 2026

கௌரவ நிதி அமைச்சர்,

இலங்கை மத்திய வங்கியின் 2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

## 1. நிதியியல் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் ('வங்கி') 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதியியல் கூற்றுக்களிற்கான குறிப்புக்களின் கணக்காய்வு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 101 (4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவகமொன்று எனக்கு உதவியது.

எனது அபிப்பிராயத்தின்படி வங்கியின் 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதியியல் செயலாற்றம் மற்றும் காசுப்பாய்ச்சல் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ப.நி.அ.நி) இணங்க அனைத்துப் பொருண்மையான விடயங்களையும் நியாயமாகப் பிரதிபலிக்கின்றன.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

பன்நாட்டு கணக்காய்வு நியமங்களுக்கு (ப.க.நி) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

### 1.3 வங்கியின் 2025 ஆம் ஆண்டின் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் தொழிற்பாட்டு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட பிற தகவல்கள்

பிற தகவல்கள் என்பது வங்கியின் 2025 ஆம் ஆண்டின் நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாட்டு அறிக்கைகளில் உள்ள தகவல்களை குறிக்கும். இதில் நிதியியல் அறிக்கைகள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ள தகவல்கள் அடங்காது. இவை எனது கணக்காய்வு அறிக்கை திகதிக்குப் பின்னர் எனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிற தகவல்களுக்கு ஆளும் சபை பொறுப்பேற்கிறது.

நிதியியல் கூற்றுக்களுக்கான எனது அபிப்பிராயம், பிற தகவல்களுக்கு பொருந்தாது மற்றும் அதற்கான எந்த வகையான உறுதிப்படுத்தலையும் நான் வழங்கவில்லை.

நிதியியல் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்த என் கணக்காய்வின் இணைப்பாக, மேலே குறிப்பிடப்பட்ட பிற தகவல்கள் கிடைக்கும் போதெல்லாம் அவற்றைப் படித்து, அந்தத் தகவல்கள் நிதியியல் கூற்றுக்களுடன் முரண்படுகிறதா, அல்லது எனது கணக்காய்வில் மூலம் அறிந்து கொண்ட விடயங்களுடன் முரண்படுகிறதா என்பதை பரிசீலிப்பது எனது பொறுப்பு ஆகும். அவ்வாறு இருந்தால், அவை பொருள் வாய்ந்த தவறான தகவல்களாகக் கருதப்படும்.

நான் வங்கியின் 2025 ஆம் ஆண்டின் நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாட்டு அறிக்கையை வாசிக்கும் போது, அதில் பொருள் வாய்ந்த தவறான தகவல்கள் உள்ளன என நான் முடிவு செய்தால், அதைச் சரிசெய்ய அதிகாரம் உள்ளவர்களிடம் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு உண்டு. மேலும், அத்தகைய தவறான தகவல்கள் சரிசெய்யப்படவில்லை எனில், அவை என் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு, அரசியலமைப்பின் 154 (6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

### 1.4 ஆளுகைச் சபையினதும் நிதியியல் கூற்றுக்களின் ஆளுகைக்குப் பொறுப்பான தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதியியல் கூற்றுக்களை ப.நி.அ.நி இற்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென ஆளுகைச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் ஆளுகைச் சபை பொறுப்பாகவுள்ளது.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்வதற்கான வங்கியின் இயலுமையை மதிப்பிடுதல், பொருத்தமானவிடத்து தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துதல் மற்றும் கணக்கீட்டுக்காகத் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவைப் பயன்படுத்துதல் என்பவற்றுக்கு ஆளுகைச் சபை பொறுப்பாகவுள்ளது.

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், ஆளுகைச் சபையானது, வங்கியின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தொடர்வதற்கான திறனை மதிப்பிடுவதற்கும், பொருந்தக்கூடிய வகையில், தொடர்ச்சியான நிறுவனத்துடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், ஆளுகைச் சபை வங்கியைக் கலைக்க அல்லது செயல்பாடுகளை நிறுத்த விரும்பினால் தவிர, அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால், கணக்கீட்டுக்காகத் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவைப் பயன்படுத்துவதற்கும் பொறுப்பாகும்.

ஆளுகைக்குப் பொறுப்பானவர்கள் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக இருப்பார்கள். 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1).ஆம் பிரிவின் பிரகாரம் வங்கி வருடாந்த மற்றும் காலாந்தரமான நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கப்பட வேண்டியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

**கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 1.5 நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதியியல் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் ஐஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

ப.க.நி இற்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் ஆளுகைச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஆளுகைச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கியிடமுள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

**2.1.1** கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

**2.1.2** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ) (III) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

**2.1.3** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பொருண்மையான பரிந்துரைகள் 'அனைத்தையும் உள்ளடக்குகின்றன

**2.2** மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை:

**2.2.1** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வியாபாரச் செயற்பாடுகளிற்கு வெளியே வங்கி செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் வங்கியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

**2.2.2** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் வங்கி இணங்கியொழுகாதுள்ளமையைக் குறிப்பிடுதல்.

**2.2.3** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கிணங்க செயலாற்றியிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

**2.2.4** 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையைக் குறிப்பிடுதல்.

ஒப்பம்:

**எல். எஸ். ஐ. ஜயரத்ன**
கணக்காய்வாளர் நாயகம்

# நிதியியல் நிலைமைக் கூற்று

| 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 8 | 1,118,017,512 | 1,063,528,275 |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 9 | 95,447,519 | - |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் | 9 | 875,952,785 | 672,461,750 |
| பெறுதி நிதிச் சாதனங்கள் | 10 | 16,039 | 27,957,163 |
| பன்னாட்டு நாணய நிதியத்துடன் (ப.நா.நி) தொடர்பான சொத்துக்கள் | 11 | 246,363,338 | 222,876,069 |
| ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவைகள் | | 1,341,225 | - |
| மொத்த வெளிநாட்டு நாணயம் நிதியியல் சொத்துக்கள் | | 2,337,138,418 | 1,986,823,257 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 12 | 1,834,889,192 | 1,748,873,060 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 13 | 1,107,251 | 26,194,922 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களில் செய்யப்பட்ட பங்குரிமை | 14 | 46,834 | 46,834 |
| வங்கிகளுக்கான கடன்கள் | 15 | 5,418,490 | 9,561,430 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | 16 | 17,568,400 | 9,062,661 |
| ஏனைய சொத்துக்கள் | 17 | 42,872,049 | 52,777,144 |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | | 1,901,902,216 | 1,846,516,051 |
| மொத்தம் நிதியியல் சொத்துக்கள் | | 4,239,040,634 | 3,833,339,308 |
| வெளிநாட்டு நாணய நிதியல்லாத சொத்துக்கள் | | | |
| தங்கம் | 18 | 26,705,749 | 11,629,873 |
| **நிதியல்லாத சொத்துக்கள்** | | | |
| இருப்புகள் | 19 | 3,868,196 | 4,839,378 |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் முற்பணங்கள் | 20 | 4,877,338 | 2,294,558 |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 21 | 23,739,905 | 23,489,058 |
| அருவ சொத்துக்கள் | 22 | 235,548 | 515,650 |
| மொத்த நிதியல்லாத சொத்துக்கள் | | 59,426,736 | 42,768,517 |
| மொத்தச் சொத்துக்கள் | | 4,298,467,370 | 3,876,107,825 |

பக்கம் 95 தொடக்கம் 195 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## நிதியியல் நிலைமைக் கூற்று

| 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| **பொறுப்புக்களும் பங்குரிமை மூலதனமும்** | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 23 | **4,287,792** | 1,038,618 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 10 | **28,650,448** | 37,196,388 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 24 | **799,898,325** | 781,616,569 |
| ஏனைய வெளிநாட்டு பொறுப்புக்கள் | 25.1 | **642,153,677** | 868,551,340 |
| ஏனையவை | 25.2 | **204,212,644** | 104,975,256 |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புகள் | | **1,679,202,886** | 1,793,378,171 |
| உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புகள் | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | 26 | **227,700,087** | 180,946,953 |
| அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 27 | **7,905,167** | 1,534,996 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 28 | **176,322,112** | 194,337,033 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 29 | **1,568,938,866** | 1,358,722,883 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 30 | **34,521,441** | 30,171,551 |
| ஓய்வூதியம் மற்றும் ஏனைய தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | 16 | **8,002,998** | 7,444,769 |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | | **2,023,390,670** | 1,773,158,185 |
| மொத்தம் நிதியியல் பொறுப்புகள் | | **3,702,593,557** | 3,566,536,356 |
| ஏனைய பொறுப்புகள் | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 31 | **14,913** | 7,168 |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | 32 | **525,430** | 1,051,139 |
| மொத்த ஏனைய பொறுப்புகள் | | **540,343** | 1,058,307 |
| மொத்தப் பொறுப்புகள் | | **3,703,133,900** | 3,567,594,663 |
| **பங்குரிமை மூலதனம்** | | | |
| மூலதன நிதியம் | | **50,000,000** | 50,000,000 |
| ஏனைய ஒதுக்குக்கள் | 33 | **494,261,135** | 279,869,905 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | | **51,072,335** | (21,356,743) |
| மொத்தப் பங்குரிமை மூலதனம் | | **595,333,470** | 308,513,162 |
| மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம் | | **4,298,467,370** | 3,876,107,825 |

ஆளுகைச் சபையின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் முதன்மைக் கணக்காளரும் 2026 மாச்சு 27 ஆம் திகதியில் வெளியிடுவதற்காக இந்நிதியியல் கூற்றுக்களை அங்கீகரித்துள்ளனர்.

**முனைவர். பீ. நந்தலால் வீரசிங்க**
ஆளுநர்

**டி. எஸ். எல். சிறிமான்ன**
முதன்மைக் கணக்காளர்

பக்கம் 95 தொடக்கம் 195 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# வருமானக் கூற்று

| 2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | | |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வருமானம் | | | |
| வட்டி வருமானம் | 35 | 51,682,966 | 45,935,187 |
| வெளிநாட்டு ஒதுக்கு முதலீடு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் | 36.1 | 13,905,212 | 23,147,517 |
| திறந்த சந்தை நடவடிக்கைளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | 36.2 | (19,657,427) | 41,467,764 |
| வெளிநாட்டு நாணயத்தில் உள்ள நிதியியல் சொத்துக்களிலிருந்து மொத்த வருமானம் | | 45,930,751 | 110,550,468 |
| **வெளிநாட்டு நாணய நிதி பொறுப்புகள் மீதான செலவுகள்** | | | |
| வட்டிச் செலவினம் | 37 | (45,129,429) | (81,422,985) |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் திருப்புதல்/(கட்டணம்) | 38 | 1,150,692 | (1,734,322) |
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்தச் செலவினம்** | | (43,978,737) | (83,157,307) |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) | | 22,690,918 | 41,422,028 |
| வெளிநாட்டு நாணய சொத்துகளிலிருந்தான தேறிய வருமானம் | | 24,642,933 | 68,815,189 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்** | | | |
| வட்டி வருமானம் | 35 | 199,808,971 | 219,402,560 |
| தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/(நட்டம்) | | – | 18,882,826 |
| வட்டிச் செலவினம் | 37 | (13,525,723) | (15,093,654) |
| உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் அகற்றல் இலாபம்/(நட்டம்) | | 2,744,703 | 4,168,300 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன்இழப்புக்களின் திருப்புதல்/(கட்டணம்) | 38 | (8,469) | 4,814 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான தேறிய வருமானம்** | | 189,019,482 | 227,364,846 |
| ஏனைய வருமானம் | 39 | 1,460,669 | 1,457,028 |
| ஏனைய செலவினம் | 39.1 | – | (387,009) |
| **மொத்த தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 215,123,084 | 297,250,054 |
| **தொழிற்பாட்டு செலவினங்கள்** | | | |
| ஆளணிச் செலவினங்கள் | 40 | | |
| - சம்பளங்களும் கூலிகளும் | | (11,051,292) | (10,517,344) |
| - நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவினம் | | (2,919,517) | (4,790,845) |
| - தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டச் செலவினம் | | 1,231,639 | 91,918 |
| | | (12,739,170) | (15,216,271) |
| பெறுமானத் தேய்வும் பதிவழிப்பும் | | (855,935) | (798,226) |
| இருப்புச் செலவினம் (புதிய நாணயங்களை வெளியிடுவதற்கான செலவினம்) | | (4,928,546) | (3,568,292) |
| மெதுவாக நகரும் நாணய பதிவேட்டுப் பொருளுக்கான ஏற்பாடு | | (54) | – |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள் | 41 | (3,452,302) | (2,876,131) |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | (21,976,008) | (22,458,920) |
| **வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | | 193,147,076 | 274,791,135 |
| வரி | 42 | – | – |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | 193,147,076 | 274,791,135 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

பக்கம் 95 தொடக்கம் 195 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

| 2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்) | | **193,147,076** | 274,791,135 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | |
| இலாபம்/(நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்பட்ட அல்லது மீள்வகைப்படுத்தக்கூடிய விடயங்கள் | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | 33 | **3,515,239** | (37,849) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான அரச பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 33 | **84,729,446** | 6,552,700 |
| | | **88,244,685** | 6,514,851 |
| **இலாபம் (நட்டம்) இற்குப் பின்னர் மீள்வகைப்படுத்தப்படாத விடயங்கள் இலாபம்/(நட்டம்)** | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் (செலவு)/வருமானம் | 16 | **5,825,984** | 17,222,767 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம் | 33 | **–** | (2,122,707) |
| | | **5,825,984** | 15,100,060 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(செலவினம்) | | **94,070,669** | 21,614,911 |
| **மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்/(செலவினம்)** | | **287,217,745** | 296,406,045 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்.

பக்கம் 95 தொடக்கம் 195 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# உரிமை மூலதன மாற்றல் கூற்று

| 2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | பங்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. '000 | ஏனைய ஒதுக்குகள் ரூ. '000 | பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| 2024 சனவரி 01 இல் உள்ளவாறு | 50,000,000 | 252,773,117 | (291,588,061) | 11,185,056 |
| இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 94(2) இற்கு அமைவாக பொது ஒதுக்கத்திலிருந்து பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கான மாற்றல்கள் | | (266,061,930) | 266,061,930 | – |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்க்கு ஏனைய ஒதுக்களிலிருந்து நிதிய மாற்றல் | – | (35,117,739) | 35,117,739 | – |
| ஆண்டிற்கான தேறிய இலாபம்/(நட்டம்) | – | – | 274,791,135 | 274,791,135 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | – | 709,906 | (709,906) | – |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) இத்தின் மாற்றல் | – | 288,036,060 | (288,036,060) | – |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல் | – | – | (469,337) | (469,337) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி மிகை | – | (37,849) | – | (37,849) |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியக்காரர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல் | – | – | (191) | (191) |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றல் | – | 33,746,758 | (33,746,758) | – |
| ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களுக்கான செலவுகள் | – | – | 17,222,767 | 17,222,767 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதிப்பீடு மீதான மிகை | – | 6,552,700 | – | 6,552,700 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட பங்கு முதலீடுகளின் சந்தை மதிப்பீடு மீதான மிகை | – | (2,122,707) | – | (2,122,707) |
| அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதி முதலீடுகள் மீது எதிர்பார்க்கப்பட்டகொடுகடன் இழப்புக்கள் | – | 1,391,589 | – | 1,391,589 |
| 2024 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | 50,000,000 | 279,869,905 | (21,356,743) | 308,513,162 |
| 2025 சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **50,000,000** | **279,869,905** | **(21,356,743)** | **308,513,162** |
| 2024இன் சந்தை விலை குறித்தல் ஈட்டலின் சந்தை விலை மதிப்பீட்டு ஒதுக்கிற்கான மாற்றல் | **–** | **36,204,396** | **(36,204,396)** | **–** |
| இலங்கை மத்திய வங்கி ஊழியர் மற்றும் ஓய்வூதியம்பெறுவோர் அனர்த்த நிவாரண நிதியத்திற்கான நிதியங்களின் மாற்றல் | **–** | **–** | **(299)** | **(299)** |
| ஆண்டிற்கான தேறிய இலாபம்/(நட்டம்) | **–** | **–** | **193,147,076** | **193,147,076** |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதிய மாற்றல் | **–** | **8,888,100** | **(8,888,100)** | **–** |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவின் கடன் கரைப்பு நிதியத்திற்கான மாற்றல் | **–** | **969,804** | **(969,804)** | **–** |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள் விலை மதிப்பீட்டு இலாபம்/(நட்டம்) இத்தின் மாற்றல் | **–** | **22,690,918** | **(22,690,918)** | **–** |
| இலங்கை மத்திய வங்கியின் உள்ளக நிதியங்களுக்கான மாற்றல் | **–** | **–** | **(1,177)** | **(1,177)** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சந்தைப் பெறுமதி மிகை | **–** | **3,515,239** | **–** | **3,515,239** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களின் செலவு | **–** | **–** | **5,825,984** | **5,825,984** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் வகைப்படுத்தப்பட்ட அரச பிணையங்களின் சந்தை மதீப்பீட்டு மிகை | **–** | **84,729,446** | **–** | **84,729,446** |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமாத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதி முதலீடுகள் மீது எதிர்பாக்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் | **–** | **(395,961)** | **–** | **(395,961)** |
| பொதுவான ஒதுக்கிற்கான நிதிய மாற்றல் | **–** | **57,789,288** | **(57,789,288)** | **–** |
| 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **50,000,000** | **494,261,135** | **51,072,335** | **595,333,470** |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் எண்தொகைகள் கழித்தலைக் குறிக்கும்.

பக்கம் 95 தொடக்கம் 195 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| 2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| பெறுகைகள்: | | | |
| பெறப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | 42,784,293 | 32,083,551 |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - மற்றையவை | | 676,280 | 2,525,696 |
| பெறப்பட்ட வட்டி - இலங்கை அரசாங்கப் பிணையங்கள் | | 194,895,494 | 212,853,272 |
| திரவத்தன்மை முகாமைத்துவமும் வர்த்தக வருமானமும் | | 4,754,868 | 47,293,711 |
| தேறல் செய்யப்பட்ட செலாவணி இலாபம்/(நட்டம்) | | 25,852,829 | (23,767,952) |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | | 1,442,255 | 1,453,992 |
| | | 270,406,019 | 272,442,270 |
| பகிர்ந்தளிப்புக்கள்: | | | |
| செலுத்தப்பட்ட வட்டி - வெளிநாட்டு நாணயம் | | 45,420,375 | 84,280,154 |
| செலுத்தப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் | | 10,386,990 | 12,534,671 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | | 14,365,017 | 13,830,850 |
| வழங்குநர்களுக்கான கொடுப்பனவு | | 9,176,251 | 17,047,380 |
| மீள்விற்பனை உடன்படிக்கைளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | | (25,087,671) | (307,757,018) |
| | | 54,260,962 | (180,063,963) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | 43 | 216,145,057 | 452,506,233 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| பெறுகைகள்: | | | |
| ஏனைய உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | (8,331,328) | (4,298,616) |
| ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான முதன்மைக்கடன் அளவீடுகள் | | 4,157,540 | 38,295,257 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான பெறுகைகள் | | 26,774 | 1,817 |
| மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின்/ துணைநில் வைப்பு வசதிகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | (18,014,920) | (32,698,840) |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - உள்ளக நிதியங்கள் | | 3,048,321 | 2,855,316 |
| | | (19,113,613) | 4,154,934 |
| பகிர்ந்தளிப்புக்கள் | | | |
| வெளிநாட்டு நாணயப் பிணையங்களிலான தேறிய குறைவு | | 222,744,305 | 466,337,028 |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | (18,661,586) | (9,480,198) |
| ஏனைய வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்களிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | 175,881,576 | 496,030,356 |
| ஏனைய உள்நாட்டு வைப்புக்கள் மற்றும் செலுத்தத்தக்கவையிலான அதிகரிப்பு/(குறைவு) | | (18,377) | 11,225 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள், தேறிய கொடைகள் | | 796,810 | 82,291 |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | 23,222 | 307,336 |
| தங்க கையிருப்பின் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | 5,890,537 | – |
| ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட (அவற்றிலிருந்து அறவிடப்பட்ட) தேறிய கடன்களும் முற்பணங்களும் | | 14,176 | 70,657 |
| | | 386,670,663 | 953,358,695 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | | (405,784,276) | (949,203,761) |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்.

பக்கம் 95 தொடக்கம் 195 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

## காசுப்பாய்ச்சல் கூற்று

| 2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| பெறுகைகள்: | | | |
| சுற்றோட்ட நாணயத்தின் வழங்கல் | | **(496,142,678)** | (400,604,963) |
| சுற்றோட்ட நாணயத்தினை எடுப்பனவு செய்தல் | | **706,358,661** | 572,824,663 |
| சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல் | | **210,215,983** | 172,219,700 |
| பகிர்ந்தளிப்புக்கள் | | | |
| அரச கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வழங்கல்கள்/(எடுப்பனவுகள்) | 44 | **(8,111,528)** | (306,067,744) |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வழங்கல்கள்/(எடுப்பனவுகள்) | 45 | **(46,753,134)** | (38,474,372) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய வழங்கல்கள்/(எடுப்பனவுகள்) | | **(54,864,662)** | (344,542,116) |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் தேறிய குறைவு | | **265,080,645** | 516,761,816 |
| பகிர்ந்தளிப்புக்கள்: | | | |
| வெளிநாட்டு நாணய தவணைப் பொறுப்புக்களின் கொடை/(மீள்கொடுப்பனவு) | | **65,179,925** | 62,561,507 |
| ஏனைய நிதியங்களுக்கான கொடுப்பனவுகள் | | **1,477** | 190 |
| ஓய்வூதிய நிதியத்திற்கான கொடுப்பனவுகள் | | **–** | 9,577,789 |
| | | **65,181,402** | 72,139,486 |
| நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல் | | **199,899,243** | 444,622,330 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | **10,260,024** | (52,075,198) |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதான செலாவணி வீதத் தாக்கம் | | **749,943** | (26,985,613) |
| ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | **663,509,519** | 742,570,330 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 8 | **674,519,486** | 663,509,519 |

அடைப்புக்குறியினுள் காட்டப்படும் இலக்கங்கள் கழித்தலைக் குறிக்கும்.

பக்கம் 95 தொடக்கம் 195 ஆம் பக்கம் வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய ஒரு பகுதியாகும்.

# நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

## 1 அறிக்கையிடும் நிறுவனம் மற்றும் நியதிச் சட்டத் தளம்

திருத்தப்பட்டவாறான இலங்கையின் 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி ("வங்கி" அல்லது "இ.ம.வங்கி") நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏனைய தொடர்புடைய விடயங்களுக்குத் தேவையான தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு வழங்குதல் மற்றும் சுமத்துதல். எனினும், உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கேற்ப நாணய விதிச் சட்டத்திலுள்ள பல ஏற்பாடுகளை மீளாய்வு செய்யும் நோக்கத்துடன், பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் மத்திய வங்கியின் ஒட்டுமொத்த பரிணாம வளர்ச்சியின் விளைவாக 2023இல் இலங்கை மத்திய வங்கி சட்டம் (ம.வ.ச.) இயற்றப்பட்டது. அதன்படி, நாணய விதிச் சட்டத்தை நீக்கியதுடன் மத்திய வங்கிச் சட்டம் 2023ஆம் ஆண்டு செத்தெம்பர் 15ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பான ஒரு அதிகாரசபையாக இ.ம.வங்கியை மத்திய வங்கி சட்டம் அடையாளங்கண்டுள்ளது. நாணய விதிச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட மத்திய வங்கியின் நாணயச் சபையை நீக்கி மத்திய வங்கிச் சட்டம் மத்திய வங்கியின் ஆளுகைச் சபையையும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையும் நிறுவியுள்ளது. மத்திய வங்கியின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பனவற்றை மேற்பார்வையிடும் பொறுப்பு ஆளுகைச் சபைக்கு விதிக்கப்பட்டுள்ளதுடன் மத்திய வங்கியின் நாணயக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைவதற்கும் பேணுவதற்கும் நெகிழ்வுமிக்க பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினைத் தொடர்ந்து நெகிழ்வுமிக்க செலாவணி வீதக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தியதுடன் நாணயக் கொள்கை தவிர்ந்த மத்திய வங்கியின் பொதுக் கொள்கையைத் தீர்மானிப்பதற்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை சபைக்கு விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிதியியல் கூற்றுக்கள் ஆளுநராலும் முதன்மைக் கணக்காளராலும் மற்றும் ஆளுகைச் சபையின் சார்பாக வெளியிடுவதற்கு 27 மார்ச் 2026 அன்று அங்கீகரிக்கப்பட்டது.

### 1.1 இலங்கை மத்திய வங்கியின் முதன்மை நோக்கம்

மத்திய வங்கிச் சட்டமானது, மத்திய வங்கியின் சுயாதீனத்தை மேம்படுத்துவதற்கும் அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரிப்பதற்கும் இலங்கையில் விலை உறுதிப்பாட்டைப் தொடர்ந்தும் பேணுவதற்காக நாணயக் கொள்கைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் சிறப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. மத்திய வங்கியின் நோக்கங்களும் அதற்கேற்ப மேலும் மாற்றப்பட்டன. மத்திய வங்கிச் சட்டத்தின்படி, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைவதும் பேணுவதும் மத்திய வங்கியின் முதன்மை நோக்கமாகும்.

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதும் மத்திய வங்கியின் ஏனைய நோக்கமாகும். மேற்கூறிய முதன்மை மற்றும் ஏனைய நோக்கங்கள் தவிர, வங்கியானது இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் நிர்வாகம், மேற்பார்வை, ஒழுங்குபடுத்துதல் என்பவற்றுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளதுடன் அரசாங்கத்தின் அரசிறை முகவராகச் செயற்படுகின்றது.

## 2 செயற்பாடுகளின் தன்மையும் அளவும்

வங்கியின் செயற்பாடுகள் பிரதானமாக பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது

- நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளைத் தீர்மானித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- இலங்கையின் நாணயத்தை வெளியிடுதலும் முகாமைசெய்தலும்
- இலங்கையின் அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகளை வைத்திருத்தலும் முன்மதியுடை மற்றும் செயற்றிறன் வாய்ந்த முகாமைத்துவத்தை உறுதிசெய்தலும்
- கொடுப்பனவு முறைமைகளை நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அத்துடன் அத்தகைய கொடுப்பனவு முறைமைகளின் பாதுகாப்பு, செயற்றிறன் வாய்ந்த தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றை உறுதிசெய்தல்.
- நிதியியல் நிறுவனங்களைப் பதிவுசெய்தல், உரிமமளித்தல், ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல், மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிதியியல் நிறுவனங்களைத் தீர்த்தல்.
- இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 7(1)ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்டவாறு வேறு சில தத்துவங்கள், கடமைகள், தொழிற்பாடுகள்.

மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் மேற்கூறிய செயற்படுகள் வெளிநாட்டு நாணயம் மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் என பரவலாகப் பிரிக்க முடியும். இந்தச் செயற்பாடுகளின் பெறுபேறுகள் மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.1 வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள்

வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் என்பவை முக்கியமாக இலங்கை மத்திய வங்கி அதன் வெளிநாட்டு நாணய ஒதுக்கு முகாமைத்துவ செயற்பாடுகளின் கீழ் வைத்திருக்கும் வெளிநாட்டு நாணய சொத்துக்களிலிருந்து எழுபவையாகும். வெளிநாட்டு நாணய முகாமைத்துவ சொத்துப்பட்டியல் வெளிநாட்டு நாணய நாணயமாற்று தலையீட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கும் வெளிநாட்டு நாணய சொத்துக்கள் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக வைத்திருக்கும் ஏனைய வெளிநாட்டு நாணய சொத்துக்களைக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு நாணய சொத்துக்கள் பல்வேறு நாணயங்களில் பேணப்படுகின்றன. பெரும்பாலானவை அமெரிக்க டொலர்கள், ஆஸ்திரேலிய டொலர்கள், யூரோக்கள், ஸ்டெர்லிங் பவுண்கள், ஜப்பானிய யென்கள் மற்றும் நியூசிலாந்து டொலர்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த வெளிநாட்டு நாணய பட்டியலிற்குள் பேணப்படும் நிதியில் சாதனங்கள் முக்கியமாக அரச பிணையங்கள், மீள் மீள்கொள்முதல் பரிவர்த்தனைகளின் கீழ் வைத்திருக்கும் பிணையங்கள் அல்லது ஏனைய மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடன் வைத்திருக்கும் நிலுவைகளைக் கொண்டுள்ளன.

பன்னாட்டு சந்தை நடவடிக்கைகளிலிருந்து எழும் வெளிநாட்டு நாணய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளையும் வங்கி அவ்வப்போது பேணி வருகின்றது.

### 2.2 உள்நாட்டு நாணய செயற்பாடுகள்

உள்நாட்டு நாணய செயற்பாடுகள் பின்வருமாறு எழுகின்றன:

i. திரவத்தன்மை முகாமைத்துவ செயற்பாடுகள்: திரவத்தன்மை முகாமைத்துவம் என்பது மத்திய வங்கி, அரசாங்கத்திற்கு அல்லது சந்தையிலிருந்து நாளாந்த தேறிய காசுப்பாய்ச்சல் சுற்றோட்டங்களை இது வங்கி அமைப்பினுள் ஏனைய நிதியினை முற்பாணமாகச் செலுத்துவதன் மூலமோ அல்லது அதிலிருந்து நிதியை திரும்பப் பெறுவதன் மூலமோ.

ii. சுற்றோட்டத்தில் உள்ள நாணயத்திற்கான பொறுப்பை ஆதரிப்பதற்காக இலங்கை அரச பிணையங்களை கொண்ட ஒரு முதலீட்டுப் பட்டியலினை பேணுதல் மற்றும் இந்த முதலீடுகளை வர்த்தகத்திற்காக அல்லாமல் நிதி நடவடிக்கைகளுக்காக வைத்திருப்பதே வங்கியின் கொள்கையாகும்.

### 2.3 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு தொடர்பான செயற்பாடுகள்

கட்டுக்காப்பு மற்றும் நிர்வாக ஏற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியால் நிர்வகிக்கப்படும் தொகைகள் இந்த நிதிநிலை அறிக்கைகளில் சேர்க்கப்படவில்லை, ஏனெனில் அவை வங்கியின் நிதிநிலை அறிக்கைகளின் கூறுகளின் ஒரு பகுதியாக இல்லை.

## 3 நிதியியல் கூற்றுக்களின் சமர்ப்பித்தலின் அடிப்படை

### 3.1. இணக்கக்கூற்று

2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் இந்நிதியியல் கூற்றுக்கள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு (ப.நி.அ.நி) இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 3.2 தயாரித்தலுக்கான அடிப்படை

இந்நிதியியல் கூற்றுக்கள் முன்னறியத்தக்க எதிர்காலத்திற்கு வங்கி அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து அதன் இயலுமைகளை நிறைவேற்றுவதற்கு இயலுமாகவிருக்குமென ஊகிக்கின்ற தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்நிதியியல் கூற்றுக்கள் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கைகளில் விபரிக்கப்பட்டவாறு மாற்றுவழி அடிப்படையொன்றின் அளவீடு செய்யப்பட்டுள்ள பின்வரும் விடயங்களுக்கானவை தவிர வரலாற்றுச் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன:

- பெறுதி நிதியியல் சாதனங்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்பட்ட பெறுதியல்லா நிதியியல் சாதனங்கள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டன.
- தங்கமானது இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது.
- காணி மற்றும் கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நேரத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் பின்னர் மீள்மதிப்பிட்ட தொகையிலிருந்து ஒன்றுசேர்ந்த தேய்மானம் மற்றும் சேத இழப்பு நட்டங்களைக் கழித்த தொகையில் அளவிடப்படுகின்றன.
- நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டிற்கான பொறுப்பானது நிர்ணயிக்கப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதியைக் கழித்த பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

### 3.3 அறிக்கையிடல் வடிவம்

வங்கியானது நிதியியல் சொத்துக்களையும் நிதியியல் பொறுப்புக்களையும் அவற்றுடன் இணைந்த வருமானத்தையும் செலவினத்தையும் வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளிடையே வேறுபடுத்தி காட்டுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களும் பொறுப்புக்களும் பரந்தளவில் குறிப்பிட்ட வகைகளின் திரவத்தன்மை ஒழுங்குவரிசையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையிடும் அணுகுமுறையானது குறிப்பு 02இல் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளவாறு, வங்கியின் நடவடிக்கைகளை பொருத்தமான முறையில் அறிக்கையிடுவதாக வங்கி கருதுகின்றது.

நிதி நிலை அறிக்கையில், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், வங்கியின் நோக்கம் மற்றும் தொடர்புடைய நிதியியல் அறிக்கை வரிசை இருப்புக்களின் பெரும்பாலான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மீட்டெடுக்க/திரும்பப் பெறும் திறனை அடிப்படையாகக் கொண்டு, காசுப்பாய்சலின் வரிசையில் பரந்த அளவில் வழங்கப்படுகின்றன.

### 3.4 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்

இந்நிதியியல் கூற்றுக்கள் வங்கியின் தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதியியல் தகவல்கள் கிட்டிய ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன. மீளாய்வுக்குரிய ஆண்டில் வங்கியின் சமர்ப்பித்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

### 3.5 பொருள் மற்றும் ஒருங்கிணைப்பு

ஒரே மாதிரியான விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைப் பிரிவும் நிதியியல் கூற்றுக்களில் வேறுவேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரே தன்மையற்ற விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மைத்தன்மை அற்றதாக இருந்தாலன்றி வேறு வேறாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.6 எதிரீடு

வங்கியானது அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கான சட்ட ரீதியான உரிமையைக் கொண்டிருந்து ஒன்றில் தேறிய அடிப்படையில் தீர்ப்பதற்கோ அல்லது சொத்துக்களை தேறல் செய்து அதேநேரத்தில் பொறுப்புக்களை தீர்ப்பதற்கோ விரும்பும் சந்தர்ப்பங்களில் மட்டும் நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்பட்டு தேறிய பெறுமதி நிதியியல் நிலைமைக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.7 ஒப்பீட்டு தகவல்

ஒப்பீட்டுத் தகவலானது நடப்பாண்டின் சமர்ப்பிப்புடன் ஒத்திருக்க வேண்டிய அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டது.

## 4 முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகள், திறனாய்வுகளின் பயன்பாடு மற்றும் கருதுகோள்

வங்கியின் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவத்தின் திறனாய்வு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்கள் என்பன தேவைப்படுவதுடன் இவை வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளின் மீதும் இணைந்த வெளிப்படுத்துகைகள் அதேபோன்று எதிர்பாராத பொறுப்புக்களின் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

இக்கருதுகோள்கள் மற்றும் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மையானது எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டு செல்லும் பெறுமதியில் பொருண்மிய சீராக்கத்தினை தேவைப்படுத்தும் தாக்கத்தினை விளைவிக்கக்கூடும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையான அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் எதிர்கால நோக்கில் இனங்காணப்படுகின்றன. நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகளில் மிக முக்கியமான விளைவுகளினைக் கொண்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்துவதில் செய்யப்பட்ட திறனாய்வு முடிவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் குறிப்புகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### 4.1 நிதியியல் சொத்துக்களின் வகைப்பாடு

சொத்துக்கள் வைத்திருக்கும் வியாபார மாதிரியை மதிப்பிடும்போதும், நிதியியச் சொத்துக்களின் ஒப்பந்த விதிமுறைகள் நிலுவைத் தொகையின் முதல் தொகையில் முதல் மற்றும் வட்டி செலுத்துதல் மட்டும் நடைபெற வேண்டும் என்பதை மதிப்பிடும்போதும் வங்கி திறனாய்வுகளைப் பயன்படுத்துகிறது.

### 4.2 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவு செய்யப்படும் நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் சீர்மதிப்புப் பெறுமதிகள் செயற்படும் சந்தைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட முடியாவிடின் அவை கணித ரீதியான மாதிரிகளை உள்ளடக்கும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான இடங்களில் அவதானிக்கக்கூடிய சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆனால் இத்தரவுகள் கிடைக்கத்தக்கதாக இல்லாதவிடத்து, சீர்மதிப்புப் பெறுமதிகளைக் கணிப்பதற்கு திறனாய்வான முடிவு தேவைப்படுகின்றது. திறனாய்வான முடிவு, திரவத்தன்மையைக் கவனத்திலெடுத்தல் மற்றும் நீண்ட கால பெறுதிகளுக்கான தளம்பல்கள் போன்ற மாதிரி உள்ளீடுகளை உள்ளடக்கியிருக்கும்.

### 4.3 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து நிதி சொத்துக்களின் மீதான கொடுகடன் இடர் நேர்வானது கணிசமாக அதிகரித்துள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கான பிரமாணங்களை உருவாக்கும் போது, எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்களை அளவிடுவதில் பொருளாதார காரணி சரிசெய்தல் மற்றும் நட்டம் கொடுக்கப்பட்ட இயல்புநிலையை தீர்மானித்தல் மற்றும் இயல்புநிலை நிகழ்தகவு ஆகியவற்றை இணைப்பதற்கான வழிமுறையை நிர்ணயிப்பதில் வங்கி திறனாய்வுகளைப் பயன்படுத்தியது.

### 4.4 ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய தொழில்நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கிரயமானது ஆயுட்கால மதிப்பீட்டைப் பயன்படுத்தித் தீர்மானிக்கப்படுகின்றது. ஆயுட்கால மதிப்பீடானது, கழிவு வீதங்கள், எதிர்கால இழப்பீட்டுக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு, இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புகள் ஆகியவற்றின் கருதுகோள்களின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது. இத்திட்டங்களின் நீண்டகால இயல்பின் காரணமாக மேற்படி மதிப்பீடுகள் கணிசமான அளவு நிச்சமற்ற நிலைமைக்கு உட்படுகின்றன. ஆயுட்கால மதீப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட கருதுகோள்கள் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 16இல் தரப்பட்டுள்ளன.

## 5 கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் வெளிப்படுத்தல்களில் மாற்றங்கள்

ஏற்கனவே காணப்படுகின்ற பன்னாட்டு நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கான பின்வரும் திருத்தங்கள், 2025 சனவரி 01 அன்று தொடங்குகின்ற ஆண்டு காலப்பகுதிக்கு செயலுறுவதுடன் இந்நியம திருத்தங்கள் மற்றும் பொருள்கோடல்கள் வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் மீது முக்கியதாக்கமொன்றினைக் கொண்டிருக்குமென வங்கி எதிர்பார்க்கவில்லை.

- பரிமாற்றுத்தன்மை போதாமை - பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 21 வெளிநாட்டுச் செலாவணி வீதங்களின் விளைவுகள் இற்கான திருத்தங்கள்.

## 6 புதிய கணக்கீட்டு நியமங்களின் திருத்தங்கள் மற்றும் விளக்கங்கள் வெளியிடப்பட்டன, ஆனால் அறிக்கையிடல் திகதியில் அவை இன்னும் அமுலுக்கு வரவில்லை.

புதிய கணக்கீட்டு நியமங்களின் திருத்தங்கள் 2026 சனவரி 1 இற்குப் பின்னர் தொடங்கும் வருடாந்த காலத்திலிற்றது நடைமுறைக்கு வரும் மேலும் அதற்கு முன்பேபயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது; இருப்பினும், இந்த நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதில் வங்கி புதிய மற்றும் திருத்தப்பட்ட நியமங்களை முன்கூட்டியே ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், இந்த நிலையான திருத்தங்கள் மற்றும் விளக்கங்கள் வங்கியின் நிதியியல் கூற்றுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்று வங்கி எதிர்பார்க்கவில்லை.

- நிதியியல் கருவிகளை வகைப்படுத்தல் அளவிடுதலுக்கான திருத்தங்கள் - பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 மற்றும் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 7 இற்கான திருத்தங்கள் - 2026 சனவரி 1 அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருட காலத்திற்கு அமுலுக்கு வரும்.
- பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 18 - நிதியியல் கூற்றுக்களின் விளக்கக்காட்சி மற்றும் வெளிப்படுத்தல் - 2027 சனவரி 1 அன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும் வருட காலத்திற்கு அமுலுக்கு வரும்.

## 7 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைத் தகவல்

### 7.1 வெளிநாட்டு நாணய பரிமாற்றங்கள் மற்றும் நிலுவைகள்

வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்கள், அவை இடம்பெற்ற நாளில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டன. அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட நாணயச் சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடல் திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்டன. நாணய விடயங்கள் மீதான வெளிநாட்டு நாணயமாற்று வீத இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட முக்கிய நாணயங்களுக்கான அறிக்கையிடல் திகதியில் உள்ளவாறான இலங்கை ரூபா நாணயமாற்று வீதங்கள் பின்வருமாறு:

| நாணயம் | 2025 ரூ. | 2024 ரூ. |
|---|---|---|
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 206.7972 | 180.9920 |
| 1 கனேடிய டொலர் | 225.9269 | 203.4796 |
| 1 யூரோ | 364.0574 | 302.8822 |
| 1 யப்பானிய யென் | 1.9799 | 1.8617 |
| 1 சிறப்பு எடுப்பனவு உரிமை (சி.எ.உ) | 424.5383 | 382.3288 |
| 1 ஸ்டேர்லிங் பவுண் | 417.5934 | 365.9047 |
| 1 ஐக்கிய அமெரிக்க டொலர் | 309.9944 | 292.5833 |
| 1 சீன யுவான் (கரைகடந்த) | 44.3641 | 40.0837 |
| 1 நியூசிலாந்து டொலர் | 178.4018 | 163.6418 |

வெளிநாட்டு நாணயத்தின் வரலாற்றுக் கிரய அடிப்படையில் அளவிடப்படும் நிதியல்லாத விடயங்கள் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்பட்டுள்ளன.

### 7.2 சீர்மதிப்புப் பெறுமதியினைத் தீர்மானித்தல்

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் வெளிநாட்டுப் பிணையங்கள், பெறுதிகள் போன்ற நிதியியல் சாதனங்களையும் தங்கம் போன்ற நிதியல்லாச் சொத்துக்களையும் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுகின்றது. பதிவழிப்புச் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பு 49இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சீர்மதிப்புப் பெறுமதி என்பது அளவிடுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல்களின் போது சொத்தொன்றினை விற்பது தொடர்பில் பெறப்பட்ட அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்பட்ட விலை எனப் பொருள்படும். சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்துக்களை விற்றல் அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்தல் தொடர்பாக பின்வரும் இடமொன்றில் இடம்பெறும் கொடுக்கல்வாங்கல்களின் ஊகங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்:

- சொத்து அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை, அல்லது
- முதன்மைச் சந்தை இல்லாத போது சொத்து அல்லது பொறுப்பிற்கு மிக அனுகூலம் நிறைந்த சந்தை முதன்மை அல்லது மிக அனுகூலம் நிறைந்த சந்தை வங்கியினால் அணுகப்படக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

முதன்மை அல்லது மிகவும் அனுகூலமிக்க சந்தை வங்கியினால் அனுகத்தக்கதாகவிருத்தல் வேண்டும்.

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது சந்தைப் பங்கேற்பாளர்கள் சொத்து அல்லது பொறுப்பினை விலையிடும் போது தமது சிறந்த பொருளாதார நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவர் என்ற கருதுகோளைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது. நிதியல்லாச் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை மிக உயர்ந்த விதத்திலும் சிறந்த முறையிலும் பயன்படுத்தக்கூடிய இன்னொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு விற்பதன் மூலம் பொருளாதார நன்மைகளை உருவாக்கக்கூடிய சந்தைப் பங்கேற்பாளர்களின் இயலாற்றலைக் கருத்தில் கொண்டு அளவிடப்படுகிறது.

வங்கி சூழ்நிலைக்குப் பொருத்தமானதும் சீர்மதிப்புப் பெறுமதிகளை அளவிடுவதற்குப் போதுமான தரவுகள் கிடைக்கத்தக்கதாகவுள்ளதும் இதற்காகத் தொடர்பான அவதானிக்கத்தக்க உள்ளீடுகளை உச்சப்படுத்துகின்றதும் அவதானிக்கப்பட முடியாத உள்ளீடுகளை மிகக் குறைப்பதுமான மதிப்பீட்டு நுணுக்கங்களை பயன்படுத்துகின்றது.

நிதியியல் கூற்றுக்களில் அளவிடப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகளுக்கான அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், பொதுவாக சீர்மதிப்புப் பெறுமதியின் அளவிடலுக்குப் போதுமானதாக விளங்கும் குறைந்த மட்டத்தின் அடிப்படையில், கீழே விபரிக்கப்பட்டவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலைக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**மட்டம் 1 -** ஒரே மாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான செயற்படுகின்ற சந்தையில் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட (சீராக்கப்படாத) சந்தை விலைகள்.

**மட்டம் 2 -** சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவதானிக்கக் கூடியவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

**மட்டம் 3 -** சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதான குறைந்தமட்ட உள்ளீட்டினை அவதானிக்க முடியாதவற்றிற்கான மதிப்பீட்டு நுட்பங்கள்

மீண்டெழும் அடிப்படையில் நிதியியல் கூற்றுக்களில் இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக வங்கியானது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் முடிவிலும் படிநிலையிலுள்ள மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதாவென வகையிடலை மீளமதிப்பிடுவதன் மூலம் (முழுமையான சீர்மதிப்புப் பெறுமதி அளவீட்டிற்கு குறிப்பிடத்தக்கதாக விளங்கும் குறைந்த மட்ட உள்ளீடுகளின் அடிப்படையில்) நிர்ணயிக்கிறது.

## 7.3 நிதியியல் சாதனங்கள்

வங்கியானது, நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களையும் அத்துடன் இணைந்த வருமானம் மற்றும் செலவினங்களையும், வெளிநாட்டு நாணய மற்றும் உள்நாட்டு நாணய நடவடிக்கைகளை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சமர்ப்பிக்கின்றது.

வெளிநாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத் தொழிற்பாட்டிலிருந்தே உருவாகின்றன. உள்நாட்டு நாணய நடவடிக்கைகள் முக்கியமாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல், நாணயங்களின் வெளியீடு மற்றும் வங்கித்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்நடவடிக்கைகளைத் தனித்தனியாக அறிக்கையிடுவது வங்கியின் நிதியியல் நிலைமை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டினை சிறந்த முறையில் முன்வைப்பதாகக் கருதப்படுகின்றது.

### 7.3.1 அங்கீகரித்தல் மற்றும் ஆரம்ப அளவீடு

அனைத்து நிதியியல் சொத்துக்களும் பொறுப்புக்களும் முதலில் கிரயத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீட்டுடன் தொடர்புபட்ட கொள்வனவுக் கட்டணங்கள் உள்ளடங்கலாக செலுத்தப்பட்ட விலையின் சீர்மதிப்புப் பெறுமதியாகும். நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அனைத்து கிரமமான வழி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் அவற்றிற்குரிய வர்த்தகத் திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. கிரமமான வழி கொள்வனவு அல்லது விற்பனை என்பது பொதுவாக ஒழுங்குமுறைப்படுத்தலினால் அல்லது சந்தையின் மரபினால் உருவாக்கப்பட்ட காலவரம்பிற்குள் சொத்துக்களின் கையளிப்பை தேவைப்படுத்தும் நிதியியல் சொத்துக்களின் கொள்வனவு அல்லது விற்பனையாகும்.

### 7.3.2 முதலாவது நாள் இலாபம் அல்லது நட்டம்

பரிவர்த்தனை விலை, தொடக்கத்தின் போது இருந்த சீர்மதிப்பு பெறுமதி வேறுபட்டு, சந்தை பரிவர்த்தனைகளில் காணக்கூடிய உள்ளீடுகளை மட்டுமே பயன்படுத்தி ஒரு மதிப்பீட்டு நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு சீர்மதிப்பு பெறுமதி அமைந்தால், வங்கி பரிவர்த்தனை விலைக்கும் தேறிய வர்த்தக வருமானத்தில் சீர்மதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாட்டை அங்கீகரிக்கிறது. சில உள்ளீடுகள் காண முடியாத மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு சீர்மதிப்பு பெறுமதி இருக்கும் சந்தர்ப்பங்களில், பரிவர்த்தனை விலைக்கும் சீர்மதிப்பு பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ஒத்திவைக்கப்படுகிறது. சொத்து அல்லது பொறுப்பை விலை நிர்ணயம் செய்யும் போது சந்தை பங்கேற்பாளர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளும் ஒரு காரணியில் (நேரம் உட்பட) மாற்றம் இருக்கும்போது, ஒத்திவைக்கப்பட்ட தொகைகள் வருமான அறிக்கையில் அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில், ஒத்திவைக்கப்பட்ட தொகையை நேர்கோட்டு அடிப்படையில் கடனாக மாற்றுவது பொருத்தமானது என்று வங்கி மதிப்பிட்டுள்ளது. நிதியியல் சாதனம் அங்கீகரிக்கப்படாதபோது அல்லது உள்ளீடு(கள்) கவனிக்கத்தக்கதாக மாறும்போது, எந்தவொரு நிலுவைத் தொகையும் வருமான அறிக்கையில் உடனடியாக அங்கீகரிக்கப்படும்.

### 7.3.3 நிதியியல் சொத்துக்களின் அளவீட்டு வகைகள்

#### நிதியியல் சொத்துக்கள்

ஆரம்ப அளவீட்டில் வங்கியானது நிதியியல் சொத்துக்களை பின்வருமாறு இனங்காண்கிறது

- பதிவழிக்கப்பட்ட செலவு
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி
- இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதி

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்திசெய்து இலாபம் மற்றும் நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகிறது

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிப்பதற்காக சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடைய வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல்' மற்றும்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப்பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

ஒரு நிதியியல் சொத்தானது கீழ்வரும் இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் குறித்துரைக்கப்படாத போது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

- ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துகளை விற்றல் இரண்டின் மூலமும் குறிக்கோளை அடைந்துகொள்ளும் வியாபார மாதிரி ஒன்றினுள் சொத்து வைத்திருக்கப்படுதல் மற்றும்

- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகளானவை முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவை மட்டும் உள்ளடக்கிய காசுப் பாய்ச்சலுக்கான குறித்துரைக்கப்பட்ட திகதிகளை வழங்குதல்.

### வியாபார மாதிரி மதிப்பீடு

வங்கியின் வியாபார மாதிரியானது, உள்நாட்டு விலை நிலைத்தன்மை மற்றும் நிதி நிலைத்தன்மையைப் பராமரிப்பது வங்கியானது சொத்தொன்று சொத்துப்பட்டியல் மட்டத்தில் வைத்திருக்கப்படும் வியாபார மாதிரியின் குறிக்கோளின் மதிப்பீடு ஒன்றினை இலங்கை மத்திய வங்கி மேற்கொள்கின்றது. ஏனெனில் இது வியாபாரம் முகாமை செய்யப்படும் விதம் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் வழங்கப்படும் விதம் பற்றி சிறப்பாக பிரதிபலிக்கின்றது. கவனத்திலெடுக்கப்படும் தகவலானது பின்வருவனவற்றை உள்ளடக்கி இருப்பதோடு இது இதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை:

- வியாபார மாதிரியின் செயலாற்றும் மற்றும் அவ்வியாபார மாதிரியில் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள் எவ்வாறு மதிப்பிடப்பட்டு நிறுவனத்தின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு அறிக்கையிடப்படுகின்றன.
- வியாபார மாதிரியின் (மற்றும் அவ்வியாபார மாதிரியினுள் வைத்திருக்கப்படும் நிதியியல் சொத்துக்கள்) செயலாற்றத்தினைப் பாதிக்கும் இடர்நேர்வுகள் மற்றும், குறிப்பாக இவ்விடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்.
- முன்னைய காலங்களின் விற்பனையின் தடவைகள், அளவு மற்றும் காலக்கிரமம் அத்தகைய விற்பனைக்கான காரணங்கள் மற்றும் எதிர்கால விற்பனை நடவடிக்கை தொடர்பான அதன் எதிர்பார்ப்புகள். எனினும், விற்பனை நடவடிக்கை தொடர்பான தகவலானது தனியாக கருத்திற்கொள்ளப்படுவதில்லை, மாறாக இது நிதியியல் சொத்துக்களை முகாமை செய்வதற்கான வங்கியின் கூறப்பட்ட குறிக்கோள் எவ்வாறு அடையப்படுகின்றது மற்றும் காசுப்பாய்ச்சல்கள் எவ்வாறு தேறல் செய்யப்படுகின்றன என்பது தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாகும்.

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்பட்டு அல்லது முகாமைப்படுத்தப்பட்டு சீர்மதிப்புப் பெறுமதியில் அவற்றின் செயலாற்றம் மதிப்பிடப்படும் நிதியியல் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுவதற்கான காரணம் அவை ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அல்லது ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களை சேகரிப்பதுடன் நிதியியல் சொத்துக்களை விற்பதற்காகவோ வைத்திருக்கப்படாமையாகும்.

### ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவா என்பதை மதிப்பிடுதல்

நிதியியல் சொத்துக்கள் முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவு பரீட்சிப்பை பூர்த்திசெய்வதனை கண்டறிவதற்காக நிதியியல் சொத்துக்களின் ஒப்பந்த ரீதியான நியதிகளை வங்கி மதிப்பிடுகின்றது. இம்மதிப்பீட்டு நோக்கத்திற்காக ‘முதல்’ என்பது ஆரம்ப அங்கீகரிப்பின் போது நிதியியல் சொத்தின் சீர்மதிப்புப் பெறுமதி எனவும் “வட்டி” என்பது பணத்தின் காலப்பெறுமதி, குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் வெளிநின்ற முதல் தொகையுடன் தொடர்புபட்ட கொடுகடன் இடர்நேர்வு மற்றும் ஏனைய அடிப்படை கடன்வழங்கல் இடர்நேர்வுகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கான கைமாறு எனவும் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

ஒரு கடன் வழங்கல் உடன்படிக்கையினுள் காணப்படும் வட்டியினது மிக முக்கியமான கூறாகக் காணப்படுவது பணத்தின் காலப்பெறுமதி மற்றும் கொடுகடன் இடர்நேர்வாகும். முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவின் மதிப்பீட்டினை மேற்கொள்ளுவதற்கு, வங்கியானது மதிப்பாய்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல் சொத்து குறித்துரைக்கப்பட்டிருக்கும் நாணயம் மற்றும் வட்டிவீதம் தீர்மானிக்கப்பட்டிருக்கும் காலப்பகுதி போன்ற தொடர்புடைய காரணிகளைக் கருத்திற்கொள்கின்றது.

மாறாக, அடிப்படையான கடன்வழங்கல் ஒழுங்கிற்கு தொடர்புபடாத ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களின் இடர்நேர்வு அல்லது தளம்பல்களுக்கு குறைந்தபட்ச வெளிப்படுத்துகையை விட அதிகமாக தேவைப்படுத்தும் ஒப்பந்த ரீதியான நியதிகள் வெளிநின்ற தொகை மீதான முதல் மற்றும் வட்டியின் தனிக்கொடுப்பனவுகளைக் கொண்ட ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலை தோற்றுவிக்காது. அத்தகைய சந்தர்ப்பங்களில், நிதியியல் சொத்தானது இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது.

### 7.3.3.1 பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள்

ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல்களைச் சேகரிக்கும் பொருட்டு நிதியியல் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்குடனான வியாபார மாதிரியினுள் இருப்பதுடன் ஒப்பந்த நியதிகள் முதல் மற்றும் வட்டியை மட்டும் கொண்ட காசுப்பாய்ச்சலை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் பதிவழிப்புச் செலவில் வைத்திருக்கப்படும் சாதனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இச்சாதனங்கள் பின்னர் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அளவிடப்படுகின்றன.

### 7.3.3.2 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடுகள், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியாக குறித்துரைக்கப்பட்ட பெறுதியல்லா முதலீடுகள் அல்லது நிதியியல் சொத்துக்களின் ஏனைய வகையொன்றாக வகைப்படுத்தப்படாதவையாகும். ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான முதலீடுகள் பங்குரிமைப் பிணையங்களையும் படுகடன் பிணையங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான வெளிநாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் பின்னர் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக்கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள முதலீடுகளின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாக அல்லது குறைவொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்த முதலீடுகள், சட்டத் தேவைகளின் கீழ் செய்யப்படும் மூலோபாய முதலீடுகள் மற்றும் இந்த நிறுவனங்களின் பங்குகளுக்கு சந்தை விலை கிடைக்காததைக் கருத்தில் கொண்டு, செலவில் மதிப்பிடப்பட்ட பங்கு முதலீடுகளாக பதியப்படுகின்றன.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயப் படுகடன் பிணையங்கள் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பங்குரிமை முதலீடுகளிலான சந்தைப் பெறுமதி மாற்றங்களிலிருந்து எழுகின்ற இலாபங்களும் நட்டங்களும் நேரடியாக பங்குரிமையில் (ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்) அங்கீகரிக்கப்படுவதுடன் இது முதலீடு விற்கப்படும் வரை, சேகரிக்க அல்லது வேறுவகையில் அகற்றப்படும் வரை அல்லது முதலீடு சேதமிழந்துள்ளது என்று தீர்மானிக்கப்படும் வரை நிதியியல் நிலைமைக் கூற்றில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்படுவதுடன் முன்னர் கூறப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று இடம்பெறும் நேரத்தில், அகற்றப்படுகையில் வருமானக்கூற்றுக்கு சுழற்சிப்படுத்தப்படாத பங்குரிமை முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றங்களின் விதிவிலக்குடன், முன்னர் பங்குரிமையில் அறிக்கையிடப்பட்ட ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது பயனுறு வட்டி முறைமையைப் பயன்படுத்தி வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

## நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

### 7.3.3.3 இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள்

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படு-பவையினுள் வகைப்படுத்தப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் "இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள்" வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகரிப்பின் போது தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபம் அல்லது நட்டத்தில் அவை இடம்பெறும் பொழுது அங்கீகரிக்கப்படுகின்றன. பின்னர் மேற்படி பிணையங்கள் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட சந்தை விலைகளில் பெறுமதியிடப்படுகின்றன. சந்தைப் பெறுமதியிலான மாற்றங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களின் பெறுமதியிலான அதிகரிப்பொன்றாகவோ அல்லது வீழ்ச்சியொன்றாகவோ காட்டப்படுகின்ற அதேநேரம் இதன் மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

பிணையம் இப்பொழுதும் சொந்தமாக இருக்குமிடத்து இலாபம்/(நட்டமானது) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக (நட்டமாக)" அறிக்கையிடப்படும். இலாபமோ/நட்டமோ தேறப்படுமிடத்து (பிணையத்தினை விற்பதன் மூலம்) அது "தேறல் செய்யப்பட்ட மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபமாக/(நட்டமாக)" அறிக்கையிடப்படும்.

### 7.3.4 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களின் மாற்றங்கள்

#### நிதி சொத்துக்களை மாற்றியமைத்தல்

வங்கியானது நிதியியல் சொத்திலிருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்தின் உடமையினது குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் மாற்றல் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலினை பெறுவதற்கான உரிமையை மாற்றல்செய்யும் போது அல்லது வங்கி உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமல் அல்லது மாற்றல் செய்யாமல் இருப்பதுடன் நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டை கொண்டிருக்காத போது நிதியியல் சொத்தொன்றினை அங்கீகரிப்பிலிருந்தும் விலக்குகின்றது.

நிதியியல் சொத்தொன்றின் விலக்கலின்போது சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கும் மற்றும் (ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

#### நிதியியல் பொறுப்புக்களில் மாற்றங்கள்

ஏற்கனவே உள்ள நிதியியல் பொறுப்பு, அதே கடன் வழங்குநரிடமிருந்து மற்றொருவரால் கணிசமாக வேறுபட்ட விதிமுறைகளில் மாற்றப்பட்டால் அல்லது ஏற்கனவே உள்ள பொறுப்பின் விதிமுறைகள் கணிசமாக மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய மாற்றம் அசல் பொறுப்பை அங்கீகரிப்பதாகவும், தற்போதைய பொறுப்பை அங்கீகரிப்பதாகவும் கருதப்படுகிறது. இந்த வகையில், மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் ஒரு புதிய நிதியியல் பொறுப்பு சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகிறது. நிதியியல் பொறுப்பின் கொண்டு செல்லும் தொகைக்கும் மாற்றியமைக்கப்பட்ட விதிமுறைகளுடன் புதிய நிதிப் பொறுப்புக்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

### 7.3.5 நிதியியல் சொத்துக்களின் மீள்வகைப்படுத்தல்கள்

நிதியியல் சொத்துக்களை நிர்வகிப்பதற்கான அதன் வியாபார மாதிரியை வங்கி மாற்றியமைக்கிறது, அத்துடன் விதிவிலக்கான சூழ்நிலைகள் தவிர, நிதி சொத்துக்கள் அவற்றின் ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

### 7.3.6 பெறுமதியிழப்பு

#### நிதியியல் சொத்துக்கள்

வங்கியானது நிதியியல் சொத்திலிருந்தான காசுப்பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகும் போது அல்லது நிதியியல் சொத்தின் உடமையினது குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகள் மாற்றல் செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கலில் ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சலினை பெறுவதற்கான உரிமையை மாற்றல்செய்யும் போது அல்லது வங்கி உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமல் அல்லது மாற்றல் செய்யாமல் இருப்பதுடன் நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டை கொண்டிருக்காத போது நிதியியல் சொத்தொன்றினை அங்கீகரிப்பிலிருந்தும் விலக்குகின்றது.

நிதியியல் சொத்தொன்றின் விலக்கலின்போது சொத்தின் கொண்டு செல்லப்படும் பெறுமதிக்கும் (அல்லது விலக்கப்படும் சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட கொண்டு செல்லல் பெறுமதிக்கும்) பெறப்பட்ட விலை (பெறப்பட்ட ஏதாவது புதிய சொத்திலிருந்து அனுமானிக்கப்பட்ட ஏதாவது பொறுப்பை கழித்தவை உள்ளடங்கலாக) மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தில் காட்டப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபம் அல்லது நட்டம் என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

ஏனைய அனைத்தையுமுள்ளக்கிய வருமானத்தினூடாக சீர்மதிப்பு பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட பங்குரிமை முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒன்றுசேர்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள், அத்தகைய பிணையங்கள் விலக்கப்படும்போது இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படமாட்டா. வங்கியினால் உருவாக்கப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட, விலக்கல்களுக்கு தகுதியான மாற்றல் செய்யப்படும் நிதியியல் சொத்தில் இருக்கும் ஏதாவது வட்டியானது தனியான சொத்தொன்றாக அல்லது பொறுப்பொன்றாக காட்டப்படுகின்றது.

வங்கியானது கொடுக்கல்வாங்கல்களில் அது ஒன்றில் மாற்றல் செய்யப்படும் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ வைத்துக்கொள்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்துக்கள் விலக்கப்படுவதில்லை. அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கு உதாரணங்களாக பிணையங்களின் கடன்வழங்கல் மற்றும் விற்பனை மற்றும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களை குறிப்பிடலாம். வங்கியானது நிதியியல் சொத்தொன்றின் உடமையின் குறிப்பிடத்தக்க அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் வெகுமதிகளை வைத்திருக்காமலோ அல்லது மாற்றல் செய்யாமலோ இருந்து அச்சொத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்களில், மாற்றல் செய்யப்பட்ட சொத்தின் பெறுமதியிலான மாற்றங்களுக்கு அது வெளிப்படுத்தப்படும் அளவினால் தீர்மானிக்கப்பட்டவாறு அதன் தொடர்ச்சியான.

#### நிதியியல் பொறுப்புக்கள்

நிதியியல் பொறுப்பின் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் இடைநிறுத்தப்படுகையில் அல்லது நிறுத்தப்படுகையில் அல்லது காலாவதியாகையில் வங்கி நிதியியல் பொறுப்பொன்றினை அங்கீகரிப்பில் இருந்தும் விலக்கும். ஏற்கனவே உள்ள நிதியியல் பொறுப்பு, அதே கடன் வழங்குநரிடமிருந்து கணிசமாக வேறுபட்ட விதிமுறைகளில் மற்றொருவரால் மாற்றப்படும்போது அல்லது ஏற்கனவே உள்ள பொறுப்பின் விதிமுறைகள் கணிசமாக மாற்றியமைக்கப்படும்போது, அத்தகைய மாற்றல் அசல் பொறுப்பை அங்கீகரிப்பதாகவும் புதிய பொறுப்பை அங்கீகரிப்பதாகவும் கருதப்படுகிறது. அசல் நிதிப் பொறுப்பின் கொண்டு செல்லும் பெறுமதிக்கும் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான மாறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

### 7.3.7 நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்களை ஈடுசெய்தல்

அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்ய தற்போது அமுல்படுத்தக்கூடிய சட்டபூர்வ உரிமை இருந்தால் மற்றும் நிகர அடிப்படையில் தீர்வுகாணும் நோக்கம் இருந்தால், சொத்துக்களை உணர்ந்து பொறுப்புகளை ஒரே நேரத்தில் தீர்க்கும் நோக்கம் இருந்தால், நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புகள் ஈடுசெய்யப்பட்டு நிகர தொகை நிதி கூற்று அறிக்கையில் தெரிவிக்கப்படும்.

### 7.3.8 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

வங்கி, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியியல் சொத்துக்கள் இரண்டும் உள்ளடங்கலாக பதிவழிப்புச் செலவில் மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட அனைத்து நிதியியல் சொத்துக்கள் மீதுமான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்கான இழப்பு ஒதுக்கீடுகளை அடையாளப்படுத்துகின்றது. இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப்பெறுமதியில் அல்லது பங்குரிமை மூலதனச் சாதனங்கள் மீது அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள் மீது பெறுமதியிழப்புக்கள் இனங்காணப்படுவதில்லை.

#### எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பைக் கணித்தல்

முதலீட்டுத் தரத்திலுள்ள (BBB/Baa மற்றும் அதற்கு மேல் தரப்படுத்தப்பட்ட) முதலீடுகள், பல்தேசிய நிதியியல் நிறுவனங்களுடன் வைத்திருக்கப்படும் வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள் மற்றும் கேள்வி மீதான முதலீடுகளாகவுள்ள முதலீடுகளுக்கு வங்கி 12 மாதங்கள் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான இழப்பு ஒதுக்கீடுகளை அளவிடுகின்றது. 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு இனங்காணப்படுகின்ற நிதியியல் சாதனங்கள் - கட்டம் 1 நிதியியல் சாதனங்கள் - ஆகக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

தொடக்க இனங்காணலில் முதலீட்டுத் தரத்திற்குக் கீழுள்ள அல்லது BBB/Baa தரத்திற்குக் கீழ் அவற்றின் கொடுகடன் இடர்நேர்வு சீர்குலைகின்ற அல்லது முதலீடொன்றின் கடன் தரப்படுதல் ஒரு கடன் தரப்படுதல் வகையிலிருந்து குறைவான கடன் தரப்படுத்தலுக்கு தரம்குறைக்கப்படுகின்ற போது அல்லது ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்கள் 30 நாட்களுக்கு மேல் கடந்தகால நிலுவையாகவிருக்கின்றவிடத்து, அவ்வாறான சாதனங்களுக்கு ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிக்கப்படுகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு இனங்காணப்படுகின்ற ஆயினும் கொடுகடன் பெறுமதியிழப்பு நிதியியல் சாதனங்கள் - கட்டம் 2 நிதியியல் சாதனங்கள் - ஆகக் குறிப்பீடுசெய்யப்படுகின்றன. ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கொடுகடன் பெறுமதியிழப்பு சொத்துக்களுக்காகவும் ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல் 90 நாட்களுக்கு மேல் கடந்தகால நிலுவையாகவிருக்கின்ற சொத்துக்களுக்காகவும் கணிப்பிடப்படுகின்றது. இவை - கட்டம் 3 நிதியியல் சாதனங்கள் - எனக் குறிப்பீடுசெய்யப்படும்.

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பினை கணிப்படும் பொறிமுறையின் முக்கிய கூறுகளுடன் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

#### தவணைதவறுதல் நிகழ்தகவு:

தவணைதவறுதல் நிகழ்தகவு என்பது தரப்பட்ட கால வீச்சு ஒன்றில் தவணைதவறுதல் நிகழக்கூடிய மதிப்பீடொன்றாகும். கடன்வசதி முன்னர் இனங்காணப்படாதிருந்து சொத்துப்பட்டியலில் இன்னும் இருக்குமாயின் மதிப்பிடப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு சில நேரத்தில் மாத்திரம் தவணைதவறுதல் நிகழலாம்.

தவணை தவறும் செலுத்தத்தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தொகையின் அளவு:

தவணை தவறும் போது இடர்நேர்விற்குள்ளாகும் தொகையின் அளவு என்பது ஒப்பந்தத்தின் அல்லது வேறு ஏதாவது ஒன்றின் மூலம் அட்டவணையிடப்பட்டுள்ள முதல் மற்றும் வட்டியின் மீள்கொடுப்பனவு, ஒப்புக்கொண்ட வசதிகள் மீது எதிர்பார்க்கப்படும் குறைப்புக்கள் மற்றும் தவறவிடப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தான ஒன்றுசேர்ந்த வட்டி போன்றவை உள்ளடங்கலாக அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் வெளிப்படுத்துகையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கவனத்திற்கொண்டு எதிர்கால தவணைதவறுதல் திகதியில் இடர்நேர்விற்குள்ளாகும் தொகையின் மதிப்பீடொன்றாகும்.

#### தவணை தவறுதலினால் ஏற்படும் இழப்பு:

தவணை தவறுதலினால் ஏற்படும் இழப்பு என்பது குறிப்பிட்டதொரு நேரத்தில் தவணைதவறுதல் ஒன்று நிகழுமிடத்தான சந்தர்ப்பங்களில் தோன்றுகின்ற இழப்பு பற்றிய மதிப்பீடொன்றாகும். இது ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்கள் மற்றும் ஏதேனும் பிணையுறுதி தேறுவதிலிருந்தானவை உள்ளடங்கலாக பெற்றுக்கொள்வதற்கு கடன்வழங்குநர் எதிர்பார்க்கின்றவை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டின் அடிப்படையிலமைந்ததாகும். வங்கியானது வெவ்வேறு வகையான நிதியியல் சொத்துக்குறுக்கு அவற்றினால் வங்கிக்கு ஏற்றும் இடர் ஏற்படும் நேர்விளை அடிப்படையாகக் கொண்டு தவணை தவறுதாலல் இழப்புக்களுக்கு பயன்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கொள்கையொன்றினை கொண்டுள்ளது.

#### பொருளியல் காரணிச் சீராக்கம்:

வங்கி கால தவணைதவறுதல் நிகழ்தகவில் குறிப்பிடுவதற்கு சுழற்சி தவணைதவறுதல் நிகழ்தகவின் ஊடான மாற்றத்திற்காக பொருளியல் காரணிச் சீராக்கத்தினைப் பயன்படுத்துகின்றது.

#### கொடுகடன் இடர்நேர்விலுள்ள குறிப்பிடத்தக்க அதிகரிப்பை மதிப்பிடுதல்

அளவுசார் மற்றும் பண்புசார் குறிகாட்டிகள் இரண்டினையும் கருத்திற்கொள்வதன் மூலம் ஆரம்ப இனங்காணலிலிருந்து கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்படுகின்றதா என்பதனை வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடும்.

#### பெறுமதியிழந்த கொடுகடன் நிதியியல் சொத்துக்கள்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் வங்கி நிதியியல் சொத்துக்கள் கொடுகடன் பெறுமதியிழந்துள்ளவா (“கட்டம் 3 நிதியியல் சொத்துக்கள்” எனக் குறிப்பிடப்பட்ட) என்பதை மதிப்பிடுகின்றது. இணைத்தரப்பு 90 நாட்கள் கடந்தகால நிலுவையாக இருக்கின்ற போது அல்லது பிணையுறுதி தேறுதல் அல்லது வேறுகடன் மேம்படுத்தல்கள் இன்றி அதன் கடப்பாடுகளை முழுமையாக கொடுப்பனவு செய்யவதற்கு சாத்தியம் காணப்படுகின்ற போது நிதியியல் சொத்தொன்று ‘பெறுமதியிழந்த கொடுகடனாகும்.

நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான ஒதுக்கீட்டை எடுத்துரைத்தல்

எதிர்பார்க்கும் கொடுகடன் இழப்பிற்கான இழப்பு ஒதுக்கீடுகள் நிதியியல் நிலைமைக்கூற்றில் பின்வருமாறு எடுத்தரைக்கப்படுகின்றது:

- கடன் கழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படும் நிதியியல் சொத்துக்கள்: சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லல் பெறுமதியிலிருந்தான குறைவொன்றாக்
- ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும் முதலீடுகள்: இச்சொத்துக்களில் கொண்டுசெல்லல் பெறுமதி அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருப்பதனால் நிதியியல் நிலைமைக்கூற்றில் இழப்பு ஒதுக்கீடு எதுவும் இனங்காணப்படவில்லை. எனினும், ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் இழப்பு வெளிப்படுத்தப்பட்டு இனங்காணப்பட்டுள்ளது.
- கொடுகடன் உத்தரவாத ஒப்பந்தங்கள்: பொதுவான ஏற்பாடொன்றாக.

### 7.3.9 பதிவழிப்பு

நிதியியல் சொத்தினை முழுமையாகவோ அல்லது அதன் பகுதியொன்றினையோ அறவிடுவதற்குப் போதுமான எதிர்பார்ப்புக்கள் இல்லாதவிடத்து கடன்கள் மற்றும் படுகடன் பிணையங்கள் பதிவழிக்கப்படுகின்றன (ஒன்றில் பகுதியளவில் அல்லது முழுமையாக). பதிவழித்தலுடன் தொடர்புபட்ட தொகையை மீளச்செலுத்துவதற்கு போதுமான காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய வருமான மூலங்களையோ அல்லது சொத்துக்களையோ கடன்பெறுநர் கொண்டிருக்கவில்லை என வங்கி தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் இது பொதுவான வழமையாகும். இம்மதிப்பீடானது தனிப்பட்ட சொத்து மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னர் பதிவழிக்கப்பட்ட தொகைகளின் அறவிடலானது இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றின் 'நிதியியல் சாதனங்கள் மீதான பெறுமதியிழப்பு நட்டம்' இல் உள்ளடக்கப்படுகின்றன.

## 7.4 பெறுதிச் சாதனங்கள்

வங்கி, குறுக்கு நாணய பரஸ்பர பரிமாற்றல், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் போன்ற பெறுதிகளை இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக பயன்படுத்துகின்றதேயொழிய ஊக நோக்கங்களுக்காக அல்ல. பெறுதிகள் சீர்மதிப்புப் பெறுமதியில் குறிப்பிடப்படுவதுடன், சீர்மதிப்புப் பெறுமதி நேர்க்கணியமாக இருக்குமிடத்தில் சொத்தாகவும், எதிர்க்கணியமாக இருக்குமிடத்தில் பொறுப்பாகவும் கொண்டு செல்லப்படும். பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாபத்தில்/(நட்டத்தில்)" உள்ளடக்கப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல் விலையானது அதே சாதனத்தின் இன்னொரு அவதானிக்கக்கூடிய நடைமுறைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கக்கூடிய சந்தைகளிலிருந்தான தரவை மட்டும் கொண்டிருக்கும் மாறிகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளிலிருந்து வேறுபடுமாயின், வங்கியானது உடனடியாக கொடுக்கல்வாங்கல் விலைக்கும் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாட்டை (1 நாள் வேறுபாடு) "தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)" ஆக அங்கீகரிக்கும். அவதானிக்க முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியானது தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில், கொடுக்கல்வாங்கல் விலைக்கும் மாதிரிப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு, உள்ளீடுகள் அவதானிக்கக்கூடியதாக மாறும் போது, அல்லது சாதனத்தின் பதிவு நீக்கப்படும் போது மட்டுமே வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

## 7.5 பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய நிலுவைகள்

வங்கியானது பன்னாட்டு நாணய நிதியத்துடன் அதன் சொந்த உரிமையின் பேரில் பரிவர்த்தனை செய்கிறது. அந்த அடிப்படையில், பண்ணாட்டு நாணய நிதியத்துடனான வங்கியின் அனைத்து பரிவர்த்தனைகளும் இந்த நிதிநிலை கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான அனுமதிப் பங்கு ஒரு சொத்தாக வங்கியினால் பதிவு செய்யப்படுவதுடன், அனுமதிப் பங்கிற்காக ப.நா. நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகை வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்படுகிறது. ப.நா. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் ஒன்றுசேர்ந்த ஒதுக்குகள் பொறுப்பாகக் கணிக்கப்படுகின்றன. பன்னாட்டு நாணய நிதிய அனுமதிப் பங்கு சொத்தும் சிறப்பு எடுப்பனவு உரிமை வைத்திருப்பும் இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுவதுடன் ஏனைய அனைத்து பன்னாட்டு நாணய நிதியத்துடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பயனுறு வட்டிவீத முறையைப் பயன்படுத்தி பதிவழிப்புச் செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. ப.நா. நிதியத்தினால் வெளியிடப்பட்டவாறு அறிக்கையிடல் திகதியிலுள்ள நாணயமாற்று வீதத்தினைப் பிரயோகித்து பன்னாட்டு நாணய நிதியச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீள்மதிப்பீட்டிலிருந்து எழும் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ப.நா. நிதியத்துடனான நிலுவைகள் தொடர்பான ஏனைய அனைத்துக் கட்டணங்களும் வட்டியும் வருமானக் கூற்றில் உடனடியாகப் பதிவு செய்யப்படுகின்றன.

## 7.6 இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வெளிநாட்டு முதலீடுகள்

இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் வெளிநாட்டு முதலீட்டுச் செயற்பாடுகளை இலங்கை மத்திய வங்கி அதன் நம்பிக்கை பொறுப்புகளாக முகாமைசெய்கின்றது. இம்முதலீடுகள் நிதியியல் கூற்றுக்களில் வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களின் கீழ் வேறான துறை விடயமொன்றாக இனங்காணப்பட்டு, திட்டம் சார்பில் வைத்திருக்கப்பட்டு முகாமைசெய்யப்படுகின்ற நிதியங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. நேரொத்த பொறுப்பு திட்டத்திற்கான மத்திய வங்கியின் கட்டுப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்பின் கீழ் பதியப்படுகின்றது.

இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் சார்பில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்பட்டு அதனைத்தொடர்ந்து சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. நம்பிக்கைப் பொறுப்பு இயலளவில் இலங்கை மத்திய வங்கி செயற்படுவதாலும் முதலீட்டில் ஏதேனும் பொருளாதார நலனை தக்கவைக்காமையினாலும் இம்முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி, மதிப்பிழப்பு ஈட்டல்கள் மற்றும் இழப்புகள் அத்துடன் வர்த்தகப்படுத்தல் ஈட்டல்கள் மற்றும் இழப்புகள் என்பவற்றில் ஏதேனும் மாற்றங்கள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்திற்கான நேரொத்த பொறுப்பினைச் சீர்செய்வதன் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றன.

## 7.7 காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்கு சமமானவையும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள காசு, குறுங்கால வைப்புகள் மற்றும் சந்தைப் பெறுமதி மாற்றங்களால் குறிப்பிடத்தக்க இடர்நேர்வில்லாததும் மூன்று மாதங்களுக்கு குறைந்த ஆரம்ப முதிர்ச்சியைக் கொண்ட உயர்ந்தளவு திரவத்தன்மையான நிதியியல் சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன் இவை குறுங்கால கடப்பாடுகளை முகாமைப்படுத்துவதற்காக வங்கியினால் பயன்படுத்தப்படுகின்றன. காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் நிதியியல் நிலைமைக் கூற்றில் பதிவழிப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன.

உள்நாட்டு நாணய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டதொரு வருமானத்தினை உருவாக்குவதுடன் செலவுகளையும் ஏற்கின்ற போதிலும் இவை காசின் நகர்வுடன் தொடர்புபட்டவையல்ல. இந்நடவடிக்கைகள் குறிப்பிட்ட சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தோற்றுவிப்பதுடன், முக்கியமாக இலங்கை அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்நாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்களையும் உள்ளடக்குகின்றன. அரசாங்கத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நாணயக் கொள்கைப் பொறிமுறையொன்றாக அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவை உள்ளடக்குகின்றன. அத்தகைய கொள்வனவுகள், விற்பனைகள் மற்றும் அவற்றின் மீதான வட்டி என்பன இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளில் தனியே ஏட்டுப் பதிவுகளாகப் பிரதிபலிக்கப்படுகின்றன. இவை இந்நிதியியல் கூற்றில் 44 மற்றும் 45ஆம் இலக்கக் குறிப்புகளில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தனி அதிகாரம் கொண்ட சட்டபூர்வமான நிறுவனமாக விளங்கும் இலங்கை மத்திய வங்கியானது நாணய விதிச் சட்டத்திற்கிணங்க பொதுமக்களுக்கான நாணயத்தினை வெளியிடுகின்றது. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் உடமையாளரின் பெயரில் மத்திய வங்கியின் மீதான கோரலாக இருப்பதனைப் பிரதிபலிக்கிறது.

இது மத்திய வங்கியின் பொறுப்பொன்றாக இருக்கின்ற அதேநேரம் உடமையாளரின் கையிலுள்ள காசாகவும் இருக்கின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் அசைவு, காசுப்பாய்ச்சல் கூற்றுக்களை சமர்ப்பித்தலில் மத்திய வங்கிகளிடையே காணப்படும் தற்போதைய தொழிற்துறை நடைமுறைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் நிதியிடல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பெறப்பட்ட ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்கள் அல்லது காசோலைகள் வடிவில், பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வழங்குனர்களுடன் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு பெறுநர்களுக்கு காசினை வழங்குகிறது, இது புழக்கத்தில் உள்ள நாணயத்தில் சேர்க்கப்படுகிறது அல்லது வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களால் வைப்புத்தொகையாக வழங்கப்படுகிறது. இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகளின் நோக்கங்களுக்காக நாணயத்தைப் பயன்படுத்துவதற்கான இத்தகைய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியின் காசு வெளியேற்றத்தின் ஒரு பகுதியாகும்.

## 7.8 மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துக்களாகத் தொடர்ந்தும் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு செய்வதற்கான கடப்பாடு (மீள்கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள்) பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது. மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் விற்பனை விலைக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையேயான வேறுபாடும் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களில் கொள்வனவு விலைக்கும் விற்பனை விலைக்குமிடையேயான வேறுபாடும் முறையே செலவினத்தையும் வருமானத்தையும் பிரதிபலிப்பதுடன் இது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் பிணையங்கள் (மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) நிதியியல் நிலைமைக் கூற்றில் ஒரு சொத்தாகப் பதிவு செய்யப்படுகின்றன. மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஆகிய இரண்டு கொடுக்கல்வாங்கல்களும் அட்டுறு வருமானம் அல்லது செலவினம் ஏதுமிருப்பின் அவற்றை உள்ளடக்கி பதிவழிக்கப்பட்ட செலவில் அறிக்கையிடப்படுகின்றன.

## 7.9 துணைநில் வைப்பு மற்றும் துணைநில் கடன்வழங்கல் வசதிகள்

2014 பெப்ரவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் துணைநில் வைப்பு வசதியானது (முன்னர் துணைநில் மீள்கொள்வனவு வசதி (மீள்கொள்வனவு)) பிணை ஒதுக்கங்கள் இல்லாத “வைப்புக்கள்” ஆக மாற்றப்பட்டன. எனவே, பங்கேற்கின்ற நிறுவனங்கள் அவற்றின் மிகையான நிதியங்களை “வைப்புக்களாக துணைநில் வைப்பு வசதி வீதத்தில் துணைநில் வைப்பு வசதியின் நாளாந்த அடிப்படையில் முதலிடுகின்றன.

துணைநில் கடன்வழங்கல் வசதியின் (முன்னர் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு (நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி)) நடைமுறைகள் துணைநில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினை ஒத்ததாகவே காணப்படுகின்றதுடன் இரண்டும் நிதியியல் நிலைமைக்கூற்றில் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 7.10 இலங்கை அரச பிணையங்கள்

இலங்கை அரச பிணையங்கள் இலங்கை அரசிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றன. இலங்கை அரச பிணையங்களிலான முதலீடுகள் நிதியியல் நிலைமை கூற்றில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியில் பதியப்படுகிறது.

## 7.11 அரசிற்கான தற்காலிக முற்பணங்கள்

இலங்கை மத்திய வங்கிசட்டதினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி, பிரிவு 127 இன் கீழ், நிதியாண்டின் முதல் மாதத்திற்குள் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து செய்ய அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதியளிக்க மத்திய வங்கி அரசாங்கத்திற்கு புதிய நேரடி தற்காலிக முன்பணங்களை வழங்கலாம். அத்தகைய ஒவ்வொரு புதிய முற்பணமும் ஆறு மாதங்களுக்கு மிகாமல் ஒரு காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படும். 2003 ஆம் ஆண்டு 3 ஆம் எண் நிதி நிர்வாகப் (பொறுப்பு) சட்டத்தின் கீழ் அமைச்சரின் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரை ஆண்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, நிலுவையில் உள்ள அத்தகைய முற்பணங்களின் மொத்தத் தொகை முந்தைய நிதியாண்டின் முதல் நான்கு மாதங்களின் வருவாயில் பத்து சதவீதத்தை விட அதிகமாக இருக்கக்கூடாது. அத்தகைய புதிய முற்பணங்கள் மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்பட்டபடி நடைமுறையில் உள்ள சந்தை தொடர்பான விகிதங்களில் வட்டியைக் கொண்டிருக்கும்.

## 7.12 ஏனைய நிறுவனங்களுக்கான கடன்கள்

ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் பதிவழிக்கப்பட்ட செலவில் அங்கீகரிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன.

## 7.13 பிணையங்களின் கடன்பாடுகளும் பிணையங்களின் கடன்வழங்குதலும்

வங்கி அதன் நாணயக் கொள்கை தொழிற்பாடுகளின் கீழ் காலத்திற்குக் காலம் முக்கிய நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து அரச பிணையங்களைக் கடன்படுகிறது. இவ்வாறு கடன்பட்ட பிணையங்கள் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிணையங்களின் கடன்பாடுகள் என்பது பிணையங்களைத் திருப்புவது, இணங்கப்பட்ட கட்டணத்தினை செலுத்துவது, வழங்கலின் போது ஏதேனும் தவறு இடம் பெறும் சந்தர்ப்பத்தில் சந்தை வீதங்களில் இழப்பீட்டினைச் செலுத்துவது (வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதனிலைச் சந்தை பங்கேற்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட சந்தை வீதங்களின் படி) என்பனவற்றிற்காக வங்கியிடமிருந்து பெறப்படும் நிபந்தனையற்ற பூரணமான உத்தரவாதமெனப்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் மீள்கொள்வனவு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாத கடன்பட்ட பிணையங்களினது சந்தைப் பெறுமதி எதிர்பாராத பொறுப்புக்களாக பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்பட்ட தரகு அட்டுறு அடிப்படையில் செலவிடப்படுகின்றது.

கடன் வழங்கும் கொடுக்கல்வாங்கல்களின் கீழ் இணைத்தரப்பினருக்கான பிணையங்களின் மாற்றல், சொத்தாண்மையின் இடர்நேர்வும் வெகுமதியும் மாற்றல் செய்யப்பட்டால் மட்டுமே நிதியியல் நிலைமைக் கூற்றில் பிரதிபலிக்கப்படும்.

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

## 7.14 அலுவலர்களுக்கான கடன்கள்

வங்கியின் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர்கள் சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் வசதிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர். 2008ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட இக்கடன்கள் ப.நி.அ.றி. 9 இன்படி "கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலைப் பயன்படுத்தி சீர்மதிப்புப் பெறுமதியில்" பெறுமதியிடப்பட்டுள்ளன.

**கழிவு வீதம் -** நிறையேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதம் மீதான நீண்ட காலப் பணவீக்க இலக்கிடலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தினால் தொகுக்கப்படும் வீதத்துடன் வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் இணங்கப்பட்டவாறு இடர்நேர்வுக் கட்டணத்திற்காக 1 சதவீதத்தைச் சேர்த்த வீதம் கழிவு வீதமாகப் பயன்படுத்தப்படுவதோடு, கடன் காலத்தைப் பொறுத்து இது வேறுபடுகின்றது.

ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் ஆண்டின் ஆரம்பத்திலுள்ளவாறான அலுவலர்களுக்கான கடன்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலுள்ள வித்தியாசமானது, சலுகை வீதத்தில் மேற்படி கடன் வழங்கப்படுவதால் வங்கிக்கு ஏற்க நேரிடுகின்ற செலவைப் பதிவதற்காக வருடாந்தம் பதிவழிக்கப்படும் என்பதோடு, சந்தை வீதத்தில் இக்கடன் வழங்கப்பட்டிருப்பின் வங்கியினால் அதற்குச் சமமான தொகை ஏனைய வருமானத்தில் பதியப்படும்.

**சீர்மதிப்பு பெறுமதியைக் கணிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கருதுகோள்கள்**

- பணியாளர்களுக்கான கடன்கள் வழங்கப்பட்ட திகதியாக சனவரி 01ஆம் திகதியைக் கருதுதல்.
- மேற்படி கடன்களில் எவ்விதத் திருத்தமும் அல்லது முன்கூட்டிய தீர்ப்பனவு எதுவும் செய்யப்படவில்லை எனக் கருதுதல்.

## 7.15 தங்கம்

பன்னாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவத்தினைக் குறித்துரைக்கின்ற மத்திய வங்கிச் சட்டத்தின் 40(2)ஆம் பிரிவு அத்தகைய தங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கொடுகடன் நிலுவைகள் உட்பட தங்கத்தை பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக மத்திய வங்கி வைத்திருக்கலாம் எனக் கூறுகிறது. 94(3) பிரிவானது, இலாபங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர், ஆளும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிதியியல் அறிக்கை கட்டமைப்பிற்கிணங்க வருமானக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட தங்கத்தின் நிலைகள் காரணமாக சந்தை விலை மறுமதிப்பீட்டால் எழுகின்ற தேறாத இலாபங்களை விதித்துரைக்கிறது.

மேற்படி தங்கமானது ஆரம்பத்தில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்பட்டு பன்னாட்டு ஒதுக்குகளின் ஒரு பகுதியாக இருப்பதோடு பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது ஒரு தொடர்ந்தும் வர்த்தகப் பண்டமாகப் பயன்படுத்தப்படாததால் தங்கமானது சீர்மதிப்புப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றுக்கு மாற்றப்படுகின்றன. இலாப ஒதுக்கீடுகளுக்கு முன்னர் தங்கத்திலிருந்தான தேறல் செய்யப்படாத இலாபங்கள் தொடர்புபட்ட ஒதுக்குக் கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன.

## 7.16 நாணய இருப்பு

வங்கியின் இருப்புக்களானது, சுற்றோட்டத்திற்கு இன்னும் வழங்கப்படாத புதிய நாணயங்களை உள்ளடக்கியுள்ளது. புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளின் உற்பத்தி மற்றும் வடிவமைப்புடன் தொடர்பான செலவுகள் ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. சுற்றோட்டத்திற்கு வழங்கப்பட்ட புதிய நாணயத்தாள்கள் மற்றும் குத்திகளிற்கான செலவானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதுடன், வழங்கப்படும் வேளையில் வருமானக்கூற்றில் பதியப்படுகின்றது. மெதுவாக அசையும் இருப்புக்களுக்கு படி மேற்கொள்ளப்படுகின்றது.

## 7.17 ஏனைய இருப்புக்கள்

ஏனைய இருப்புக்கள் கிரயத்தில் அல்லது தேறிய விற்றுப் பெறக்கூடிய பெறுமதி இவற்றில் குறைவான பெறுமதியில் வைத்திருக்கப்படுகின்றது. கிரயமானது நிறையேற்றப்பட்ட சராசரி அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

## 7.18 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

காணி மற்றும் கட்டடம் தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவை ஆரம்பத்தில் செலவாக அங்கீகரிக்கப்பட்ட கிரயத்திலிருந்து தொர்ச்சியாக ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வு ஏற்பாடு மற்றும் சேத இழப்பு கழித்த தொகையில் கூறப்பட்டுள்ளது. அங்கீகரிப்பு பிரமாணம் பூர்த்தி செய்யப்படும் பொழுது இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பகுதிகளை மாற்றீடு செய்யும் போது ஏற்படும் செலவினங்களையும் இந்தக் கிரயம் உள்ளடக்கியிருக்கிறது.

காணி மற்றும் கட்டடங்கள் மீள்மதிப்பிடப்படும் திகதியில் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து பின்னர் தொர்ச்சியாக ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வுகளும், பின்னர் ஒன்றுசேர்ந்த சேத இழப்பு நட்டங்களும் கழித்த தொகையான மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

இறையிலி காணி நீங்கலாக, பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க காலத்தைப் பயன்படுத்தி தேய்மானம் நேர்கோட்டு முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது

| சொத்தின் வகை | பயனுள்ள ஆயுட்காலம் |
|---|---|
| இறையிலி காணியிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகளுக்கு மேல் |
| குத்தகைக் காணிகளிலுள்ள கட்டடங்கள் | 50 ஆண்டுகள் அல்லது குத்தகைக் காலம் இவற்றில் குறைந்தது |
| பொறியும் பொறியின் முக்கிய பகுதிகளும் | 20 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் கருவிகள் | 10 ஆண்டுகள் |
| உந்து ஊர்திகள் | 5 ஆண்டுகள் |
| 2014 இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உந்து ஊர்திகள் | 10 ஆண்டுகள் |
| கணனி வன்பொருள் | 4 ஆண்டுகள் |
| ஏனையவை | 3 ஆண்டுகள் |

நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் எடுத்துச் செல்லும் பெறுமதியானது மீளப்பெற முடியாதென சுட்டிக்காட்டும் பொழுது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எடுத்துச் செல்லும் பெறுமதிகள் சேத இழப்புக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

வங்கியின் காணி மற்றும் கட்டடம் என்பனவற்றை மீள்மதிப்பிடுவதற்கான கொள்கை யாதெனில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை அல்லது குறிப்பிடத்தக்க பெறுமதிச் சீராக்கம் தேவையென தெரியவரும் பொழுது ஏதேனும் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாகும். எந்த மீள்மதிப்பிட்டு மிகையும் வருமானக்கூற்றிலே முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்தின் மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியை மறுதலையாக்கும் சந்தர்ப்பம் நீங்கலாக நிதியியல் நிலைமைக் கூற்றின் பங்குரிமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு வரவு வைக்கப்படும். அவ்வாறு மறுதலையாக்கும் சந்தர்ப்பத்தில் அந்த அதிகரிப்பானது வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகிறது. மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறையானது, அப்பற்றாக்குறை அதே சொத்தின் முன்னைய மிகையை நேரடியாக எதிரீடு செய்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கிலுள்ள மதிப்பீட்டு மிகையை நேரடியாக எதிரீடு செய்யும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. விற்கப்படுகையில், குறிப்பிட்ட விற்கப்படுகின்ற சொத்தோடு தொடர்புடைய எந்த மீள்மதிப்பீட்டு மிகையும், பிடித்துவைக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விடயமொன்று விற்கப்படுகையில் அல்லது அதன் பாவனை அல்லது விற்பனையின் மூலம் எதிர்கால பொருளாதார நன்மை மகளை வழங்காது என எதிர்பார்க்கப்படும் போது அது அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்படுவதன் மூலம் உருவாகின்ற ஏதாவது இலாபம் அல்லது நட்டம் (தேறிய விற்பனைப் பெறுகைக்கும் சொத்தின் எடுத்துச் செல்லும் தொகைக்கும் இடையிலான வித்தியாசமாகக் கணிக்கப்பட்டது) சொத்தின் அங்கீகரிப்பு நீக்கப்பட்ட ஆண்டின் வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. பொருத்தமானவிடத்து சொத்தின் எஞ்சிய பெறுமதிகள், பயனுள்ள ஆயுட் காலங்கள் மற்றும் முறைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றன.
மூலதன நடப்பு வேலைகள் கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இவை கட்டிடங்கள், பாரிய பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் முறைமை அபிவிருத்திகளின் கட்டுமானத்தின் போது நேரடியாக ஏற்படும் மூலதனத்தன்மை கொண்ட செலவுகளாகவும் மூலதனவாக்கத்தை எதிர்நோக்கியிருப்பனவாகவும் காணப்படுகின்றன.

## 7.19 குத்தகைகள்

ஒப்பந்தமொன்றை ஆரம்பிக்கும் போது வங்கியானது அவ்வொப்பந்தம் குத்தகையா அல்லது அவ்வொப்பந்தம் குத்தகையைக் கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பிடுகின்றது. ஒரு ஒப்பந்தமானது, வெகுமதி ஒன்றிற்கு பரிமாற்றாக, குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையை குறிப்பிட்ட காலப்பகுதிக்குக் கொண்டிருக்குமாயின், அது குத்தகையாக அல்லது குத்தகையைக் கொண்டிருப்பதாகக் கருதப்படும். ஒரு ஒப்பந்தமானது குறிப்பிட்ட சொத்தொன்றின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு, வங்கியானது ப.நி.அ.நி 16இலுள்ள குத்தகையின் வரைவிலக்கணத்தைப் பயன்படுத்துகின்றது.

**குத்தகையாளராக வங்கி செயற்படுதல்**

வங்கியானது சொத்துப் பாவனை உரிமை மற்றும் குத்தகைப் பொறுப்பினை குத்தகையை ஆரம்பிக்கும் திகதியில் அங்கீகரிக்கிறது. சொத்துப் பாவனை உரிமையானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது ஆரம்பத் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது குத்தகைக் கொடுப்பனவிற்கான குத்தகைப் பொறுப்புச் சீராக்கத்தின் ஆரம்பத் தொகையுடன் ஏற்பட்ட ஏதாவது ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் அகற்றுவதற்கான செலவின் மதிப்பீட்டைக் கூட்டி காணி அல்லது அலுவலகப் பணிமனைக்கு மேற்கொள்ளப்பட்ட மேமம்படுத்தல்களை நீக்கிய தொகையை உள்ளடக்கியிருக்கும்.

சொத்துப் பாவனை உரிமையானது பின்னர், ஆரம்பத் திகதியிலிருந்து குத்தகைக் கால முடிவு வரைக்கும் நேர்கோட்டு முறையைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு செய்யப்படும். மேலும், சொத்துப் பாவனை உரிமையானது காலக்கிரமத்தில் தேச இழப்பு நட்டங்களினால், ஏதுமிருப்பின், குறைவதுடன் குத்தகைப் பொறுப்பின் சில மீள்மதிப்பீடுகளுக்காகச் சீராக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பொறுப்பானது, ஆரம்பத் திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வட்டி வீதத்தினால், அல்லது அந்த வீதம் தீர்மானிக்கப்பட முடியாதவிடத்து, வங்கியின் அதிகரித்துச் செல்லும் கடன்பாட்டு வீதத்தினால் கழிவிட்ட தற்போதைய பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

குத்தகை பொறுப்பின் அளவீட்டில் உள்ளடக்கப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- தவிர்க்க முடியாத நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக நிலையான கொடுப்பனவுகள்
- சுட்டெண் ஒன்றில் அல்லது ஒரு வீதத்தில் தங்கியிருக்கும் மாறுபடக்கூடிய குத்தகைக் கொடுப்பனவுகள் ஆரம்பத் திகதியிலுள்ளவாறான சுட்டெண் அல்லது வீதத்தைப் பயன்படுத்தி ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றன்

எஞ்சியிருக்கும் பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள் அத்துடன் செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது கொள்வனவுத் தெரிவின் கீழ் செயற்பாட்டு விலை, நீட்டிப்பதற்குரிய தெரிவை செயற்படுத்துவதற்கு உறுதியான போதுமான ஆதாரங்களை வங்கி கொண்டிருக்கும் போது தெரிவுக்குரிய புதுப்பித்தல் காலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கி உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்தாதென உறுதியாக நம்புவதற்குரிய போதுமான ஆதாரங்கள் இருந்தாலொழிய, குத்தகையினை உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப் பணம் குத்தகைப் பொறுப்பானது பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி பதிவழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றது. இது, சுட்டெண் அல்லது வீதத்திலான மாற்றத்தினால் எதிர்காலக் குத்தகைக் கொடுப்பனவுகளில் மாற்றமொன்று ஏற்படுகையில், எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை தொடர்பில் வங்கியின் மதிப்பீட்டில் மாற்றமொன்று ஏற்படுகையில், வங்கி நீட்டிப்புத் தெரிவைச் செயற்படுத்துவது தொடர்பில், அதன் மதிப்பீட்டை மாற்றுகையில் மற்றும் உரிய காலத்திற்கு முன்னர் முடிவுறுத்துவதற்கான தெரிவிற்கான தண்டப்பணம் தொடர்பிலான வங்கியின் மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்படுகையில் அல்லது தவிர்க்க முடியாத நிலையான குத்தகைக் கொடுப்பனவுகள் திருத்தப்படுகையில் மீள அளவிடப்படுகின்றது.

குத்தகைப் பொறுப்பு இம்முறையில் மீளஅளவிடப்படும் போது, இதற்கு ஒத்திசைவான சீராக்கமானது சொத்துப் பாவனை உரிமையின் கொண்டு செல்லும் பெறுமதிக்கு மேற்கொள்ளப்படுகின்றது, அல்லது சொத்துப் பாவனை உரிமை கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியத்திற்குக் குறைவடைந்திருப்பின் வருமானக் கூற்றில் பதியப்படுகிறது.

வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் சொத்துப் பாவனை உரிமையினை “ஆதனம், பொறி மற்றும் உபகரணம்” (குறிப்பு 21) இனுள்ளும் குத்தகைப் பொறுப்புக்களை “நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள்” (குறிப்பு 32) இனுள்ளும் சமர்ப்பிக்கிறது.

## 7.20 அருவச் சொத்துக்கள்

கணனி வன்பொருள்களில் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளடங்காதுள்ள கணனி மென்பொருட்கள் அருவச் சொத்துக்களாகக் காட்டப்பட்டு கிரயத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகரிப்பைத் தொடர்ந்து இவ்வருவச் சொத்துக்கள் கிரயத்திலிருந்து ஒன்றுசேர்ந்த பதிவழிப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு கழிக்கப்பட்ட தொகையில் கொண்டு செல்லப்படுகின்றன. கணனி மென்பொருள் சொத்துக்கள் மீதான தொடர்ந்துவரும் செலவுகள், அவை குறித்த சொத்துடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதார நன்மைகளை அதிகரித்தால் மட்டுமே மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய அனைத்துச் செலவுகளும் ஏற்படும்போது செலவாக அங்கீகரிக்கப்படுகின்றன.

சொத்துக்களில் திகழ்கின்ற எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வு வடிவத்தை மிகமுக்கியமாக பிரதிபலிக்கின்றது. பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவிருக்கும் திகதியிலிருந்து கடன்பதிவழிப்பு என்பது நேர் கோட்டு அடிப்படையில் 4 வருட பயன்பாட்டு காலத்தின் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

பின்வரும் ஏதேனுமிருப்பின் அனைத்தையும் மாத்திரம் நிறுவனம் பிரதிபலிக்கலாம் உள்ளக கருத்திட்டத்தின் அபிவிருத்தி கட்டத்திலிருந்து அபிவிருத்தியிலிருந்து தோன்றுகின்ற அருவச் சொத்தென்பது அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்:

(அ) அருவ சொத்தை பயன்படுத்துவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு, இதனால் அது பயன்பாட்டிற்குக் கிடைக்கும்.

(ஆ) அருவ சொத்தை பயன்படுத்துவதற்கான அதைப் பயன்படுத்துவதற்கான அதன் நோக்கம்

(இ) அருவ சொத்தைப் பயன்படுத்துவதற்கான அதன் திறன்.

(ஈ) உள்நாட்டில் பயன்படுத்தப்பட வேண்டிய அருவ சொத்தின் பயனை நிறுவனம் நிருபிக்க முடியும்.

(உ) அபிவிருத்திக்காக அருவ சொத்தைப் பயன்படுத்தவும் போதுமான தொழில்நுட்ப, நிதி மற்றும் பிற வளங்களின் கிடைக்கும் தன்மை.

(ஊ) அதன் வளர்ச்சியின் போது அருவ சொத்திற்குக் கூறப்படும் செலவினங்களை நம்பத்தகுந்த முறையில் அளவிடும் அதன் திறன்.

## 7.21 ஏனைய சொத்துக்கள்

னைய சொத்துக்களில் உள்ளக நிதிகளின் முதலீடுகள், அலுவலர் மற்றும் கடன்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டு அரசாங்கத்திடமிருந்து பெறத்தக்கவை ஆகியவை அடங்கும்.

## 7.22 நிதியியல்லாச் சொத்துக்களின் சேத இழப்பு

முன்கொண்டு செல்லும் பெறுமதி சேதம் இழந்திருக்கலாம் என்பதைக் காட்டுவதில் சூழ்நிலைகளில் நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் இருப்பின், நிதியல்லாச் சொத்து சேதம் அடைந்திருக்கலாம் என்ற குறிகாட்டி காணப்படுகின்றதா என்பதனை வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் மதிப்பிடுகின்றது. ஏதேனும் அத்தகைய குறிகாட்டி காணப்படுமாயின் சொத்தின் அறவிடத்தக்க தொகையின் மதிப்பீடொன்றினை வங்கி மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் முன்கொண்டு செல்லும் தொகை அதன் அறவிடத்தக்க தொகையினை விஞ்சுகின்றவிடத்து சொத்து சேதமிழந்துள்ளதாகக் கருதப்படுவதுடன் அதன் அறவிடத்தக்க தொகை பதிவுசெய்யப்படுகின்றது. சேத இழப்பு நட்டங்கள் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் வங்கி அதன் நிதியல்லாச் சொத்துக்களின் சேதம் இழந்திருக்கலாம் என்பதற்கான அறிகுறிகள் உள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்காக அவற்றின் முன்கொண்டு செல்லும் பெறுமதியை மீளாய்வு செய்கின்றது. அத்தகைய அறிகுறிகள் காணப்படின், சொத்துக்களின் மீளப் பெறக்கூடிய தொகையின் மதிப்பீடொன்றை வங்கி மேற்கொள்கின்றது.

சேத இழப்பு பரீட்சிப்பிற்காக, ஏனைய சொத்துக்களின் காசுப்பாய்ச்சல்களினால் பெருமளவிற்குப் பாதிக்கப்படாத, தொடர்ச்சியான பாவனையின் மூலம் காசுப்பாய்ச்சல்களை உருவாக்கக்கூடிய சொத்துக்களின் மிகச் சிறிய வகைக்குள் சொத்துக்கள் ஒன்று திரட்டப்பட்டன.

ஒரு சொத்தின் “மீளப்பெறக்கூடிய பெறுமதி” என்பது அதன் “பயன்பாட்டிலுள்ள பெறுமதி” மற்றும் அதன் சீர்மதிப்புப் பெறுமதியிலிருந்து விற்பதற்கான செலவைக் கழித்த பெறுமதி என்பவற்றில் கூடிய பெறுமதியாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியானது பணத்தின் காலப்பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடு மற்றும் சொத்துக்கு உரித்தான இடர்நேர்வுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முன்னரான கழிவு வீதம் ஒன்றைப் பயன்படுத்தி தற்போதைய பெறுமதிக்கு கழிவிடப்பட்ட மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஒரு சொத்தின் கொண்டு செல்லல் பெறுமதி அதன் மீளப்பெறத்தக்க தொகையை விஞ்சும் சந்தர்ப்பத்தில் சேத இழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படுகின்றது.

பெறுமதியிழப்பு நட்டமானது, சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியானது, சேத இழப்பு நட்டம் அங்கீகரிக்கப்படாத சந்தர்ப்பத்தில், தேய்மானம் அல்லது சேத இழப்பு நீங்கலாக தீர்மானித்திருக்கக்கூடிய கொண்டு செல்லும் பெறுமதியை விஞ்சாத அளவுக்கு மாத்திரமே மறுதலையாக்கப்படுகின்றது.

## 7.23 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக, வங்கி தற்போதைய கடப்பாடொன்றினை (சட்ட ரீதியான அல்லது அமைப்பு ரீதியான) கொண்டிருந்து அக்கடப்பாட்டைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகளை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுவதுடன், இக்கடப்பாட்டுத் தொகையை நம்பத் தகுந்த மதிப்பீடொன்று மூலம் அறிய முடியுமாயின் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏற்பாடொன்று மீளளிக்கப்படும் என வங்கி எதிர்பார்க்குமிடத்து அந்த மீளளிப்பு இறுதியில் நிச்சயமாக ஏற்படும் வேளையில் மட்டும் தனியான சொத்தாக அங்கீகரிக்கப்படுகின்றது.

## 7.24 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயம் அதனை வைத்திருப்பவரின் சார்பாக வங்கி மீதான கோரலைக் கொண்டிருப்பதனைக் காட்டுகின்றது. சுற்றோட்டத்திலுள்ள நாணயத்துக்கான பொறுப்பு நிதியியல் நிலைமைக் கூற்றில் முகப்புப் பெறுமதியில் பதியப்பட்டுள்ளது.

## 7.25 தொழிலுக்குப் பின்னரான நன்மைத்திட்டங்கள்

### 7.25.1 நிர்ணயிக்கப்பட்ட நன்மைத்திட்டங்கள்

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களானவை, நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த ஏனைய தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களாகும். ஓய்வூதியம், விதவைகள் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், விதுரர் மற்றும் அநாதைகளுக்கான ஓய்வூதியம், இளைப்பாற்றுப் பணிக்கொடை மற்றும் வேலைக் காலத்திற்குப் பின்னரான மருத்துவ நலன்கள் போன்ற நிர்ணயிக்கப்பட்ட நன்மைகள் திட்டங்களை வங்கி தொழிற்படுத்துகின்றது. முதல் மூன்று திட்டங்களையும் பொறுத்தவரையில் வங்கியும் தகுதியுள்ள பயனாளிகளும் தனித்தனியாக நிர்வகிக்கப்படும் நிதியங்களுக்குப் பங்களிப்பினைச் செய்கின்றனர்.

நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் கிரயமானது எறிவு செய்யப்பட்ட அலகு கொடுகடன் ஆயுட்கால மதிப்பீட்டு முறையை உபயோகித்து ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாகத் தீர்மானிக்கப்படுகின்றது. நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டங்கள் தொடர்பாக வங்கியின் கடப்பாடு, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக, ஊழியர்கள் அவர்களுடைய தற்போதைய மற்றும் முன்னைய காலங்களில் வழங்கிய பணிகளுக்கு பிரதிபலனாக அந்நன்மை அதன் தற்போதைய மதிப்பினை நிர்ணயம் செய்வதற்காக கழிவீடு செய்யப்படுகின்றது. அங்கீகரிக்கப்படாத ஏதாவது கடந்த காலச் பணி செலவுகள் மற்றும் திட்டச் சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி என்பன கழிக்கப்படும். கழிவீடு செய்யப்படும் வீதமானது, சராசரி மீதமுள்ள பணிக் காலத்திற்கு ஏறத்தாழ முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட அரச பிணையங்களின் மதிப்பீட்டுத் திகதியன்றுள்ள விளைவு வீதமாகும். குறிப்பு 16இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 7.25.2 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

ஊழியர்கள், ஏற்புடைய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஊழியர் சேம நிதியப் பங்களிப்புக்களுக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்களுக்கும் தகுதியுடையவர்களாவர். வங்கியானது ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் ஊழியர் சேம நிதியத்திற்கு 24 சதவீதத்தினையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3 சதவீதத்தினையும் முறையே பங்களிப்புச் செய்கிறது. இவை தனித்தனியாக நிருவகிக்கப்பட்டு வரும் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களாகும்.

நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களின் பங்களிப்பிற்கான கடப்பாடுகள், வருமானக் கூற்றில் அவை ஏற்படும் போது செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

## 7.26 கொடைகள்

கொடைகள் (பெறப்படும் என்பதற்கும் அத்துடன் அவற்றுடன் இணைந்த நிபந்தனைகள் ஏதுமிருப்பின் அவை இணங்கியொழுகப்படும் என்பதற்குமான உறுதிப்பாடு இருக்குமிடத்து) அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்டு, பங்குரிமை மூலதனத்தின்

கீழ் காட்டப்படும். கொடைகள் செலவின விடயங்களுடன் தொடர்பானதாக இருக்கும் பொழுது, ஒழுங்குமுறையானதொரு அடிப்படையில் இழப்பீடு செய்வதற்கெனக் கருதப்பட்ட செலவினங்களுக்கு அவற்றை சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட அரச கொடைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஏற்புடைய சொத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக் காலம் வரை, ஏற்புடைய சொத்தின் தேய்மானக் கொள்கையுடன் இசைந்த விதத்தில் ஒழுங்குமுறையான அடிப்படையில் வருமானக்கூற்றுக்கு விடுவிக்கப்படும்.

## 7.27 எதிர்பாரா பொறுப்புக்கள்

எதிர்பாரா பொறுப்புக்களானவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளின் மூலம் மட்டும் உறுதி செய்யப்படுகின்ற சாத்தியமான கடப்பாடுகளாகக் காணப்படுவதுடன், இங்கு எதிர்காலப் பொருளாதார நன்மைகளின் மாற்றல் நிச்சயமற்றதாக அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியாததாகக் காணப்படுகின்றது. நிதியியல் நிலைமைக் கூற்றில் அங்கீகரிக்கப்படாத படுகடன்களின் அனைத்து உத்தரவாதங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய கடப்பாடுகள் என்பன எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக உரிய தலைப்புகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவைப்படுமிடத்து அவ்வாறான தொகைகள் மிகச்சிறந்த மதிப்பீடுகளில் அளவிடப்படுகின்றன.

## 7.28 வருமானம் மற்றும் செலவுகள்

வங்கிக்குப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வரக்கூடிய சாத்தியம் காணப்பட்டு அவ்வருமானத்தினை நம்பகமான முறையில் அளவிடக்கூடியதாகவுள்ள போது வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது. மேற்கொள்ளப்பட்ட செலவிற்கும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் வருவாய்க்குமிடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் வருமானக்கூற்றில் செலவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தைக் கொண்டு நடத்துவது தொடர்பாகவும் ஆதனம், பொறி, உபகரணங்களை வினைத்திறனுள்ள விதத்தில் பேணுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவினங்களும் ஆண்டிற்கான பெறுபேற்றினைக் கணிக்கும் போது வருமானத்தில் கழிக்கப்படுகின்றன.

வருமானத்தையும் செலவினத்தையும் அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களும் நிறைவேற்றப்பட வேண்டும்:

### 7.28.1 வட்டி வருமானம் மற்றும் செலவினங்கள்

சேகரித்தல் ஐயத்திற்கிடமில்லாதவிடத்து உண்மைக் கொள்வனவு விலையை அடிப்படையாகக் கொண்ட பயன்தரு விளைவு முறையைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் சாதனங்களுக்கான வட்டி வருமானமும் செலவினங்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வட்டி வருமானமானது, நிலையான வருமான முதலீடு மற்றும் பிணையங்கள் என்பன மீதான வட்டி வருவாய்களையும் திறைசேரி உண்டியல் மற்றும் ஏனைய கழிவிடப்பட்ட கருவிகளின் அட்டுறு கழிவுகள் மற்றும் வட்டங்களையும் உள்ளடக்குகிறது. கடன்களின் சேகரிப்பு ஐயத்திற்கிடமாகும் பொழுது வட்டி வருமானம் இடைநிறுத்தப்படுகிறது. அத்தகைய வருமானம் பெறப்படும் வரை வட்டி வருமானத்திலிருந்து நீக்கப்படுகிறது.

### 7.28.2 பங்கிலாபங்கள்

வங்கியின் கொடுப்பனவைப் பெறுவதற்கான உரிமை நிறுவப்படும் போது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகிறது.

### 7.28.3 நானவித வருமானம் மற்றும் செலவினங்கள்

நானாவித வருமானமும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆதனம், பொறி, உபகரணங்களின் விற்பனை மீதான வருமானத் தன்மையான தேறிய இலாபங்களும், நட்டங்களும் விற்பனை மூலம் பெற்ற பெறுகைகளிலிருந்து சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதியையும் அது சார்ந்த விற்பனைச் செலவுகளையும் கழித்த பின்பு வருமானக்கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

முக்கிய வருமானத்தை உருவாக்குகின்ற நடவடிக்கைகளுக்கான தற்செயலான நடவடிக்கை மூலம் எழும் இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பொருண்மைத்தன்மை இல்லாத ஒரேமாதிரியான கொடுக்கல்வாங்கல் தொகுதியிலிருந்து எழும் இலாபங்களும் நட்டங்களும் தேறிய அடிப்படையில் திரட்டப்பட்டு அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

### 7.28.4 ஆளணிச் செலவுகள்

ஆளணிச் செலவுகள் அனைத்து அலுவலர் நன்மைகளினதும் முழுச் செலவினையும் உள்ளடக்குகின்றது. ஆண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள் மற்றும் தொடர்பான செலவுகள் என்பன மற்றைய உள்நாட்டு கொடுபடத்தக்கனவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 7.28.5 வருமான வரிச் செலவு

வங்கியின் வருமானமானது மத்திய வங்கிச் சட்டத்தின் 116ஆம் பிரிவின் கீழும் 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைவாகவும் அதனைத்தொடர்ந்து 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டம், 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம், 2023 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டம் அத்துடன் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டம் என்பவற்றுக்கமைவாகவும் விலகளிக்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணம் (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கி 2020.01.01 தொடங்கி பொருளாதார சேவைக் கட்டணத்திற்கு இனிமேலும் பெறுப்புடையதல்ல. மேலும், 2014ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் நிதியியல் பணிகள் வழங்குவதன் மீதான பெறுமதிசேர்க்கப்பட்ட வரியிலிருந்தும் வங்கி விலக்களிக்கப்பட்டுள்ளது.

## 7.29 அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழும் அனைத்து பொருண்மைத் தன்மை வாய்ந்த நிகழ்வுகளும் கருத்தில் எடுக்கப்படுவதுடன், பொருத்தமானவிடத்து நிதியியல் கூற்றுக்களுக்கான தொடர்பான குறிப்புக்களில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.30 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றானது பன்னாட்டு கணக்கீட்டு நியமம் 7 – காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றின் தயாரிப்பில் “நேரடி முறை” யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

## 8 காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்

| | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| நிலுவைகள் வங்கிகளுடனான | | 108,252,277 | 273,495,980 |
| வங்கிகளில் கால வைப்புத்தொகைகள் | | 528,416,455 | 273,653,160 |
| கால வைப்புக்கள் ஓரிரவு வைப்புக்கள் | | 35,122,365 | 87,102,049 |
| காசு மற்றும் காசுக்கு சமமானமவை | | 671,791,097 | 634,251,189 |
| இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வங்கிக் கணக்கிலுள்ள காசு மீதிகள் | | 93,437 | 29,258,330 |
| இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வங்கிக் கணக்கிலுள்ள நிலையான வைப்புக்கள் | | 2,634,952 | – |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் காரணங்கள் | | 674,519,486 | 663,509,519 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது பெறத்தக்க வட்டி | | 306,470 | 390,010 |
| இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியக் கணக்கின் காசுக்கு சமமானவை மீது பெறத்தக்க வட்டி | | 4,205 | – |
| மட்டுப்படுத்தப்பட்ட பாவனைக்காக கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கு சமமானவை | 8.1 | 443,641,360 | 400,837,478 |
| கழி: எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புகள் | 8.2 | (454,009) | (1,208,732) |
| | | 1,118,017,512 | 1,063,528,275 |

**8.1** குறிப்பு 25.1.1இல் விளக்கப்பட்டவாறான இலங்கை மத்திய வங்கிக்கும் சீன மக்கள் வங்கிக்குமிடையில் இருபுடை நாணய பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட ரென்மென்பி 10 பில்லியன் தொகையை மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு கிடைப்பனவாகவுள்ள காசு மற்றும் காசுக்கிற்குச் சமமானவை பிரதிபலிக்கின்றன. இவ்வுடன்படிக்கையின் கீழ் பெறப்பட்ட தொகையை இரண்டு நாடுகளுக்குமிடையிலான நிதியியல் வியாபாரம் மற்றும் நேரடி முதலீடு என்பவற்றிற்கும் அத்துடன் இரு தரப்பினர்களும் ஒப்புக்கொண்டதற்கமைய வேறு நோக்கங்களுக்கும் பயன்படுத்த முடியும்.

### 8.2 காசு மற்றும் காசுக்கு சமமானவை மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2025 | | | 2024 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 ரூ. '000 | கட்டம் 2 ரூ. '000 | மொத்தம் ரூ. '000 | கட்டம் 1 ரூ. '000 | கட்டம் 2 ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | 1,208,732 | – | 1,208,732 | 635,409 | 230,592 | 866,001 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/(மீளளித்தல்) | (754,723) | – | (754,723) | 573,323 | (230,592) | 342,731 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | 454,009 | – | 454,009 | 1,208,732 | – | 1,208,732 |

## 9 வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள்

| | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | | | |
| - வெளிநாட்டு பிணையங்களில் முதலீடு | 9.1 | 95,447,519 | – |
| | | 95,447,519 | – |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் | | | |
| - வெளிநாட்டுப் பிணையங்களிலான முதலீடுகள் | | 837,025,322 | 672,461,750 |
| - வைப்புக் காப்புறுதி நிதியங்கள் கணக்கில் வெளிநாட்டு பிணையங்களில் முதலீடு | | 38,927,463 | – |
| | | 875,952,785 | 672,461,750 |
| வெளிநாட்டுப் பிணையங்களிலான மொத்த முதலீடுகள் | | 971,400,304 | 672,461,750 |

ஐ.அ.டொலர் 1,153.6 மில்லியன், ஸ்ரேலிங் பவுன் 54.7 மில்லியன், அவுஸ்ரேலிய டொலர் 80.0 மில்லியன், நியுசிலாந்து டொலர் 43.7 மில்லியன் மற்றும் கனேடிய டொலர் 56.1 மில்லியன் கொண்ட முகப்பெறுமதிகளைக் கொண்ட வெளிநாட்டு அரசாங்கப் பிணையங்கள் 2025ஆம் ஆண்டுகாலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்டன. மேலும், ஐ.அ.டொலர் 566.0 மில்லியன், ஸ்ரேலிங் பவுன் 37.3 மில்லியன், அவுஸ்ரேலிய டொலர் 24.5 மில்லியன், யப்பானிய யென் 6,515.4 மில்லியன், கனேடிய டொலர் 16.3 மில்லியன் மற்றும் யூரோ 44.7 மில்லியன் கொண்ட முகப் பெறுமதியனைக் கொண்ட வெளிநாட்டு அரசாங்கப் பிணையங்கள் 2025ஆம் ஆண்டுகாலப்பகுதியில் முதிர்ச்சியடைந்தன.

| | குறிப்பு | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|---|
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்பு பெறுமதியிலான பிணையங்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | 9.2 | **1,065,903** | 1,461,863 |

**9.1** இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள பிணையங்களாக வகைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பிணையங்களின் முதலீடானது உலக வங்கியினால் முகாமைசெய்யப்படுகின்ற ஒதுக்கு ஆலோசனை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை உள்ளடக்குகின்றது.

### 9.2 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன்

| | 2025 | | | 2024 | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1<br>ரூ. '000 | கட்டம் 2<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 | கட்டம் 1<br>ரூ. '000 | கட்டம் 2<br>ரூ. '000 | மொத்தம்<br>ரூ. '000 |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **1,461,863** | **–** | **1,461,863** | 70,273 | – | 70,273 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு (மீளளித்தல்) | **(395,960)** | **–** | **(395,960)** | 1,391,590 | – | 1,391,590 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **1,065,903** | **–** | **1,065,903** | 1,461,863 | – | 1,461,863 |

## 10 பெறுதி நிதியியல் சாதனங்கள்

**10.1** கீழேயுள்ள அட்டவணை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களாக அவற்றின் பெயரளவுத் தொகையுடன் சேர்த்து பதிவுசெய்யப்பட்டுள்ள பெறுதி நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியினைக் காண்பிக்கின்றது. மொத்தமாகப் பதிவுசெய்யப்பட்ட பெயரளவுத் தொகையானது பெறுதியின் அடிப்படையான சொத்து, குறிப்பீட்டு வீதம் அல்லது சுட்டெண்ணின் தொகையாகும் என்பதுடன் பெறுதிகளின் பெறுமதிகளில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுவதற்கான அடிப்படையாகவும் காணப்பட்டது. பெயரளவுத் தொகை ஆண்டின் இறுதியில் வெளிநின்ற கொடுக்கல்வாங்கல்களின் அளவினை எடுத்துக்காட்டியதுடன் இது சந்தை இடர்நேர்வுகளையோ அல்லது கொடுகடன் இடர்நேர்வுகளையோ எடுத்துக்காட்டவில்லை.

| | 2025 | | | 2024 | | |
|---|---|---|---|---|---|---|
| | சொத்துக்கள்<br>ரூ. '000 | பொறுப்புக்கள்<br>ரூ. '000 | கருத்துத் தொகை<br>ரூ. '000 | சொத்துக்கள்<br>ரூ. '000 | பொறுப்புக்கள்<br>ரூ. '000 | கருத்துத் தொகை<br>ரூ. '000 |
| நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | **16,039** | **28,647,291** | **595,595,341** | 26,045,845 | 22,382,070 | 518,080,524 |
| முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி | **–** | **3,156** | **2,944,947** | 1,911,318 | 14,814,318 | 107,346,944 |
| மொத்தம் | **16,039** | **28,650,448** | **598,540,288** | 27,957,163 | 37,196,388 | 625,427,468 |

**10.2** மேலே குறிப்பிட்ட பெறுதிகளானது வெளிநாட்டு ஒதுக்குகளை பேணும் நியதிச்சட்ட குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் வங்கியினால் வைத்திருக்கப்படும் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகளை முகாமைசெய்யும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் நாணய பரஸ்பர பரிமாற்றல்களையும் வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன. இலங்கை ரூபாவின் பன்னாட்டு உறுதிப்பாட்டை பேணுவதற்கும், நாட்டின் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை வலுப்படுத்துவதற்கும், பிராந்திய நாடுகளிற்கு மத்தியில் பொருளாதாரத்தையும் நிதியியல் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கும் நாட்டிற்குள் வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கும் வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகள், வெளிநாட்டு மத்திய வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடன் பரஸ்பர பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொண்டது.

**10.3** பெறுதிகள் என்பது வட்டி வீதங்கள், நிதியியல் சாதனங்களின் விலைகள், பண்ட விலைகள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள், கொடுகடன், இடர்நேர்வு மற்றும் சுட்டெண்களில் ஏற்படும் மாற்றங்களுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் அவற்றின் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளும் நிதியியல் உடன்படிக்கைகளாகும்.

**10.4** குறுகிய காலப் பெறுதிகள் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியைக் கொண்டும்,நீண்ட காலப் காலப் பெறுதிகள் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியைக் கொண்டும் இப்பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் அவற்றின் காலத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

**10.5** வங்கியின் பெறுதிகளினது சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க பகுதி செலாவணி வீத இடர்நேர்வு மற்றும் குறுங்கால திரவத்தன்மை தேவைப்பாடுகள் என்பனவற்றை முகாமைப்படுத்துவதற்கானதொரு உபாயமாக மேற்கொள்ளப்பட்ட நாணய பரஸ்பரபரிமாற்றத்தினை உள்ளடக்குகின்றது. நாணய பரஸ்பரபரிமாற்றத்தில் இணங்கிய வீதங்களில் வேறோரு நாணயத்தின் பரிமாற்றத்தில் இணங்கிய திகதியொன்றில் ஒரு நாணயத்தின் குறித்துரைக்கப்பட்ட தொகையினை செலுத்தும்/ பெற்றுக்கொள்ளும்.'

**10.6** வெளிநாட்டுச் செலாவணி முன்னோக்கிய ஒப்பந்தத்திலிருந்து, வங்கியானது இணங்கப்பட்ட எதிர்காலத் திகதியொன்றில் இணங்கப்பட்ட வீதமொன்றில் வெளிநாட்டு நாணயத்தின் குறிப்பிட்ட-தொரு தொகையினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கான கடப்பாடுகளை பெற்றிருக்கிறது.

**10.7** பெறுதி உடன்படிக்கைகளுக்கு வங்கியின் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையானது, அத்தகைய பெறுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகள் வங்கிக்கு திடமாகக் கிடைக்கும் தன்மை கொண்டவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஒரு பகுதியாக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுகிறது.

**10.8** வங்கியானது வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிக்கும் நோக்கத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் மற்றும் ரூபாய் கொள்வனவு விற்பனை பரஸ்பர பரிமாற்றல' ஒப்பந்தங்களை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் கைச்சாத்திட்டது. 2025 திசெம்பர் 31 அன்றுள்ளவாறு இது அமெரிக்க டொலர் 1,930.8 மில்லியனாகக் காணப்பட்டது. குறிப்பு 53. ஆ). மேலும், 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிறுவனங்களுடன் குறுகிய கால அமெரிக்க டொலர் அல்லது யப்பான் யென் கொள்வனவு விற்பனை பரஸ்பர பறிமாற்றல் ஒப்பந்தங்களை வங்கிகைச்சாத்திட்டது மற்றும் 31 திசெம்பர் 2025 அன்றுள்ளவாறு பரஸ்பர பறிமாற்றல் ஒப்பந்த நிலுவைத் தொகையானது 'பூச்சியம்' ஆக உள்ளது. (குறிப்பு 53. ஆ)

**10.9** வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் நோக்குடன், வங்கி நீண்டகால ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டது. 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு, வங்கி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் மேற்கொண்ட நீண்ட கால ஐக்கிய அமெரிக்க டொலர்/ரூபாய் கொள்வனவு-விற்பனை பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்களின் நிலுவைகள் வருமாறு:

| வங்கி | ஒப்பந்த திகதி | நிலுவைத் தொகை (ஐ.அ.டொ. மில்) | தொகுதி வாரியாக இறுதி முதிர்வுத் திகதி | தவணைகள்/நிபந்தனைகள் |
|---|---|---|---|---|
| இலங்கை வங்கி | 21-யூன்-29 | 39.78 | 27-திசெ-15 | • பூச்சிய செலவு அடிப்படையில் 6 ஆண்டுகள்.<br>• 5 ஆண்டுகள் தவணைகளில் மீளச்செலுத்தப்படுவதுடன் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 10 மில். செலுத்தப்படும் |
| மக்கள் வங்கி | 21-செத்-30 | 39.78 | 27-திசெ-15 | |
| டிஎவ்சிசி வங்கி பி.எல்.சி | 21-நவெ-15 | 68.75 | 28-ஓக-18 | • பூச்சிய செலவு அடிப்படையில் 7 வருடங்கள்<br>• 20 ஆண்டு தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 3 மாதங்களுக்கும் 6.25 மில். ஐ.அ.டொலர் செலுத்த எதிர்பார்க்கப் படுகின்றது. |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பி.எல்.சி | 21-நவெ-17 | 35.00 | 26-நவெ-23 | • 5 ஆண்டுகள் மற்றும் முதல் 18 மாதங்களுக்கு எந்த கட்டணமும் இல்லாமல் அதன் பிறகு, ஒரு அமெரிக்க டொலருக்கு ரூ.1.00 அரையாண்டு பிரீமியம்.<br>• முதிர்ச்சியில் ஒருமுறை செலுத்தும் தொகை. |
| நேஷனல் டெவெலெப்மென்ட் பாங்க் பி.எல்.சி | 22-மாச்-18 | 21.00 | 29-மாச்-19 | • 7 வருடங்களில் முதல் 18 மாதங்கள் ஆண்டு மிகையாக ஒரு ஐ.அ.டொலருக்கு தலா ரூ.1.00யும் அதனைத் தொடர்ந்து எஞ்சியுள்ள ஐந்தரை ஆண்டுகள் ஆண்டு மிகையாக ஓர ஐ.அ.டொலருக்கு தலா ரூ.1.00யும்<br>• 12 தவணைகளில் மீளச்செலுத்தப் படுவதுடன் ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் 3 மில். ஐ.அ.டொலர் |

## 11 ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள்

| | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| இலாபம் அல்லது நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை | | | |
| ப.நா.நி அனுமதிப் பங்கு | 11.1 | 245,722,776 | 221,291,888 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் | 11.2 | 325,751 | 925,452 |
| | | 246,048,527 | 222,217,340 |
| **பதிவழிக்கப்பட்ட பெறுமதியில் அளவிடப்படடவை** | | | |
| ப.நா.நிதியத்துடனான வைப்புக்கள் | 11.3 | – | 301,574 |
| முற்செலுத்தப்பட்ட விதிப்புக்கள் - ப.நா.நிதியக் கடன்கள் | | 314,811 | 357,164 |
| கழிக்குக: ப.நா.நி. தொடர்பான சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் | 11.4 | – | (9) |
| | | 314,811 | 658,729 |
| | | 246,363,338 | 222,876,069 |

### 11.1 ப.நா.நி. அனுமதிப் பங்கு

ப.நா.நிதிய அனுமதிப் பங்கானது (மூலதன சந்தாக்கள்) அதன் அங்கத்துவ நாடுகளிலிருந்து கிடைக்கின்ற ப.நா.நிதிய வளங்களின் முதன்மை மூலமாகும். பரந்தளவில் நாடொன்றின் ஒப்பீட்டளவிலான பொருளாதார நிலைமை கருத்தில் கொள்ளப்பட்டு ஒவ்வொரு நாட்டினதும் அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்படுகின்றது. ப.நா. நிதியத்தில் இணைகின்ற சந்தர்ப்பத்தில் ஒரு நாடு அதற்குரிய அனுமதிப் பங்குத் தொகையில் நூற்றுக்கு 25 வீதத்தினை பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு நாணயத்தின் மூலம் அல்லது சிஎஉரிமையில் செலுத்துதல் வேண்டுமென்பதோடு, எஞ்சிய 75 வீதத்தினையும் அதன் நாட்டுப் பணத்தின் மூலம் செலுத்துதல் வேண்டும். வங்கியொன்றின் ப.நா. நிதியத்துடனான அதன் கொடுக்கல்வாங்கல்கள், ப.நா.நிதியத்தின் உறுப்புரையின்படி, அரசாங்கத்தின் சார்பில் அதன் சொந்தக் கணக்கின் மீது இடம்பெறுவதனால் ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கு வங்கியின் சொத்துக்களைப் பிரதிபலிக்கிறது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில் செலுத்த வேண்டிய தொகைகள், குறிப்பு 24இல் உள்ள ஒதுக்கீட்டுப் பொறுப்பு என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்தின் ஒரு உறுப்பு நாட்டின் ஒதுக்கீடு அந்நாட்டின் நிதியியல் மற்றும் நிறுவன ரீதியான ப.நா.நி உடனான தொடர்புகளின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

ப.நா. நிதியத்திலிருந்து ஒரு உறுப்பினர் விலகினால், ப.நா. நிதியத்திற்கான நிகரப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு தேவையில்லாத அளவிற்கு அதன் ஒதுக்கீட்டு சந்தை மீளப்பெறப்படும். எவ்வாறாயினும் ப.நா. நிதிய ஒதுக்கீட்டின் மீதான வட்டியானது உறுப்பினர்களுக்கு உரிமையில்லை. எனவே, பணத்தின் நேர மதிப்பிற்கு இழப்பீடு எதுவுமில்லை. எனவே, ப.நி.அ.நியமம் 9இன் கீழ் இது இலாபம்/நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுகின்றது. சீர்மதிப்பு பெறுமதியினைக் கணக்கிடுவதற்கு முதிர்வுக் காலம் எதுவுமில்லாததால் சீர்மதிப்புப் பெறுமதி மதிப்பிறக்கத்திற்குச் சமமாக இருக்கும்.

### 11.2 சிறப்பு எடுப்பனவு உரிமை உடமைகள்

"சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) என்பது ப.நா.நி. அங்கத்தவர்களின் எவ்விதத் தடைகளுமின்றிப் பயன்படுத்தக்கூடிய நாணயங்கள் மீதான கோரலாக இருப்பதுடன், இதில் சிஎஉ உடமையாளர்கள் தமது சிஎஉரிமைகளை இந்நாணயங்களுக்காகப் பரிமாறிக் கொள்ள முடியும். ஒதுக்குச் சொத்தொன்றாக சிஎஉரிமையின் பெறுமதியானது சிஎஉரிமையை வைத்திருப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான அங்கத்தவர்களின் கடப்பாடுகள் மற்றும் சிஎஉரிமை முறைமையின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட கடப்பாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய பொறுப்பு என்பவற்றிலிருந்து தோன்றுகின்றது. தடையின்றிப் பயன்படுத்தக்கூடியதான நாணயங்கள் மீதான சிஎஉ கோரலானது மதிப்பளிக்கப்படுவதை ப.நா.நி. இரண்டு விதங்களில் உறுதி செய்கின்றது. அதாவது, பலவீனமான வெளிநாட்டு நிலைமையிலுள்ள அங்கத்தவர்களிடமிருந்து சிஎஉவைக் கொள்வனவு செய்வதற்குப் பலம் வாய்ந்த வெளிநாட்டு நிலைமையைக் கொண்ட ப.நா.நி அங்கத்தவர்களைப் பெயர் குறித்துரைப்பதன் மூலமும் அத்துடன் முகாமைக்குட்படுத்தப்பட்ட சந்தையினுள் பங்கேற்கும் அங்கத்தவர்களுக்கிடையிலான தாமாக முன்வந்து பரிமாற்றிக் கொள்ளும் ஒழுங்கின் மூலமுமாகும். மேலே காட்டப்பட்ட தொகையானது தொடர்பான அறிக்கையிடும் திகதிகளிலுள்ளவாறான வங்கியின் மொத்த உடமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

சி.எ.உ. குணாதிசயங்கள் பணத்திற்கு ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளன. எனவே ப.நி.அ.நி. 9இன் கீழ் இலாபம்/நட்டத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்படுகின்றது. சீர்மதிப்புப் பெறுமதியினைக் கணிப்பிடுவதற்கு முதிர்ச்சிக் காலம் எதுவுமில்லாததால் சீர்மதிப்புப் பெறுமதியானது மதிப்பிறக்கத்திற்குச் சமமாக இருக்கும்.

## நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

### 11.3 ப.நா. நிதியத்துடனான வைப்புக்கள் - பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை நிதிய வைப்பு

பன்னாட்டு நாணய நிதியத்தில் நிர்வகிக்கப்படும் விசேட எதிர்பாரா நிகழ்வுக் கணக்கு-2 (வி.எ.நி.கணக்கு-2) இற்குப் பிந்திய கணக்கில் இலங்கையின் வைப்பிலிருந்து சிஎஉ 788,783இனை மாற்றியதன் மூலம் 2000 ஏப்பிரல் 21ஆம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் பன்னாட்டு நாணய நிதியத்திற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கை வைப்பு மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க இலங்கை அரசாங்கம், வி.எ.நி. கணக்கு- 2இற்குப் பிந்திய கணக்கிலுள்ள நிதியங்களை முழுமையான நன்கொடையாகவன்றி 2018 வரையிலான வட்டியில்லா வைப்பாக பாரிய அளவிற்குக் கடன்பட்ட வறிய நாடுகளுக்கான வறுமைக் குறைப்பு வளர்ச்சி வசதி நம்பிக்கைப் பொறுப்புக் கணக்குக்கு மாற்றுவதற்கு இணங்கியது. இது பின்னர் 2024 வரை நீடிக்கப்பட்டது. 2025இல், நிதி அமைச்சின் ஒப்புதலுடன் பன்னாட்டு நாணய நிதிய வறுமைக் குறைப்பு வளாச்சி வசதி நம்பிக்கை வைப்பு நன்கொடை கணக்கிற்கு மாற்றப்பட்டதால், வைப்பானது அங்கீகாரத்திலிருந்து நீக்கப்பட்டது.

### 11.4 பா.நிதியத்துடன் தொடர்புபட்ட சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| **கட்டம் 1** | | |
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | **9** | 7 |
| ஆண்டு காலப்பகுதியிலான விதிப்பு/(மீளளித்தல்) | **(9)** | 2 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **–** | 9 |

## 12 இலங்கை அரச பிணையங்கள்

2023ஆம் ஆண்டின் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 86(4)ஆம் பிரிவிற்கமைவாக இரண்டாந்தரச் சந்தையிலும் 86(5)ஆம் பிரிவிற்கமைவாக முதலாந்தரச் சந்தையிலும் அரசாங்கப் பிணையங்களை மத்திய வங்கி கொள்வனவு செய்கின்றது.

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| திறைசேரி முறிகள் | **1,834,889,192** | 1,748,873,060 |
| | **1,834,889,192** | 1,748,873,060 |

2025 காலப்பகுதியில் ரூ. 6,700 மில்லியன் முகப்புப்பெறுமதிக் கொண்ட திறைசேரி முறிகள் முதிர்ச்சியடைந்தன.

இலங்கை அரசாங்கப் பிணையங்களின் முதலீடுகள் பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9இற்கிணங்க எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு கணிப்பீடுகளுக்கு உட்பட்டவை. இலங்கை மத்திய வங்கியின் எதிர்ப்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக் கொள்கையின் அடிப்படையில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், தொகையானது முக்கியத்துவமற்றதாக கருதப்பட்டதால், இச்சாதனங்கள் மீதான எதுவித எதிர்ப்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினையும் இலங்கை மத்திய வங்கி அங்கீகரிக்கவில்லை. எனினும், எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மதிப்பீடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதை மதிப்பிடுவதற்காக, வங்கியானது அதன் தீர்மானங்களையும் எடுகோள்களையும் தொடர்ந்தும் மீளாய்வு செய்யும்.

## 13 மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்

| 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **1,107,000** | 26,189,000 |
| மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் மீது பெறத்தக்க வட்டி | **251** | 5,922 |
| | **1,107,251** | 26,194,922 |

## 14 நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான பங்குரிமை முதலீடுகள்

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 114(2)(அ)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய இத்தகைய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் கீழ், ஏதேனும் கம்பனியில் வைப்புக்களை கையகப்படுத்துவதற்கும் பேணுவதற்கும் பொறுப்பளிக்கப்படுகின்றது. இக்கம்பனியானது வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறையில் ஏற்பட்ட மனித வளங்களினதும் தொழில்நுட்ப அபிவிருத்தியினதும் முன்னேற்றத்திற்காக அல்லது இலங்கையில் வர்த்தக வங்கிகளுக்கு மத்தியில் கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

### 14.1 முதலீட்டு நிலைமை

| கம்பனி | வியாபாரத்தின் தன்மை | 2025 | | 2024 | |
|---|---|---|---|---|---|
| | | பங்குகளின் எண்ணிக்கை ரூ. '000 | கொள்வனவு செலவு ரூ. '000 | பங்குகளின் எண்ணிக்கை ரூ. '000 | கொள்வனவு செலவு ரூ. '000 |
| லங்கா பே (பிறைவேட்)லிமிடெட் | தன்னியக்கத் தீர்ப்பனவு | **2,986,824** | **35,989** | 2,986,824 | 35,989 |
| லங்கா நிதியியல் பணிகள் பணியகம் லிமிடெட் | தன்னியக்க நிதிய மாற்றல் | **500,000** | **5,000** | 500,000 | 5,000 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை (கொடுகடன்) தகவல் பணியகம் | கொடுகடன் தகவல் வழங்கல் | **48,244** | **5,845** | 48,244 | 5,845 |
| | | | **46,834** | | 46,834 |

## 15 வங்கிகளுக்கான கடன்கள்

| | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| வங்கிகளுக்கான கடன்கள் | 15.1 | **5,561,004** | 9,704,369 |
| கழிக்க: வங்கிகளுக்கு வழங்கப்படும் கடன்களில் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு | 15.2 | **(142,514)** | (142,939) |
| | | **5,418,490** | 9,561,430 |

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

## 15.1 வங்கிகளுக்கான கடன்கள்

உற்பத்தித்திறன் நோக்கங்களுக்காக கடன்களுக்கு வசதியளிப்பதற்கு 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் ஏழாம் அத்தியாயத்தின் **IIIஅ** பிரிவின் நியதிகளில் இத்தகைய கடன்கள் வழங்கப்படுகின்றன. எவ்வாறாயினும், 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க புதிய மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டமாக்குதலுடன் புதிய ஏற்பாடுகளின் கீழ் அதாவது புதிய சட்டத்தின் 134ஆம் பிரிவின் சேமிப்புக்களின் கீழ் ஆளுகை செய்யப்படும்.

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் திட்டம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | 11,772 | 13,906 |
| *சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி* | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | – | 129 |
| *சௌபாக்கியா கடன் திட்டம்* | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | 4,797,376 | 8,302,336 |
| - ஏனையோர் | 340,644 | 813,371 |
| இ.ம.வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன்கள் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | 130,478 | 120,456 |
| - ஏனையோர் | 9,090 | 9,091 |
| உள்நாட்டு வேளாண்மை அபிவிருத்தி முன்னோடிக் கட்ட கடன் திட்டம் | | |
| - தொடர்பான தரப்பினர்கள் | 222,769 | 364,714 |
| - ஏனையோர் | 48,875 | 80,366 |
| | 5,561,004 | 9,704,369 |

*சௌபாக்யா* கடன் திட்டம் மற்றும் சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சி வசதி ஆகியவை, விவசாயம், கால்நடைகள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு மற்றும் இலங்கையில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியால் நிறுவப்பட்ட கடன் திட்டங்கள் என்பதுடன் நன்கு இணைக்கப்பட்ட பெறுமதிச் சங்கிலிகள் மூலம் பல்வேறு தொழில்நுட்ப உதவிகள் மற்றும் சிறந்த சந்தை வாய்ப்புகளுடன் சிறிய உழவர் சமூகத்திற்கு வசதியான நிதியியல் வசதிகளை வழங்குவதன் மூலம் இலங்கையில் விவசாயத் துறையின் அனைத்தையுமுள்ளடக்கிய அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கில், உள்நாட்டு விவசாய அபிவிருத்தி - முன்னோடி செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, மத்திய வங்கி சட்டத்தின் மூலம் விதிக்கப்பட்ட மீள்நிதியளிப்பு கட்டுப்பாடுகள் மற்றும் அனைத்து கடன்களும் மீட்கும் கட்டத்தில் உள்ளதன் காரணமாக இலங்கை மத்திய வங்கியால் புதிய கடன்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

உலக வங்கியின் நிதியியல் துறை பாதுகாப்புவலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ், பன்னாட்டு அபிவிருத்திக்கான சங்கமானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கு முதலீட்டு செயற்றிட்ட நிதியியிடலை வழங்கியதுடன், அத்தகைய நிதியிடல், துணை கடன் உடன்படிக்கையின் மூலம் இலங்கை வைப்புக் காப்புறுதித் நிதியம் எனும் பெயரில் இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. 2025 திசெம்பர் 31இலுள்ளவாறு, நிதியியல் துறை பாதுகாப்புவலை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி மொத்தமாக ஐ.அ.டொலர் 130.00 மில்லியன் கொண்ட தொகையை பெற்றுள்ளது. இந்நிதியமானது இலங்கை மத்திய வங்கியின் நொஸ்ரோ கணக்குகளில் தனியாக ஒதுக்கப்பட்ட நிலுவையாக பேணப்படுவதோடு, ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு கொள்கைகளுக்கு இணங்க, 2025.06.05ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெளிநாட்டு நாணய முதலீடுகளில் இலங்கை மத்திய வங்கி முதலீடு செய்து வருகின்றது. இம்முதலீடுகளுடன் தொடர்புடைய அனைத்து இடர்நேர்வுகளும் வெகுமதிகளும் இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு மாற்றத்தக்கவையாகும் என்பதுடன், இந்நிதியத்தை இலங்கை வைப்புக் காப்புறுதி திட்டம் அதன் பொறுப்பாணையை நிறைவேற்றுவதற்காக மாத்திரமே பயன்படுத்த முடியும்.

## 26 வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள்

இவை மத்திய வங்கிச் சட்டத்தின் 32ஆம் பிரிவின் கீழ் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படும் வைப்புக்களாக இருப்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள் ஆகியோரினால் நாணய விதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வங்கிகளினால் தொழிற்படுத்தப்படும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் கீழான கொடுப்பனவுகளை கௌரவிப்பதற்காக பேணப்படும் வைப்புக்களாகவும் காணப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், அரசாங்கத்தினால் முழுமையாக பிணையிடப்பட்ட வட்டியற்ற ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி, தீர்ப்பனவு முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டிற்கு வசதியளிப்பதற்காக ஒரு நாளுக்குள்ளேயான கொடுப்பனவுக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்கேற்பாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படுகிறது. இவ்வைப்புக்கள் கணக்கீட்டு வெளிப்படுத்துகைத் தேவைப்பாட்டு நோக்கங்களுக்காக தொடர்பான தரப்பினர் (அதாவது அரசிற்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் ஏனையவை) என வகைப்படுததப்பட்டிருப்பினும், இவ்வைப்புக்கள் தொடர்பான நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் பேணப்பட்டு வருகின்றதேயன்றி அவ்வரச நிறுவனங்களுடனான வங்கியின் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத் தொடர்புகளுக்காகவல்ல.

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர் | 170,032,185 | 132,888,919 |
| - ஏனையவை | 44,561,463 | 35,034,229 |
| | 214,593,648 | 167,923,148 |
| நிதியியல் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் | | |
| - தொடர்பான தரப்பினர் | 300 | 63 |
| - ஏனையவை | 13,106,139 | 13,023,742 |
| | 13,106,439 | 13,023,805 |
| வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களின் மொத்த வைப்புத்தொகைகள் | 227,700,087 | 180,946,953 |

## 27 அரச மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| அரசு வைப்புக்கள் | 3,128,354 | 1,465,924 |
| அரச முகவராண்மைகளும் நிதியங்களும் | 4,776,813 | 69,072 |
| | 7,905,167 | 1,534,996 |

அரச மற்றும்/அல்லது அரச முகவராண்மைகளின் அல்லது நிறுவனங்களின் வைப்புக்களுக்கான அலுவல்சார் வைப்பாளராக வங்கி இருப்பதனால் மத்திய வங்கிச் சட்டத்தின் 81ஆம் மற்றும் 82ஆம் பிரிவுகளின் நியதிகளில் இவ்வைப்புக்கள் பேணப்படுகின்றன.

## 28 மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| துணைநில் வைப்பு வசதிகள் | 176,322,112 | 194,337,033 |
| | 176,322,112 | 194,337,033 |

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை, நாணயக் கொள்கையை நடாத்துவதன் பாகமொன்றாக மத்திய வங்கிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் கீழ் பணச்சந்தையின் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. இம்மீள்கொள்வனவு உடன்படிக்கைகளானவை காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற திரவத்தன்மை முகாமைத்துவக் கொள்கைக்கு அமைவாக ஓரிரவு அல்லது தவணை முறையில் அரச பிணையங்களில் மாத்திரம் ஈடுபடுத்தப்படுகின்றன. 2025 திசெம்பர் 31இலுள்ளவாறு மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட இலங்கை அரசாங்கப் பிணையங்களின் எந்தவொரு வெளிநின்ற நிலுவையும் காணப்படவில்லை (2024 - ஏதுமில்லை).

துணைநில் வைப்பு வசதியும் பணச் சந்தையில் திரவத்தன்மையை ஒழுங்குபடுத்தும் பொருட்டு திறந்த சந்தை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வசதியானது பங்கேற்பாளர்களின் மிகைத் திரவத்தன்மையை ஓரிரவு அடிப்படையில் வைப்பு செய்வதற்கு கிடைக்கப்பெறக்கூடியதாகவுள்ளது. இது பிணையில்லாத வசதியாக இருப்பதுடன் ஓரிரவு அடிப்படையில் மட்டுமே வழங்கப்படுகின்றது.

## நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

### 29 சுற்றோட்டத்திலுள்ள நாணயம்

இலங்கையின் நாணயத்தை வெளியிடும் தனி அதிகாரம் வாய்ந்த நிறுவனமென்ற ரீதியில் மத்திய வங்கியானது தொடர்ச்சியாக சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் நாணயத்தை வெளியிடுகின்றது. வங்கியினால் வெளியிடப்பட்டு குறிப்பிட்ட அறிக்கையிடல் திகதிகளில் சுற்றோட்டத்தில் உள்ளவாறான நாணயப் பெறுமதிகள் பின்வருமாறு

| பெறுமதி | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| குத்திகள்: | | |
| சதம் 1 | **3,631** | 3,631 |
| சதம் 2 | **5,709** | 5,709 |
| சதம் 5 | **23,268** | 23,267 |
| சதம் 10 | **39,240** | 39,236 |
| சதம் 25 | **122,395** | 122,389 |
| சதம் 50 | **184,768** | 184,766 |
| ரூபா 1 | **1,093,694** | 1,084,398 |
| ரூபா 2 | **1,710,714** | 1,685,590 |
| ரூபா 5 | **5,655,074** | 5,586,164 |
| ரூபா 10 | **9,717,465** | 9,156,267 |
| ரூபா 20 | **149,841** | 149,841 |
| ஞாபகார்த்த நாணயக் குத்திகள் | **613,722** | 611,240 |
| | **19,319,521** | 18,652,498 |
| தாள்கள்: | | |
| ரூபா 1 | **4,981** | 4,981 |
| ரூபா 2 | **26,694** | 26,694 |
| ரூபா 5 | **37,190** | 37,190 |
| ரூபா 10 | **1,242,649** | 1,243,786 |
| ரூபா 20 | **9,677,062** | 8,603,637 |
| ரூபா 50 | **9,092,312** | 8,196,329 |
| ரூபா 100 | **34,160,079** | 30,923,216 |
| ரூபா 200 | **126,095** | 125,946 |
| ரூபா 500 | **68,407,962** | 63,800,400 |
| ரூபா 1,000 | **177,377,960** | 173,510,525 |
| ரூபா 2,000 | **13,575,319** | 2,284,891 |
| ரூபா 5,000 | **1,235,891,042** | 1,051,312,790 |
| | **1,549,619,345** | 1,340,070,385 |
| சுற்றோட்டத்திலுள்ள மொத்த நாணயங்கள் | **1,568,938,866** | 1,358,722,883 |

## 30 ஏனைய செலுத்தத்தக்கவை

| | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| ஏற்பாடுகளும் கட்டணங்களும் | | **4,194,161** | 3,437,174 |
| கைவிடப்பட்ட சொத்துக்களுக்கெதிராகப் பெறப்பட்ட பொறுப்புக்களின் மாற்றல்கள் | 30.1 | **27,635,283** | 24,207,097 |
| ஊழியர் நன்மைத் திட்டங்களின் நிலுவைகள் | 30.2 | **36,685** | 18,308 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | | **2,655,312** | 2,508,972 |
| | | **34,521,441** | 30,171,551 |

**30.1** கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பான செலுத்தத்தக்கவை 2009ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் கைவிடப்பட்ட ஆதனங்களை அடையாளம் காணல், அறிக்கையிடல், மாற்றல் செய்தல் மற்றும் பேணுதல் தொடர்பான வழிகாட்டலின் கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட கைவிடப்பட்ட ஆதனங்கள் தொடர்பானவையாக இருந்தன. கைவிடப்பட்ட சொத்துக்கள் மீது ஏதேனும் மேலதிகக் கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் வங்கிகள் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வைப்புக்களை வட்டியுடன் செலுத்துவதற்குப் பொறுப்புடையனவாகும். எனவே, சேகரிக்கப்பட்ட மொத்த வைப்புக்கள் நிறையேற்றப்பட்ட சராசரி திறைசேரி உண்டியல் வீதங்களில் கணிக்கப்பட்ட வட்டி வீதத்துடன் சேர்த்து வங்கியின் பொறுப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 30.2 ஊழியர் நன்மைத் திட்டங்களிலுள்ள நிலுவைகள்

வங்கியானது பொதுவான அலுவல்களின் ஒரு பகுதியாக அதன் ஊழியர் நன்மைத் திட்டங்களிற்கு நடைமுறைக் கணக்கு வசதிகளினை வழங்குகின்றது. தனியாக நிருவகிக்கப்படுகின்ற வங்கியின் ஊழியர் நன்மைத்திட்டங்களின் நடைமுறைக் கணக்கு மற்றும் உள்ளக நிறுவகக்கணக்குகளில் வரவாக இருக்கும் தொகைகள் பின்வருமாறு:

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| இ.ம.வ சேம நிதியம், ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் விதவைகள், விதுரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டம் என்பவற்றின் நிலுவைகள் | **36,685** | 18,308 |
| | **36,685** | 18,308 |

## 31 பிற்போடப்பட்ட கொடைகள்

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறு | **7,168** | 2,475 |
| ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **9,112** | 7,952 |
| ஆண்டு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டவை | **(1,366)** | (1,546) |
| ஆண்டு காலப்பகுதியில் அடையாளங்காணப்படாதவை | **–** | (1,685) |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்டவை | **(1)** | (28) |
| திசெம்பர் 1இல் உள்ளவாறு | **14,913** | 7,168 |

பிற்போடப்பட்ட கொடைகள் அத்தகைய சொத்துக்களின் தேய்மானக் கொள்கையுடன் பொருந்தத்தக்க விதத்தில் இக்காலப்பகுதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டன. இது, எவ்வித விலையுமில்லாது வங்கியால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களின் சீர்மதிப்புப் பெறுமதி பிற்போடப்பட்ட கொடைக் கணக்கொன்றில் வரவு வைக்கப்படுவதுடன், தொடர்பான சொத்துக்களின் தேய்மானக் கொள்கைகளின்படி அச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஏனைய வருமானமாகக் கொள்ளப்படுகிறது

பயிற்சிகளுக்கென கிடைக்கப்பெற்ற மானியங்களையும் தென் கிழக்காசிய மத்திய வங்கிகளின் நம்பிக்கை நிதிய உதவுத்தொகையின் கீழ் கிடைக்கப்பெற்ற மானியங்களையும் பிற்போடப்பட்ட கொடைகள் உள்ளடக்குகின்றன.

2025 ஆண்டு காலப்பகுதியில், யொன்செய் பல்கலைக்கழக தொழிற்துறை அறக்கட்டளையிலிருந்து பயிற்சிக்கான மானியமொன்றாக ரூ.0.7 மில்லியன் கொண்ட மானியமும் தென் கிழக்காசிய மத்திய வங்கிகளின் நம்பிக்கை நிதிய உதவுத்தொகையின் கீழ் கிடைக்கப்பெற்ற ரூ.8.4 மில்லியன் கொண்ட மற்றுமொரு கொடையும் கிடைக்கப்பெற்றன. மேலும், 2025 ஆண்டு காலப்பகுதியில், பயிற்சிகளுக்கென கிடைக்கப்பெற்ற மானியங்களிலிருந்து ரூ.1.4 மில்லியன் பயன்படுத்தப்பட்டுள்ளது (2024இல் ரூ.1.5 மில்லியன்).

மேலும், எஸ்.ஏ.பீ.பீ. கடன் திட்டங்களுக்கான புதிய தானியக்க முறைமையை நடைமுறைப்படுத்துவதில் மென்பொருள் அபிவிருத்தி செலவில் 70 சதவீத மானியமாக எஸ்.ஏ.பீ.பீ. இன் திட்ட அபிவிருத்திப் பிரிவிலிருந்து இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியமானது 2024ஆம் ஆண்டில் (ரூ.1.69 மில்லியன்) அங்கீகரிக்கப்பட்டது ஏனெனில் பிரதேச அபிவிருத்தி திணைக்களம் மத்திய வங்கிச் சட்டத்தின் இன்படி புதிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது என்பதால் இந்த தானியக்கி முறைமையின் செயன்முறை நிறுத்தப்பட்டது.

## 32 நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும்

நானாவிதப் பொறுப்புக்களும் அட்டுறுக்களும் செலுத்த வேண்டிய குத்தகைகள், கொடுகடன் உத்தரவாதம் மீது பிற்போடப்பட்ட வருமானம், கணக்குகளில் செலுத்தத்தக்க நிலுவைகள், ஒப்பந்த ரீதியான பிடித்துவைத்தல்கள் மற்றும் மீளளிக்கத்தக்க விலைக்கோரல் வைப்புக்களாக எடுக்கப்பட்ட வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

| | குறிப்பு | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|---|
| குத்தகைப் பொறுப்பு | 32.1.4 | **24,397** | 20,303 |
| கொடுகடன் உத்தரவாதங்களுக்கான ஏற்பாடு | 32.2 | **27,773** | 18,941 |
| ஏனைய பொறுப்புக்கள் | | **473,260** | 1,011,895 |
| | | **525,430** | 1,051,139 |

## 32.1 குத்தகைகள்

வங்கியானது 2 இலிருந்து 30 வரையான ஆண்டு கால குத்தகைக் காலப்பகுதிகளைக் கொண்ட காணி மற்றும் கட்டடங்களை குத்தகைக்கு எடுத்திருப்பதுடன் இக்குத்தகைகளில் சில அத்திகதிக்குப் பின்னர் புதுப்பிக்கக்கூடிய தெரிவைத் கொண்டிருக்கின்றன. சில குத்தகைகளைப் பொறுத்தவரையில், சந்தை வாடகைகளைப் பிரதிபலிப்பதற்காக ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கொரு தடவை கொடுப்பனவுகள் மீள இணங்கப்படுகின்றன. வங்கி குத்தகையாளராக இருக்கும் குத்தகை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது

### 32.1.1 சொத்துப் பாவனை உரிமை

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தில் காட்டப்பட்டுள்ள குத்தகைக் காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பான சொத்துப் பாவனை உரிமை (குறிப்பு 21).

### 32.1.2 வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| குத்தகைப் பொறுப்பு மீதான வட்டி | **1,987** | 2,530 |
| சொத்துப் பாவனை உரிமையின் பதிவழிப்பு | **4,676** | 6,016 |

### 32.1.3 காசுப்பாய்ச்சல் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொகை

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| குத்தகைகளுக்கான மொத்தக் காசு வெளிப்பாய்ச்சல் | **4,899** | 6,829 |

### 32.1.4 குத்தகைப் பொறுப்புக்கள்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| சனவரி 01இல் உள்ளவாறான நிலுவை | **20,303** | 24,602 |
| ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கப்பட்டவை | **7,006** | – |
| ஆண்டு காலப்பகுதியிலான வட்டிக் கட்டணங்கள் | **1,987** | 2,530 |
| ஆண்டு காலப்பகுதியிலான குத்தகைக் கொடுப்பனவுகள் | **(4,899)** | (6,829) |
| திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை | **24,397** | 20,303 |

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

### 32.1.5 குத்தகைப் பொறுப்புக்களின் முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| நடைமுறையல்லாதவை | 19,252 | 15,227 |
| நடைமுறை | 5,145 | 5,076 |
| திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை | 24,397 | 20,303 |

### 32.1.6 ஒப்பந்த ரீதியான கழிவிடப்படாத காசுப்பாய்ச்சலை அடிப்படையாகக் கொண்ட முதிர்ச்சிப் பகுப்பாய்வு

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| ஒரு ஆண்டிற்குக் குறைவானவை | 4,901 | 7,012 |
| ஒன்றிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டவை | 9,443 | 7,020 |
| ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டவை | 33,615 | 33,615 |
| மொத்தக் கழிவிடப்படாத குத்தகைப் பொறுப்புக்கள் | 47,959 | 47,647 |

## 32.2 கொடுகடன் உத்தரவாதங்களுக்கான ஏற்பாடு

| | குறிப்பு | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| கொடுகடன் உத்தரவாதங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு | 32.2.1 | 27,774 | 18,941 |
| திசெம்பர் 31இலுள்ளவாறான நிலுவை | | 27,774 | 18,941 |

### 32.2.1 கொடுகடன் உத்தரவாதங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களிலான அசைவு

| | 2025 நிலை 1 ரூ. '000 | 2024 நிலை 1 ரூ. '000 |
|---|---|---|
| சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | 18,941 | 31,293 |
| ஆண்டு காலப்பகுதியின் கட்டணம்/(திரும்பல்) | 8,833 | (12,352) |
| திசெம்பர் 31 இலுள்ளவாறான நிலுவை | 27,774 | 18,941 |

## 33 பங்குரிமை மூலதனம்

### பங்குரிமை மூலதன இருப்பின் தன்மை

### 33.1 மூலதன நிதியங்கள்

பங்களிப்பு மூலதனம் - நாணய விதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின்படி மூலதனக் கணக்கு, வங்கியின் மூலதனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. 2014ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் (திருத்தப்பட்டது) 6ஆம் பிரிவின்படி, வங்கியின் மூலதனம் ரூ.50.00 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. இதன்படி, வங்கி, 2014 செத்தெம்பரில் நிதி அமைச்சரின் சம்மதத்துடன் அதன் ஒதுக்கங்களை மூலதனமாக்கியதன் மூலம் மூலதனத்தினை ரூ. 50.00 பில்லியனுக்கு அதிகரித்தது. மத்திய வங்கிச்சட்டத்தின் பிரிவு 4இன் ஏற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் மூலதனத்திற்கு ஏற்புடையதாகின்றது.

### 33.2 பொது ஒதுக்கம்

பொது ஒதுக்கம் என்பது ஆளுகைச் சபையின் ஒப்புதலின் மூலம் பிடித்துவைக்கப்பட்ட வருவாயில் இருந்து ஒதுக்கப்பட்ட தொகைகளை உள்ளடக்கியது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 94 (2)இன் படி, பொது ஒதுக்க கணக்கு எதிர்மறையாக இருந்தால், பிடித்துவைக்கப்பட்ட வருவாய்க்கு மாற்றும் நோக்கங்களுக்காகத் தவிர, வேறு எந்த நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படமாட்டாது.

### 33.3 நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கு

இவ்வொதுக்கமானது ப.க.நி 16 இன்படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின்படி மீள்மதிப்பீட்டு மிகையினால் உருவாக்கப்பட்டுள்ளது.

### 33.4 பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு

பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு என்பது, மத்திய வங்கிச் சட்டத்தின் 94(3) மற்றும் 95ஆம் பிரிவிற்கமைவாக நிறுவப்பட்டுள்ளதொரு ஒதுக்காகும். 95(ஆ) பிரிவின்படி, செலாவணி வீதங்களிலிருந்து தேறல்செய்யப்படாத மீள்மதிப்பீட்டு இழப்புகள், அத்தகைய மீள்மதிப்பீட்டு இருப்பு கணக்கில் பூஜ்ஜிய இருப்பு இருக்கும் வரை, தொடர்புடைய தேறல்செய்யப்படாத மீள்மதிப்பீட்டு இருப்பு கணக்கிற்கு மாற்றப்படும், அதன் பிறகு இழப்புகள் பிடித்துவைக்கப்பட்ட வருவாய் மூலம் ஈடுசெய்யப்படும்.

### 33.5 சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு

வெளிநாட்டு நிதியியல் சொத்துக்களின் சந்தைப்படியான விலைகளின் மோசமான அசைவுகளிற்கு வழிவகுக்கின்ற பன்னாட்டுச் சந்தைகளின் தளம்பல்களின் ஏதேனும் மோசமான தாக்கத்தினை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டுச் சொத்துக்களை சந்தைப்படுத்தலிலிருந்து கிடைக்கப்பெறும் விலை மதிப்பீட்டு இலாபங்களை மாற்றல்செய்வதற்காக சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு ஏற்படுத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டவுடன், பிரிவு 94 மற்றும் 95 போன்றன சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கிற்கு ஏற்புடையதாகின்றன.

### 33.6 ஏனைய அனைத்தையு-முள்ளடக்கிய வருமானத்தினூ டான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்பு மிகை/(நட்டம்):

ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியாக குறித்துரைக்கப்பட்ட பிணையங்களின் சீர்மதிப்பு மதிப்பீடு மீதான தேறல்செய்யப்படாத இலாபங்களும் இழப்புக்களும் இவ்வொதுக்கிற்கு மாற்றப்படுகின்றன.

### 33.7 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கடன்கரைப்பு நிதியம்

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையைப் பயன்படுத்துவதற்காக பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற கட்டணங்களைக் கொண்டு இந்நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 33.8 ஓய்வூதிய நிதிய ஒதுக்கு

வெளியக இடர்நேர்வுகளின் காரணமாக வங்கியின் வருமானம் ஈட்டும் ஆற்றலில் ஏற்படும் பாதிப்பினால் ஓய்வூதிய நிதியத்தில் ஏதேனும் பற்றாக்குறை உருவாகுமாயின், அதனை ஈடுசெய்யும் பொருட்டு இது உருவாக்கப்பட்டது.

### 33.9 தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களினை நிதியிடும் நோக்கத்திற்கான ஒதுக்கு

(2016.12.16ஆம் திகதியிடப்பட்ட எம்பி-எப்-39-20-2016ஆம் இலக்க நாணயச் சபையின் தீர்மானம்) ஆயுட்கால நட்டங்கள் மற்றும் நன்மைச் செலவுகள் காரணமாக பங்குரிமை மூலதனத்திற்கு எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கும் போது அதனை ஈடுசெய்ய தேவையான அளவு பகிரக்கூடிய இலாபம் இருக்குமெனில் கொடுக்கப்பட்ட ஆண்டின் (2016ஆம் ஆண்டிலிருந்து) உண்மையான நன்மைச் செலவுகளின் 50 சதவீதத்தினை குறித்த ஒதுக்கத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டது.

### 33.10 ஏனைய ஒதுக்கு

ஏனைய ஒதுக்குகளில் நடுத்தர மற்றும் நீண்ட கால கொடுகடன் ஒதுக்கு ரூ. 10.00 பில்லியன் (2024 - ரூ.10.00 பில்லியன்) ஆகும்.

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

ஒதுக்குகளின் அசைவுகள் பின்வருமாறு:

| | பொது ஒதுக்கு | நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கு | பன்னாட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கு |
|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 2025 சனவரி 01இல் உள்ளவாறு | – | 16,655,356 | – |
| அ.நே.மொ.தீ. கடன்கரைப்பு நிதியத்திற்கு மாற்றல் | – | – | – |
| பொது ஒதுக்கத்திற்கு மாற்றல் | 57,789,288 | – | – |
| தேறிய வெளிநாட்டுச் செலாவணி மீள்மதிப்பீட்டு இலாபம்/(நட்டத்தினை) மாற்றல் | – | – | 22,690,918 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | – | – | – |
| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு நிதியங்களை மாற்றல் | – | – | – |
| சந்தை மதிப்பீட்டு ஒதுக்கு மீதான அதிகரிக்கின்ற சீராக்கம் - உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள்/முறிகள் | – | – | – |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் முதலீடுகள் மீதான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் நட்டங்கள் | | – | – |
| 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை | 57,789,288 | 16,655,356 | 22,690,918 |

## 34 இலாபப் பகிர்ந்தளிப்பு

i. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 94 மற்றும் 95ஆம் பிரிவின் நியதிகளின்படி, பகிர்ந்தளிப்பதற்காக கிடைக்கக்கூடிய சீராக்கப்பட்ட இலாபத்தினைப் பெறுவதற்கு ஆண்டுக்கான தேறிய இலாபத்திற்கு/(நட்டத்திற்கு) பின்வரும் சீராக்கங்கள் செய்யப்பட்டன.

(அ) மத்திய வங்கியானது பொது ஒதுக்குக் கணக்கொன்றை உருவாக்கிப் பேணுதல் வேண்டும்.

(ஆ) பொது ஒதுக்குக் கணக்கானது எதிர்மறையாக மாறுமாயின், பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றும் நோக்கங்களைத் தவிர வேறு எந்த நோக்கங்களுக்காவும் இது பயன்படுத்தப்படமாட்டாது

(இ) வரிக்கு பின்னரான தேறிய இலாபங்களிலிருந்து விலை மீள்மதிப்பிடல்களிலிருந்து எழுகின்ற தேறல்செய்யப்படாத மீள்மதிப்புப் பெறுமதிகளையும் செலாவணி வீதங்களிலிருந்து எழுகின்ற தேறல் செய்யப்படாத இலாபங்களையும் இழப்புக்களையும் கழிப்பதன் மூலமும் அத்துடன் தொடர்புடைய மீள்மதிப்பு ஒதுக்கு கணக்குகளிற்குச் சமமான தொகையை ஒதுக்கீடு செய்வதன் மூலமும் பகிர்ந்தளிப்புக்கு கிடைப்பனவாகவுள்ள வருவாய்கள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ii. மேலும், கணக்கீட்டு நியமங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினால் தேவைப்படுத்தப்பட்டவாறு வேறு ஏதேனும் சீராக்கங்கள் பகிரத்தக்க இலாபத்தினைப் பெறும் பொருட்டு சீராக்கப்பட்டன.

மேற்கண்ட சரிசெய்தல்களை அடிப்படையாகக் கொண்டு, 2025 திசெம்பர் 31அன்று முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்ந்தளிப்பதற்கு கிடைக்கப்பெறும் சீராக்கப்பட்ட இலாபம் பின்வருமாறு,

| விடயம் | ரூ. '000 | ரூ. '000 |
|---|---|---|
| பகுதி I - பகிர்ந்தளிக்கத்தக இலாபத்தின்/(நட்டம்) கணிப்பீடு | | |
| 2025.01.01 அன்று உள்ளவாறான சீராக்கப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட வருவாய் ஆரம்ப நிலுவைகள்* | | (57,561,439) |
| கூட்டுக: 2025ஆம் ஆண்டிற்கான கணக்கீட்டு இலாபம் | | 193,147,076 |
| 2025ஆம் ஆண்டிற்கான சீராக்கப்பட்ட கணக்கீட்டு இலாபம் | | 135,585,637 |
| கழிக்குக: | | |
| (அ) இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு ரூ95.2 (அ) இன் படி சர்வதேச மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கிற்கான பரிமாற்ற ஆதாயத்தை மாற்றுதல். | (22,690,918) | |
| (ஆ) இலங்கை மத்திய சட்டத்தின் பிரிவு 95 (2) (அ) இன் படி, வெளிநாட்டு சொத்துக்களின் மீதான "சந்தைக்குக் குறிக்கப்பட்ட" ஆதாயத்தை சந்தை மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றல் | (8,888,100) | |
| (இ) உள்ளக நிதியங்களின் வட்டி வருமானத்தை அந்தந்த நிதியங்களுக்கு மாற்றுதல் | (970,981) | (32,549,999) |
| பகிர்ந்தளிப்பிற்காக கிடைக்கும் சீர்செய்யப்பட்ட இலாபம்/(நட்டம்) | | 103,035,639 |

*இலங்கை மத்திய சட்டத்தின் 94(2) ஆம் பிரிவிற்கமைவாக பொது ஒதுக்கிலிருந்து கிடைக்கப்பெறும் சமமான தொகையொன்றை மாற்றுவதன் மூலம் இப்பாதகமான நிலுவை அறவீடுசெய்யப்பட்டுள்ளது.

| சந்தை மீள்மதிப்பீட்டு ஒதுக்கு ரூ. '000 | ஏனைய அனைத்தையு-முள்ளடக்கிய வருமானத்-தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் மீதான தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/(நட்டம்) ரூ. '000 | அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கடன்கரைப்பு நிதியம் ரூ. '000 | ஓய்வூதிய நிதிய ஒதுக்கு ரூ. '000 | தொழிலுக்குப் பிந்தைய நன்மைத் திட்டங்களின் நிதியிடல் நோக்கங்களுக்கான ஒதுக்கம் ரூ. '000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| **170,422,860** | **73,336,859** | **4,900,206** | **2,000,000** | **2,554,624** | **10,000,000** | **279,869,905** |
| – | – | 969,804 | – | – | – | 969,804 |
| – | – | – | – | – | – | 57,789,288 |
| – | – | – | – | – | – | 22,690,918 |
| – | 3,515,239 | – | – | – | – | 3,515,239 |
| 45,092,496 | – | – | – | – | – | 45,092,496 |
| – | 84,729,446 | – | – | – | – | 84,729,446 |
| – | (395,961) | – | – | – | – | (395,961) |
| **215,515,356** | **161,185,583** | **5,870,010** | **2,000,000** | **2,554,624** | **10,000,000** | **494,261,135** |

iii. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 96ஆம் பிரிவின் பிரகாரம், திரட்டு நிதியத்தினால் வரவுவைக்கப்படவேண்டிய கிடைக்கப்பெறும் தொகையைப் பெறுவதற்கு பகிர்ந்தளிப்பிற்காக கிடைக்கக்கூடிய சீராக்கப்பட்ட இலாபத்திற்கு பின்வரும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ) ஆளும் சபை பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய நோக்கங்களுக்கான சிறப்பு ஒதுக்குகளை மத்திய வங்கி உருவாக்கலாம்.

ஆ) முன்னைய ஏற்பாட்டிற்கமைவாக, சிறப்பு ஒதுக்குகளுக்கு ஒதுக்கீடுசெய்யப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள பகிர்ந்தளிக்கத்தக்க வருவாய்களின் நூறு சதவீதத்திற்கு சமமான தொகையானது, செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் பொது ஒதுக்கின் தொகை மத்திய வங்கியின் மொத்த நாணய பொறுப்புக்களின் ஆறு சதவீதமாக இருக்கும் வரை பொது ஒதுக்கு கணக்கில் வரவு வைக்கப்படும்.

இ) அமைச்சருடனான ஆலோசனையின் போது ஆளும் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு, முன்னைய ஏற்பாடுகளுடன் இணக்கமடைந்த பின்னர் ஏதேனும் மீதமுள்ள பகிர்ந்தளிக்கத்தக்க வருவாய்களும் ஒன்றில் நிதியியல் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு மத்திய வங்கி செலுத்தவேண்டிய ஏதேனும் வெளிநின்ற அரசாங்க கடப்பாடுகளையும் கலைப்பதில் பிரயோகிக்க வேண்டும் அல்லது திரண்ட நிதியத்திற்கு செலுத்தப்பட்டு வரவுவைக்க வேண்டும்.

| விடயம் | ரூ. '000 | ரூ. '000 |
|---|---|---|
| **பகுதி II - பகிர்ந்தளிக்கத்தக இலாபம்/(நட்டம்** | | |
| பகிர்ந்தளிப்பிற்காக கிடைக்கும் சீர்செய்யப்பட்ட இலாபம் (பகுதி I இலிருந்து) | | 103,035,639 |
| **கழிக்குக: ஒதுக்குகளுக்கான மாற்றல் (இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கமைவாக)** | | |
| (அ) இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 96 (1) (அ)ஆம் பிரிவிற்கமைவாக உண்மையான நன்மைச் செலவுகளின் 50 சதவீதத்திற்கு சமமான தொகை குறிப்பிட்ட ஒதுக்கிற்கு மாற்றப்பட்டது | (261,165) | |
| (ஆ) இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 96 (1) (ஆ)ஆம் பிரிவிற்கமைவாக 6 சதவீத விகிதத்தைப் பேணுவதற்கு பொது ஒதுக்குகளுக்கு மாற்றப்பட்டது | (57,789,288) | (58,050,453) |
| திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட வேண்டிய கிடைக்கப்பெறும் தொகை | | 44,985,186 |
| கழிக்குக: 2025.12.31 அன்றிலுள்ளவாறு வெளிநின்ற இலங்கை அரசாங்க கடப்பாடுகளின் அறவீடு (இலங்கை ரூபாவில் பெறத்தக்கவைகள்) | | (3,035,612) |
| திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டிய கிடைக்கத்தாகவுள்ள நிலுவைத்தொகை | | 41,949,574 |

பகிர்ந்தளிக்கத்தக்க இலாபத்திலிருந்த அறவிடப்பட்ட ரூ.3.04 பில்லியன் இலங்கை அரசாங்க கடப்பாட்டிற்கு மேலதிகமாக, இலங்கை அரசாங்கத்தின் சார்பாக இலங்கை மத்திய வங்கியினால் செலுத்தப்படும் ஐ.அ.டொலர் 4,306, 167.73, யூரோ 4,835.87 மற்றும் ஸ்ரேலிங் பவுண் 10,821.00 கொண்ட மேலதிக வெளிநின்ற தொகைகள் அமைச்சரவை அனுமதிக்கமைவாக ஐ.அ.டொலரில் அறவிடப்பட வேண்டும்.

## 35 நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| காசு மற்றும் குறுங்கால வைப்புக்கள் | 21,948,971 | 24,147,419 |
| நிதியியல் சொத்துக்கள் | 29,733,995 | 21,787,768 |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம் | 51,682,966 | 45,935,187 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம்** | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 194,705,933 | 203,462,124 |
| மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 472,902 | 9,801,653 |
| ஏனைய கடன்களும் முற்பணங்களும் | 1,282,097 | 1,633,517 |
| வங்கிகளுக்கான திரவத்தன்மை ஆதரவு வசதி மீதான வட்டி வருமானம் | – | 1,593,933 |
| ஏனைய சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம் | 3,348,039 | 2,911,333 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம் | 199,808,971 | 219,402,560 |
| நிதியியல் சொத்துக்களிலிருந்தான மொத்த வட்டி வருமானம் | 251,491,937 | 265,337,747 |

2025 காலப்பகுதியில் பயனுறு வட்டி முறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்ட மொத்த வட்டி வருமானம் ரூ.224,293.25 மில்லியனாக இருந்தது (2024 - ரூ.225,094.25 மில்லியன்).

## 36 வெளிநாட்டு ஒதுக்கு முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் சந்தை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)

### 36.1 வெளிநாட்டு ஒதுக்கு முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| **தேறல் செய்யப்படாத விலை மறுமதிப்பீட்டு இலாபம்/(நட்டம்)** | | |
| தங்கம் | 8,636,539 | 2,270,947 |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | – | 12,378,717 |
| வெளிநாட்டுப் பிணையங்கள் | 251,561 | – |
| | 8,888,100 | 14,649,664 |
| **தேறல் செய்யப்பட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/(நட்டம்)** | | |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | 2,744,559 | 8,248,687 |
| வெளிநாட்டுப் பிணையங்கள் | 2,272,553 | 249,166 |
| | 5,017,112 | 8,497,853 |
| வெளிநாட்டு ஒதுக்கு முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான மொத்த இலாபம்/(நட்டம்) | 13,905,212 | 23,147,517 |

## 36.2 சந்தை செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான இலாபம்/(நட்டம்)

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| **தேறல் செய்யப்படாத விலை மறுமதிப்பீட்டிலிருந்தான இலாபம்/(நட்டம்)** | | |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | (11,597,766) | 21,554,732 |
| | (11,597,766) | 21,554,732 |
| **தேறல் செய்யப்பட்ட விலை மாற்றங்களிலிருந்தான இலாபம்/(நட்டம்)** | | |
| வெளிநாட்டுச் செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் | (8,059,661) | 19,913,032 |
| | (8,059,661) | 19,913,032 |
| சந்தை செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மொத்த இலாபம்/(நட்டம்) | (19,657,427) | 41,467,764 |

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| **நாணய பரஸ்பர பரிமாற்றல்கள் மற்றும் வெளிநாட்டு செலாவணி அசைவுகள்** | | |
| ஆரம்ப தேறிய சொத்துக்கள்/(பொறுப்புக்கள்) நிலைமை | (9,239,225) | (43,172,674) |
| இறுதி தேறிய சொத்துக்கள்/(பொறுப்புக்கள்) நிலைமை | (28,634,409) | (9,239,225) |
| 2025 ஆம் ஆண்டுகலைப்பகுதியில் தேறல் செய்யப்பட்ட இலாபங்களை சரிசெய்வதற்காக முதிச்சியடைந்த ஜப்பான் யென் வெளிநாட்டு வெலாவணி மற்றும் நாணைய பரஸயபர பரிமாற்றல்களின் தேறல் செய்யப்படாத இலாபத்திள் திரும்பல்கள் | 7,797,418 | – |
| வெளிநாட்டு செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றல்களின் தேறல் செய்யப்படாத விலை மீள்மதிப்புக்களிலிருந்தான இலாபம்/(நட்டம்) | (11,597,766) | 33,933,449 |

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| **வெளிநாட்டு செலாவணி மற்றும் நாணய பரஸ்பர பரிமாற்றங்களின் தேறிய இறுதிச் சொத்துக்கள் (பொறுப்புகளின்) அமைவிட அசைவுகள்** | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் - சொத்துக்கள் | 16,039 | 27,957,163 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் - பொறுப்புக்கள் | 28,650,448 | 37,196,388 |
| தேறிய சொத்து/(பொறுப்புக்கள்) நிலைமை | (28,634,409) | (9,239,225) |

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

## 37 நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்** | | |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான பொறுப்புக்கள் | **18,834,012** | 25,629,871 |
| ஏனைய வெளிநாட்டு செலுத்தத்தக்கவை | **26,295,417** | 55,793,114 |
| வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம் | **45,129,429** | 81,422,985 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம்** | | |
| துணைநில் வைப்பு வசதி | **10,383,902** | 12,025,820 |
| கைவிடப்பட்ட ஆதனம் | **2,073,460** | 2,458,313 |
| நானாவித வட்டிச் செலவினங்கள் | **1,068,361** | 609,521 |
| உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம் | **13,525,723** | 15,093,654 |
| நிதியியல் பொறுப்புக்கள் மீதான மொத்த வட்டிச் செலவினம் | **58,655,152** | 96,516,639 |

## 38 நிதியியல் சொத்துக்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் திரும்பல்/(கட்டணம்)

| | குறிப்பு | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள் | | | |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவை | 8.2 | **754,723** | (342,731) |
| பன்னாட்டு நாணய நிதியம் தொடர்பான சொத்துக்கள் | 11.4 | **9** | (2) |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | 9.2 | **395,960** | (1,391,590) |
| வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் திரும்பல்/(கட்டணம்) | | **1,150,692** | (1,734,322) |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| பதிவழிக்கப்பட்ட செலவிலான நிதியியல் சொத்துக்கள் | | | |
| வங்கிகளுக்கான கடன்கள் | 15.2 | **425** | (7,468) |
| உள்ளக நிதியங்களின் முதலீடுகள் | 17.1 & 17.2 | **(62)** | (69) |
| கொடுகடன் உத்தரவாத ஏற்பாடு | 32.2 | **(8,833)** | 12,352 |
| உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கட்டணம | | **(8,470)** | 4,815 |
| நிதியியல் சொத்துக்கள் மீதான மொத்த எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பின் திரும்பல் (கட்டணம்) | | **1,142,222** | (1,729,507) |

## 39 ஏனைய வருமானம்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| பங்கிலாப வருமானம் - தொடர்பான தரப்பினர் | **197,535** | 189,465 |
| கொடைகளிலிருந்து பெறப்படும் சொத்துக்களின் பதிவழிப்பு | **1** | 28 |
| நிதியியல் நிறுவனங்களின் உரிமக் கட்டணம் | **756,900** | 749,950 |
| வாடகை வருமானம் | **223,023** | 188,744 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைப் பங்கேற்பாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் | **94,180** | 90,008 |
| நானாவித வருமானம் | **189,030** | 238,833 |
| மொத்த ஏனைய வருமானம் | **1,460,669** | 1,457,028 |

### 39.1 ஏனைய செலவுகள்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| உள்நோக்கிய வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் தொகை | – | 387,009 |
| | – | 387,009 |

முறையான நிதிய பரிமாற்ற வழிகள் மூலம் நாட்டிற்கு அதிகளவிலான பணியாளர்கள் பணம் அனுப்புவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றத்தின் மூலம் ஏற்படும் பரிவர்த்தனைச் செலவை திருப்பிச் செலுத்துவதன் மூலம் வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு ஊக்குவிப்புத்தொகையை வழங்குவதற்கு தீர்மானித்தது. இதற்கமைவாக, 2024ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினால் அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் திருப்பிச் செலுத்தப்பட்ட மொத்தப் கொடுக்கல்வாங்கல் செலவு ஏனைய செலவின் கீழ் வெளியிடப்படுகிறது.

## 40 ஆளணிச் செலவினங்கள்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஏனைய ஊழியர் செலவு | 11,051,292 | 10,517,344 |
| நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டச் செலவுகள் | 2,919,517 | 4,790,845 |
| தொழிலுக்குப் பின்னரான நிர்ணயிக்கப்பட்ட நன்மைத் திட்டச் செலவு | (1,231,639) | (91,918) |
| மொத்த ஆளனிச் செலவுகள் | 12,739,170 | 15,216,271 |

## 41 நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| திருத்தங்களும் பேணல்களும் | 1,965,469 | 1,786,920 |
| ரொயிட்டர், புளும்பேர்க், சுவிப்ற் போன்றவற்றுக்கான தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 470,911 | 268,006 |
| பயணம் | 99,055 | 64,366 |
| வாடகைச் செலவுகள் | 56 | 236 |
| அச்சிடல் | 37,904 | 29,363 |
| சட்ட ரீதியான கணக்காய்வுக் கட்டணம் | 10,856 | 9,499 |
| ஆளும் சபை/துணைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கான ஊதியம் | 15,764 | 12,250 |
| விளம்பரச் செலவு | 105,043 | 56,142 |
| ஆலோசனை, தொடர்பூட்டல், மதியுரை மற்றும் தொழில்சார் நிபுணத்துவக் கட்டணங்கள | 151,254 | 205,434 |
| குத்தகைப் பொறுப்புக்கள் மீதான வட்டிச் செலவினம் | 1,987 | 2,530 |
| நானாவிதச் செலவினம் | 594,003 | 441,385 |
| மொத்த நிர்வாக மற்றும் ஏனைய செலவினங்கள் | 3,452,302 | 2,876,131 |

## நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

### 42 வரி

2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 9(1)ஆம் பிரிவு மற்றும் அதனைத் தொடர்ந்து திருத்திய 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் மற்றும் 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் (திருத்தச்) சட்டம், 2023ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க உண்ணாட்டாரசிறை (திருத்தச்) சட்டம் மற்றும் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்திற்கமைவாக வங்கியானது வருமானவரி செலுத்தப் பொறுப்புடையதல்ல.

2025 ஆம் ஆண்டில் வங்கி எந்த வரியும் செலுத்தவில்லை (2024 - பூச்சியம்).

### 43 தொழிற்பாட்டு இலாபங்களை தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சலுடன் இணக்கப்படுத்தல்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து அறிக்கையிடப்பட்ட இலாபம் | 193,147,076 | 274,791,135 |
| கூட்டுக/(கழிக்குக): காசல்லா விடயங்கள் | | |
| தேய்மானம் மற்றும் பதிவழிப்பு | 855,935 | 798,226 |
| இலங்கை அரச பிணையங்களின் பதிவழிப்பு | (283,340) | (410,505) |
| பெறப்பட்ட வட்டி - உள்நாட்டு நாணயம் - முதலீட்டுச் சொத்துப்பட்டியல் | (3,048,321) | (2,855,316) |
| நிலையான வைப்புக்கள் மீதான பெறத்தக்க வட்டி | 79,334 | 507,390 |
| வராக்கடன்கள் மற்றும் தேறிய மீளப் பெறமுடியாத கடன்கள் | (106,446) | – |
| வரையறுக்கப்பட்ட பணியாளர் நலன் திட்டங்களுக்கான தேறிய ஒதுக்கீடு | (1,790,392) | 1,202,263 |
| மொத்தத் தேறல் செய்யப்படாத வெளிநாட்டுச் செலாவணி மிகை | 3,161,911 | (65,189,980) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான நட்டம்/(இலாபம்) | (26,212) | (1,729) |
| ஏற்பாடுகள் மற்றும் அட்டுறுக்கள் | 1,749,483 | (1,538,777) |
| நிதியியல் சொத்துக்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடுகள் | (1,142,223) | 1,729,506 |
| பிற்போடப்பட்ட கொடைகள் | 7,746 | 4,693 |
| மெதுவாக நகரும் பதிவேட்டுப் பொருட்களுக்கான ஏற்பாடு | 54 | – |
| நிலையான வருமான பிணையங்களின் பதிவழிப்புச் செலவினங்கள் | (7,116,656) | (10,082,708) |
| பி.அ.தி தேறிய சொத்து ஒருங்கினைப்பிலிருந்தான ஏனைய வருமான தேறிய தாக்கம் | – | (5,999) |
| உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகையின் அகற்றல் இலாபம்/(நட்டம்) | (2,744,703) | (4,168,300) |

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| **கூட்டுக/(கழிக்குக): ஏனைய தொழிற்படு மூலதனப் பொருட்களின் அசைவுகள்** | | |
| பதிவேட்டுப் பொருட்களின் குறைவு | 971,130 | 594,460 |
| பெறத்தக்க வட்டியின் குறைவு | (2,140,252) | (4,206,458) |
| நானாவிதப் பொறுப்புக்களின் அதிகரிப்பு | (507,193) | (1,996,725) |
| செலுத்தத்தக்க வட்டியின் அதிகரிப்பு | 2,450,165 | (520,696) |
| ஏனையப் பெறுத்தக்கவைகளின் அதிகரிப்பு | (2,966,794) | (7,696,869) |
| மீள்விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவுசெய்யப்பட்ட பிணையங்களின் (அதிகரிப்பு/குறைப்பு) | 25,087,671 | 307,757,018 |
| **கூட்டுக/(கழிக்குக): முதலீடு மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள்** | | |
| தேறிய தேறல்செய்யப்படாத சந்தைப் பெறுமதி மாற்றங்கள் | 10,507,084 | (36,204,396) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | 216,145,057 | 452,506,233 |

## 44 அரச கொடுக்கல்வாங்கல்களின் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்கள்/(எடுப்பனவுகள்)

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| இலங்கை அரச பிணையங்களின் கொள்வனவு | (1,741,358) | (306,606,037) |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களுடனான நிலுவைகளின் (அதிகரிப்பு)/குறைவு | (6,370,170) | 538,293 |
| | (8,111,528) | (306,067,744) |

## 45 வங்கி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்கள் மீதான சுற்றோட்ட நாணயத்தின் தேறிய வழங்கல்கள் (எடுப்பனவுகள்)

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்களிலான (அதிகரிப்பு)/குறைவு | (46,753,134) | (38,474,372) |
| | (46,753,134) | (38,474,372) |

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

## 46 நிதியிடலின் திரட்சி

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறான வங்கியின் திரட்சி நிதியிடல் பின்வருமாறு:

### 46.1 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

| | இலங்கை அரசாங்கம் ரூ. '000 | இலங்கை பொதுமக்கள் ரூ. '000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ. '000 |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | – | – | – |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | – | – | – |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | – | – | – |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | – | – | 16,039 |
| ப.நா.நிதியம் தொடர்பான சாதனங்கள | – | – | – |
| ஏனைய பெறத்தக்கவைகள் | 1,341,167 | – | – |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | 1,341,167 | – | 16,039 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 1,834,889,192 | – | – |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | – | – | 1,107,251 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | – | – | – |
| வங்கிகளுக்கான கடன்கள் | – | – | 5,418,490 |
| ஓய்வூதியம் மற்றும் தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | – | – | – |
| ஏனைய சொத்துக்கள் | 29,989,728 | – | 3,091,505 |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | 1,864,878,920 | – | 9,617,246 |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | 1,866,220,087 | – | 9,633,285 |
| **வெளிநாட்டு நாணய நிதியியலல்லா சொத்துக்கள்** | | | |
| தங்கம் | – | – | – |
| | – | – | – |
| **நாணய நிதியியலல்லா சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | – | – | – |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | – | – | – |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | – | – | – |
| அருவச் சொத்துக்கள் | – | – | – |
| மொத்த நாணய நிதியியலல்லா சொத்துக்கள் | – | – | – |
| மொத்தச் சொத்துக்கள் | 1,866,220,087 | – | 9,633,285 |

| வெளிநாட்டு அரசாங்கம் ரூ. '000 | வெளிநாட்டு தேசிய மத்திய வங்கிகள் ரூ. '000 | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | ஏனையவை ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| 154,808,122 | 466,275,660 | 170,152,037 | 326,781,693 | – | 1,118,017,512 |
| 71,813,480 | – | 20,218,687 | 3,415,352 | – | 95,447,519 |
| 636,441,211 | – | – | 239,511,574 | – | 875,952,785 |
| – | – | – | – | – | 16,039 |
| – | – | – | 246,363,338 | – | 246,363,338 |
| – | – | 58 | – | – | 1,341,225 |
| 863,062,813 | 466,275,660 | 190,370,782 | 816,071,957 | – | 2,337,138,418 |
| – | – | – | – | – | 1,834,889,192 |
| – | – | – | – | – | 1,107,251 |
| – | – | – | – | 46,834 | 46,834 |
| – | – | – | – | – | 5,418,490 |
| – | – | – | – | 17,568,400 | 17,568,400 |
| – | – | – | – | 9,790,816 | 42,872,049 |
| – | – | – | – | 27,406,050 | 1,901,902,216 |
| 863,062,813 | 466,275,660 | 190,370,782 | 816,071,957 | 27,406,050 | 4,239,040,634 |
| – | 26,705,749 | – | – | – | 26,705,749 |
| – | 26,705,749 | – | – | – | 26,705,749 |
| – | – | – | – | 3,868,196 | 3,868,196 |
| – | – | – | – | 4,877,338 | 4,877,338 |
| – | – | – | – | 23,739,905 | 23,739,905 |
| – | – | – | – | 235,548 | 235,548 |
| – | 26,705,749 | – | – | 32,720,987 | 59,426,736 |
| 863,062,813 | 492,981,409 | 190,370,782 | 816,071,957 | 60,127,037 | 4,298,467,370 |

## நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

### 46.2 2024 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

| | இலங்கை அரசாங்கம் ரூ. '000 | இலங்கை பொதுமக்கள் ரூ. '000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ. '000 |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் | – | – | – |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் பிணையங்கள் | – | – | – |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | – | – | 20,159,745 |
| ப.நா.நிதியம் தொடர்பான சாதனங்கள் | – | – | – |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | – | – | 20,159,745 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள்** | | | |
| இலங்கை அரச பிணையங்கள் | 1,748,873,060 | – | – |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | – | – | 26,194,922 |
| நிதியியல் மற்றும் ஏனைய நிறுவனங்களிலான உரிமை மூலதன முதலீடுகள் | – | – | – |
| வங்கிகளுக்கான கடன்கள் | – | – | 9,561,430 |
| ஓய்வூதியம் மற்றும் தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | – | – | – |
| ஏனைய சொத்துக்கள் | 43,279,509 | – | 548,522 |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் சொத்துக்கள் | 1,792,152,569 | – | 36,304,874 |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | 1,792,152,569 | – | 56,464,619 |
| **வெளிநாட்டு நாணய நிதியியலல்லா சொத்துக்கள்** | | | |
| தங்கம் | – | – | – |
| | – | – | – |
| **நாணய நிதியியலல்லா சொத்துக்கள்** | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் | – | – | – |
| ஏனைய பெறத்தக்கவைகள் மற்றும் மீள்கொடுப்பனவுகள் | – | – | – |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள | – | – | – |
| அருவச் சொத்துக்கள் | – | – | – |
| மொத்த நாணய நிதியியலல்லா சொத்துக்கள் | – | – | – |
| மொத்தச் சொத்துக்கள் | 1,792,152,569 | – | 56,464,619 |

| வெளிநாட்டு அரசாங்கம் ரூ. '000 | வெளிநாட்டு தேசிய மத்திய வங்கிகள் ரூ. '000 | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | ஏனையவை ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 87,034,541 | 581,074,086 | 250,580,264 | 144,839,384 | – | 1,063,528,275 |
| 339,992,275 | – | – | 332,469,475 | – | 672,461,750 |
| – | – | – | 7,797,418 | – | 27,957,163 |
| – | – | – | 222,876,069 | – | 222,876,069 |
| 1,008,100,902 | 581,074,086 | 250,580,264 | 707,982,346 | – | 1,986,823,257 |
| | | | | | |
| – | – | – | – | – | 1,748,873,060 |
| – | – | – | – | – | 26,194,922 |
| – | – | – | – | 46,834 | 46,834 |
| – | – | – | – | – | 9,561,430 |
| – | – | – | – | 9,062,661 | 9,062,661 |
| – | – | – | – | 8,949,113 | 52,777,144 |
| – | – | – | – | 18,058,608 | 1,846,516,051 |
| 1,008,100,902 | 581,074,086 | 250,580,264 | 707,982,346 | 18,058,608 | 3,833,339,308 |
| | | | | | |
| – | 11,629,873 | – | – | – | 11,629,873 |
| – | 11,629,873 | – | – | – | 11,629,873 |
| | | | | | |
| – | – | – | – | 4,839,378 | 4,839,378 |
| – | – | – | – | 2,294,558 | 2,294,558 |
| – | – | – | – | 23,489,058 | 23,489,058 |
| – | – | – | – | 515,650 | 515,650 |
| – | 11,629,873 | – | – | 31,138,644 | 42,768,517 |
| 1,008,100,902 | 592,703,959 | 250,580,264 | 707,982,346 | 49,197,252 | 3,876,107,825 |

## 46.3 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

| | இலங்கை அரசாங்கம் ரூ. '000 | இலங்கை பொதுமக்கள் ரூ. '000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ. '000 |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதி பொறுப்புகள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 407,124 | – | – |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | – | – | 28,650,448 |
| ப.நா.நிதியம் | – | – | – |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | – | – | – |
| ஏனையவை | 162,515,866 | – | – |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 162,922,990 | – | 28,650,448 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | – | – | 214,593,648 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 7,904,966 | 201 | – |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | – | – | 176,322,112 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | – | 1,568,938,866 | – |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 364,296 | – | – |
| ஓய்வூதியம் மற்றும் தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | – | – | – |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 8,269,262 | 1,568,939,067 | 390,915,760 |
| மொத்த நிதியியல் பொறுப்புக்கள் | 171,192,252 | 1,568,939,067 | 419,566,208 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | – | – | – |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | – | – | – |
| மொத்த ஏனைய பொறுப்புக்கள் | – | – | – |
| மொத்தப் பொறுப்புக்கள் | 171,192,252 | 1,568,939,067 | 419,566,208 |

## நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்

| | வெளிநாட்டு அரசாங்கம் ரூ. '000 | வெளிநாட்டு தேசிய மத்திய வங்கிகள் ரூ. '000 | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | ஏனையவை ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|
| | – | – | – | 1,850,101 | 2,030,567 | 4,287,792 |
| | – | – | – | – | – | 28,650,448 |
| | – | – | – | 799,898,325 | – | 799,898,325 |
| | – | 642,153,677 | – | – | – | 642,153,677 |
| | – | – | – | 35,983 | 41,660,795 | 204,212,644 |
| | – | 642,153,677 | – | 801,784,409 | 43,691,362 | 1,679,202,886 |
| | – | – | – | – | 13,106,439 | 227,700,087 |
| | – | – | – | – | – | 7,905,167 |
| | – | – | – | – | – | 176,322,112 |
| | – | – | – | – | – | 1,568,938,866 |
| | – | – | – | – | 34,157,145 | 34,521,441 |
| | – | – | – | – | 8,002,998 | 8,002,998 |
| | – | – | – | – | 55,266,582 | 2,023,390,671 |
| | – | 642,153,677 | – | 801,784,409 | 98,957,944 | 3,702,593,557 |
| | – | – | – | – | 14,913 | 14,913 |
| | – | – | – | – | 525,430 | 525,430 |
| | – | – | – | – | 540,343 | 540,343 |
| | – | 642,153,677 | – | 801,784,409 | 99,498,287 | 3,703,133,900 |

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

## 46.4 2024 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை

| | இலங்கை அரசாங்கம் ரூ. '000 | இலங்கை பொதுமக்கள் ரூ. '000 | இலங்கை வர்த்தக வங்கிகள் ரூ. '000 |
|---|---|---|---|
| **வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புகள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் | 918,442 | – | – |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | – | – | 37,196,388 |
| ப.நா.நிதியம் | – | – | – |
| ஏனைய வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | – | – | – |
| ஏனையவை | 75,390,058 | – | – |
| மொத்த வெளிநாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 76,308,500 | – | 37,196,388 |
| **உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் வைப்புக்கள் | – | – | 167,923,148 |
| அரசு மற்றும் அரச நிறுவனங்களின் வைப்புக்கள் | 1,534,820 | 176 | – |
| மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | – | – | 194,337,033 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | – | 1,358,722,883 | – |
| ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 388,712 | – | – |
| ஓய்வூதியம் மற்றும் தொழிலுக்குப் பின்னரான நன்மைத் திட்டங்கள் | – | – | – |
| மொத்த உள்நாட்டு நாணய நிதியியல் பொறுப்புக்கள் | 1,923,532 | 1,358,723,059 | 362,260,181 |
| மொத்த நிதியியல் பொறுப்புக்கள் | 78,232,032 | 1,358,723,059 | 399,456,569 |
| **ஏனைய பொறுப்புக்கள்** | | | |
| பிற்போடப்பட்ட கொடைகள் | – | – | – |
| நானாவிதப் பொறுப்புக்கள் மற்றும் அட்டுறுக்கள் | – | – | – |
| மொத்த ஏனைய பொறுப்புக்கள் | – | – | – |
| மொத்தப் பொறுப்புக்கள் | 78,232,032 | 1,358,723,059 | 399,456,569 |

| வெளிநாட்டு அரசாங்கம் ரூ. '000 | வெளிநாட்டு தேசிய மத்திய வங்கிகள் ரூ. '000 | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | பல்தேசிய நிதியியல் நிறுவனங்கள் ரூ. '000 | ஏனையவை ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| – | – | – | – | 120,176 | 1,038,618 |
| – | – | – | – | – | 37,196,388 |
| – | – | – | 781,616,569 | – | 781,616,569 |
| – | 868,551,340 | – | – | – | 868,551,340 |
| – | – | – | 34,158 | 29,551,040 | 104,975,256 |
| – | 868,551,340 | – | 781,650,727 | 29,671,216 | 1,793,378,171 |
| | | | | | |
| – | – | – | – | 13,023,805 | 180,946,953 |
| – | – | – | – | – | 1,534,996 |
| – | – | – | – | – | 194,337,033 |
| – | – | – | – | – | 1,358,722,883 |
| – | – | – | – | 29,782,839 | 30,171,551 |
| – | – | – | – | 7,444,769 | 7,444,769 |
| – | – | – | – | 50,251,413 | 1,773,158,185 |
| – | 868,551,340 | – | 781,650,727 | 79,922,629 | 3,566,536,356 |
| | | | | | |
| – | – | – | – | 7,168 | 7,168 |
| – | – | – | – | 1,051,139 | 1,051,139 |
| – | – | – | – | 1,058,307 | 1,058,307 |
| – | 868,551,340 | – | 781,650,727 | 80,980,936 | 3,567,594,663 |

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

## 47 நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கை மத்திய வங்கியானது அதன் கொள்கைக் குறிக்கோள்களைப் பின்தொடர்வதில் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளுடன் தொடர்புகொள்வதோடு அதன் நிதியியல் சந்தைத் தொழிற்பாடுகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற கொடுகடன், சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகள் போன்ற நிதியியல் இடர்நேர்வுகளுக்கு ஆட்பட்டுள்ளது. இதில் எந்தவொரு இடர்நேர்வினதும் பொருண்மைத் தன்மையானது மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடைதல், நற்பெயர் மற்றும் நிதியியல் நிலைமைகளில் மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனால் மத்திய வங்கிக்காக முறையாக வடிவமைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாகும். இதற்கமைய, மத்திய வங்கியால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகள் முறையாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றதா என்பதை உறுதிசெய்வதற்கு நிறுவன ரீதியிலான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்று இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டுள்ளது.

வங்கி எதிர்கொள்ளும் நிதியியல் அதேபோன்று நிதியல்லா இடர்நேர்வுகளை உள்ளடக்கிய இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு ஆகிய இரண்டையும் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு உள்ளடக்குகின்றது. இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பானது ஆளுகைச் சபை, நாணயக் கொள்கை சபை மற்றும் இரண்டு சபை துணைக் குழுக்கள், அதாவது சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ செயல்பாட்டிற்கான இறுதிப் பொறுப்பை ஆளுகைச் சபை கொண்டுள்ளது.

சபை இடர்நேர்வு மேற்பார்வை குழுவானது ஆளுகைச் சபையிடமிருந்தான முறையான பிரதிநிதிகளின் மூலமாக மத்திய வங்கியின் ஒட்டுமொத்த இடர்நேர்வு முகாமைத்துவ தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்கின்றதுடன் வங்கியில் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் அர்ப்பணிப்புமிக்க கவனத்தை செலுத்துவதை உறுதிசெய்வதற்கு ஆளுகைச் சபைக்கு உதவிசெய்கின்றது. நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, முதலீட்டு மேற்பார்வைக் குழு மற்றும் அனைத்து நிதிய முகாமைத்துவத் திணைக்களங்கள் போன்றவற்றை நிதியியல் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு உள்ளடக்குகின்றது.

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு காலப்பகுதியில் பொருட்கள், பணிகள் மற்றும் வரிகளுக்கான கொடுப்பனவுகள் | 51.1.4 | 6,868,444 | 11,136,712 |
| காலப்பகுதியிலான மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் | 51.1.6 | | |
| விற்பனைகள் | | 43,618,034 | 68,814,477 |
| கொள்வனவுகள் | | 563,601,550 | 916,768,375 |
| ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா பெறுதிகள் | | 1,187,848,850 | 4,086,139 |
| வெளிநாட்டுச் சட்டச் செலவுகள் | | 8,853 | 6,050 |
| ஆண்டுப்பகுதியில் கைவிடப்பட்ட ஆதனம் தொடர்பில் பெறப்பட்ட நிதியம் | | 771,266 | 476,420 |
| வாடகை வருமானம் | | 223,023 | 188,745 |
| பங்கிலாப வருமானம் | | 197,535 | 129,728 |
| ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் | 51.1.9 | 387,567 | 466,495 |
| **நிலுவைகள்:** | | | |
| இலங்கை மத்திய வங்கியினால் வைத்திருக்கப்படுகின்ற இலங்கை அரச பிணையங்கள் | 51.1.7 | 1,834,889,192 | 1,748,873,060 |
| கொவிட்-19 புத்துயிரளித்தல் மீள்நிதியிடல் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் | | 4,797,376 | 8,302,464 |
| டீஹடீ பிபி கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன்கள் | | 222,769 | 364,714 |
| இலங்கை மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட கடன்கள் மற்றும் எம்எஸ்ரீசீ கடன்கள் | | 142,250 | 134,362 |
| குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கப்பட்ட அரச பிணையங்கள் | | 29,161,311 | 23,923,607 |
| வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுடனான அ.நே.மொ.தீ. நிலுவைகள் | 26 | 1,700,322,145 | 132,888,982 |
| இலங்கை வங்கி இலண்டனுடனான நொஸ்ரோ கணக்கு நிலுவைகள் | | 165,798 | 36,714 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறத்தத்தக்கவை | | 4,397,939 | 19,033,179 |
| திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு செலுத்தத்தக்கவை | 25.2 | 162,515,866 | 29,660,536 |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு அரச மற்றும் அரச நிறுவனங்களுடனான நடைமுறைக் கணக்கு நிலுவைகள் | | 156,540 | 178,324 |
| கைவிடப்பட்ட ஆதன நிலுவைகள் | | 8,954,423 | 8,172,494 |
| ஏனைய நிலுவைகள் | 51.1.9 | 57,808 | 57,571 |

**51.1.1** மத்திய வங்கிச் சட்டத்தின் பாகம் IX இன் பிரிவு 61இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறும் ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறும் வங்கி மேற்பார்வைத் திணைக்களமானது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகள் மீதான ஒழுங்குபடுத்துதலையும் மேற்பார்வைத் தொழிற்பாட்டையும் மேற்கொண்டு வருகின்றது.

மத்திய வங்கிச் சட்டத்தின் பாகம் IX இன் பிரிவு 61இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறும் ஆளும் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டவாறும் இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள் தொடர்பிலான அதன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளை வங்கியின் வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் மேற்கொள்கின்றது.

51.1.2 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 132 இன் படி, அரசாங்கக் கணக்கிற்கான அரசாங்கப் பிணயங்களை வழங்குதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் தொடர்பாகச் பணிக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட பொதுப் படுகடனை நிர்வகித்தலில் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் தொழிற்படுத்துகை வரையான காலப்பகுதியில் மத்திய வங்கி அரசாங்கத்தின் முகவராகத் தொடர்ந்து செயற்பட்டது. 2004 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினுள் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது 2024 திசெம்பரில் தாபிக்கப்பட்டது. பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகமானது 2025 திசெம்பரில் முழுமையாகச் செயற்படத் தொடங்கியதுடன் மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட பொதுப் படுகடன் முகாமைத்துவப் பணிகளின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது. இருப்பினும், பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டம் மற்றும் மத்திய வங்கிச் சட்டம் என்பவற்றுடன் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கமைய, 2026 சனவரி 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் கீழ் அரச பிணையங்களுக்கான பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமை மற்றும் மத்திய வைப்பக முறைமை என்பவற்றை மத்திய வங்கி தொடர்ந்து முன்னெடுக்குமென்பதுடன் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அரச பிணையங்களின் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

51.1.3 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 44ஆம் பிரிவின்படி இலங்கையில் நாணய விநியோகத்தை மேற்கொள்ளும் ஏக உரிமையையும் அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது. இதற்கிணங்க வங்கியின் நாணயத் திணைக்களம் இலங்கையிலே சட்ட ரீதியான நாணயத்தை விநியோகிக்கும் ஏக அதிகாரத்துவம் உடையதாகத் தொழிற்படுகின்றது. நாணயத் தாள்களை அச்சிடுதலானது, 40 சதவீதப் பங்குகளை அரசாங்கம் சொந்தமாகக் கொண்டுள்ள டி லா ரூ லங்கா கரண்சி அன்ட் செக்குரிட்டி (பிறைவேட்) லிமிடெட் எனும் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

51.1.4 சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வங்கியானது அரச நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்தின் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கு அல்லது கட்டுப்பாடுள்ள நிறுவனங்களுடன் பல்வேறுபட்ட பொருட்கள் மற்றும் பணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகிறது.

51.1.5 வங்கியானது குறிப்பு 56 இல் விளக்கப்பட்டுள்ளவாறு, பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பெறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன் வருகின்றது.

51.1.6 இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுத் திணைக்களம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்தியையும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி திறந்த நிலையினையும் கண்காணிக்கின்றது. உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை அபிவிருத்தியைக் கண்காணிக்கின்ற போது வங்கியானது சந்தையின் இரு புறங்களிலுமிருந்து இலங்கை ரூபாவின் செலாவணி வீதத்தின் மிகைத் தளம்பலினை மிதமான நிரைப்படுத்தலுக்குக் கொண்டு வருகின்றது. எனினும், பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேறிய அலுவல்சார் பன்னாட்டு ஒதுக்குகள் இலக்கை அடைவதற்கு, குறிப்பாக வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை ஒன்றுதிரட்ட வேண்டியதன் காரணமாக வங்கியின் தலையீட்டு உபாயம் முக்கியமாக வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்வதில் கவனம் செலுத்தியது. 2025 காலப்பகுதியில், பெறுமதித் திகதியின் அடிப்படையில் ஐ.அ.டொலர் 1,992.35 மில்லியன் தொகையிலான தேறிய கொள்வனவுகளுடன் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேறிய கொள்வனவாளராக வங்கி காணப்பட்டது.

51.1.7 வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுத் திணைக்களமானது வங்கியின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நேரடித் தொழிற்பாட்டை, பிரதானமாக 2023ஆம் ஆண்டு 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 31ஆம் பிரிவின் படியாக, திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக செயற்படுத்துவதுடன் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 32 - 34 பிரிவுகளின் படியான நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைப்பாடுகளையும் நடைமுறைப்படுத்துவதுடன் அரசாங்கம் பங்குடமைகளைக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகளினதும் வேறும் சில நிதியியல் நிறுவனங்களினதும் அரச நிறுவனங்களினதும் வங்கியாகவும் தொழிற்படுகிறது. 2025 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு இத்தொழிற்பாட்டின் நிமித்தமாக எழும் திரண்ட நிலுவைகள் குறிப்பு 12, 26 மற்றும் 28 இல் தரப்பட்டுள்ளன. அரச பிணையங்களிலிருந்து உழைக்கப்பட்ட வட்டி குறிப்பு 35இல் தரப்பட்டுள்ளது.

51.1.8 வங்கியானது எவ்விதக் கட்டணங்களையும் அறவிடாது அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கியொன்றின் காப்பாளர் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.

51.1.9 ஏனைய மீதிகளும் கொடுக்கல்வாங்கல்களும் அரசாங்கம், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்ட தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமில்லாத கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கின்றன.

## 51.2 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள்

ஆளுநர், துணை ஆளுநர்கள் மற்றும் உதவி ஆளுநர்கள் உள்ளடங்கலாக ஆளுகைச் சபையின் அங்கத்தவர்கள் வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராவர். முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

## 51.3 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான இழப்பீடு

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| குறுகிய கால ஊழியர் நன்மைகள் | **252,129** | 295,175 |

மேற்கூறிய இழப்பீடுகளில் முக்கிய நிர்வாகப் பணியாளர்களுக்கு அவர்களுடனான வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களின் அடிப்படையில் வங்கி வழங்கிய காசு மற்றும் காசு அல்லாத பலன்கள் இரண்டும் அடங்கும்.

## 51.4 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள்

| | 2025<br>ரூ. '000 | 2024<br>ரூ. '000 |
|---|---|---|
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான வெளிநின்ற கடன்கள் | **238,684** | 263,898 |
| ஆண்டில் வழங்கப்பட்ட கடன்கள் | **227,510** | 124,331 |
| இவ்வாண்டுப்பகுதியில் மீளச்செலுத்தப்பட்ட கடன்கள் | **269,162** | 238,654 |

**நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும்**

அனைத்துக் கடன்களும் கடன் வகையைப் பொறுத்து 2 சதவீதம் தொடக்கம் 7 சதவீதம் வரையிலான வட்டி வீத வீச்சிடையுடன் கூடிய போதியளவு பிணையுறுதியளைக் கொண்டுள்ளதுடன் மாதாந்தம் மீளச் செலுத்தப்படுகின்றன.

### 51.5 தொழில்நிலைக்குப் பின்னரான நன்மைத் திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்

| | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புக்கள் | **79,791** | 103,855 |

குறிப்பு 16இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வூதியத்திற்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கி பல்வேறு தொகைகளைப் பங்களித்ததுடன் ஊழியர் சேம நிதியத்திற்கு ரூ.1,645.66 மில்லியன் (2024இல் ரூ.1,617.89 மில்லியன்) தொகையினைச் செலுத்தியது. வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது வங்கியானது அதன் தொழிலுக்குப் பின்னரான திட்டங்களுக்கு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் பணிகளை வழங்குகின்றது. அத்தகைய திட்டங்களுடனான நிலுவைகளின் தொகைகள் குறிப்பு 30.2இல் தரப்பட்டுள்ளன.

## 52 எதிர்பாராப் பொறுப்புக்கள்

### 52.1 நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்

வங்கியானது அரசாங்கத்தின் அல்லது அதன் முகவராண்மைகளினதும் நிறுவனங்களினதும் முகவராகச் செயற்பட்டு, பொதுத் திறைசேரியினால் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பதில் உத்தரவாதங்களைப் பயன்படுத்தி பல்வேறு தரப்பினர்களுக்கும் உத்தரவாதங்களை வழங்குகின்றது. 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு அத்தகைய வெளிநின்ற உத்தரவாதங்கள் எதுவுமிருக்கவில்லை.

### 52.2 கொடுகடன் உத்தரவாதங்கள்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வெளியக கொடுகடன் வசதிகளிலிருந்தான கடன் பெறுகைகளிலிருந்து மீள்நிதியிடலை வழங்குதல், அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு கடன்கள் மீதான கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குதல், உத்தரவாத தவணைத் தொகைகளைச் சேகரித்தல், கொடுகடன் உத்தரவாத நிதியங்களை நிருவகித்தல் மற்றும் கடன் செலுத்தத் தவறுகைகளைத் தடுக்கும் நோக்குடன் கடன் நிதியங்கள் உரிய விதத்தில் பயன்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக கொடுகடனுக்குப் பின்னரான சோதிப்புக்கள் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சார்ந்த தொழிற்பாடுகளை வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டது. 2023இல் மத்திய வங்கிச் சட்டத்தின் சட்டவாக்கம் வரை, பிரதேச அபிவிருத்தித் திணைக்களமானது இவ்வேற்பாட்டின் கீழ் கொடுகடன்களை வழங்குகின்ற பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு எழக்கூடிய இழப்புக்களுக்கெதிராக வங்கி உத்தரவாதங்களை வழங்கியது. இது கடன்பெறுநர்களின் செலுத்தத் தவறுகைகளுக்கான ஒரு உத்தரவாதமல்ல என்பதோடு இழப்புக்களுக்காக மட்டுமேயாகும். அதாவது, பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் மூலம் கடன்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் பின்னர் உருவாகின்ற இழப்புக்களுக்காக மாத்திரம் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வேற்பாடுகளின் கீழ் எழக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களுக்கான தொகைகள் பின்வருமாறு:

| உள்நாட்டு வர்த்தக வங்கிகள் - கொடுகடன் உத்தரவாதங்கள் தொடர்பானது: | வெளிநின்ற உத்தரவாதங்களின் தொகை 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|
| தொடர்பான தரப்பினர்கள் | **27,773** | 131,687 |
| ஏனையவை | – | 109 |
| மொத்தக் கொடுகடன் உத்தரவாதங்கள் | **27,773** | 131,796 |

2025 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் மீது எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு குறிப்பு 38இல் பதியப்பட்டுள்ளது.

### 52.3 சட்ட ரீதியான கோரல்கள்

2025 திசெம்பர் 31இல் வங்கிக்கெதிரான பல சட்ட நடவடிக்கைகள் எஞ்சியிருந்தன. குறிப்பிடத்தக்க ஏதேனும் நட்டங்கள் ஏற்படுவது சாத்தியமற்றதென்ற அபிப்பிராயத்தை வங்கி கொண்டுள்ளதால் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## 53 கடப்பாடுகள்

(அ) 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கையேற்புத் தொடர்பில் வங்கி ரூ.895.70 மில்லியன் பெறுமதியான மூலதனக் கடப்பாட்டைக் கொண்டிருந்தது.

(ஆ) 2025 திசெம்பர் 31இல் உள்ளவாறு வெளிநின்ற முன்னோக்கிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு காணப்படுகின்றன:

| முன்னோக்கிய செலாவணி ஒப்பந்தங்கள் | | 2025 ரூ. '000 | 2024 ரூ. '000 |
|---|---|---|---|
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | ஐ.அ. டொலர் | **1,930,810** | 1,318,306 |
| | முன்னோக்கிய செலாவணி விற்பனைகள் | – | 71,100,000 |
| முன்னோக்கிய செலாவணி கொள்வனவுகள் | ஐ.அ.டொலர் | – | 373,500 |

## 54 நிதியியல் சொத்துக்களின் மாற்றல்கள்

வழமையான வியாபார நடவடிக்கைகளின் போது நிதியியல் சொத்துக்களின், முக்கியமாக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட படுகடன் பிணையங்களின் மாற்றலுக்கு வழிவகுக்கக்கூடிய கொடுக்கல்வாங்கல்களில் வங்கி ஈடுபடுகின்றது. குறிப்பு 7.3.6இல் குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கையின்படி மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் தொடர்ச்சியாக முழுமையாக அல்லது வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் அளவிற்கு அங்கீகரிக்கப்படலாம் அல்லது அவை முழுமையான அங்கீகரிப்பிலிருந்தும் நீக்கப்படலாம்.

வங்கியானது முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத அல்லது முக்கியமாக பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மூலம் வங்கியின் தொடர்ச்சியான ஈடுபாட்டைக் கொண்டிருக்கும் நிதியியல் சொத்துக்களை மாற்றல் செய்கின்றது:

- மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்
- கடன்வழங்கல் பிணையங்கள்
- பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்

### 54.1 முழுமையாக அங்கீகரிப்பிலிருந்து நீக்கப்படாத மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள்

#### (அ) மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள்

மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் வங்கியின் நாணயக் கொள்கைத் தொழிற்பாட்டின் ஒரு பகுதியாக செயற்படுத்தப்படுவதுடன் இவை சொத்துவத்தின் குறிப்பிடத்தக்களவு அனைத்து இடர்நேர்வுகளையும் வெகுமதிகளையும் கொண்டுள்ளமையால் நிதியியல் நிலைமைக் கூற்றில் "இலங்கை அரச பிணையங்கள்" இன் கீழ் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கப்படும். செலுத்தப்பட வேண்டிய காசு பிரதிபலன்கள் மற்றும் அதனுடன் தொடர்பான அட்டுறு வட்டி

என்பன நிதியியல் நிலைமைக் கூற்றின் உள்நாட்டு நிதியியல் பொறுப்புக்களின் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### (ஆ) கடன்வழங்கல் பிணையங்கள்

கடன் பிணையங்கள் விபரிப்பது யாதெனில் கட்டணத்தினால் உருவாக்கப்பட்ட சந்தை நடைமுறைகளில் பிணையங்கள் தற்காலிக அடிப்படையில் ஒரு தரப்பினிடமிருந்து (கடன்கொடுப்பவர்: உதாரணம் இ.ம.வ) இன்னொரு தரப்பினருக்கு (கடன்பெறுபவர்) மாற்றல் செய்யப்படுவதாகும். கடன்வாங்கியவர் ஒப்பந்த தவணை முடிவில் அல்லது கேட்கப்படும் போது திரும்பச் செலுத்த வேண்டியது கட்டாயமானதாகும். தற்போது பல்வேறு வழங்குநர்களினால் வழங்கப்படும் முறிகள் மற்றும் பல்தேசிய முறிகள் ஆகியவற்றின் கூட்டுக்காப்பாளராக தெரிவுசெய்யப்பட்ட கிளியரிங் ஹவுஸ் செயற்படுகின்றது. அந்த முறிகளின் கேள்வியின் அடிப்படையில் அவற்றை கடன்கொடுப்பதற்கு கிளியரிங் ஹவுசினை ஏதுவாக்குவதற்காக அதனுடன் இலங்கை மத்திய வங்கி ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி கடன் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடாது கிளியரிங் ஹவுஸ் நேரடியாக கடன்படுநர்களுக்கு அவற்றைக் கொடுப்பதனால் இச்செயற்பாடு தன்னியக்க முறி கடன்வழங்கல் என அழைக்கப்படும். ஒவ்வொரு மாத இறுதியிலும் தன்னியக்க கடன்வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முறிகள் ஏதேனும் இருந்தால் அவற்றின் தன்னியக்க முறி கடன்வழங்கலின் கட்டண வருமானத்தினைக் கட்டுக்காப்பாளர் அனுப்பி வைப்பார். இது உடமையின் குறிப்பிடத்தக்களவு முழுமையான இடர்நேர்வு மற்றும் வெகுமதிகளை கொண்டிருப்பதனால் வங்கியானது நிதியியல் நிலைமைக் கூற்றில் பிணையங்களைத் தொடர்ச்சியாக முழுமையாக அங்கீகரிக்கின்றது. இந்தப் பிணையங்கள் நிதியியல் நிலைமைக் கூற்றில் "ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான பிணையங்களாகக்" காட்டப்படுகின்றன.

### (இ) பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள்

வெளிநாட்டுப் பிணையங்கள் தீர்ப்பனவு செயன்முறைக்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்ட தனியான கணக்கொன்றில் 2017 சனவரி வரை ஐ.அ.டொலர் 30.0 மில்லியன் பெறுமதி கொண்ட கொடுகடன் வசதியொன்றிற்காக யூரோகிளியர் எனும் அதன் உலகளாவிய கட்டுக்காப்பாளரிற்கு அவுஸ்திரேலியா டொலர் 35.0 மில்லியன் தொகையினை முன்னர் பிணையிட்டது. தற்பொழுது, சீரான மற்றும் செயற்திறன்மிக்க தீர்ப்பனவினை நிச்சயப்படுத்தும் பொருட்டு கொடுகடன் வசதியினை மீள்நிலைநிறுத்தும் நோக்குடன் ஐ.அ.டொலர் 3.0 மில்லியன் தொகை பிணையிடப்பட்டுள்ளது.

| | 2025 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள் ரூ. '000 | 2025 ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சொத்துக்கள் ரூ. '000 |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| யூரோ கிளியருடன் பிணையாக வைக்கப்பட்ட பிணையங்கள் | **929,983** | 877,750 |
| சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி | **929,983** | 877,750 |

## 55 நம்பிக்கை மற்றும் கட்டுக்காப்பு நடவடிக்கைகள்

வங்கி பொதுவாக நம்பிக்கைப் பொறுப்பாளராக கடமை புரிவதனால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசாங்கம், நம்பிக்கைப் பொறுப்புக்கள், ஓய்வூதிய நன்மைத் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் சார்பில் வைத்திருக்க அல்லது வழங்க முன்வருகின்றது. வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு:

**55.1** வங்கியானது இலங்கை அரசாங்கத்தின் சார்பில், வெளிநாட்டு நிதியிடப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் கொடுகடன் திட்டங்களின் கீழ் கிடைக்கும் பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் பகிர்வையும் மீள்செலுத்துதலையும் கையாள்கின்றது. மேலும், பல்வேறு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகளின் கீழ் இணைத்தரப்பினர் நிதியத்தினை இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பெற்று அத்தகைய நிதிகளை வழங்கும் முகவராண்மைகளது வேண்டுகோளின்படி திறைசேரி உண்டியல்களில் முதலிடுகின்றது.

**55.2** வங்கியே ஊழியர் சேம நிதியத்தின் பணத்தினைப் பாதுகாக்க வேண்டும். நியதிச்சட்டத்தின்படி பங்களிப்புக்கள் மற்றும் மிகைக் கட்டணங்களை சேகரித்தல், முதலீடுகளிலிருந்து வருமானமீட்டல், ஊழியர் சேம நியதித்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களது முறையான கணக்குகளைப் பேணி வருதல், மிகையான நிதிகளை முதலீடு செய்தல் மற்றும் அங்கத்தவர்களுக்கு நன்மைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் என்பன ஆளுகைச் சபையின் செயற்பாடுகளில் அடங்கும்.

### 55.3 இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியம்

இலங்கை மத்திய வங்கியால் நிர்வக்கப்படும் இலங்கை வைப்புப் காப்புறுதித் திட்டம் (இவைகாதி), தற்போது 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித் தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நிர்வக்கப்படுகிறது. உரிமம் பெற்ற அனைத்து வங்கிகளும் மற்றும் உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களும் இதன் உறுப்பினர்பளாக உள்ளன. தற்போது, 62 உறுப்பினர் நிறுவனங்கள் உள்ளன. இத்திட்டம், சில கடன் பத்தரங்களைத் தவிர்த்து. கேள்வி வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புகளை உள்ளக்கியது 31 திசெம்பர் 2025 நிலவரப்படி, ரூ. 160.9 பில்லியன் மொத்த நிதி அளவுடன், இந்த இவைகாதி விவேகத்துடன் நிர்வகிக்கப்படுகிறது. ஒரு வைப்பாளருக்கான தற்போது கிடைக்கக் கூடிய அதிகபட்ச இழப்பீட்டுத் தொகையானது ரூ. 1,100,000/- ஆகும். இழப்பீட்டுத் தொகையானது நிதியில் உள்ள இருப்புத் தொகைக்கு மட்டுமே வரையறுக்கப்படும், மேலும் நிதியின் மொத்த இருப்புத் தொகையை விட அதகமான எந்தவொரு தொகைக்கும் இவைகாதி பொறுப்பேற்காது. இவைகாதி இன் நிரவாகத்தை இமவ மேற்பார்வையிடுகிறது. அதன் அன்றாட செயல்பாடுகள் வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களத்தில் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுளளன. இவைகாதி இன் நிதியியல் அறிக்கைகள் தனியாகப் பராமரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் நாயகத்தினல் கணக்காய்வு செய்யப்படுகின்றன.

**55.4** வங்கியின் ஆளும் சபையின் சார்பாக, இ.மத்திய வங்கியின் சட்டப் பிரிவு 87(1)இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இலங்கை அரசாங்க மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களால் நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கதின் பிரத்தியேக முகவராகச் செயற்படுகிறது. 31.12.2025 இலுள்ளவாறு, பங்கேற்பு நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியளிப்பு ரூ. 20,605.61 மில்லியனாக விளங்கியது.

03

# மேலதிகத் தகவல்கள்


197 வெளியீடுகளும் தரவு பரப்புதலும் - 2025

198 இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டுநிறைவு

200 பிரதேச அலுவலகங்கள்

201 இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வைசெய்யப்படும் நிறுவனங்கள்

# வெளியீடுகளும் தரவு பரப்புதலும் - 2025

## வெளியீடுகள்

**பொருளாதார மற்றும் நிதியியல் அறிக்கை**

நாணயக் கொள்கை அறிக்கை - 2025 பெப்புருவரி, 2025 ஓகத்து

ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024

நிதியியல் அறிக்கைகளும் தொழிற்பாடுகளும் 2024

நிதியியல் உறுதித்தன்மை தொடர்பான மீளாய்வு 2025

இலங்கை நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024 - 2028)

சந்தைத் தொழிற்பாடுகள் அறிக்கை - 2024 திசெம்பர் - 2025 யூன்

பள்ஸ் - பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பின் தொகுப்பு

**காலாந்தர வெளியீடுகள்**

நியு சேர்வே

சடஹண

வைப்பகம்

**ஏனைய வெளியீடுகள்**

அலுவலர் ஆய்வுகள்

ஊழியர் சேமலாப நிதிய ஆண்டறிக்கை - 2024

நிதியியல் உளவறிதல் பிரிவு ஆண்டறிக்கை - 2024

නොසෙලෙන පහන් ටැඹ - 75th Anniversary coffee table book

Children’s booklet part II

රජයේ අයවැය න්‍යාය සහ පරිචය

வெளிநாட்டுத் துறை புள்ளிவிபரங்கள்

நிதியியல் அறிவு பற்றிய சித்திரக் கதைப் புத்தகம்

## தரவு மற்றும் தகவல் பரப்புதல்

**பொருளாதாரக் குறிகாட்டிகளும் செய்தித்திரட்டுகளும்**

பேரண்டப்பொருளாதார வரைபடத்தொகுப்பு

பொருளாதாரத் தரவு நூலகம்

நாளாந்த செலாவணி வீதங்கள்

நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மைக் குறிகாட்டிகள்

கொடுப்பனவுகள் செய்தித்திரட்டு

வெளிநாட்டுத் துறை செய்தித்திரட்டு

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகப் புள்ளிவிபரங்கள்

மாதாந்த பொருளாதாரத் தரவுகள் செய்தித்திரட்டு

தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் தொழிலாளர் புலம்பெயர்தல் செய்தித்திரட்டு

வேளாண்மைத் தரவுகள் செய்தித்திரட்டு

நாளாந்த, வாராந்த மற்றும் மாதாந்த பொருளாதாரக் குறிகாட்டிகள்

தேசிய கணக்குகள் மதிப்பீடு

விசேட தரவு பரப்புதல் நியம தேசிய தொகுப்பு தரவு

நாளாந்த விலை அறிக்கை
(முக்கிய சந்தைகளில் தெரிவுசெய்யப்பட்ட முக்கிய நுகர்வோர் பொருடகள்)

அரசாங்கப் பிணையங்கள் மீதான தரவுகள்

இலங்கை மத்திய வங்கி, விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு ஆகிய மையக் குறிக்கோள்களை அடைவதில் வங்கியின் முக்கிய முன்னுரிமைகள் மற்றும் உபாய ரீதியான பணிப்புரை என்பவற்றை விளக்கி சனவரியில் 2025ஆம் ஆண்டுக்கான அதன் கொள்கை நிகழ்ச்சிநிரலை அறிவித்தது. நாட்டின் பரந்த பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இசைவாக, பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஆதரவளித்து, பொருளாதார மீட்சியினை வழிநடாத்தி, வெளிநாட்டு மற்றும் நிதியியல் துறைகளில் தாக்குப்பிடிக்கும்தன்மையை வலுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட நாணய மற்றும் நிதியியல்சார் வழிமுறைகளை இது எடுத்துரைக்கின்றது.

# இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டுநிறைவு

இலங்கை மத்திய வங்கி அதன் **75ஆவது ஆண்டு நிறைவை 2025 இல்** அடையாளப்படுத்தி நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டைப் பேணுவதில் தேசத்திற்கான பணியின் 7 தசாப்பதங்களைக் கொண்டாடியது. **"சுபீட்சத்திற்கான உறுதிப்பாடு"** என்ற கருப்பொருளின் கீழ் ஆண்டு நிறைவு கொண்டாடப்பட்டு நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கும் தேசிய சுபீட்சத்திற்கும் ஆதரவளிப்பதற்கு உறுதியான பேரண்டப் பொருளாதார சூழலொன்றை பேணி வளர்ப்பதற்கான வங்கியின் தொடர்ச்சியான கடமைப் பொறுப்பினை எடுத்துக்காட்டியது.

இம்மைல்கல்லைக் கொண்டாடும் முகமாக அதன் நிறுவனசார் சாதனைகளை எடுத்துக்காட்டுதல், தேசிய மற்றும் பன்னாட்டுப் பங்குதாரர்களுடனான ஈடுபாட்டை வலுப்படுத்தல் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள், நிபுணர்கள் அத்துடன் மத்திய வங்கி அலுவலர்கள் மத்தியில் அறிவினைப் பகிர்ந்துகொள்வதை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு ஆண்டு முழுவதும் தொடரான நிகழ்வுகளை மத்திய வங்கி ஏற்பாடு செய்தது.

## 75ஆவது ஆண்டுநிறைவு உரை

"நெருக்கடியிலும், மீட்சியிலும் மற்றும் அதற்கு அப்பாலும் மத்திய வங்கியின் சுயாதீனம் ஏன் முக்கியம்" என்ற தொனிப்பொருளில் ஆளுநர் ஆற்றும் சிறப்பு வருடாந்த உரையை மத்திய வங்கி ஒழுங்கமைத்திருந்தது. குறிப்பாக நெருக்கடி மற்றும் மீட்சி காலங்களில், பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதில் மத்திய வங்கியின் சுயாதீனத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி இவ்வுரை அமைந்திருந்தது. நிறுவன சுயாதீனம் எவ்வாறு கொள்கை நம்பகத்தன்மையை வலுப்படுத்துகிறது என்பதுடன் செயற்றிறன்மிக்க பணவீக்க முகாமைத்துவத்திற்கு ஆதரவளிக்கின்றது மற்றும் நிலைபெறத்தக்க பொருளாதார தாக்குப்பிடிக்கும்தன்மைக்கு அடித்தளமாக அமைகிறது என்பதை அது எடுத்துக்காட்டியது.

வங்கியின் பரிணாம வளர்ச்சி மற்றும் நாட்டின் பொருளாதார, நிதியியல் சூழல் வடிவமைப்பதில் அதன் வகிபாகம் குறித்து கலந்துரையாடுவதற்கு, இந்நிகழ்வு புகழ்பெற்ற கொள்கை வகுப்பாளர்கள், கல்விமான்கள் மற்றும் தொழில் வல்லுநர்களை ஒன்றிணைத்தது.



*75ஆவது ஆண்டுநிறைவு உரை*

## ரூ.2000 மதிப்புள்ள ஞாபகார்த்த நாணயத் தாள் மற்றும் அஞ்சல் முத்திரை

நிகழ்வினைக் குறிக்கும் முகமாக மத்திய வங்கி "சுபீட்சத்திற்கான உறுதிப்பாடு" ஆண்டு நிறைவுக் கருப்பொருளுக்கிசைவாக மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஐந்தாவது ஞாபகார்த்த நாணயத் தாளான ரூ.2,000 ஞாபகார்த்த நாணயத் தாளை மத்திய வங்கி வெளியிட்டது.

விசேட ஞாபகார்த்த முத்திரையொன்றும் அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகத்தினால் வெளியிடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கியின் வரலாறு, மைற்கற்கள் மற்றும் பரிணாம வளர்ச்சியடைகின்ற வகிபாகம் என்பவற்றை எடுத்துக்காட்டி தேசிய செய்தித்தாள்களில் சிற்றிதழ் அளவிலான செய்தித்தாள் இணைப்பிதழ் வெளியிடப்பட்டது.



*அதிமேதகு சனாதிபதிக்கு மத்திய வங்கியின் ஆளுநர் முதலாவது ரூ.2000 ஞாபகார்த்த நாணயத் தாளினை உத்தியோகபூர்வமாக வழங்குகின்றார்*




*அஞ்சல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட விசேட ஞாபகார்த்த அஞ்சல் முத்திரை*

## அறிவு பகிர்தலும் கொள்கைக் கலந்துரையாடலும்

கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் நிதியியல் துறை நிபுணர்கள் மத்தியில் கலந்துரையாடலை வலுப்படுத்துவதற்கு பல அறிவுப் பகிர்வு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அண்மை பொருளாதார சவால்களை வெற்றிகொள்கின்ற அதேவேளை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதில் இலங்கையின் முன்னேற்றம் பற்றிய மையப்படுத்தலுடன் நிதியியல் உறுதிப்பாட்டு மாநாடொன்று 2025 மே 23 அன்று கொழும்பில் இடம்பெற்றது.

பின்வரும் மூன்று நிகழ்வுகளை உள்ளடக்கி பன்னாட்டு ஆராய்ச்சி ஆய்வரங்கு - 2025 மத்திய வங்கியின் ஜோன் எக்ஸ்ரா் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் 2025 திசெம்பர் 08 - 10 வரை இடம்பெற்றது:

- 14ஆவது மத்திய வங்கி பன்னாட்டு ஆராய்ச்சி மாநாடு
- சார்க் நிதி தரவுத்தளக் கருத்தரங்கு 2025 மற்றும்
- ஆசிய பசுபிக் பிரோயகப் பொருளியல் அமைப்பு என்பன இணைந்து அனுசரணை வழங்கிய ஆறாவது இணைந்த செயலமர்வு.

## இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டுநிறைவு

சிறப்புப் பேச்சாளராக மொன்டெக் சிங் அலுவாலியா என்பவரின் பங்கேற்புடன் "மாறிவரும் உலகச் சூழலில் வளர்ச்சி உபாயத்தை வகுத்தல்" என்ற தலைப்பிலான பொது கருத்தரங்கு 2025 ஒத்தோபர் 10 அன்று இடம்பெற்றது.



*மொன்டெக் சிங் அலுவாலியாவுடனான பொதுக் கருத்தரங்கு*

### சமூக ஈடுபாடும் கலாசார நடவடிக்கைகளும்

ஆண்டு நிறைவு நிகழ்ச்சித்திட்டத்தின் பாகமாக பொதுமக்கள் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கும் சமூகப் பொறுப்பை ஊக்குவிப்பதற்கும் பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிதியியல் கருமங்கள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு மத்திய வங்கி பிராந்திய அலுவலகங்கள் ஆறு விசேட நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தின.

"பூமித்தாயை நேசிப்போம்" மரநடுகை நிகழ்ச்சி, வங்கி இல்லம், வங்கிக் கற்கைகளுக்கான ஆய்வு நிலையம், மத்திய வங்கி பிரதேச அலுவலகங்களில் மூத்த துணை ஆளுநர்களுடன் இணைந்து அளுநர் முனைவர். நந்தலால் வீரசிங்க அவர்களினால் தொடங்கிவைக்கப்பட்டது.



*மரம் நடுதல் தொடர்பான முன்னெடுப்பு "பூமித்தாயை நேசிப்போம்"*

பொதுமக்களை ஈடுபடுத்துவதற்கும், பொருளாதாரம் மற்றும் நிதி சார்ந்த தொனிப்பொருள் பற்றிய விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் தேசிய அளவிலான சித்திரப் போட்டி மற்றும் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது.




*தேசிய சித்திரப் போட்டியும் கண்காட்சியும்*

ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கும் அலுவலர் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கும் பல கலாசார மற்றும் மத நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.



*சர்வதேச அனுசரிப்புகள்*

மத்திய வங்கியின் பௌத்த சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரித் ஓதும் வைபவம் 2025 ஓகத்து 29 அன்று இடம்பெற்று அதனைத்தொடர்ந்து 2025 ஓகத்து 30 அன்று அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.



*பிரித் ஓதுதல் வைபவம்*

வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வு நிலையத்தில் 2025 யூலை 26 அன்று "மாலை" என்ற தலைப்பில் கலாசார நிகழ்வொன்றினை மத்திய வங்கியில் சிங்கள கலாசார சங்கம் ஏற்பாடு செய்தது. மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டு காலப்பயணத்தை அடையாளப்படுத்தி விசேட ஆண்டு நிறைவுப் பாடல் "அபிமானி" பாடலையும் சங்கம் வெளியிட்டது.



*"மாலை"* என்ற கலாசார நிகழ்வு வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வி நிலையத்தில் இடம்பெற்றது.

இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கியின் சேவா வனிதா பிரிவு அதன் சமூக சென்றடைவு முயற்சிகளின் பாகமாக 2025 நவெம்பர் 08 அன்று பதுளை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இரு பாடசாலை நூலகங்களை அன்பளிப்புச் செய்தது.

# பிரதேச அலுவலகங்கள்

வரைபடம் - 17



பிரதேச அலுவலகம் - அநுராதபுரம்

**முகாமையாளர் - பாலித அபேசிங்க**

த.பெ.இல.02, கட்டம் 1
அநுராதபுரம்
தொலைபேசி: 025 2222024
மின்னஞ்சல்: roapura@cbsl.lk



பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி

**முகாமையாளர் - திருமதி. பகீரதி செந்தில்மாறன்**

அறிவியல் நகர்
கிளிநொச்சி
தொலைபேசி: 021 2285912
மின்னஞ்சல்: rokn@cbsl.lk





பிரதேச அலுவலகம் - மாத்தளை

**முகாமையாளர் - திருமதி. ஆர். எம். வை. வி. ராஜபக்ஷ**

இல. 805, திருகோணமலை வீதி,
மண்டாண்டவெல
மாத்தளை
தொலைபேசி: 066 2222167
மின்னஞ்சல்: romatale@cbsl.lk



பிரதேச அலுவலகம் - திருகோணமலை

**முகாமையாளர் - திரு. பிரபாகரன் கருப்பையா**

இல. 103, அஞ்சல் அலுவலக வீதி
திருகோணமலை
தொலைபேசி: 026 2226965
மின்னஞ்சல்: po-ep@cbsl.lk



பிரதேச அலுவலகம் - மாத்தறை

**முகாமையாளர் - திரு. எஸ். குணரட்ண**

த.பெ.இல. 35, அநாகரிக தர்மபால
மாவத்தை
மாத்தறை
தொலைபேசி: 041 2222269
மின்னஞ்சல்: romatara@cbsl.lk



பிரதேச அலுவலகம் - நுவரெலியா

**முகாமையாளர் - திருமதி. யசஸ்னி அமரசேகர**

இல. 84, பதுளை வீதி
நுவரெலியா
தொலைபேசி: 052 223 5439
மின்னஞ்சல்: rone@cbsl.lk

# இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்கள்

## இணைப்பு I - 2025 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள்

### உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

- அமானா பாங்க் பிஎல்சி
- கார்கில்ஸ் பாங்க் பிஎல்சி
- டொயிஷ் பாங்க் ஏஜி
- ஹட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
- எம்சிபி பாங்க் லிமிடெட்
- பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
- சம்பத் பாங்க் பிஎல்சி
- ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா
- இலங்கை வங்கி
- சிற்றி பாங்க், என். ஏ.
- டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
- இந்தியன் பாங்க்
- நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
- மக்கள் வங்கி
- செலான் பாங்க் பிஎல்சி
- த கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் (எச்எஸ்பிசி)
- பாங்க் ஒவ் சைனா லிமிடெட்
- கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
- ஹபீப் பாங்க் லிமிடெட்
- இந்தியன் ஓவசிஸ் பாங்க்
- நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
- பப்பிளிக் பாங்க் பேர்க்காட்
- ஸ்ரான்டட் சாட்டற் பாங்க்
- யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி

### உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்

- இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
- சனச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
- தேசிய சேமிப்பு வங்கி
- சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- அரச ஈட்டு முதலீட்டு வங்கி

### வெளிநாட்டு வங்கிகளின் பிரதிநிதித்துவ அலுவலகங்கள்

- ஜேபி மோர்கன் சேஸ் வங்கி என்.ஏ
- எம்யூஎப்ஜி வங்கி வரையறுக்கப்பட்டது
- ஐசிஜசிஜ வங்கி வரையறுக்கப்பட்டது

### நிதிக் கம்பனிகள்

- அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
- ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
- சிபிசி பினான்ஸ் லிமிடெட்[ஆ]
- கொமர்ஷல் கிறெடிற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி
- எல் பீ பினான்ஸ் பிஎல்சி
- மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- சர்வோதய டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி
- சியபத பினான்ஸ் பிஎல்சி
- யூ பீ பினாஸ் பிஎல்சி
- அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
- அசட்லைன் பினான்ஸ் லிமிடெட்
- சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
- டயலொக் பினான்ஸ் பிஎல்சி
- ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி[இ]
- எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
- மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- பி.எம்.எவ் பினான்ஸ் பிஎல்சி
- செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
- எஸ்எம்பி லிசிங் பிஎல்சி
- வலிபல் பினான்ஸ் பிஎல்சி
- ஏஎம்டபிள்யு கெப்பிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- அசோசியேற்றட் மோட்டர் பினான்ஸ் கம்பனி பிஎல்சி[அ]
- சிற்றிசன்ஸ் டெவலப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
- பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்
- லங்கா கிறடிற் அன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி
- மஹீந்திர ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
- நேசன் லங்கா பினான்ஸ் பிஎல்சி[உ]
- றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்
- சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
- சொவ்றலொஜிக் பினான்ஸ் பிஎல்சி

*குறிப்பு: ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் நிறுவனத்தை முடிவுறுத்தலானது நீதிமன்றத்தின் மேற்பார்வைக்குட்பட்டு 2023 திசெம்பர் 15 அன்று கொண்டுநடாத்தப்பட வேண்டுமென கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. மேலும், சி.்.ஓ, எஸ் ஜே எம் எஸ் அசோசியேட்ஸ், 3ஆவது தளம், இல.11, காசல் லேன், கொழும்பு 04 என்ற முகவரியுள்ள திரு. ஜெராட் ஜீவானந்தன் டேவிட் அவர்களை ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் தீர்த்துக்கட்டுநராக நியமிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.*

### பதிவுசெய்யப்பட்ட நிதி குத்தகைக்குவிடும் தாபனங்கள்

#### (i) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

- அமானா பாங்க் பிஎல்சி
- டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
- நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
- சம்பத் பாங்க் பிஎல்சி
- இலங்கை வங்கி
- ஹட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
- நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
- செலான் பாங்க் பிஎல்சி
- கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
- எம்சிபி பாங்க் லிமிடெட்
- பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
- யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி

#### (ii) உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்

- இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
- சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
- பிரதேச அபிவிருத்தி வங்கி
- சனச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி

# இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்கள்

## (iii) நிதிக் கம்பனிகள்

- அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
- ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
- சிபிசி பினான்ஸ் லிமிடெட்[(ஆ)]
- கொமர்ஷல் கிறெடிற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- எச்எண்பீ பினான்ஸ் பிஎல்சி
- எல் பீ பினான்ஸ் பிஎல்சி
- மேர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- சர்வோதய டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி
- சியபத பினான்ஸ் பிஎல்சி
- யூ பீ பினான்ஸ் பிஎல்சி
- அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
- அசட்லைன் பினான்ஸ் லிமிடெட்
- சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
- டயலொக் பினான்ஸ் பிஎல்சி
- ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி[(ஈ)]
- எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
- மேர்ச்சன்ட் பாங்க் ஓவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- பி.எம்.எவ் பினான்ஸ் பிஎல்சி
- செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
- எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி
- வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
- ஏஎம்டபிள்யு கப்பிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- அசோசியேற்றட் மோட்டர் பினான்ஸ் கம்பனி பிஎல்சி[(அ)]
- சிற்றிசன்ஸ் டெவலப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
- பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்
- லங்கா கிறடிற் அன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி
- மஹீந்திர ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
- நேசன் லங்கா பினான்ஸ் பிஎல்சி[(உ)]
- றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்
- சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
- சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி

## (iv) சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனி

- கோப்பரேட்டிவ் லீசிங் கம்பனி லிமிடெட்

*குறிப்பு: ஈரிஜ பினான்ஸ் லிமிடெட் நிறுவனத்தை முடிவுறுத்தலானது நீதிமன்றத்தின் மேற்பார்வைக்குட்பட்டு 2023 திசெம்பர் 15 அன்று கொண்டுநடாத்தப்பட வேண்டுமென கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. மேலும், சி.்.ஓ, எஸ் ஜே எம் எஸ் அசோசியேட்ஸ், 3ஆவது தளம், இல.11, காசல் லேன், கொழும்பு 04 என்ற முகவரியுள்ள திரு. ஜெராட் ஜீவானந்தன் டேவிட் அவர்களை ஈரிஜ பினான்ஸ் லிமிடெட்டின் தீர்த்துக்கட்டுநராக நியமிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.*

## உரிமம்பெற்ற நுண்பாக நிதி நிறுவனங்கள்

- பெரன்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மென்ட்ஸ் கம்பனி லிமிடெட்
- செயஜ மைக்றோ கிறடிற் லிமிடெட்
- தும்பர மைக்றோ கிறடிற் லிமிடெட்
- லக் ஜய மைக்ரோ பினான்ஸ் கம்பனி லிமிடெட்

## முதனிலை வணிகர் கம்பனிகள்

- கப்பிடல் அலையன்ஸ் பிஎல்சி
- எச்எண்பி செக்குறிட்டீஸ் லிமிடெட்
- வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட்[(ப)]
- என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி[(எ)]
- என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ட் கம்பனி லிமிடெட்
- பர்ஸ்ட் கப்பிட்டல் ரெசறீஸ் பிஎல்சி
- பர்பச்சுவெல் டிரெசரிஸ் லிமிடெட்[(ஏ)]

## அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுத்தொழில் கம்பனிகள்

- பிஎம்ஆர். மனி புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
- ஜோர்ச் ஸ்ருவேற் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
- தப்ரோபேன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
- சென்றல் பொரெக்ஸ் அன்ட் மணி புரோக்கர்ஸ் லிமிடெட்
- எம்விஎஸ் மணி புரோக்கர்ஸ் லிமிடெட்
- விஸ்வின் மணி அன்ட் எக்சேன்ச் புரோக்கர்ஸ் லிமிடெட்
- பெஸ்ட் எலையன்ஸ் மணி புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
- பிக்கொட் சப்மன் அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிடெட்

---

*(அ) 2025.11.24 அன்று எல் பீ பினான்ஸ் பிஎல்சி, அசோசியேற்றட் மோட்டர் பினான்ஸ் கம்பனி பிஎல்சியின் 73.11% பங்குகளை வாங்கியது.*

*(ஆ) 2025.12.30 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சிபிசி பினான்ஸ் லிமிடெட், சிபிசி பினான்ஸ் பிஎல்சி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.*

*(இ) 2025.05.09 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி, ஜனசக்தி பினான்ஸ் பிஎல்சி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.*

*(ஈ) நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் விதிமுறைகளைத் தொடர்ந்து மீறி/ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டு வந்துள்ளது. எனவே, ஏதேனும் வழியில் புதிய வைப்புக்கள் உள்ளடங்கலாக பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டும் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2025.07.04 முதல் நடைமுறைக்குவரும் வகையில் தீர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கம்பனிக்கு நிர்வாகி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*(உ) என்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி, 2017 யூலை 24 தொடக்கம் நடைறைக்குவரும் வகையில் அரசாங்கப் பிணையங்கள் முதனிலை ஏலங்களில் பங்கேற்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. பிணையளிக்கப்படாத முதலீட்டாளர்களில் ஒருவரினால் கடன்கொடுநர் முடிவுறுத்தல் கோவைப்படுத்தப்பட்டு 2017 யூன் 17 அன்று முடிவுத்தல் கட்டளை நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. முடிவுறுத்தல் வழக்கு (CHC 83/2021/CO) நீதிமன்றத்தில் இன்னும் முடிவுறாதுள்ளது.*

*(ஊ) பெர்பச்சுவெல் டிரெசரிஸ் லிமிடெட், 2017 யூலை 06 தொடக்கம் முதனிலை வணிகர் வியாபாரம் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் தற்போதைய இடைநிறுத்தல் 2026 யூலை 05 வரை வலுவிலுள்ளது. இருக்கும்.*

*(எ) வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் லிமிடெட் 2026 பெப்புருவரி 19 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் அதன் பெயரை வெல்த்றஸ்ட் செக்குறிட்டீஸ் பிஎல்சி என மாற்றம் செய்துள்ளது.*

# இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்கள்

## 2025 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

### அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பட்டியல்

#### (I) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

- அமானா பாங்க் பிஎல்சி
- கார்கில்ஸ் பாங்க் பிஎல்சி
- டொயிஷ் பாங்க் ஏஜி
- ஹட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
- எம்சிபி பாங்க் லிமிடெட்
- பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
- சம்பத் பாங்க் பிஎல்சி
- ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா
- இலங்கை வங்கி
- சிற்றி பாங்க், என். ஏ.
- டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
- இந்தியன் பாங்க்
- நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
- மக்கள் வங்கி
- செலான் பாங்க் பிஎல்சி
- த கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் (எச்எஸ்பிசி)
- பாங்க் ஒவ் சைனா லிமிடெட்
- கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
- ஹபீப் பாங்க் லிமிடெட்
- இந்தியன் ஓவசீஸ் பாங்க
- நேஷன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
- பப்பிளிக் பாங்க் பேர்க்காட்
- ஸ்ரான்டட் சாட்டற் பாங்க்
- யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி

#### (II) உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்

- தேசிய சேமிப்பு வங்கி
- சனச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி

### அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுநர்கள்

#### வகை அ: பணமாற்றும் தொழிலில் பிரத்தியேகமாக ஈடுபட்டுள்ள கம்பனிகள்

#### I. விற்பனை நிலையங்கள் உட்பட வெளிநாட்டு நாணயங்களை வாங்கவும் பரிமாறவும் அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கபட்ட நாணய மாற்றுநர்கள்

- ஆப்தீன் மணி சேஞ்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- அபிலாஸ் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- அரமெக்ஸ் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- ஆரியவங்ச எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட்
- ஆசியன் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- புல்லியன் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட
- கெபிடல் எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- சென்ட்ரல் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட
- சிட்டி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 01
- கொழும்பு மணி எக்ஸ்சேன்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 01
- கொழும்பு மணி எக்ஸ்சேன்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 06
- கிரவுன் மணி எக்ஸ்சேன்ச் (பிரைவேட்) லிமிடெட்
- டேட்டா எக்ஸ்சேஞ்ச் இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிடெட்
- டெடிகம குரூப் (பிரைவேட்) லிமிடெட்
- தேவி அந்நிய செலாவணி (பிரைவேட்) லிமிடெட்
- காலி மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்-காலி
- காலி மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - காலி துறைமுகம்
- காலி மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்-வெலிகம
- ஜோர்ஜ் மைக்கேல் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- குளோபல் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- குளோபல் வில்லேஜ் எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெடட்
- கோல்டன் மணி சேஞ்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- மாருதி மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட் லிமிடெட்) - கொழும்பு 06
- மாருதி மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட் லிமிடெட்) - யாழ்ப்பாணம்
- மயூரி மணி சேஞ்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- மெட்ரோ பொரெக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் - நீர்கொம்பு
- மிலானோ மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- நர்மதா கோல்ட சென்டர் (பிரைவேட்) லிமிடெட் - யாழ்ப்பாணம்
- நர்மதா கோல்டு சென்டர் (பிரைவேட்) லிமிடெட் - கிளிநொச்சி
- நியூ நடாசா (பிரைவேட்) லிமிடெட்
- நியூ ரீகல்ஸ் மணி சேஞ்சர் (பிரைவேட்) லிமிடெட்
- பிரசன்னா மணி எக்ஸ்சேன்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 01
- பிரசன்னா மணி எக்ஸ்சேன்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 06
- புஸ்பா மணி சேஞ்சர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- ரிவிந்து எண்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட
- ரோயல் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - மஜஸ்டி சிட்டி
- ரோயல் பாரக்ஸ் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - ஹவலக் சிற்றி மோல்
- ரோயல் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 01
- ரோயல் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 06
- ஹைஃபா ட்ரவல்ஸ் அண்ட் டூர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- இன்டர்நெஷனல் எக்ஸ்சேன்ச் (பிரைவேட்) லிமிடெட்
- ஜுவல் லங்கா மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - நீர்கொழும்பு
- ஜேஎல்எஸ் மித்ரா (பிரைவேட்) லிமிடெட்
- கெய்ஸர் எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- லங்கா பொரெக்ஸ் மணி எக்ஸ்சேன்ச் (பிரைவேட்) லிமிடெட் - கிரெஸ்காட் பவுல்வர்டு
- ரோயல் மணி மார்ட் (பிரைவேட்) லிமிடெட் - அலுத்காமா
- ரோயல் மணி மார்ட் (பிரைவேட்) லிமிடெட - கொழும்பு 01
- சிபாஸ் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- சுவிஸ் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 01
- சுவிஸ் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 06
- தோமஸ் குக் லங்கா (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 02 - வன் கோல் பேஸ் மோல்
- தோமஸ் குக் லங்கா (பிரைவேட்) லிமிடெட் - கொழும்பு 02 - வன் கோல் பேஸ் மோல்
- தோமஸ் குக் லங்கா (பிரைவேட்) லிமிடெட் - கண்டி
- யுனிக் பொரெக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- வெஸ்டர்ன் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்
- வின்ட்சர் மணி எக்ஸ்சேஞ்ச் (பிரைவேட்) லிமிடெட்

## இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் நிறுவனங்கள்

### (II) வெளிநாட்டு நாணயங்களை விற்கவும் பரிமாற்றவும் அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கபட்ட நாணய மாற்றுநர்கள்

- அர்ஜுனா ஜுவல்லரி (பிரைவேட்) லிமிடெட்
- ரவி பொரெக்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
- தோமஸ் குக் லங்கா (பிரைவேட்) லிமிடெட் - பண்டாரநாயக்க பன்னாட்டு விமான நிலையம்

### வகை ஆ: வெளிநாட்டு நாணயங்களை வாங்கவும், விற்கவும் பரிமாறவும் அனுமதிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

- ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
- சிற்றிசன்ஸ் டெவலப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
- எல் பீ பினான்ஸ் பிஎல்சி
- லங்கா கிறடிற் அன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி
- செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
- சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி

### வகை இ: வெளிநாட்டுச் செலாவணியில் வணிகம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்துள்ள விடுதிகள்

- சினமன் பெந்தோட்ட பீச்
- சினமன் பே பெருவாலா
- சினமன் சிட்டாடல் கண்டி
- சினமன் லொட்ஜ் ஹபரன
- சினமன் வைல்ட் யால
- ஹபரன விலேஜ் பை சினமன
- ஹிக்கா டிரான்ஸ் பை சினமன்
- ஐரிசி ரத்னதீப - கொழும்பு 1
- பேர்ல் சிட்டி ஹோட்டல
- சங்கிரி-லா ஹம்பாந்தோட்டை ரிசோட் அன்ட் ஸ்பா
- சங்கிரி-லா ஹோட்டல் கொழும்பு
- டிரின்கோ ப்ளூ பை சினமன

### (V) ஏனைய நிறுவனங்கள்

- எம்எம்பீஎல் மணி டிரான்ஸ்பர் பிறைவேட் லிமிடெட் (பணம் மாற்றல் சேவையில் ஈடுபடுகிறது)
- இலங்கை ஏற்றுமதி கொடுகடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் (வெளிநாட்டு நாணயத்தில் கொடுகடன் உத்தரவாதங்களை வழங்குவதில் ஈடுபடுகிறது)

## VI. (2025 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு) 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவு முறைமைகள் ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமமளிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள்

### உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்

- அமானா பாங்க் பிஎல்சி
- இலங்கை வங்கி
- கார்கில்ஸ் பாங்க் பிஎல்சி
- கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
- டிஎவ்சிசி பாங்க் பிஎல்சி
- ஹபீப் பாங்க் லிமிடெட்
- ஹட்டன் நஷனல் பாங்க் பிஎல்சி
- எம்சிபி பாங்க் லிமிடெட்
- நஷனல் டெவலப்மன்ட் பாங்க் பிஎல்சி
- நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
- பான் ஏசியா பாங்கிங் கோப்பரேசன் பிஎல்சி
- மக்கள் வங்கி
- சம்பத் பாங்க் பிஎல்சி
- செலான் பாங்க் பிஎல்சி
- ஸ்ரான்டட் சாட்டற் பாங்க்
- ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா
- த கொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேசன் லிமிடெட் (எச்எஸ்பிசி)
- யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பிஎல்சி

### உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்

- தேசிய சேமிப்பு வங்கி
- இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
- சனச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
- பிரதேச அபிவிருத்தி வங்கி

### உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

- சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
- சிற்றிசன்ஸ் டெவலப்மென்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
- சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
- பின்ரெக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
- எல் பீ பினான்ஸ் பிஎல்சி
- டயலொக் பினான்ஸ் பிஎல்சி
- மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ்
- பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
- செங்கடகல பினான்ஸ் பிஎல்சி

### நிதியல்லா நிறுவனங்கள்

- டயலொக் ஆசியாட்டா பிஎல்சி
- மொபிட்டல் பிரைவேட் லிமிடெட்
- குளோபல் பேமென்ட் ஏசியா-பசுபிக் லங்கா (பிரைவேட்) லிமிடெட்

## இலங்கை மத்திய வங்கி

### சட்ட வடிவம்

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (2023 செத்தெம்பர் 14 அன்று சட்டமாக்கப்பட்டது) மூலம் தாபிக்கப்பட்டது

### வரிசெலுத்துநர் அடையாள இலக்கம்

409035027

### தொடர்புகொள்ளும் தகவல்கள்


இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 00100
இலங்கை

தொலைபேசி: +94 11 247 7000
தொலைநகல்: +94 11 234 6304
மின்னஞ்சல்: cbslgen@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


### SWIFT code

CBCELKLX

### 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம்

**பெயர்குறிக்கப்பட்ட அலுவலர்**

முனைவர். பி. நந்தலால் வீரசிங்க,
ஆளுநர்

**தகவல் அலுவலர்**

திருமதி. கே எம் ஏ என் டவுலகல,
மூத்த துணை ஆளுநர்,
rti@cbsl.lk

### கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்
இல.306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

SMART MEDIA
The ANNUAL REPORT Company

Produced by Smart Media,
a GHG-neutral company
since 2011



75 YEARS
STABILITY FOR PROSPERITY
1950-2025

**இலங்கை மத்திய வங்கி**

எண். 30
ஜனாதிபதி மாவத்தை
கொழும்பு 00100
இலங்கை

https://www.cbsl.gov.lk

ISBN 978-624-6764-30-2